"மறுபடியும் முதல்ல இருந்தா?" பக். 19

விலை ரூபா 30

பக்கங்கள் 56

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 கதிர் 227 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 26,ஞாயிற்றுக்கிழமை 10.07.2016

# போர்க்குற்ற விசாரணையில் வெளி நீதிபதிகள் கட்டாயம்

## நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை மைத்திரியுடன் முரண்படுகிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஜூலை 10

போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு கட்டா யம் இருக்க வேண்டும். இது தொடர்பில் நாம் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளமாட்டோம். பங்காளிக் கட்சிகளுடன் விரைவில் கலந்துரையாடி, எமது நிலைப்பாட்டைக் கடிதம் ஊடாக ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு மீளவும் வலியுறுத்துவோம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங் கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை. சேனாதிராசா.

"நான் பதவியில் இருக்கும் வரையில் பன்னாட்டு நீதிபதிகளை போர்க்குற்ற விசாரணைக்கு அனுமதிக்கமாட்டேன்" என்று ஜனாதிபதி நேற்றுமுன்தினம் பாணந்துறையில் நடந்த ஒரு நிகழ்வில் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பக்.52

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ அல்லது பிரதமர் ரணில் விக்கிரசிங்கவோ அல்லது அமைச்சர்களோ கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கக்கூடாது. நாட்டில் உண்மையான நல்லிணக்கம் உருவாக, ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும்."

## போர்க்குற்ற நீதிமன்றம் குறித்து ஐ.நா பரிந்துரை வழங்கவில்லை

### இப்படிக் கூறுகிறார் மைத்திரி




கொழும்பு, ஜூலை 10

ஐ.நா. மனித உரிமைகள் சபை வழங்கிய பரிந்துரைகளில் போர்க்குற்ற நீதிமன்றம் தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பக்.53

## வாக்குச் சீட்டு அச்சடித்து நடக்கிறது கருத்துக்கணிப்பு

### வவுனியா பொருளாதார வலயத்தை எங்கு அமைப்பது என்று முடிவெடுப்பதற்காக




யாழ்ப்பாணம், ஜூலை 10

வவுனியா பொருளாதார வலயத்தை எங்கே அமைப்பது என்பது குறித்த கருத்துக் கணிப்பு வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டு வெகு விமரிசையாக நடத்தப்படுகிறது. நேற்று மாலைவரையில் 11 பேர் மாத்திரமே வாக்களித்தனர். எஞ்சியவர்கள் இன்னும் வாக்களிக்கவில்லை.

வவுனியா மாவட்டத்துக்குரிய பொருளாதார வலயத்தை எங்கே அமைப்பது என்று வடக்கு மக்கள் பிரதிநிதிகளிடம் கருத்துக் கணிப்பு நடத்துவதற்கு, தமிழ்த் தேசியக் பக்.52

## பன்னாட்டு நீதிபதிகள் அவசியம் பிரிட்டனும் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 10

போர்க்குற்ற விசாரணைகளில் பன்னாட்டுப் பங்களிப்பு அவசியம். ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அழுத்தமாகத் தெரிவித்தது பிரிட்டன்.

"இலங்கையின் பொறுப்புக்கூறல் பொறிமுறை நம்பகத் தன்மையானதாக இருக்க வேண்டும். பன்னாட்டுப் பங்களிப்பின் ஊடாகவே அதனை உறுதி செய்ய முடியும்" என்று பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹுயோ ஸ்வையர் தெரிவித்தார்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில், இலங்கையின் விவகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டது. உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ஹுயோ ஸ்வையர் தெரிவித்ததாவது:

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். பொறுப்புக் கூறல் பொறிமுறை நம்பத்தகுந்ததாக இருக்க வேண்டும். இதற்குப் பன்னாட்டுப் பங்களிப்பு உள்வாங்கப்பட வேண்டும். பிரிட்டன் ஆரம்பத்திலிருந்தே இந்த விடயத்தை வலியுறுத்தி வருகின்றது. ஜெனிவாவில் கடந்த மாதம் இடம்பெற்ற கூட்டத் தொடரின் போது கூட இதனை வலியுறுத்தியது. பக்.52

### கோலூன்றிப் பாய்தலில் அனித்தாவுக்குத் தங்கம்

தேசிய மெய்வன்மைப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி ஜெகநாதன் அனித்தா கோலூன்றிப் பாய்தலில் தங்கப் பதக்கம் வென்றார்.

(விரிவு பக்கம் 55)

## வடமாகாண சபையை முற்றுகையிட்டு செவ்வாயன்று மீனவர்கள் போராட்டம்

### அன்றைய தினம் கடலுணவு விற்பனையும் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 10

இலங்கை கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கக் கோரும் இந்திய அரசின் யோசனையை உடனடியாக இலங்கை அரசு எதிர்க்க வேண்டும். வடக்கு மீனவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டும். இந்த இரண்டு விடயங்களையும் வலியுறுத்தி, வடக்கு மாகாண சபையை முற்றுகையிட்டு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தப் பக்.52

## இராணுவமே காணிகளை விடுவி பரவிப்பாஞ்சான் மக்கள் போராட்டம்

கிளிநொச்சி, ஜூலை 10

இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்கும் வரை சுழற்சி முறையில் இரவு பகலாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர் பரவிப்பாஞ்சான் மக்கள்.

நேற்றுக் காலை கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றிலில் கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பமானது. பின்னர் பரவிப்பாஞ்சான் முதன்மை வீதியில் அமர்ந்து போராட்டம் நடத்தினர்.

பரவிப்பாஞ்சானில் இராணுவ முகாம் அமைந்துள்ள காணிகளில் ஒரு பகுதி கடந்த மே மாதம் 10ஆம் திகதி விடுவிக்கப்பட்டது. 54 குடும்பங்களுக்குச் சொந்தமான 180 ஏக்கர் காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அவற்றில் 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது கிளிநொச்சியில் வேறு இடங்களில் வசிக்கின்றன. அவர்கள் கடந்த இரண்டு மாதங்களாகத் தமது காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றனர்.

(விரிவு பக்கம் 9)

## இலங்கையருக்கு சுவிஸிலும் இனி அகதித் தஞ்சம் மறுப்பு

### கட்டுப்பாடுகளை இறுக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 10

அகதிக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் இலங்கைக் குடிமக்கள் தொடர்பில் கடுமையான விதிமுறைகளைப் பின்பற்றவுள்ளதாக சுவிற்ஸர்லாந்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் போரின் பின்னரான நிலமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதில் நம்பிக்கை கொண்டிருப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அதிகாரிகளை மேற்கோள் காட்டி சுவிற்ஸர்லாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

"மனித உரிமைகள் விடயத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இலங்கை அடைந்துள்ளது. கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்று கூடலுக்கான உரிமைகள் உறுதிசெய்யப்பட்டுள்ளன" பக்.51

011 5 411 411

ஒரு வருட நிலையான வைப்புக்களுக்கு 11% கவர்ச்சிகர வருடாந்த வட்டி

(வ.தே.வ. 11%)

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011 5 411 411
நிபந்தனைகளுக்குட்பட்டது.

SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி

Fitch Rating BB+ (stable). Reg. No: PB62PQ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி, ரணிலுடன் படம் பிடிக்கவா வந்தனர் வடக்கு ஊடகவியலாளர்கள்?

## அமைச்சர் மனோகணேசன் காட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 10
வடமாகாண ஊடகவியலாளர்கள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் 'போடோ சூட்' செய்து படம்பிடிக்கத்தான்கொழும்பு வந்தார்களோ? எனக் கேள்வியெழுப்பியுள்ளார் அமைச்சர் மனோ கணேசன். கடந்த காலங்களில் வடக்கு ஊடகங்கள் - ஊடகவியலாளர் கள்மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது கொழும்பிலிருந்து வடக்குக்கு வந்து குரல் கொடுத்த ஒருவரையும் அவர்கள் சந்திக்கவில்லை என்றும் கவலை வெளியிட்டார்.

நடுவண் அரசின் ஊடக அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு ஊடகவியலாளர்கள் 54 பேர் தென் பகுதிக்குச் சென்றிருந்தனர். ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்தனர்.

இது தொடர்பில், தனது முகநூல் நிலைப் பதிவில் அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டதாவது:

வந்தார்கள், கண்டார்கள், போனார்கள். திடீரென வடக்கில் இருந்து தமிழ் ஊடக நண்பர்கள் கொழும்பு போனதாக செய்திகளில் கண்டேன். அதற்கு முதல்நாள் முற்பகல் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. சில மணி நேர இடைவெளியில், அன்று மாலையே இலங்கை மன்றகல்லூரியில், வடமாகாண ஊடகவிலாளருடன் ஒரு சந்திப்பு இருக்கின்றது, வாருங்கள் என்று சொல்லப்பட்டது. அன்று மாலை, ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு இருந்ததால், என்னால் அதில் கலந்து கொள்ள முடியவில்லை.

அவ்வளவுதான். இது ஏதோ ஒரு நாளுக்குள் திடீரென ஏற்பாடு செய்யப்பட்ட பயணமோ ? அப்படியானால் அது ஏன்? ஏனப்பா இந்த அரைகுறை அவசர பயணம்? இதற்கு முன் இங்கே இருந்து ஒரு ஊடக குழுவினர் வடக்குச் சென்றார்கள். என்னையும் யாழ்ப்பாணம் வரும்படி ஒரு ஏற்பாட்டாளர் அழைத்தார். வேறு வேலை இருந்ததால் நான் வரவில்லை. ஆனால், என்னால் இயன்ற ஒத்துழைப்பை வழங்கினேன்.

நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், ஊடக அமைச்சர் ஆகியோரை சந்தித்தது மிக நல்ல விடயம். இவை மாத்திரம் போதும் என்று நினைத்துவிட்டீர்களோ ?

தலைநகரம் வந்த உங்களை உடன் பிறப்புகளாக மகிழ்வுடன், அழைத்து, விருந்தோம்பல் செய்து, அனுப்பி வைக்க எம்மால் முடியாது என எண்ணிவிட்டீர்களோ? முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்தால், எத்தனையோ அரசியல், சமூக, கலாசார, ஊடக தலைப்புகளில் எவ்வளவோ விடயங்களை மனம் விட்டு கலந்துரையாடி இருக்கலாமே? பல சிக்கல்களுக்கு விடை தேடியும் இருக்கலாமே?

கடந்த ஆட்சியில் அங்கே நீங்கள் கொல்லப்பட்ட போது, தாக்கப்பட்டபோது, கடத்தப்பட்டபோது, இங்கே இருந்து, அங்கே வந்து, என்னுடன் இணைந்து போராடி, வடக்கு ஊடக அடக்கு முறைபற்றி கொழும்பில் ஆர்ப்பரித்து பேசிய, சிறிதுங்க, விக்கிரமபாகு ஆகிய சிங்கள முற்போக்காளர்களையாவது சந்தித்தீர்களா என்றால் அதுவும் இல்லை. சிறிதுங்க, விக்கிரமபாகு ஆகியோரிடம் விசாரித்தபோது, இல்லையே, அப்படியா? வந்தார்களா? எப்போ? ஏன் எங்களைச் சந்திக்கவில்லை? என்று இருவரும் என்னிடம் வருத்தப்பட்டார்கள்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை குசலம் விசாரிக்க வந்தீர்களோ? அதற்கு மொழிபெயர்ப்பாவது கிடைத்ததா? அல்லது அவர்களுடன் 'போட்டோ சூட்' செய்து படம் பிடிக்கதான் கொழும்பு வந்தீர்களோ? எடுத்த படங்களையாவது பத்திரமாக வீடுகளில் மாட்டி வைத்துக்கொள்ளுங்கள். நாளை உங்கள் வீடுகளுக்கு ஆமிக்காரன் வந்தால் எடுத்து காட்டலாம் - என்று பதிவிட்டுள்ளார். (வ-5)

# ஆராய்ச்சி உதவியாளர் ஆள்சேர்ப்பு; வடக்கு - கிழக்கில் மாத்திரம் பரீட்சை

## அமைச்சரவை அனுமதி பெறப்படும் என அமைச்சர் துமிந்த தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10
“விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குத் தனியான பரீட்சை நடத்துவதற்குரிய அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைக்க நடவடிக்கை எடுப்பேன்.”

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நடுவண் அரசின் விவசாய அமைசீசர் துமிந்த திசநாயக்கா தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் அலுவலகத்தில், நடுவண் அரசின் விவசாய அமைச்சர் துமிந்த திசநாயக்காக தலைமையிலான குழுவினருக்கும், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது.

“இலங்கை விவசாய சேவையில் எங்களுக்கு 22 ஆளணிகள் அங்கீகரிக்கப்பட்டன. ஆனால் 5 பேர் மாத்திரமே தற்போது சேவையில் இருக்கின்றனர். 17 பேரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்குத் தனியான ஒரு பரீட்சை நடத்தவேண்டும். விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் வெற்றிடம் நீண்ட நாள்களாக நிரப்பப்படாமல் உள்ளது” என்று வடக்கு அரசின் விவசாய அமைச்சர் சுட்டிக் காட்டினார் என அவரது அமைச்சு விடுத்த அறிக்கை கூறுகின்றது.

“விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் வெற்றிடத்தை நிரப்ப வடக்கு - கிழக்குக்கு மாத்திரம் தனியாகப் பரீட்சை நடத்துவதற்கு அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்க நடவடிக்கை எடுக்கின்றேன்” என்று துமிந்த திசநாயக்கா குறிப்பிட்டார்.

“வட்டக்கச்சி விதை உற்பத்திப் பண்ணையில் பெரும்பகுதி இன்று படையினர் வசமே உள்ளன. இதனை விடுவித்துத் தாருங்கள். இராணுவத்தின் வசமுள்ள கிளிநொச்சி சேவைக் காலப் பயிற்சி நிலையம் மற்றும் வெள்ளாங்குளப் பண்ணையையும் எம்மிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்.

சின்ன வெங்காயம் இன்று வடக்கிலேயே அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. அறுவடைக் காலத்தில் இந்தியாவில் இருந்து அதிகளவு வெங்காயம் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதனால் எமது விவசாயிகளுக்கு சந்தையில் வெங்காயத்துக்கு உரியவிலை கிடைக்காமல் போகின்றது. இறக்குமதி வெங்காயத்துக்கு அதிக வரி விதிக்கவும்” என்று அமைச்சர் ஐங்கரநேசன், நடு வண் அரசின் விவசாய அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார் என அவரது அறிக்கை கூறியது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் ஒவ்வொன்றும் 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் 7 விவசாயப் பூங்காக்கள் இலங்கையில் நிறுவப்பட உள்ளன. வடக்கில் அதன் அமைவிடம் தொடர்பாக எங்களுடன் கலந்துரையாடப்படும் என நடுவண் அரசின் அமைச்சர் தெரிவித்தார் என விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குறிப்பிட்டார். (வ-5)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா ஆரம்பம்

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் வருடாந்த காம்யோற்சவப் பெருவிழா நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறும் இந்தப் பெருவிழா, கீரிமலையில் ஆடிஅமாவாசைத் தீர்த்தத்துடன் நிறைவுபெறும்.

விசேட திருவிழாக்களான திருக்கார்த்திகை இந்த மாதம் 28ஆம் திகதி வியாழக்கிழமையும், தேர்த் திருவிழா எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமையும், ஆடிஅமாவாசை அன்று (செவ்வாய்க் கிழமை) கீரிமலை கண்டகி தீர்த்தமும் நடைபெறவுள்ளன. (அ)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூலை 10
பொலிகண்டி குழந்தை யேசு ஆலய 25ஆவது யூபிலி ஆண்டை முன்னிட்டு, இன்று ஞாயிற்றுக்கிழமை குருதிக் கொடை நிகழ்வு நடைபெறவுள்ளதாக ஒருங்கிணைப்புக் குழு இளைஞர்கள் அறிவித்தனர்.

குழந்தை யேசு பகுதி இளைஞர்களால் மு.ப. 9.30 மணியிலிருந்து 12.30 மணி வரை இந்தக் குருதிக்கொடை நடைபெறுகிறது. (வ-ரி)

# வட மாகாண உறுப்பினர் பதவியை ஏற்றார் மயூரன்

வவுனியா, ஜூலை 10
வடக்கு மாகாண சபையின் நியமன உறுப்பினராகத் தெரிவான செந்தில்நாதன் மயூரன் நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் முன்னிலையில் வவுனியாவில் இந்தப் பதவியேற்பு இடம்பெற்றது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரண்டு நியமன உறுப்பினர் ஆசனம் கிடைத்தது. இதில் ஓர் ஆசனம், கூட்டமைப்புடன் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நல்லாட்சிக்கான முன்னணியினருக்கு வழங்கப்பட்டது. மற்றைய ஆசனம் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வருகின்றது.

முதலாவது வருடம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து வவுனியா மாவட்டத்தின் எம்.பி.நடராஜ்க்கு வழங்கப்பட்டது. மீண்டும் நியமன உறுப்பினர் ஆசனம் வவுனியாவுக்கே வழங்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவைச் சேர்ந்த செ.மயூரன் இந்த ஆசனத்துக்கு நியமிக்கப்பட்டார். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த வாரம் வெளியாகியது. (வ-3-2)

# லண்டனுக்கு செல்கிறார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 10
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனிப்பட்ட விடயமாக நாளைமறுதினம் செவ்வாய் கிழமை லண்டன் பயணமாகிறார்.

தனது மகன் தஹான் சிறிசேன மற்றும் தனது வருங்கால மருமகள் ஆகியோரின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காகவே அவர் 5 நாள்கள் பயணமாக லண்டனுக்குச் செல்கிறார். (வ-4)

# விபத்தில் படுகாயமடைந்த குடும்பத்தலைவர் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 10
வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், வீதியில் சென்ற மாட்டுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த குடும்பத்தலைவர் சிகிக்சை பயனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்தார்.

கொக்கிளாய் தெற்கில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான சோமசுந்தரம் துசியாதரன் (வயது - 31) உயிரிழந்தார்.

வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது விபத்து இடம்பெற்றது. விபத்தையடுத்து அவர் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரைப் பார்க்கச் சென்ற மனைவி, பிள்ளைகளை மாஞ்சோலை வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

“அவருக்கு என்று கொண்டு சென்ற ஆடைகளை உள்ளே சென்று கொடுக்கவோ விபத்துக்குள்ளானவரைப் பார்க்கவோ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனுமதிக்கவில்லை. ஆடைகளைக் கொடுப்பதாகக் கூறி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்டபோதும், அதனையும் காயப்பட்டவரிடம் வழங்கவில்லை. சாதாரண காயம்தான் என்று கூறித் திருப்பி அனுப்பினர்.

இந்த நிலையில், “அவர் கடுங் காயங்களுடன் உள்ளார் என்றும் ஆடைகள் கொண்டுவருமாறும் வைத்தியசாலையிலிருந்து அழைப்பு வந்தது. நாங்கள் அங்கு செல்ல முன்னர் அவரை (கணவரை) யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றிவிட்டனர்” என்றார் உயிழந்தவரின் மனைவி.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்ட போதும், அவர் உயிரிழந்தார் என்று இறப்பு விசாரணையில் கூறப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் குடும்பத்தினரிடம் கையளிக்கப் பட்டது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநெறிக்கூடம்-சைவமகாசபை

# இணுவையம்பதி ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

# தெய்வத் தமிழ் திருக்குடமுழுக்கு





**(ஆனி உத்தரம் 10.07.2016 ஞாயிறு)**

சிவனடியார்களே!

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சிவபூமி யான ஈழமணித் திருநாட்டின் யாழ்ப்பாண இராச தானியின் இணுவையம்பதியில் சிவஞான சித்தர் பீடத்தின் அருளாசியுடன் சைவமகா சபையின் ஆதர வுடன் சைவநெறிக்கூடத்தினரால் அருள்மிகு ஞான லிங்கேஸ்வரர் திருக்கோயில் கட்டியெழுப்பப் பட்டுள்ளது.

ஐந்து தளக் கோபுரத்துடன் இராவணேசுவரன் தாங்குகின்ற உள்ளங்கவர் ஞானலிங்கத்தை கொண்டமைந்த, கருவறையில் செந்தமிழால் நாடொறும் வழிபாடியற்றும் திருக்கோயிலாக, மகோன் னதங்களை தொட்டும் அறப்பணி மையமாக இவ் வாலயம் மிளிரவுள்ளது.

இத் தெய்வத்தமிழ் சிவாலயத்திற்கு சிவபெருமா னுடைய உன்னதத்தை உலகிற்கு எடுத்தியம்பும் திருநாள்களில் தலைசிறந்த ஆனி உத்தர நன்னா ளிலே திருக்குடமுழுக்கு காண இறைசித்தம் கைகூடியுள்ளது.

இத் திருக்கோவிலின் திருக்குடமுழுக்கு சுவிஸ் ஞானலிங்கேசவர பிரதம குருக்கள் திருநெறிய சிவருசி தர்மலிங்கம் சசிக்குமார் தொண்டரடிப் பொடிகள் தலைமையிலான சிவத்தமிழ் அருட் சுனைஞர்கள் குழாமினால் தெய்வத்தமிழ் திரு முறை மந்திரங்கள் ஓதி ஆகம விதிப்படி ஆனி உத்திர நன்னாளான 10.07.2016 ஞாயிறு காலை நிகழ்த்தப்படவுள்ளது.



மானுடராக்கை வடிவு சிவலிங்கம்
மானுடராக்கை வடிவு சிதம்பரம்
மானுடராக்கை வடிவு சதாசிவம்
மானுடராக்கை வடிவு திருக்கூத்தே.

ஈழமணித்திருநாட்டில் ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் பெருமானிற்குத் தெய்வத் தமிழில் திருக்குடமுழுக்குப் பெருவிழா - திருக்குடமுழுக்குப் பெருவிழாமலர். வாழ்த்து மற்றும் படைப்பு.

ஞானலிங்கப்பெருமான் பொன்னம்பலவன் உள்ளத்திற்கினிய சைவத்தமிழ்பெருந் தகை அன்பர்களே.

ஆயிரம் நன்று தமிழ் தீதெனவுரைத்த, காரியத்தாற் காலக் கோட் பட்டானைச் சீரிய அந்தண் பொதியி லகத்தியனா ராணையாற், செந்தமிழே தீர்க்க சிவா எனத் தமிழைப் பழித்த வடநாட்டுக் குடிமகனை தனதொரு தமிழ்பாவால் ஒறுத்துப் பின்னர் சினம் ஆறிய நக்கீரர் அவனுக்கு மீண்டும் உயிர் தந்தார் என்பது நம் தமிழ் வரலாறு. இந்த வரலாற்று உண்மையின் வாயிலாக வடமொழியை விட ஒருவனை வாழவும் சாகவும் செய்ய வல்ல தெய்வ ஆற்றல் தெய்வத் தமிழுக்கு உண்டதென்பதை நக்கீரர் மெய்ப்பித்தார். தமிழ்மொழியைப் போற்றிக் கற்குமாறு அவனை நக்கீரர் மாற்றினார் என்பதும் எம்மைக் கடந்து சென்ற தமிழ் வரலாறு. தமிழைப் பழித்த இன்னொரு ஆரியவரசன் தமிழ் நாடுகள் மீது படையெடுத்து வந்த பிரகத்தனாவான். இவனுக்குத் தமிழன் உயர்வையும் சிறப்பையும் எடுத்துச் சொல்ல சங்கப் புலவர் கபிலர் பத்துப் பாட்டுகளில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டைப் பாடினார் என்பதும் வரலாறு.

இப்படியான வரலாறு மீள்மீட்ட வேண்டிய காலமாகவே 21 ஆம் நூற்றாண்டு அமைந்துள்ளது. இந் நோக்கில் 1994 ஆம் ஆண்டு முதல் நிறுவப்பட்ட எமது சைவத்தமிழ் மன்றமாகிய சைநெறிக்கூடம், செந்தமிழ் வழிபாட்டுத் திருக்கோவிலை முழுமுதற் கடவுள் சிவபெருமான் திருவருளால் 2007 ஆம் ஆண்டு முதல் ஒழுகி வருகின்றோம். 2012 ஆம் ஆண்டு திருவருள் நிறைகூடி சைவத்தமிழ் அறிஞர்கள் பலர் முன்னிலையில் செந்தமிழ் வேள்விச் சதுரர் மு.பெ. சத்தியவேல் முருகனார் ஐயா தலைமையில் சென்றது போக இனிக் கரு வறையில் செந்தமிழ்த் திருமறை வழிபாடு எனும் உலகவரலாற்றுத் தீர்மானத்தை சுவிற்சர்லாந்தின் தலை நகர் பேர்ன் மாநிலத்தில் அருள்ஞானமிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் முன்ற லில் இயற்றி நாம் நிறைந்திருந்தோம்.

இந்நோக்குடன் எம் தாய்நாடாம் ஈழமணித்திருநாட்டில் யாழ்ப்பாணத்தின் நடுவில் இணுவையூரில் தன்னைத் தமிழில் பாடப் பணித்த முழுமுதற்கடவுள் சிவபெருமானிற்கு செந்தமிழ் வழிபாட்டுத் திருக்கோயில் உலகத்தமிழ் மக்கள் உறுதுணையுடனும் சைவத்தமிழ் அமைப்புக்களின் நல்கையுடனும் நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2047, ஆடவைத்திங்கள் 26 ஆம் நாள் (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை உத்தரத்தில் விண்மீன் நுழையும் நல்வேளை 108 செந்தமிழ் அருட்சுனையர்கள்கூடி திருக்குடமுழுக்கு தெய்வத் தமிழில் நடைபெற அருள்ஞானமிகு ஞானாம்பிகை உடனாய ஞான்லிங்கேச்சுரர் திரு வருள் நிறைந்துள்ளது. எல்லாம் வல்ல இன்பத் தமிழ் கேட்ட சிவபெருமான் திருச்செவிகள் குளிரும் வண்ணம் தமிழொலி ஓங்கி ஒலிக்கட்டும் உலகில் சைவமும் தமிழும் ஓங்கி விளங்கட்டும்.

**சிவருசி.தர்மலிங்கம் சசிக்குமார்**
**ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் அருட்சுனையர்**
**இணைப்பாளர் சைவநெறிக்கூடம்**
**பேர்ன், சுவிற்சர்லாந்து.**

## அறப்பணிமையமாக இணுவையம்பதியிலே செந்தமிழ் சிவாலயம்

அன்பே சிவம் எனும் உயரிய கோட்பாட்டை தன் தாரக மந்திரமாகக் கொண்டு தமிழர்களின் பழம் பெரும் நாகரிகமான சிந்துவெளியில் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றம் பெற்ற சிவவழிபாடு பக்தியையும், தொண்டையும் போதிக்கின்ற வாழ்நெறியாக அன்புவழிச் சைவமாக தொன்று தொட்டு பழந் தமிழகத்திலும் சிவபூமி என்கின்ற ஈழமணித் திருநாட்டிலும் வழங்கி வருகின்றது.

1500 ஆண்டுகளிற்கு முன்னர் மதமாற்றங்களாலும் பண்பாட்டுச் சிதைப்புக்களாலும் தாய் தமிழகம் தனது சைவத்தமிழ் மரபுகளை இழந்து கொண்டிருந்தபோது ஆண் பெண் வர்க்க பேதமின்றி எவ்வாறு நாயன்மார்களுடய, சமயகுரவர்களுடைய தலைமை யிலே பக்தி இயக்கம் வீறுகொண்டு எழுந்து எமது அன்புவழிச் சைவத்தை பாதுகாத்ததோ அவ்வாறானதொரு தேவை இன்று ஈழமணித் திருநாட்டில் எழுந்துள்ளது.

கொடிய யுத்தத்தினாலும் அதன் விளைவுகளாலும் சின்னா பின்னமாக்கப்பட்டுள்ள ஈழத் தமிழி னத்தின் நலிவுற்ற தன்மையைப் பயன்படுத்தி மதமாற்றமும், பண்பாட்டுச் சிதைவுகளும் இன்று தொடர்கதையாகிவிட்டது. இந் நிலையில் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டிற்கு காலச் சூழ்நிலையால் குடியேற நேரிட்டாலும் சைவத் தமிழுணர்வில் சிறிதும் வழுவாது உடல், பொருள், ஆவியை அர்ப் பணித்து செயற்பட்டு வரும் சிவருசி சசிகுமார் ஐயா தலைமையிலான சைவநெறிக் கூடத்தினர் அங்கு போன்று இங்கும் எம் ஈழமணித் திருநாட்டிலும் செந்தமிழ் சிவாலயமாக ஞான லிங்கேச்சரத்தை உருவாக்கி எம் தாய்திரு நாட்டிற்கு அர்ப்பணித்திருப்பது வார்த்தைகளால் வடிக்கமுடியாத மகோன்னதமான பணியாகும்.

இடைக்காலத்தில் பல நூறு ஆண்டுகள் ஏட்டு வடிவிலேயே இருந்துவிட்ட தெய்வத்தமிழை மீண்டும் வெற்றிகரமாகக் கருவறையில் வழிபாட்டு அசைவியக்கமாக கொண்டு வந்த பெருமை சைவநெறிக் கூடத்தையே சாரும். அந்த ரீதியில் தங்கள் சக்தியையும் மீறி அர்ப்பணிப்பை வெளிக் காட்டி தமிழ்கூறும் நல்லுலகிற்கு தொண்டாற்றிவரும் சைவ நெறிக் கூடத்தினரோடு சைவ மகா சபையினராகிய நாங்களும் கரம் கோர்த்து முன் நகர்கின்றோம்.

அந்த வகையில் சைவநெறிக் கூடம், சைவ மகா சபை எனும் சைவத்தமிழ் இணையர் களாகிய நாம் தெய்வத்தமிழ் அறக்கட்டளையின் ஆதரவோடு கடந்த காலங்களில் தமிழ் அருட்சுனைஞர்களை உருவாக்கியது போல எம் ஈழமணித்திருநாட்டில் எதிர்காலத்தில் பல நூற்றுக்கணக்கான அருட்சுனைஞர்களை உருவாக்க சைவத்தமிழுலகின் ஆதரவை நாடி நிற்கின்றோம்.

மேலும் இணுவையம்பதியிலே அமைக்கப்பட்டிருக்கின்ற அருள்மிகு ஞானலிங்கேச்சு வரர் பெருமானுடைய திருக்கோவிலை அறப்பணிகள் ஆற்றும் சமூக மையமாகத் திகழச் செய்வதில் குன்றக்குடி அடிகளார் போதித்த " கோவிலைத் தழுவிய குடிகள் குடிகளைத் தழுவிய கோவில்" என்றும் மகுடவாக்கிற்கு உயிர் கொடுக்கின்ற திருக்கோவிலாக அகிலம் எல்லாம் போற்றும் வகையில் விளங்கச் செய்வதில் எம் கடமைகளை ஆற்ற இத் தருணத்திலே திடசங்கற்பம் பூணுவோம். தோன்றாத்துணை யாக எம்மை வழி நடத்துகின்ற அம்மையப்பனுடைய திருவடி களைப் பணிந்து எல்லாவுயிர்கட்கும் ஞானலிங்கேசுவரப் பெருமானின் அருள்கிடைக்கப் பிரார்த்தித்து சைவ மகா சபையி னுடைய செய்தியை நிறைவுசெய்கின்றோம்.

**மருத்துவர் . ப. நந்தகுமார்,**
**பொதுச்செயலாளர்- அகில இலங்கை சைவ மகா சபை.**

## சைவத் தமிழர்களின் செந்தமிழ் திருக்கோயிலாக ஞானலிங்கேச்சுரம்

ஞானலிங்கேசுவரர் ஆலயம் இணுவில் தெற்கு சுவிஸ் நாட்டிலே பேர்ன் நகரில் குடிகொண்டிருக் கும் ஞானலிங்கேஸ்வரர் ஆலய செந்தமிழ் அர்ச் சுனையர்களால் 2014 ஆம் ஆண்டு 07/10 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட ஒரு வைபவமாகும். இவ் ஆலயம் ஒரு தனிச் சிறப்புப் பெற்றது மற்ற ஆலயங்களைப் போல் அல்லாது கட்டட அமைப்புக்கள் வேறுபட்டு நிற்கின்றது. இதனை அமைப்பதற்கு ஆரம்ப வேலைகள் தொடங்கி சித்திரை மாதத்திலிருந்து வேலைகள் துரிதப்படுத்தப்பட்டன. ஆலயத்தின் கட்டமைப்பில் கருவறை 55 அடி உயரமும் எண்கோண வடிவமும் கொண்டது. விநாயகர் வட்ட வடிவானது ஆறு முக சுவாமி ஆறு கோணம் உடையது.



இந்தியாவில் நல்லாறில் சனீஸ்வரர் கிழக்கே பார்ப்பது போல இங்கும் சனீஸ்வரர் கிழக்கே பார்த்தி ருக்கின்றார். எல்லா விக்கிரகங்களும் தமது தேவியருடன் வீற்றிருக்கின்றார். ஐம் பொன் விக்கிரகங்களில் மிகவும் பெரிதும் சிறப்பும் மிக்க ஆறு அடி உயரத்தில் வீற்றிருக்கிறார். இவை எல்லாவற்றையும் விட இறை வனின் துணை கொண்டு 61 அடி உயரத்தில் இராஜ கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இக் கோபுரம் 18 நாள்களில் பாரம் தூக்கியின் உதவியுடன் அதே 18 நாள்களில் பூசியும் முடிக்கப்பட் டுள் ளது. மற்றும் ஆதி மூலத்தில் உள்ள சிவலிங்கம் 30 தொன் கொண்டது. இப் பணி யினை செய்து முடிப்பதற்கு இறைவனுடைய அருள் மிகவும் கைகொடுத்தது.

**கனகரட்ணம் சண்முகநாதன்**
**நந்தவனம், ஊரெழு கிழக்கு. ஜெயசண்யண் நிறுவனம்.**



சிவப்பரம் பொருளுக்கு அழகான கோவிலை அமைத்து தமிழில் அர்ச்சனை செய்ய வேண டும் என்ற உயர் சிந்தனையில் சுவிஸ் நாட்டில் உள்ள அன்பர்களின் பேராவலில் இக்கோ வில் உருவாக்கம் பெறவுள்ளது.

இத்திருக்கோவில் நிர்மாணப்பணியில் பங்கு பெற்றும் சந் தர்ப்பம் எமக்குகிடைத்தது இறையருளே. புதியஆலயம் நிர் மானம் என்பது வாழ் வில் கிடைத்தபெரும் பாக்கியம். இணு வில் மண்ணில் உருவாகியிருக்கும் புதிய வடிவத்திலான தத்துவக் கோவில் காலமெல்லாம் நிலைத்திருந்து மக்க ளுக்கு நலம் தரவேண்டி சிதம்பர நடராசனை மன்றாடி நிறைவு செய்கிறேன்

என்றும் இறைபணியில்,
**ஸ்தபதி.க.புருஷோத்தமன்**

**செந்தமிழ் திருக்குடமுழுக்கு சிறக்க வாழ்த்துவோர்**

சுவிஸ் செல்வா சுக் நிறுவனத்தினர்.

TAMIL WORLD MEDIA CENTER
தமிழ் உலகம் ஊடக மையம்

சிவன் தொலைக்காட்சி நிறுவனம்

மானிடம் அறக்கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES

முன்னணி கணினி நிறுவனத்தின் கிளைகளுக்கு நெல்லியடி
சாவகச்சேரி, கிளிநொச்சி பிரதேசங்களில் பின்வரும்
பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- கணினிப் போதனாசிரியர் - முழுநேரம்
  (பயில விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்)
- சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர்
- வரவேற்பாளர் (Receptionist)

**மேற்குறித்த பதவிகளுக்கு தகுதியுடையவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையினை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்**

விளம்பர இலக்கம். 5109
உதயன் பப்ளிகேசன் No.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல கடலுணவு ஏற்றுமதி நிறுவனமான **தப்ரயேன்** கடலுணவு தனியார் நிறுவனத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்.

1. கொள்வனவு ஊழியர்கள் - கடல் உணவு (ஆண்கள்)
2. சாரதி AD சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
3. மேற்பார்வையாளர் (பெண்கள்)
4. பொதியிடல் ஊழியர்கள் (பெண்கள்)

**தகைமை:- 9ஆம் தரம், க.பொ.த.சாதாரணதரம், உயர்தரம்**
உணவு மற்றும் தங்குமிட வசதியுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
உங்களது சுயவிவரங்களைக் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துக்கு SMS செய்யவும்.

**075 841 6353**

(Ga.2723)
(11.17.18)

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி நகரில் உள்ள
**"White Stone Bakers"**
நிறுவனத்திற்கு பின்வரும்
பணியாளர்கள் தேவை.

- *பேக்கேர்ஸ் - 3
- *வெயிற்றேர்ஸ் - 2
- *காசாளர் - 1

தொடர்புகளுக்கு
cheftheepan@gmail.com
077 313 6262

## பதவி வெற்றிடங்கள்

**இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் Education நிறுவனத்தின் யாழ். கிளைக்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.**

Marketing Executive (School Leavers)
Senior Marketing Executive (within 1year Experience)

**Qualification**
* 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்
* GCE (O/L, A/L)
* சிறந்த தொடர்பாடல் திறன் (தமிழ்/ஆங்கிலம்)

**Benefits**
- Basic Salary
  *Marketing Executive - 15,000/= +++
  *Senior Marketing Executive - 23,000/= +++
- Commision Payment
- Traveling Allowance
- Telephone Facilities
- Bike Alowance
- Incentives and over seas Trip
- Career Development (Managment Position within 6 months, After promotion salary package 42,500/=)

Contact : Branch Manager
Mr.G.Anthany
077 356 6835, 021 567 1130
www.pioneerhouselearning.com

Address:-
Pioneer house,
No.100,2nd Floor,
Manipay Road,Jaffna.

## வயாவிளான் உத்தரிய மாதா கோவில் திருவிழா 16.07.2016

உத்தரிய மாதா கோவில் பங்குத்தந்தை ஜெயக்குமார் தலைமையில் 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலிக்கு பங்கு பற்றுவதற்கு பிராயாணவசதி செய்யப்பட்டுள்ளது. அன்று காலை இளவாலை பிலிப்பு நேரியார் கோயிலில் இருந்து காலை 7 மணியளவில் பஸ் புறப்பட்டு கதிரை மாதா ஊடாக 8-15 மணிக்கு சுன்னாகம் ந்ாகம்ஸ் சினிமா ஊடாக யாழ்ப்பாணம் ஆச்சிரமத்துக்கு 9 மணிக்கும் பின்பு ஆவரங்கால் ஊடாக அச்சுவேலி சூசையப்பர் கோவில் ஊடாக வயாவிளான் உத்தரிய மாதா கோவிலைச் சென்றடையும்.

திருப்பலியில் பங்குபற்ற விரும்புபவர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

**பங்குத் தந்தை**
**P.ஜெயக்குமார்**

# தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என கரைச்சி பிரதேச சபை செயலாளர் க.கம்சநாதன் தெரிவித்தார்.

கலந்துரையாடலுக்கு வராத நிர்வாகிகளின்கீழ் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கலந்துரையாடலுக்கு வரும் நிர்வாகிகள் தமது கல்வி நிலையங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கைகள், கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கைகள், தகைமைகள் உள்ளடங்கலாக அந்த ஆசிரியர்களின் விவரங்கள், அவர்களால் நடத்தப்படும் பாடங்கள், நடத்தப்படும் வகுப்பு விவரங்கள் போன்ற தகவல்களை வழங்கக்கூடிய வகையில் வர வேண்டும்.

இறுதியாகப் பிரதேச சபையிடம் இருந்து பெற்ற வியாபார உரிமைப் பத்திரத்தையும் கொண்டு வரவேண்டும். அத்தோடு பிரத்தியேக வகுப்புக்களில் ஈடுபடும் ஆசிரியர்களும் தவறாது குறித்த கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று அவர் அறிவித்தார்.

(ற-21,ரி)



யாழ்.வரணி குடமியன்

## அருள்மிகு ஆதிசிவன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ சிறப்பிதழ் - 2016

| கொடியேற்றம் | தேர் | தீர்த்தம் |
|---|---|---|
| 10.07.2016 - பகல் 10.30 | 18.07.2016 -பகல் 10.30 | 19.07.2016 - பகல் 10.30 |

### தினசரி உற்சவம்

காலை
காலை 9.00 மணிக்கு கும்பபூசை
முற்பகல் 10.15 மணிக்கு மூலஸ்தான பூசை
முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டப பூசை
ஒரு மணிக்கு அன்னதானம்

மாலை
மாலை 6.30 மூலஸ்தான பூசை
இரவு 8.00 மணிக்கு வசந்த மண்டப பூசை
சுவாமி சப்பறத்தில் வெளிவீதி



### குருமார் விவரம்

சிவஸ்ரீ கதிர்.இராமலிங்க ஐயா
ஆசியுடன்
ஆலய பிரதிஷ்டா உற்சவகுரு
தென் இந்திய பயிற்சிகுருமணி
சிவஸ்ரீ.இராம. ஸ்ரீரங்கக்குருக்கள் (சிவா ஐயா)
கொடிகாமம் சந்தைவாயில் ஸ்ரீ காளிகாதேவி தேவஸ்தானம்

| சு.பானு ஐயா, பொலிகண்டி. | ஸ்ரீ அகில் ஐயா, கொடிகாமம். | சு.விக்கி ஐயா, பொலிகண்டி. | ஜெ.டுதீஸ் ஐயா, திருவையாறு. |
|---|---|---|---|

**தினமும் சிறந்த முறையில் அன்னதானம் வழங்கப்படும். அனைவரும் வாரீர். சிவன்அருள் பெறுவீர்.**

குடமியன் ஆதிசிவன் தேவஸ்தானம்.

சி.குமாரசாமி – ஆலய தர்மகர்த்தா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறி நாற்றுக்களுக்கு வவுனியாவில் தட்டுப்பாடு

## பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வவுனியா, ஜூலை 10

மரக்கறி நாற்றுக்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றோம். எமக்குத் தேவையான மரக்கறி நாற்றுக்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு வவுனியா மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

மரக்கறி நாற்றுக்களை விதை பொருள் உற்பத்திப் பண்ணைகள் மற்றும் தனியார் விவசாயப் பண்ணைகளில் பெற்றுக்கொள்ளும் வசதி கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு மிகவும் குறைவாக உள்ளது.

ஆண்டின் ஆரம்பத்தில் மழை, அதனையடுத்து கடும் வெப்பம் பின்னர் கடும்மழை எனக் கால நிலை சீரற்று இருந்தது. மரக்கறி நாற்றுக்கள் உற்பத்தி விதைபொருள் விவசாயப் பண்ணைகளிலும் தனியார் பண்ணைகளிலும் குறைவடைந்துள்ளன. இதனால் விவசாயிகளும் வீட்டுத்தோட்ட மரக்கறிச் செய்கையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசு, மரக்கறி நாற்றுக்களை உற்பத்தி செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

விவசாயிகள் பலர் தொகையாக மரக்கறி நாற்றுக்களைப் பெற்றுள்ளனர். சில விவசாயிகளுக்கு நாற்றுக்கள் கிடைக்காமல் போயுள்ளன. மழை வெள்ளம் காரணமாகத் தங்களுடைய பயிர்கள் அழிவடைந்துள்ள நிலையில், பல விவசாயிகள் தொகையாக நாற்றுக்களை வாங்கிச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இனிவரும் காலங்களில் மேலதிகமாக நாற்றுக்களை உற்பத்தி செய்யத் தீர்மானித்துள்ளோம் - என்று வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்தார். (ந-21,402)

## மரண அறிவித்தல்

### மரியானந்தம் அல்லேலூயா

(ஓய்வுபெற்ற புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்)



நவாலியைப் பிறப்பிடமாகவும் மிருசுவிலை வசிப்பிடமாகவும் சனசமூக நிலைய வீதி, ஈச்சமோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மரியானந்தம் அல்லேலூயா நேற்று (09.07.2016)சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அருளப்பு-புலோமினா தம்பதியரின் அன்பு மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான மத்தேசு - இயபேல் தம்பதியரின் மருமகனும் ஞானானந்தம், திருமதி ஆரோக்கியநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி மரியம்மாவின் பாசமிகு கணவரும் அருட்செல்வி புறோத்மேரி (திருக்குடும்ப கன்னியர் சபை), மேரி ஜேம்ஸ், மேரி பெனடிக்ஷன்(அச்சக உரிமையாளர், யாழ்ப் பாணம்), மேரி மௌறிலியோ (யாழ்கோ), திருமதி மேரி சுதர்ஷனி (ஆயுள்வேத வைத்தியர், பிரதேச செயலக உத்தியோகத்தர் சண்டிலிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகோணசலிங்கம் (ஆசிரியர் உடுவில் முருகமூர்த்தி), திருமதி ஜெசில்டா (பிரதேச செயலக உத்தியோகத்தர் சாவகச்சேரி), திருமதி நவீனா (யாழ்கோ) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வி ஜேன் சடோனி, போல் கிஷான், மேரி டன்ஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஈச்சமோட்டையில் உள்ள அவரது தற்காலிக இல்லத்திலிருந்து இறுதி நல்லடக்க ஆராதனைக்களுக்காக நவாலி புனித பேதுறுபாவிலு ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நாளை (11.07.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சனசமூக நிலைய வீதி,
ஈச்சமோட்டை,
பாஷையூர்.

(சே/ 2792)
(12.18)

தகவல்:
குடும்பத்தினர்.

077 614 6556

## இராஜகோபுர திருப்பணி ஆரம்பம்

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் இராஜகோபுர திருப்பணி ஆரம்ப நிகழ்வு இன்று காலை 6 மணியிலிருந்து 6.25 மணிவரையும் நடைபெறவுள்ளது என்று பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ந-ரி)



## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினர்
**திரு.ம.மனோறதன்** அவர்களின் பாசமிகு
தந்தையார்

**சில்வேஸ்ரர் மரியதாஸ்**
**(ராசதுரை)**

அவர்களின் மறைவையொட்டி துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை**

(சி.24159)
(13.18.17)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**சிவதாஸ் சிவதர்ஜினி**

மலர்வு 01.10.1986
உதிர்வு 27.05.2016

அன்பும், அறிவும் கலந்து நிற்க
எமது குடும்பத்தில் ஒளிவிளக்காய்
வந்துதித்த எம் மகளே, சோதரியே
உன்னை மறந்து வாழவும் முடியுமோ
எத்தனை யுகங்கள் போனாலும்
என்றென்றும் எங்கள்
நினைவுகளில் நிறைந்து நிற்பாய்

கடந்த 27.05.2016 அன்று இறைபதம் அடைந்த எமது அன்பின் ஒளி விளக்கு சிவதர்ஜினி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்து அன்பு உள்ளங்களும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அவரின் மறைவுச்செய்திகேட்டு, உள்நாட்டிலிருந்தும்,வெளிநாடுகளிலிருந்தும், தொலைபேசியிலும், நேரிலும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

றக்கா வீதி,
சுண்டுக்குளி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 30.05.1946
மறைவு 07.07.2016

## பாலசுப்பிரமணியம் செல்லையா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடியை வதிவிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலசுப்பிரமணியம் 07.07.2016 அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லையா - இராசம்மா தம்பதியரின் புத்திரனும், சொர்ணலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் இளைய மருமகனும், தவமலரின் (ராணி) அன்புக் கணவரும், பாக்கியலட்சுமி, ஜெயலட்சுமி, தவராசா, காலஞ்சென்ற வரதராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனலட்சுமி, விஜயலட்சுமி, சகுந்தலாதேவி, சத்தியதேவி, தயாநிதி, சந்திரகுமார், குணசீலன், காலஞ்சென்ற துரைராசா, காலஞ்சென்ற அருட்பிரகாசம், சாராதா, ஜெகா ஆகியோரின் மைத்துனரும், கணேசநாதன், காலஞ்சென்ற பரம்சிவம்பிள்ளை, குகநேசன், முதலி, சசி, கிரிஜா ஆகியோரின் சகலனும், ரூபி, ராஜன், ஜீவா, கிரி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயதாஸ், தவராசா (ரவி), டிலானி ஆகியோரின் மாமனும், அருண், அன்பு, அழகி, அவ்வை, மீரா, மாதங்கி, ஆதவன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை July - 10.2016 4 pm - 9pm திங்கட்கிழமை July-11.2016 8am -9.30 am வரையும் Chapel Ridge Funeral Home (8911 Woodbine Avenue, Markham Ontario L3R 5 G1) இல் அஞ்சலிக்குவைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 8.30 am -11.30 am வரையும் நடைபெற்று 12 மணிக்கு Highland Hills Crematorium (12492 Woodbine Avenue, Gormley, Ontario LOh 1Go இல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| மகள்: | ரூபி விஜய் (கனடா) | 416 - 546 - 0145 |
| | | 647 - 297 - 0521 |
| மகன்: | ராஜன் (இலங்கை) | 947 7335 4284 |
| | | 077 757 0284 |
| மகள்: | ஜீவா ரவி (கனடா) | 416 - 431 - 0721 |
| | | 416 - 836 - 7148 |
| மகன்: | கிரி (கனடா) | 647 - 801 - 9994 |
| மைத்துனன்: | சந்திரன் | 416 - 722 1654 |
| மைத்துனன்: | சீலன் | 416 - 473 - 2497 |

தகவல்:
குடும்பத்தினர்.

(ஜே.2793) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாள் தேவை**

கணினி அறிவுள்ள பெண் வரவேற்பாளர் தேவை.

தொடர்பு:- 076 639 8980

**பெண் பணியாளர்கள் தேவை**

மிக்சர் கொம்பனிக்கு பெண் பணியாள்கள் தேவை.

தொலைபேசி இல:

077 636 6723, 076 539 6010

# நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய படுகொலை நினைவு கூரப்பட்டது

நவாலி, ஜூலை 10

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலின் 21ஆம் ஆண்டு நினைவுகூரல் நேற்றுக் காலை 6.45 மணியளவில் நவாலி பங்குத் தந்தை றோய் பேடினன்ட் தலைமையில் இடம்பெற்றது.

1995ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி 'லீப்போர்வேட்' இராணுவ நடவடிக்கையின் போது, வலிகாமத்தில் இடம்பெயர்ந்திருந்த மக்கள் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய வளாகத்தில் தங்கியிருந்தவேளையில், அரச விமானப் படை நடத்திய தாக்குதலில் அந்த இடத்திலேயே 147 பேர் சாவடைந்தனர்.

உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மத்தியில் நவாலி சென். பீற்றர்ஸ் பங்குத் தந்தை அருட்தந்தை றோய் பேடினன்ட் தலைமையில் சிறப்பு வழிபாடு இடம்பெற்றது.

மிகப் பெரிய தாக்குதலில் எமது மக்களின் சிறுவர்கள், முதியவர்கள், மாணவர்கள், பெண்கள் என 147 பேர் உயிரிழந்தனர். இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் ஆன்மா அழியவில்லை. உடல் அழிவடைந்தது.

இன்னும் அதன் தாக்கம், உணர்வு உணர்ந்தவர்களாக இங்கு நாம் கூடியுள்ளோம். உறவுகளை இழந்தவர்கள் தாங்க முடியாத வேதனைகளின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் - என்றார் கீயூடெக் இயக்குநர் அருட்தந்தை ச.இயூஜின் பிரான்சிஸ்.

இந்த நிகழ்வில் எட்மன் மைக்கல் அடிகளாரும் கலந்துகொண்டு விசேட பூசை வழிபாடுகளை நடத்தினர்.

பின்னர் நேற்று மாலை 5.45 மணியளவில் நவாலி சென். பீற்றர்ஸ் தாக்குதலில் சாவடைந்தவர்களின் நினைவாக நவாலி வடக்கு புலவர் வீதியில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் மெழுகுவர்த்தி ஒளியேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நவாலி சென். பீற்றர்ஸ் பங்குத் தந்தை றோய் பேடினன்ட் தலைமையில் நவாலி சென்ற் பீற்றர்ஸ் ஆலய சூழலில் அமைக்கப்பட்ட நினைவு தூபிக்கு உறவுகள் ஒன்று கூடிய நிலையில் நேற்று மாலை 6 மணியளவில் தீபம் ஏற்றப்பட்டு நினைவு கூரப்பட்டது. ஒன்று கூடியவர்கள் மறைந்த உறவுகளை நினைவு கூர்ந்தனர். (வ-50)

# போர்க்குற்ற சாட்சியங்களை இலங்கை தூதரகங்களுக்கு வழங்குவது ஆபத்து

## யஸ்மின் சூகா எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 10

இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த சாட்சியங்களை, இலங்கைத் தூதரங்களுக்கு வழங்குவது மிகவும் ஆபத்தானது.

இவ்வாறு எச்சரித்தார் பன்னாட்டு மனித உரிமைகள் சட்டத்தரணி யஸ்மின் சூகா.

போர்க்குற்ற சாட்சியங்களை வெளிநாடுகளிலிருந்து வழங்கும் சட்டத்திருத்தத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. சாட்சியங்களைப் பாதுகாக்கும் சட்டத்தில், வெளிநாடுகளிலிருந்து வழங்கப்படக் கூடிய சாட்சியங்களையும் ஏற்றுக் கொள்ளும் திருத்தத்தை நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச அமைச்சரவைக்கு முன்வைத்தார்.

வெளிநாடுகளில் சாட்சி வழங்குவதற்குத் தயாராகவுள்ளவர்கள், அந்தந்த நாடுகளில் இருக்கக் கூடிய இலங்கைத் தூதரகங்களிலேயே சாட்சியங்களை வழங்க முடியும்.

"வெளிநாட்டில் இருக்கக் கூடிய சாட்சியங்களைக் கலந்துரையாடு வதற்கும், அவர்களின் சாட்சியங்களைப் பெறுவதற்கும் அரசு முன்வந்திருப்பதை உண்மை மற்றும் நீதிக்கான எனது அமைப்பு வரவேற்கின்றது. அவற்றை இலங்கை தூதரகங்களிலிருந்து வழங்குவது சாட்சிகளினதும், அவர்களது குடும்பங்களினதும் பாதுகாப்பிற்கு மிகவும் அச்சுறுத்தலாகவும், அபாயமாகவும் அமையும்.

நம்பகத் தன்மையான சாட்சிகளுக்கான பாதுகாப்பு என்பது சாட்சிகள் பாதுகாப்பாகவும், இரகசியமாகவும் தமது சாட்சியங்களை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். இந்தச் சாட்சியங்கள் இலங்கைத் தூதரகங்களுக்குச் சென்றால், அவர்கள் இறுதிப் போரின் போது குற்றங்களைப் புரிந்தவர்களாலேயே அடையாளம் காணப்படக்கூடிய அபாயம் இருக்கின்றது' என்றார் யஸ்மின் சூகா. (வ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராஜேஸ்வரி தெட்சணாமூர்த்தி(சோதி)



வண்ணார் பண்ணை, நாச்சி மார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி தட்சணாமூர்த்தி நேற்று (09.07. 2016) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - வள்ளியம்மமை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் மரகதம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி (சோதி) யின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருஞானசுந்தரம், கிருகாம்பாள், சிவானந்தம், புவனேஸ்வரி மற்றும் திலகவதி, காலஞ்சென்ற கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் சகோதரியும், ஜெயராம், திவாகரன், போஜன், மயூரன் ஆகியோரின் தாயாரும், காந் தன், புவிதாலட்சுமி, சரவணபவன், காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் பெரியதாயாரும், சிவகாமி, சிவனேத்திரகௌரி, சீதாதேவி, காயத்திரி, ஶ்ரீதரன், சங்கீதா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30, சேர் பொன் இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தெ. காந்தன்

### பாலசுப்பிரமணியசர்மா கயிலநாதசர்மா



திக்கம் அல்லாய் வடமேற்கு அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியசர்மா கயிலநாதசர்மா நேற்று (09.07.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2016) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திக்கம், அல்வாய்
வடமேற்கு , அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தசாமி நடராசா

(முன்னாள் உரிமையாளர்-ராஜன் புத்தகசாலை யாழ்ப்பாணம்)



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் 52, பிள்ளையார் வீதி,தலங்காவல் பிள்ளயைார் கோயிலடி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நடராசா கடந்த (08.07. 2016) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

52, பிள்ளையார் வீதி,
தலங்காவல் பிள்ளையார்
கோயிலடி, திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வைத்தி சிவராஜபதி (வினோபாஜி)

(அகில இலங்கை காந்திய இயக்க உறுப்பினர்)



போயிட்டி நீர்வேலியைச் சேர்ந்த வைத்தி சிவராஜபதி நேற்று (09.07.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தி-ஐயாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இளையவன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமலரின் அன்புக் கணவரும், ஜெயக்குமார் (சுவிஸ்), இந்திரகுமார், இராஜகருணா, ஜெயந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கவிதா (சுவிஸ்), கஸ்தூரி, சுபாசினி, சுமதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0777 395909

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டியே மக்கள் விருப்பம்

## அரசமைப்புப் பேரவையின் வழிநடத்தல் குழுவிடம் வடக்கு முதல்வரின் பிரதிநிதிகள் வலியுறுத்து

"வடக்கு மாகாண மக்களின் ஏகோபித்த கருத்தை அரசு கவனத்தில் எடுத்து உறுதியானபுதிய அரசமைப்பு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். தெற்கின் பெரும்பான்மையானவர்கள் இதனை நிராகரிக்கின்றனர் என்று கூறித் தட்டிக் கழிக்க முடியாது. வடக்கின் அதிகூடிய பெரும் பான்மையினர் இத னையே விரும்புகின்றனர்"

யாழ்ப்பாணம், ஜூலை 10

ஓர் இனம் மற்றைய இனத்தின்மீது ஆதிக்கம் செலுத்தவோ, கீழ்ப்படிய வைக்கவோ முடியாதவாறு அரசமைப்பு மாற்றப்பட்ட வேண்டும். இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அரசமைப்பு மாற்றத்தையே வடக்கு மக்கள் கோருகின்றனர்.

இவ்வாறு அரசமைப்புப் பேரவையின் வழிநடத்தல் குழுவிடம் நேற்றுமுன்தினம் வலியுறுத்தப்பட்டது.

புதிய அரசமைப்பை உருவாக்கும் அரசியல் அமைப்புச் சபையின் உபகுழு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூடியது. மாகாணங்களின் முதலமைச்சர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். ஆறு முதலமைச்சர்களும், வடக்கு மாகாண முதலமைச்சர் சார்பில் இரு பிரதிநிதிகளும் அதில் கலந்து கொண்டனர். அவர்கள் அங்கு மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

வடக்கு முதலமைச்சருக்கு உடல் நலமின்மையால் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர்கள் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இறைமை பகிரப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கிய சமஷ்டி முறையிலான அரசியல் அமைப்பே தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும்.

இணைந்த வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் கரிசனைகளை உள்ளடக்கியதான ஓர் தீர்வையே நாம் பரிந்துரைக்கின்றோம். வடக்கு மாகாண சபையின் இரு பெரும்பான்மையின உறுப்பினர்கள் தவிர்ந்த 36 உறுப்பினர்களாலும் இந்த முன்மொழிவு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

வடக்கு மாகாண மக்களின் ஏகோபித்த கருத்தை அரசு கவனத்தில் எடுத்து உறுதியான புதிய அரசமைப்பு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

தெற்கின் பெரும்பான்மையானவர்கள் இதனை நிராகரிக்கின்றனர் என்று கூறித் தட்டிக்கழிக்க முடியாது. வடக்கின் அதிகூடிய பெரும்பான்மையினர் இதனையே விரும்புகின்றனர் என்று வலியுறுத்தினோம் - என்றுள்ளது. (ற-4,ரி,101)

# கண்டியில் வெள்ளை உடை நல்லூரிலோ காக்கிச் சட்டை

## பொலிஸாரின் இந்தச் செயற்பாடு சரியானதா என்று சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 10

கண்டி தலதா மாளிகையில் கடமையில் உள்ள பொலிஸார் வெள்ளையுடையில் பணி புரிகின்றனர். எமது புனிதத் தலமான நல்லூர் ஆலய உற்சவத்தில் கடமை புரியும் பொலிஸார் மட்டும் ஏன் காக்கிச் சட்டையுடன் பணி புரியவேண்டும்? இவ்வாறு சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

யாழ் . மாவட்ட சிவில் நிலைமை தொடர்பில் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. அங்கு இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டது.

நல்லூர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ளது. அங்கு பொலிஸார் பணியில் ஈடுபட வேண்டியது கட்டாயம். ஆலயத்தின் உட்புறத்தில் பணியில் ஈடுபடும் பொலிஸார் சீருடையின்றிக் கலாசார உடையுடன் பொலிஸாரின் பட்டி அணிந்து கடமை புரியவேண்டும்.

கண்டி தலதா மாளிகையின் உட்புறத்தில் பணியாற்றும் பொலிஸார் வெள்ளையுடையணிந்து பொலிஸாரின் பட்டியை மட்டுமே அணிகின்றனர். அதேபோன்று தமிழ் மக்கள் புனிதமாக மதிக்கும் நல்லூர் ஆலயத்தின் உட்புறத்தில் பணிபுரியும் பொலிஸாரும் கலாசார உடையுடன் பொலிஸாரின் பட்டி அணிந்து கடமையாற்ற முன்வரவேண்டும்- என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை காக்கிச் சட்டையைப் பார்த்தால் மட்டுமே பயம் வரும். வெள்ளை உடையுடன் காணப்பட்டால் அவர்களைத் தாதியர்கள் என்றோ, சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள் என்றோ எண்ணிவிடுவர் என்று யாழ். பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அதற்குப் பதிலளித்தார். (த-101)

# ராணுவ வாகனங்கள் சட்டத்தை மீறினால் உடனடி நடவடிக்கை

## பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். குடாநாட்டில் போக்குவரத்தில் ஈடுபடும் இராணுவ வாகனங்களோ , இ.போ.சவுக்குச் சொந்தமான வாகனங்களோ சட்டத்தை மீறும் வகையில் செயற்பட்டால் உடன் நடவடிக்கை மேற்கொள்க.

இவ்வாறு சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அதிரடி உத்தரவிட்டார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது அவர் இவ்வாறு உத்தரவிட்டார்.

குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் அதிக புகையைக் கக்குகின்றன. சில சந்தர்ப்பங்களில் சட்டத்தைக் கடைப்பிடிக்காமல் நடக்கின்றனஎன்றும்சுட்டிக்காட்டப்பட்டது. இராணுவ வாகனங்களும் சட்டத்தை மதிக்காமல் எழுந்தமானமாகச் செயல்படுகின்றன என்று மக்கள் கூறுகின்றனர்.

இராணுவ வாகனம் என்றாலும் சட்டத்தை மீறிச் செயல்பட முடியாது. அவ்வாறான வாகனங்களை இனம்காணும்போது உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் இந்த இடத்தில் பணிப்புரை விடுக்கின்றேன் -என்றார் பிரதிப் பொலிஸ்மா அதிபர். (த-101)

# வவுனியாவில் வனத் திணைக்களம் கையகப்படுத்திய காணி விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

புளியங்குளத்தில் வனவளத் திணைக்களத்தினர் கையகப்படுத்தியிருந்த 40 ஏக்கர் காணி பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று மீள் குடியேற்ற அமைச்சு தெரிவித்தது.

காணியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு மக்கள் தொடர் போராட்டங்கள் நடத்தியிருந்த நிலையில் காணி கையளிக்கப்பட்டது.

இது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்ததாவது:

விடுவிக்கப்பட்ட காணியில் ஞானம் பவுன்டேஷன் நிறுவனத்தால் 31 வீடுகள் நிர்மாணிப்பதற்கான முன்னேற்பாடாகக் காணி துப்புரவாக்கல், நில அளவை என்பன இடம்பெறுகின்றன.

வவுனியாவில் பூந்தோட்டம் நலன்புரி முகாமில் இடம்பெயர்ந்த 97 குடும்பங்கள் தங்கியுள்ளன. அவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள். காணி அற்றவர்கள்.

அவர்களுக்கு வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் சின்னடம்பனில் 60 ஏக்கர் காணியில் 66 வீடுகள் அரச சார்பற்ற நிறுவனமான ஞானம் பவுன்டேஷன் நிறுவனத்தின் உதவியுடன் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஓகஸ்ட் மாத இறுதிக்குள் வீட்டுத் திட்டங்கள் முடிவுறும்-என்றார். (த-4)

# யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நாட்டின் தேசிய மட்டத்திலான கூட்டுறவுச் சபைத் தெரிவில் யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை முதலிடத்தில் தெரிவு செய்யப்பட்டுச் சிறப்பு விருதைப் பெற்றது.

இலங்கைத் தேசிய கூட்டுறவுச் சபையும், கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடத்திய நிலையான மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தெரிவிலேயே முதலிடம் பெற்றது.

கடந்த 2 ஆம் திகதி கொழும்பு தாமரைத்தடாகத்தின் கலையரங்கில் இடம்பெற்ற 94 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வில் கூட்டுறவு அமைச்சர் ரிசாத் பதியுதீன் இந்த விருதை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையிடம் உத்தியோகபூர்வமாக வழங்கினார். (ற-17)

# அகில இலங்கை அரச ஊழியர் சங்க கோரிக்கைகள் நிறைவேற்ற உறுதி

## மாநகர சபை ஆணையாளர் வழங்கினார் என்று சங்கத்தின் பிரதித்தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

அகில இலங்கை அரச ஊழியர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு அந்தச் சங்கத்தின் பிரதித்தலைவர் க. அன்ரனி தெரிவித்தார்.

அந்தச் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண சங்கச் செயலாளர் அலுவலகத்தில் நடந்தது.

பதில் வருமான மேற்பார்வையாளராக நீண்ட காலமாக பணியாற்றும் ஊழியர்களுக்கு முறையான பதவியுயர்வு வழங்க ஆவன செய்ய வேண்டும்.

தாபன விதிக் கோவைக்கு அமைவாக வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களின் சிறுபணியாளர்களின் நலன் கருதி ஒழுக்காற்று அதிகாரிகளை நியமிக்கவேண்டும்.

தொழிற்சங்க அங்கத்தவர்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்களைக் குறிப்பிட்டதற்கு அந்தந்த நகரசபை, மாநகர சபை, பிரதேச சபை அதிகாரிகளைச் சந்தித்து தாய்ச் சங்கத்துக்குத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அங்கத்தவர் சந்தாப் பணம் தொடர்பான விடயத்துக்கு பொருளாளர், திணைக்களத் தலைவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி அதன் பிரதியை இணைப்பாளர்களுக்கு அறிவிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - போன்ற தீர்மானங்கள் அதில் எடுக்கப்பட்டன.

அவை அகில இலங்கை அரச ஊழியர் சங்கத்தின் ஊழியர்களுக்கும், மாநகர சபை ஆணையாளருக்கும் இடையில் மறுநாள் நடைபெற்ற கூட்டத்தின் போது ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டன.

ஆணையாளர் பொ.வாகீசன் தங்களுடைய தீர்மானங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதாக உறுதிமொழி வழங்கினார் என்று அகில இலங்கை அரச ஊழியர் சங்கத்தின் பிரதித் தலைவர் தெரிவித்தார். (ற-21,415)

# உத்தரப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 10

புங்குடுதீவு 10, ஶ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய ஆனி உத்தரப் பெருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது எனத் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்தனர்.

விசேட ஸ்நபன அபிசேகம் விசேட பூசையுடன் வீதியுலாக் காட்சியும் இடம்பெறவுள்ளது. (ற)

# கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயப் புனராவர்த்தன நவகுண்டபக்ச பிரதிஸ்டா மகா கும்பாபிசேகப் பெருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது என்று ஆலயப்பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து 2016 ஆம் ஆண்டு ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு முதலாம் தடவை மற்றும் இரண்டாம் தடவை தோற்றும் மாணவர்களுக்கு நாளை திங்கட்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் அனுமதி அட்டைகள் வழங்கப் படவுள்ளன என்று பாடசாலை அதிபர் மு.இரவீந்திரன் தெரிவித்தார்.

அனுமதி அட்டை பெற வரும் மாணவர்கள் அனைவரும் தேசிய அடையாள அட்டையுடனும், சீருடையுடனும் வர வேண்டும். முதலாம் தடவை தோற்றும் மாணவர்கள் பெற்றோருடன் சமுகம் தரவேண்டும் என அவர் தெரிவித்தார்.

(ற-ரி)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு அனைவரும் இணைந்து தீர்வு காண்க

### கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

இந்திய மீனவர் பிரச்சினைக்கு ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் வடக்கு, கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் இணைந்து நிரந்தத் தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.

இவ்வாறு தேசிய மீனவர் சம்மேளனத்தின் முன்னாள் உப தலைவரும், யாழ். மாவட்ட கிராமியக் கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவருமான என்.பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்திய மீனவரின் அத்துமீறல் குறித்து இந்திய அரசுடன் போர் தொடுக்குமாறு நாம் கூறவில்லை. பேச்சு மூலம் நிரந்தரமான தீர்வைப் பெற்றுத் தருமாறு அரசைக் கோரி வருகிறோம். இந்திய மீனவர்கள் எமது கடற் பரப்பில் தொழில் செய்து வருவதைத் தடுக்கும் வகையில் 2010ஆம் ஆண்டிலிருந்து நான்கு தடவைகள் பேச்சு நடத்தப்பட்டபோதும் இன்றுவரை தீர்வு காணப்படவில்லை.

அரசால் மட்டும் தயாரிக்கப்படும் தீர்வுத் திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களின் அபிலாசைகளுக்குத் தீர்வு காணமுடியாது.

இந்தியக் கடற்பரப்பில் இவர்கள் தடை செய்யப்பட்ட சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுவதால், கடல் வளம் அழிந்து கடலுணவுகளின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எமது நாட்டில் ஏற்பட்ட போரைப் பயன்படுத்தி எமது கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டு வரும் இந்திய மீனவர், எமது கடல் வளங்களையும் அழிக்க முற்படுகிறார்கள். எமது எதிர்காலச் சமூகம் தொழில் ரீதியான பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எமது சமூகத்தின் எதிர்காலத்தையும் கடல் வளத்தையும் கருத்திற்கொண்டு சமாதானம் மூலம் பேச்சு நடத்தி, நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு அரசுகள் முன்வர வேண்டும்- என்றார்.

இந்திய மீனவர் பிரச்சினைக்காக இந்தியாவுடன் போரிட முடியாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

(ற-4,115)




## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் மின் தடைப்படும்.

யாழ்ப்பாணத்தில் மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் - யாழ். நுண்கலைப்பீடம், சீரணி, சண்டிலிப்பாய், ஆலங்குளாய், கந்தரோடை, அளவெட்டி, மாகியப்பிட்டி, உடுவில், இணுவில் ஒரு பகுதி, உடுவில், சங்குவேலி, மானிப்பாய். பிப்பிலி, கட்டுடை, மாதகல், காங்கேசன்துறை, குசுமந்துறை, காட்டுப்புலம், பத்தானை, மாப்பியன், சுதுமலை, கார்கில்ஸ் பூட் சிற்றி ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

கிளிநொச்சியில் குமுழமுனை, கரியாலை நாகபடுவான், அன்புபுரம், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், ஆனந்தபுரத்திலிருந்து கொக்காவில் வரைக்கும், மத்திய வங்கி, எஸ்.எப்.எச்.கியூ இரணைமடு, மாஸ் அக்ரிவ், யுனிச்செலா, பொறியியல்பீடம், விவசாயபீடம், நோர்த் கார்கில்ஸ் அக்ரிவ் பூட்ஸ், 7 ஆவது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிட்டெட், கொக்காவில் படை முகாம் 1, கொக்காவில் படை முகாம் 2, கொக்காவில் படை முகாம் 3, ரூபவாகினி தொலைத் தொடர்பு கோபுரம், கொக்காவில் இராணுவ முகாம் தொலைத் தொடர்பு கோபுரம், நாச்சிக்குடா கடற்படை முகாம். இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

வவுனியாவில் பிரதான மின்வழாங்கலிலிருந்து (கிறிட்) வவுனியா நகரப் பகுதி, வெளிக்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, பூங்கா வீதி, இலங்கை வங்கி, வவுனியா வைத்தியசாலை, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், கச்சேரியடி நீர்ப்பாசன சபை, ஓவியா விடுதி, எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, ராணி அரிசி ஆலை ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என்று இலங்கை மின்சார சபை மின் வழங்கல் கட்டுப்பாட்டுநிலைய மின்பொறியலாளர் அறிவித்துள்ளார்.

(ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் காணிகளை விடும்வரை சுழற்சி முறையில் தொடர் போராட்டம்

## பரவிப்பாஞ்சான் மக்கள் அறிவிப்பு
## வீதியில் அமர்ந்து நேற்றுக் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, ஜூலை 10

இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்கும் வரை சுழற்சி முறையில் இரவு, பகலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட வுள்ளோம்.

இவ்வாறு பரவிப்பாஞ்சான் கிராம மக்கள் தெரிவித்தனர். நேற்று அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். காலை கிளிநொசசி கந்தசாமி கோயிலில்கவனவீர்ப்புப்போராட்டத்தை ஆரம்பித்த மக்கள், பின்னர் பரவிப்பாஞ்சான் பிரதான வீதியில் அமர்ந்து போராட்டம் நடத்தினர்.





ஆறு ஆண்டுகளாக சொந்த மாவட்டத்துக்குள் இடம் பெயர்ந்து அகதி வாழ்க்கை வாழ்கின்றோம். வாடகை வீடு களிலும், உறவினர் வீடுகளிலும் நெருக்கடிக்கு மத்தியில் வாழ்கின்றோம். எங்கள் காணிகள் மீளக் கிடைக்க வேண்டும். அதுவரை போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை - என்று தெரிவித்தனர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள்.

பரவிப்பாஞ்சானில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டு முகாம் அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள் தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று அங்குள்ள இராணுவ முகாமில் கடிதம் கொடுத்திருந்தனர். அதற்குரிய பதிலைப் பெற்றுத் தருவதாக அங்கிருந்த இராணுவ அதிகாரி கூறியிருந்தார். கடந்த திங்கட்கிழமை முகாமுக்குச் சென்ற மக்கள் தமது கடிதத்துக்குப் பதில் வழங்குமாறு கேட்டனர்.

மேலதிகாரிகளே இது குறித்துக் கூற வேண்டும். நாம் இது குறித்து எதுவும் முடிவெடுக்க முடியாது. காணிக்குரியவர்களின் பெயர் விவரங்களைத் தந்தால் அவற்றை மேலதிகாரிகளுக்கு அறிவிக்க முடியும் - என்று முகாமில் உள்ள இராணுவத்தினர் பதிலளித்தனர்.

தாக்கப்பட்ட மக்கள் எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சி வரவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காணிகளை விடுவிக்க ஆவன செய்ய வேண்டும் என்றும் இல்லா விட்டால் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் தெரிவித்து அங்கிருந்த அகன்றனர். நேற்று அவர்கள் திடீரெனக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர். போராட்டத்தில் ஆண்கள், பெண்கள், சிறுவர் கள் எனப் பலரும் இணைந்திருந்தனர்.

கடந்த மே மாதம் 10 ஆம் திகதி பரவிப்பாஞ்சானில் இராணுவ முகாம் அமைந்துள்ள காணிகளில் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டது. 54 குடும்பங்களுக்குச் சொந்தமான 180 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவில்லை. அவர்களில் 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது கிளிநொச்சியில் வசிக்கின்றன. அவர்கள் கடந்த இரண்டு மாதங்களாகத் தமது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரி வருகின்றனர். (ந-21)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தென்னை முக்கோண வலயம்

## விரைவில் உருவாக்கப்படவுள்ளது என கைத்தொழில் அமைச்சர் நவீன் தெரிவிப்பு

தென்மராட்சி, ஜூலை 10

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அழிவடைந்துள்ள தென்னந்தோட்டங்களை மீளமைக்க தென்னை முக்கோண வலயம் உருவாக்கப்படவுள்ளது. அதன்மூலம் நாட்டின் தேங்காய் உற்பத்தி 10 வருடங்களில் இரண்டு மடங்காகும். 300 லட்சம் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்ய நாற்று மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. 4 ஆயிரம் மில்லியன் ரூபா தேவைப்படுகிறது. தற்போது 200 மில்லியன் ரூபாவைப் பிரதமர் ஒதுக்கியுள்ளார்.

இவ்வாறு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.



வடக்கு, கிழக்கு தென்னை அபிவிருத்தித் திட்டமும் தென்னை அபிவிருத்தி விரிவாக்கல் செயற்பாட்டுத் திட்டமும் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

குருணாகல், புத்தளம், சிலாபம் மாவட்டங்களை உள்ளடக்கிய முக்கோணத் திட்டம் உள்ளது. தேங்காய் உற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டும். அதை எனது சேவைக் காலத்தில் நடைமுறைப் படுத்துவேன்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட பல ஆயிரக்கணக்கணக்கான தென்னம் தோட்டங்கள் போரால் அழிக்கப்பட்டன. மக்கள் தமது மனோதிடத்தின் மூலம் மீண்டும் தென்னை மர மீள் நடுகைத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

இது எனது வேண்டுகோள் மட்டுமன்றி ஒவ்வொரு பொதுமகனின் கடப்பாடும்கூட. தென்னை மரங்களை வீட்டுத் தோட்டப் பயிராக நட்டால் ஒரு குடும்பத்தின் தேவையை ஓரளவு குறைக்கமுடியும்.

நாட்டில் 3 ஆயிரம் மில்லியன் தேங்காய்கள்வருடாந்தம்உற்பத்திசெய்யப்படுகின்ற போதிலும் 2 ஆயிரத்து 800 மில்லியன் தேங்காய்கள் உள்நாட்டுத் தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

எமது திட்டங்களுக்கு வெளிநாடுகளின் உதவிகளும் கோரப்பட்டுள்ளன. அந்த உதவிகள் கிடைத்தால் வடக்கு கிழக்கில் மேலும் பல திட்டங்களை மேம்படுத்தலாம். இந்தத் திட்டங்களை மேம்படுத்த வடக்கு, கிழக்கு அரசுகள் போதிய அளவு காணிகளை எமக்கு வழங்கவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் பிராந்திய அலுவலகமும் பிரதேச செயலகங்கள் தோறும் கிளை அலுவலகங்களையும் அமைத்து அவற்றில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கவுள்ளோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இனி மேல் வன்முறைகள் வரக்கூடாது. தமிழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசியல் தீர்வு 24 மணி நேரத்தில் பெறக்கூடியது அல்ல. அனைத்து இனங்களைச் சேர்ந்தவர்களும் ஒன்றிணைந்து கூடிப் பேசி கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலமே அதனைப் பெறமுடியும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அடாத்தாகக் காணிகளைச் சுவீகரிக்கும் திட்டம் அரசிடம் இல்லை. தமிழ், சிங்களத் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போர் வடுக்களிலிருந்து விரைவில் மீண்டெழும். வீடுகள், வீதிகள் அபிவிருத்தி கண்டது போல தங்களதுமனங்களும் அபிவிருத்தியடைய வேண்டும். அவ்வாறான அபிவிருத்தி மூலம் நாடு பல நன்மைகளை அடையமுடியும். நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து இனவாதம் பேசுபவர்களைத் தோற்கடிக்கவேண்டும் - என்றார்.

இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்ததாவது-

மாவட்டத்தில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு இலவசமாகத் தென்னம் பிள்ளைகளை வழங்கவேண்டும். தென்னை உற்பத்திக்கு ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்படுவதை விட இரு மடங்கு உதவிகள் வடக்கு மாகாண மக்களுக்கு வழங்கவேண்டும்.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சால் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளவுள்ள தெங்கு அபிவிருத்தித் திட்டத்தில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அமைச்சர் உறுதிமொழி கூறினாலும் அதனை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.

தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் 5 வருட காலத்துக்குள் கொண்டு வருவதற்கு அரசு திடசங்கற்பம் கொண்டுள்ளது. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய தீர்வுத் திட்டத்தை வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினரகள்; ஒன்றிணைந்து தயாரித்து வழங்க வேண்டும். தமிழ்மக்களின் பிரச்சினைக்கு அரசால் எடுக்கப்படும் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் தெற்கில் இனவாதம் பூசி முடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது - என்றார்.

நிகழ்வில் பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர் லக்ஸ்மன் வசந்த பெரேரா, அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க உட்பட தென்னை அபிவிருத்திச் சபையின் அலுவலர்கள் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி உள்ளிட்ட பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தென்னை அபிவிருத்திச் சபையின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியை விருந்தினர்கள் ஆரம்பித்து வைத்தனர். தென்னை அபிவிருத்திச் செயற்பாட்டுத் திட்டத்தை அமைச்சர் நவீன் திஸா நாயக்கா கணனி செயற்பாட்டின் மூலம் ஆரம்பித்தார்.

பாடசாலை பிரதேச மாணவர்களுக்கு தென்னம்பிள்ளைகள், தென்னை அபிவிருத்திக்கான காசோலைகள், பயனாளிகளுக்கான தென்னை உற்பத்திப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ற-4,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka Telecom

# முத்தான 10 தமிழ் செனல்கள்

## இப்பொழுது PEO TV யில்!



அதிநவீன தொழில்நுட்பத்துடன்கூடிய PEO TV யில் இப்பொழுது நீங்கள் சன் TV, சன் மியூசிக், KTV, விஜய் TV, கலைஞர் TV. இசையருவி, சிரிப்பொலி, ஆதித்யா TV, ராஜ் TV மற்றும் ராஜ் மியூசிக் போன்ற 10 தென்னிந்திய செனல்கள் உட்பட உள்நாட்டு மற்றும் சர்வதேச TV செனல்களை மிகத் துல்லியமாகப் பார்த்து மகிழுங்கள். தென்னிந்திய செனல்களில் உடனுக்குடன ஒளிபரப்பாகும் உள்நாட்டு, வெளிநாட்டு செய்திகள், றியாலிட்டி ஷோக்கள், அறிவுபூர்வமான போட்டிகள், குடும்பப் பாங்கான நாடகங்கள் மற்றும் புதிய, பழைய திரைப்படங்களைப் பார்த்து மகிழுங்கள்.

### PEO TV யில் உள்ள சிறப்பம்சங்கள்

- கெச்-அப் TV
- வீடியோ ஒன் டிமாண்ட்
- பிக்சர் இன் பிக்சர்
- றெயின் புறூவ்

**PEO TV**
TV பார்க்க சிறந்த வழி

PEO TV இணைப்பைப் பெற அழையுங்கள்
24h 1212

# இலங்கையிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும்

## ஓர் சிறந்த வாய்ப்பு

வட்டி இல்லை ஜொலி அதிகம்

இக்கொடுப்பனவு அனைத்து பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்கள், பல்கலைகழகங்கள் மற்றும் பணிப்புரிந்துக் கொண்டே கல்வி கற்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

4 வருட உத்தரவாதம் | 0% வட்டி | 36



**LAPTOP + TABLET**

**LENOVO IP 100 CEL**
- INTEL CEL DC
- 2GB RAM
- 500GB Hard Disk
- Intel Graphics
- 15.6" Display
- Windows 10
- 1 Year Warranty

ரூ.49,900
வட்டியில்லை 15 கொடுப்பனவு
விசேட விலை ரூ.44,900
மாதாந்தம் 3,027 ரூபாவிலிருந்து

**ASPIRE Switch 3** (acer, TOUCH DISPLAY, Windows 10)
- Intel AtomZ3735F
- Quad Core Processor 1.83GHz
- 2GB RAM
- 500GB HDD
- Intel Graphics
- 10.1" Display
- Windows 10
- 1 Year Warranty

ரூ.69,990
விசேட விலை ரூ.59,900
மாதாந்தம் Rs.4,667

**HP 15 AC i3 WIN**
- Intel i3- 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- Intel Graphics
- 15.6" Display
- Windows 10

ரூ.79,900
வட்டியில்லை 15 கொடுப்பனவு
விசேட விலை ரூ.69,900
மாதாந்தம் 5,360 ரூபாவிலிருந்து
3வருட இலவச உத்தரவாதம்

அபான்ஸிலிருந்து மட்டுமே

**ACER 574 i3 SIR** (6th, 6GB RAM, 1TB)
- INTEL CORE i3
- 6GB RAM
- 1TB Hard Disk
- Intel Graphics
- 15.6" Display

ரூ.82,990
வட்டியில்லை 15 கொடுப்பனவு
விசேட விலை ரூ.71,990
மாதாந்தம் 4,837 ரூபாவிலிருந்து
3வருட இலவச உத்தரவாதம்

Available in above Colours

**LENOVO iP 300 i3** (8GB RAM)
- INTEL CORE i3 6th Generation
- Upgrade to 8GB RAM
- 1 TB Hard Disk
- Intel Graphics
- 15.6" Display
- DOS

ரூ.83,900
வட்டியில்லை 15 கொடுப்பனவு
விசேட விலை ரூ.71,990
மாதாந்தம் 4,837 ரூபாவிலிருந்து
3வருட இலவச உத்தரவாதம்

**HP 15 AC i5**
- Intel i5- 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- Intel Graphics
- 15.6" Display

ரூ.89,900
வட்டியில்லை 15 கொடுப்பனவு
விசேட விலை ரூ.79,900
மாதாந்தம் 5,360 ரூபாவிலிருந்து
3வருட இலவச உத்தரவாதம்

**HP 15 AC i5 WIN**
- INTEL CORE i5 6th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- Intel Graphics
- Windows 10
- 1 Year Warranty

ரூ.99,900
வட்டியில்லை 15 கொடுப்பனவு
விசேட விலை ரூ.89,900
மாதாந்தம் 6,026 ரூபாவிலிருந்து

**ASPIRE E5-574-i5**
- i5-6200 6th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- 15.6" Display
- 2GB Nvidia VGA

ரூ.102,990
வட்டியில்லை 15 கொடுப்பனவு
விசேட விலை ரூ.92,999
மாதாந்தம் ரூ.7,066
3வருட இலவச உத்தரவாதம்

**DELL 3543 i7**
- INTEL CORE i7 - 5th Generation
- 8GB RAM
- 1TB Hard Disk
- Intel Graphics
- 15.6" Display
- 2GB VGA

Rs.121,990
வட்டியில்லை 12 கொடுப்பனவு
விசேட விலை ரூ.115,990
மாதாந்தம் 9,708 ரூபாவிலிருந்து
4வருட இலவச உத்தரவாதம்

**PREDATOR** acer explore beyond limits



FREE BACKPACK

**PREDATOR G9-792-707G**
- 6th Gen Intel Core™ i7 processor
- 16GB RAM
- 1TB HDD +128GB SSD
- NVIDIA® GeForce® GTX 970 6GB VGA
- Windows 10 Home
- Swappable Cooler Master 3rd Fan
- 4 Speakers & 2 Subwoofers
- 2 Year Warranty

ரூ.310,990
விசேட விலை ரூ.269,900
மாதாந்தம் ரூ.26,101

**PREDATOR PREG3710**
- 6th Gen Intel Core™ i7 processor
- 16GB RAM
- 1TB HDD + 256GB SSD
- NVIDIA® GeForce® GTX 980 - 4GB VGA DDR 5
- Windows 10 Home
- Blu-ray Disc™ writer
- Creative Sound Blaster Cinema - audio capability

ரூ.294,990
விசேட விலை ரூ.255,990
மாதாந்தம் ரூ.24,799

**TABLET + PC IN ONE DEVICE**

**LENOVO YOGA 500 i5**
- i5 6200U 6th Generation
- 4GB RAM
- 500GB SSHD
- 2GB VGA
- 14" Touch Display
- Windows 10
- 1 Year Warranty

வட்டியில்லை 12 கொடுப்பனவு
விசேட விலை ரூ.132,900
மாதாந்தம் ரூ.11,075

**LENOVO YOGA 500 i7**
- i7 6500U 6th Generation
- 8GB RAM
- 500GB SSHD
- 2GB VGA
- 14" Touch Display
- Windows 10
- 1 Year Warranty

விசேட விலை ரூ.159,900
மாதாந்தம் ரூ.13,325
வட்டியில்லை 12 கொடுப்பனவு

IT HOTLINE 5886655 | us at www.facebook.com/abansit
நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் லைட் காட்சியறைகளில் கிடைக்கும்.

Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணமகள் தேவை

யாழ்.இந்து சித்திரை நட்சத்திரம், 1981 கொழும்பில் Private Firm ல் Accountant. சைவபோசனம். அசைவபோசனமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**072 531 1055** (சி/24070) (11.17.18)

### காணி விற்பனைக்கு

வல்வெட்டி தீருவில் மைதானத்துக்கு அருகில் உள்ள 6½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (J/2784)(12.18.)

தொடர்பு: 077 713 4568

### வீடு விற்பனைக்கும் வாடகைக்கு

தொடர்பு: 071 627 4916

யா/ நீராவிபடி பிறவுண் வீதிக்கு அருகில் வீடு வாடகைக்கும் , விற்பனைக்கும் உண்டு. ஞாயிறு காலை 9.00 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும்.

### விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தில் வீடு, காணி, கடை என்பன- விற்பனைக்குள்ளன. (J/2727)(12.18.)

தொடர்பு: 077 941 6086

### வீடு வாடகைக்கு உண்டு

K.K.S. வீதி, சுன்னாகத்தில் வீட்டுத் தளபாட வசதிகள் உட்பட, சகல வசதிகளுடன் கூடிய வீடு (வாகனத்தரிப்பிடவசதி உட்பட) வாடகைக்குண்டு.

**077 6174145** (V/44)(12.18.)

### முதலீட்டாளர்கள் தேவை

விவசாயத்துறையில் முன்னணி வகிக்கும் நிறுவனத்திற்கு முதலீட்டாளர்கள் தேவை.

**077 547 0701**

### Mathematics Classes

For Grade 10 Students.
(English Medium)
By Mr.V.Jeyakumar
(B.Sc, P.G.D.E, S.L.T.S – I)
Sat & Sun 4.00 - 5.30pm
Contact : 077 662 3586
SCIENCE CORNER
Jaffna.

### உடனடி வேலைவாய்ப்பு

**மின் இணைப்பாளர் பதவி வெற்றிடம்**

இலங்கை மின்சார சபையில் சேவையாற்றி ஓய்வுபெற்ற மின் இணைப்பாளருக்கான (Linesman) பதவி வெற்றிடம் கீழ் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தில் காணப்படுகின்றது. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய விவரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள்
திரு. ஸ்ரீதரன் (நிறைவேற்று அதிகாரி) 077 731 9128
திரு. தர்ஷக (திட்ட மேலாளர்) 076 821 7202

முகவரி
மால்போ புரஜெக்ட்ஸ் பிரைவட் லிமிடட்
இல. 24, அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு - 03

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரப் பகுதியில் தம்பதியர்க்கு வாடகைக்கு வீடு அல்லது அறை தேவை. (J/2784)(12.18.)

தொடர்பு: 077 310 3205

### வீடு வாடகைக்கு

தொடர்பு: 077 416 4790

யாழ்ப்பாணம் ,60/3, பழை பூங்கா வீதியில் மூன்று அறைகள் கொண்ட வீடு அலுவலகம் அல்லது குடியிருப்புக்கு உடன் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

### காணி விற்பனைக்கு உண்டு

வடமராட்சி வல்லிபுரத்தில் வல்லிபுரக் கோயிலுக்கு போகும் பாதையில் இருகாணிகள் இரு இடங்களில்3½ பரப்பு வீதம் விற்பனைக்கு உண்டு. (c 2816)(12.18)

**077 784 5854, 021 373 5681**

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை கிழக்கு (நவாலி)யில் உள்ள 5 ½ பரப்பு உறுதிக்காணி விற்பனைக்கு உள்ளது.

**078 817 0437, 076 728 8703** (V/44)(12.18.)

### மணமகள் தேவை

1981 கௌரவ குடும்பம் மூலம் கிரகபாவம் 75 லக்கினத்தில் செவ்வாய் சூரியன், கட்டடக் கலைஞர் கல்வி கற்று சொந்தமாக கட்டட ஒப்பந்த வேலைகள் செய்யும் சைவ போசன மணமகனுக்கு மணமகள் தேவை

**077 940 1092**

### வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி நகரில், உதயநகர் கிழக்கில் மூன்று அறைகள், பைப் வசதி, வீட்டுடன் இணைந்த மலசலகூடம் ஆகியவற்றுடன் வீடு வாடகைக்குண்டு.

**072 699 5593**
திருமதி க.பாலசுப்பிரமணியம் (டெ.2749)
65, குமாரசுவாமி வீதி, யாழ்ப்பாணம். (11.17.18)

### அலுவலக உதவியாளர்

யாழ் வணிகர் கழக அலுவலகத்திற்கு அலுவலக உதவியாளர் (Peon) தேவை. விண்ணப்பங்கள் 15.07.2016 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது நேரடியாக கையளிக்கலாம்.

இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். யாழ் வணிகர்கழகம்.

**Majestic** Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
www.ceylontheatres.lk

### விஞ்ஞான வகுப்புகள்

யாழ்நகரில் தரம் 6 - 11 வரை பெண் ஆசிரியரினால் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 076 696 8119

### கடை விற்பனைக்கு

149, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் கடை விற்பனைக்கு உண்டு.

**021 222 1333, 077 616 5347**

### தேவை

350 OR 250 கன்ரர், விலைக்கு OR மாத வாடகைக்குத் தேவை. (J 2787)(12.18)

**077 889 4236, 077 251 3576**

### தேவை

Ten Wheel Tipper செலுத்துவதற்கு அனுபவம் உள்ள AD Licence Driver தேவை. யாழ்ப்பாணம், ஓட்டுசுட்டான், வவுனியா சென்றுவர வேண்டும்.

**076 824 5455**

### வீடு வாடகைக்கு உண்டு

சுண்டுக்குளி, பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்டது. சிறிய குடும்பத்துக்கு அல்லது வேலை பார்க்கும் பெண்பிள்ளைகளுக்கு உகந்தது.

**077 777 7384** (டெ/2723) (11.17.18)

### பணியாளர் தேவை

1. விற்பனைப் பிரதிநிதிகள் (Sale Representatives)
2. பணம் வசூலிப்பவர்கள் (Cash Colecters)
3. பொருள்கள் ஏற்றி இறக்குபவர்கள்.

**Coca - Cola Distributors**
**Sivabrothers**
4th Lane, Brown Road, Jaffna.
**077 772 2215** (டெ/2796) (11.17.18)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் வடக்கு, உடுவில் (றோட்டில்) வீதியில், GREEN ஆஸ்பத்திரிக்குப் பின்புறமாக சந்திக்கு அண்மையாகவுள்ள ஐந்து (05) பரப்புக் காணி விற்பனைக்கு. இல 17, உடுவில் வீதி,மானிப்பாய்.

தொடர்பு:
இரவீந்திரன் - 077 727 0310
சாம்பசிவன் - 075 565 5053
Sambasivan - UK - London
+44 7818557193 (69531) (12.18.)

### மணமகள் தேவை

35 வயதுடைய ஐரோப்பிய குடியுரிமை உடைய இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

குறிப்பு: புகைப்படத்துடன் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

Srikanal9@gmail.com
இலங்கை தொடர்புக்கு : 076 697 3387

### வீட்டுப் பணிபெண் தேவை

வட - கிழக்கு முறையில் சமையல் செய்ய இரு பணிப்பெண்கள் உடன் தேவை. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாங்கள் தற்போது கொழும்பில் வசிப்பதால் சமைப்பதற்கும் சுத்தம் செய்யவும் இரு பெண்கள் தேவை. தனியறை வசதியுடன் தகுதிக்கேற்ப நல்ல சம்பளமும் வழங்கபடும். வயது (20-58)

**011 529 9148**

### G.C.E A\L - 2016

இலங்கையில் முதற்தர வணிக ஆசிரியர் யாழ்.மண்ணில்!!

**Business Studies**
**Final Seminar**
S.Mayuran (BBA.Hons,PGDE,MBS,MED SLPS)
(இலங்கையின் பிரபல வணிக நூல், வணிக ஆசிரியர்)
காலம்: July 11th நேரம்: 8.30Am - 5.30Pm
முதலீடு :-Rs 500/= - (Tutes Refreshment உட்பட)
Veerasingam Hall, No12. K.K.S. Road, Jaffna.
Tel: 077 849 6254 / 077 602 7167

## தீர்த்தத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 10
புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீ காளிகாபரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் தீர்த்தத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது என பரிபாலன சபையினர் தெரிவித்தனர். கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெற்று வருகின்றது. (ற-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 10
ஆவரங்கால் பர்வதவர்த்தினி அம்மை சமேத நடராஜ இராமலிங்க சுவாமி கோயில் தீர்த்தத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெறவுள்ளது.
கடந்த முதலாம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பமாகித் திருவிழா நடைபெற்று வருகின்றது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ற-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 10
காரைநகர் – பண்டத்தரிப்பான்புலம் சிவகாமிஅம்பிகாசமேதஸ்ரீசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தின் தீர்த்தத்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகின்றது. (ற-ரி)

## கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 10
யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிசேக விஞ்ஞாபனம் நாளை மு.பகல் 11 மணி முதல் 12 மணி வரை நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதன் கலந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜூலை 10
முன்னாள் போராளியான வெற்றிச் செல்வியின் "ஆறிப்போன காயங்களின் வலி" நூல் அறிமுக விழா நாவலர் கலாசார மண்டபத்தில் ச.ராதேயன் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் எஸ்.ஜீவ சுதனும், உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் தி.செல்வமனோகரனும்நூல்பற்றியக்கருத்துரையாற்றுவர். ஏற்புரையை நூலாசிரியர் வெற்றிச் செல்வி வழங்குவார்.
போரின் பின்னரான பெண் போராளிகளின்பம்மைமடுதடுப்புமுகாம்வாழ்க்கை பற்றிய வரலாற்றுப் பதிவாக இந்த நூல் வெளிவந்துள்ளது. இந்த நூல் அண்மையில் மன்னார் அடம்பன் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் ஆசிரியை தனலெட்சுமி கிறிஸ்துராஜன் தலைமையில் வெளியிடப்பட்டது.
"எழுத்து அனைவருக்கும் பொதுவானது எனினும் பெண்ணின் பார்வையில் பிறக்கும் எழுத்து தனித்துவமானது" என்ற மகுடவாசகத்துடன் நான்கு பெண்களின் எழுத்துக்களை முன்வைத்து பெண்களால் நடத்தப்படும் அறிமுகக் கலந்துரையாடலில் வெற்றிச்செல்வியின் "ஆறிப்போன காயங்களின் வலி" என்ற நூலும் இடம்பெற்றுள்ளது.
நவரட்னராணி சிவலிங்கத்தின் வழிநடத்துதலில் சந்திரா இரவீந்திரன், கௌரிபரா, மீனா நித்தியானந்தன், நவஜோதி யோகரட்ணம் ஆகியோர் இங்கு கருத்துரையாற்றவுள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மின்பொருள்கள், வீட்டுசாதனப் பொருள்கள், மோட்டார் மற்றும் விற்பனையின் பின்னர் சேவைத்துறைகளில் 150 இற்கு மேற்பட்ட வேலைவாய்ப்புகள்**

Australian Talent Network ஆனது இலங்கையின் முதல்தர சந்தைப்படுத்தல் கம்பனியாக திகழ்வதோடு, அது பல்தேசிய கம்பனிகள் தமது வியாபாரத்தினை முகாமைத்துவம் செய்வதற்காக பல பணியாளர்களை வழங்குகின்றது. எங்களுடைய பணியாளர்கள் வருடாந்தம் 20 பில்லியனுக்கும் அதிகமான விற்பனையினை முகாமைத்துவம் செய்வதோடு, 50000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களை எமது விற்பனையின் பின்னரான சேவையினூடாக திருப்தியடைய செய்கின்றனர். தற்பொழுது நாங்கள் விற்பனைகள், சந்தைப்படுத்தல், பொறிமுறைத் தொழில்நுட்பம் மற்றும் விளம்பர ஊழியர்களை எமது வாடிக்கையாளர்களுக்காக வழங்கி வருகின்றோம்.

அதிகமான பல்தேசிய நிறுவனங்கள் தமது காலடித்தடத்தை இலங்கையில் பதிப்பதற்காக நாம் அவர்களுடன் கூட்டாக இணைந்து செயற்படுகின்றோம். அத்துடன் சர்வதேச ரீதியில் எமது வியாபாரத்தினை விரிவாக்கம் செய்கின்ற நோக்கத்தின் அடிப்படையில், மின்பொருள்கள், வீட்டு உபகரண சாதனங்கள், மோட்டார் மற்றும் விற்பனையின் பின்னரான சேவைத்துறைகளில் நம்பிக்கை வாய்ந்த, அனுபவமுள்ள மற்றும் புதிதாக இணைந்து கொள்வதற்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம்.

| | வேலை | வெற்றிடம் | அனுபவம் | கார்/ மோட்டார் சைக்கிள் | காப்புறுதி | [illegible] | போனஸ் | மேலதிக கொடுப்பனவு | அடிப்படை சம்பளம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | விற்பனை பிரதிநிதி நுகர்வுப்பொருள்/ மின்பொருள்கள் | 58 | 1-2 வருடம் | மோட்டார் சைக்கிள் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 2 | விற்பனை நிறைவேற்று அதிகாரி | 38 | 2-3 வருடம் | மோட்டார் சைக்கிள் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 3 | பிராந்திய விற்பனை முகாமையாளர் | 14 | 2-3 வருடம் | கார் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 4 | பல்பொருள் அங்காடி நிர்வாகிகள் (ஆண்/ பெண்) முழுநேர வேலை | 58 | மின்பொருள், நுகர்வுப் பொருள் தொடர்பில் சிறப்பு தேர்ச்சி | விருப்பு | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 5 | மின்பொருள் விற்பனை நிர்வாகிகள் காட்சியறைக்கானது (ஆண்/ பெண்) | 29 | 1-2 வருடம் | கொடுப்பனவு | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 6 | காட்சியறை முகாமையாளர் | 28 | 1-2 வருடம் | கார் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 7 | தொழில்நுட்ப விற்பனை பிரதிநிதிகள் | 25 | 1-2 வருடம் | மோட்டார் சைக்கிள் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 8 | தொழில்நுட்ப விற்பனை நிர்வாகிகள் | 32 | 2-3 வருடம் | மோட்டார் சைக்கிள் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 9 | வாடிக்கையாளர் சேவை நிர்வாகிகள் (ஆண்/பெண்) | 18 | 1-2 வருடம் | மோட்டார் சைக்கிள் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 10 | தரப் பிரதிநிதி | 13 | இளநிலை பட்டதாரி | கொடுப்பனவு | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 11 | செயற்பாட்டு நிர்வாகிகள் | 10 | இளநிலை பட்டதாரி | கொடுப்பனவு | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 12 | சமையலாளி – முழு நேர வேலை | 27 | சமையலில் 2வருட அனுபவம் | கொடுப்பனவு | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| 13 | தரவுப் பதிவாளர்கள் | 24 | IT தொடர்பான அனுபவம் | கொடுப்பனவு | ஆம் | | ஆம் | ஆம் | ஆம் |
| 14 | காவலாளிகள் | 17 | 3-4 வருடம் | கொடுப்பனவு | ஆம் | | ஆம் | ஆம் | ஆம் |

**1,4,5,8,12 ஆகிய வேலைகளுக்கான நேர்காணல் இடம்பெறும் நாள்கள்**
புதன்கிழமை – 20.07.2016 முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை
வெள்ளிக்கிழமை – 22.07.2016 முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை

**நேர்காணல்கள் கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் நடைபெறும்**
மேற்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்படுகின்ற பொருத்தமான விண்ணப்பதாரர்களுக்கு கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பங்கள் பதவிநிலை குறிக்கப்பட்டு 10 நாள்களுக்குள் மின்னஞ்சல் மூலமாக admin@austalentnetwork.com அல்லது தபால் மூலமாக அனுப்பிவைக்கலாம். மேலும் Wattsup அல்லது viber மூலமாகவும் + 94770024581 / + 94770024580 உங்களுடைய தகவல்களினை அனுப்ப முடியும்.

**22/07/2016 வடமாகாண தெரிவுகள் பிற்பகல் 2. 00**

தபால் முகவரி
Admin Office
No – 10, Kandy Road,
Wedamulla,
Kelaniya

**Green Grass Hotel and Restaurant (Pvt) Ltd,
No.33
Aaseervatham lane,
Hospital Road, Jaffna.
077 254 9211**

(V 163) (13.18)

## வேலையாள்கள் தேவை

**மில் ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.**

***கணக்காளர் (50 வயதுக்கு மேற்பட்ட, முன்அனுபவமுள்ளவர்)**
***விற்பனைப் பிரதிநிதி (குறைந்தது 3 வருடமும், முன்அனுபவமுள்ளவர்)**
**சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.**

**075 640 5890**

## பதவி வெற்றிடங்கள் (கொழும்பில்)

**EXPORT MANAGER/OFFICER (DOCUMENTATION) - MALE**

ஏற்றுமதி ஆவணப்படுத்தலும் அரச திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் ஆற்றலுடையவர்களும் திணைக்களங்களிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். வயது. 45 -60

**SUPERVISOR மேற்பார்வையாளர் - Male**

ஏற்றுமதி தரத்திற்கு உணவுப் பொருள்கள் தயாரிப்பைக் கண்காணிப்பதில் அனுபவமுள்ளவர்களுக்கு. முன்னுரிமை. உங்கள் சுயவிவரக் கோவையை உங்களை நன்கறிந்த உறவினரல்லாத இருவரினதும் விவரங்களுடன் அனுப்பிவைக்கவும். கிழமை நாள்களில் தொடர்பு கொள்ளும்நேரம் காலை 8.30 தொடக்கம் மாலை 5.00 மணிவரை.

email : quickwk4@gmail.com தொ.பே. 072 733 2254

## EMPLOYMENT OPPORTUNITIES

### OPERATIONS MANAGER - MULLAITHIVU

A Company with medium scale operation is looking for an OPERATIONS MANAGER for immediate employment.
Ideal candidate should be able to manage and coordinate the smooth functions of administrative systems, staff management & development.

**Minimum skills & educational qualifications required are:**

* Bachelor's degree in Agriculture / livestock with 10 years working experience having a minimum of 5 years in management capacity or,
* Diploma in Agriculture / livestock with 15 years working experience having a minimum of 5 years in management capacity.
* Knowledge and experience in food processing will be an added advantage.
* Working knowledge in Microsoft office package and in English is essential

Remuneration will be in par with the industry norms.

Interested candidates are requested to email their CV and scanned recent photograph to vacanciesaugust2016@gamil.com within 7 days.

## இசைப்பேழை வெளியீடு

அளவெட்டி, ஜூலை 10
அளவெட்டி மேற்கு காட்டுப்புலம் ஆதிகாளியம்பாள் ஆலய முன்றிலில் இலுப் பமரத்து நாயகி ஆதி காளியம்பாளின் இசைப் பேழை வெளியீட்டு விழா எதிர் வரும் திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு வெளியிடப்படவுள்ளது. இந்த நிகழ்வுக்கு தலைமை அதிதியாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கலந்துகொண்டு இசைப் பேழையை வெளியிடுவார். வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் இ. சர்வேஸ்வராவும், ஏற்புரையை பாடலாசிரியர் சி. முருகையாவும் வழங்குவர். ஆலயத் தலைவர் செ. கவேந்திர ராசா தலைமையில் விழா நடைபெறும். (ந-36)

## பெரெண்டினா மைக்ரோ பினான்ஸ் இன்ஸ்டிடியூட் (GTE) லிமிடட்

பெரண்டினா மக்ரோ பினான்ஸின் செயற்பாடுகள் தற்போது நாட்டில் 25 கிளைகளைக் கொண்டதாக 75,000 வாடிக்கையாளர்களைக் கொண்டதாக வளர்ச்சியடைந்திருக்கின்றது. 99% மீள் செலுத்துகையுடன், ஏனைய எந்த தனியார்துறை நுண் நிதியிடல் நிறுவனமும் வழங்காத மிகக்குறைந்த வட்டி வீதம் கொண்டதாக 2 பில்லியன் கடன் நிலுவை கொண்ட நிறுவனமாக விளங்குகின்றது இது. மேலும் தொழில்முயற்சி மேம்பாட்டு சேவைகளின் மூலம், கடன் வழங்குவதோடு அதனிலும் மேம்பட்ட சேவைகளையும் வழங்குகின்றது. பெரண்டினா மைக்ரோ பினான்ஸ் இன்ஸ்டிடியூட் தனது செயற்பாடுகளை கிளிநொச்சி மற்றும் வவுனியாவலும் விஸ்தரிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

### நுண் நிதியிடல் அலுவலர்கள் (MFOs)

**கிளிநொச்சி மற்றும் வவுனியா**

**தகைமையும் அனுபவமும் :**

✓ தகுதிவாய்ந்த விண்ணப்பதாரி உயர்தரப் பரீட்சையில் வர்த்தகம்/ விஞ்ஞானம்/ கணிதப் பிரிவுகளில் உயர்தரத்தில் சித்தியடைந்தவராயிருத்தல். எண்கணித, தொடர்பாடல், மற்றும் தனிப்பட்ட திறன்கள் கொண்டவராயிருத்தில்.
✓ நுண் நதியிடல் செயற்பாடுகளில் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். ஆனால் கட்டாயமான தகுதியல்ல நுண்நிதியிடலில் அனுபவம்மிக்க ஆண்கள் பெண்கள் இருபாலரும் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர்.
✓ செல்லுபடியாகும் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரத்தினைக் கொண்டவராக இருத்தல் அவசியம்.
✓ இரு மொழிகளிலும் பணிபுரியும் ஆற்றல் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.
✓ 35 இலும் குறைந்த வயதுடையவராக இருத்தல்

பெரண்டினா மருத்துவ மற்றும் பிரத்தியேக விபத்துக் காப்புறுதி, ஊழியர் சேமலாபநிதியில் 15% முதலாளிகளின் பங்களிப்பும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பு 3%, வீட்டுக் கடன்கள் மற்றும் ஊழியர் கடன்கள் என்பனவற்றினை தனது ஊழியர்களுக்கு பெரண்டினா வழங்குகின்றது. அத்துடன் உள்ளூரிலும் சர்வதேசத்திலும் தொழில் மேம்பாட்டு பயிற்சி வாய்ப்புகளை இது வழங்குகின்றது.

உங்களின் விண்ணப்பத்தை தபாலிலோ மின்னஞ்சல் மூலமாகவோ, 7 தினங்களுக்குள் எமக்கு கிடைக்கப்பெறச் செய்யுங்கள்.

BERENDINA

தலைவர் மனிதவளம் மற்றும் நிர்வாகம்
**பெரண்டினா மைக்ரோ பினான்ஸ் இன்ஸ்டிடியூட் (Gte) லிமிடெட்.**
இல. 152, முதலாம் மாடி நாவல வீதி, நுகேகொட
மின்னஞ்சல் : **careers@bmi.berendina.org**

JEBZ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் உட்செல்வதற்கு அனுமதி மறுத்ததால் குழப்ப நிலை

## கைதடி நவீல்ட் பாடசாலையில்

தென்மராட்சி, ஜூலை 10

கைதடி நவீல்ட் பாடசாலை பழைய மாண வர் சங்கத்தினரை பாடசாலைக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. அதனால் நேற்று அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது. பொலிஸாரும் அந்த இடத்தில் குவிக்கப்பட்டனர்.

பழைய மாணவர் சங்கக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் அனுமதி மறுக்கப்பட்டது. பாடசாலையின் பிரதான வாயில் பூட்டப்பட்டிருந்தது. அதில் அறிவித்தல் காட்சிப்படுத்தப் பட்டிருந்தது. அனுமதி பெறாத காரணத் தால் உள்ளே செல்ல அனுமதியில்லை. அத்துமீறிச் சென்றால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்று அதில் எழு தப்பட்டிருந்தது. அந்த அறிவித்தல் அட்டைக்கு சாவக் சேரிப் பொலிஸ் பொறுப்பேற்றிருந் தது. அதில் சைகை மொழி தெரியாத தால் என்றும் குறிப் பிடப்பட்டு பொலிஸ் நிலையம், சாவகச் சேரி என்றும் எழு தப்பட்டிருந்தது.

பழைய மாண வர் சங்கக் கூட்டம்இன்று (நேற்று) இடம்பெற விருந்தது. அதற்கு சில தடவைகள் பாடசாலை அதிபரி டம் அனுமதி கோரியபோது அனுமதி கிடைக் கவில்லை. கொழும்பு போன்ற தூர இடங்களிலி ருந்து பழைய மாணவர் கள் வந்துள்ள னர். உட்செல்ல அனுமதி மறுக்கப் பட்டுள்ளது. - என்று அங்கிருந்த பழைய மாணவர்கள் தெரி வித்தனர்.

பாடசாலை மண்ட பத்தில் கூட்டம் நடத்துவதாயின் அதிபரிடம் முறை யான அனுமதி கோரி நடத்தப்படல் வேண்டும் என்பது கல்வி அமைச்சின் நடைமுறை.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர் பாட சாலை அதிபரி டமோ அல்லது கொழும்பில் உள்ள நிர்வாகத் தலை வரிடமோ அனு மதி பெறாமல் நேற் றைய திகதியிட்ட கூட்டத்துக்கான அழைப்பிதழை அச்சிட்டு அதனை அதிபரிடம் கொடுத்து அனுமதி கோரி யுள்ளனர். அதனை ஏற்றுக் கொள்ள அதிபர் மறுத்த தால் பழைய மாண வர் சங்கத்தினர் பாடசாலைக்கு வெளியே போராட் டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக பாடசாலை அதிபர் சாவகச்சேரி பொலி ஸாருக்கு முறையி ட்டே அங்கு பொலிஸ் பாதுகாப்பு ஏற் படுத் தப்பட்டுள் ளது.- என்று பாடசாலை நிர்வாகம் தெரி வித்தது. (ற-9)


# 31 ஆம் நாள் நினைவு

கடந்த 10.06.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புச் சகோதரன்

தோற்றம் 1966.07.21 — மறைவு 2016.06.10

## அமரர் ஞானப்பிரகாசம் டேவிட் (ரவி)

(இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
Jaffna Instructor (SLBFE))



தொலையாத நினைவுகளும்
கரையாத கனவுகளும்
நிலையான வாழ்க்கையிலே
நிலையாமல் போனீரே
தொலைதூரம் உன்னைத் தொலைத்து
ஏங்குகின்றோம்
களையாமல் பணிசெய்து
நிலையாகிவிட்டாய் நெஞ்சவனே
தொலைதூரம் போனாலும்
உன் நினைவோடு
வாழ்வோம் அண்ணா என்றும்
உன்னை மறவோம்

இன்று(10.07.2016)ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சகோதரர்கள்.**

ஐந்து வேம்படி, தவடி தெற்கு, கொக்குவில்.

(Ro/2776) (11.17.18)

# நினைவஞ்சலி

## முதலாம் ஆண்டு — 9 ஆம் ஆண்டு





ஊரையும் உறவுகளையும் அரவணைத்து
இருப்பிடம் கொடுத்து விருந்தோம்பி
எல்லோர் வாழ்விலும் ஒளியேற்றிய
இரு தீபங்கள் நினைவினில்
மறையாத இரு நெஞ்சங்கள்
எங்கள் கனவிலும் கலையாத
இருநனவுகள் மனதைவிட்டு அகலாத
இரு உள்ளங்கள்
எம்மைப் பிரிந்தாலும்
பிரியாத இருதெய்வங்கள்

அமரர் சிவபாக்கியம் முருகேசம்பிள்ளை
பிறப்பு :- 16.02.1933 இறப்பு :- 22.06.2015

அமரர் கதிரவேலு முருகேசம்பிள்ளை
பிறப்பு 02.02.1935 இறப்பு :- 02.06.2007

சியூலிவீதி, கொழும்பு - 2, VH லேன், இருபாலை, கோப்பாய்.

குடும்பத்தினர்.

# விண்ணுலகில் ஆண்டு மூன்று



வையத்துள் வந்தது 19.07.2006 — வானத்துள் வாழ்ந்தது 10.07.2013

## கிறிஸ்ரிருபன் அல்றிக் சௌஜன்யன்

*உலகின் அனைத்திலும் இரக்கம் காட்டு.*
*சந்தோசமாயிரு. துன்பங்களை மறந்தாலே சந்தோசம் வரும்.*
*பிரார்த்தனை செய். நம்பிக்கையோடிரு!*
*-அல்றிக் சௌஜன்யன்-*

கண்ணுக்குள்ளே தானே
உன்னை நிறைத்தோம் - கண்ணே
கடவுள் ஏன் அதிலே
நீரை நிறைத்தான்?

எல்லோருக்கும் நீயே
தாயாகினாய் - கண்ணே
எமை விட்டு எங்கே தான்
நீ ஏகினாய் - முன்னே

'இறப்பு' என்னும் சொல் கூட
விரும்பாதவன் - நீ
இருக்கின்ற எல்லோர்க்கும்
கரும்பானவன்

நீ பிரிந்த இடம் விட்டும்
வந்து விட்டோம் - கண்ணே
துயரத்தில் நாமெல்லாம்
வெந்து விட்டோம்

காத்திருந்தோம் பூத்திருந்தோம்
வரவில்லையே - கண்ணே நீ
கனவில் கூட வந்துவிட
வரமில்லையோ எமக்கு

உயிராக வந்து விடு
எம்மிடமே கண்ணே - எம்
உயிரைத் தந்து விடு
எம்மிடமே கண்ணே!

தகவல் - குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 . 03 . 1954 — மறைவு 22 . 06 . 2015



## சின்னத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா

திதி: பூர்வபக்க சஷ்டி

ஒரு ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகங்கண்டு ஆறவில்லை நம் இதயம்!!
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிசம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்!! உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!!

இல.22, புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

*நீங்கா நினைவுகளுடன்*
குடும்பத்தினர்.
076 626 5534

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 . 03 . 1935 — இறப்பு 27 . 06 . 2015



அமரர் திரு

## தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் (சிவசாமி)

( நவதானியா அரிசி ஆலை உரிமையாளர் )

நிமிர்ந்த நன்நடையும் நேர்கொண்ட பார்வையும்
ஞானச்செருக்கும் அவனியில்
எவருக்கும் அஞ்சாது அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் அரவணைத்த எம்
அன்புத் தெய்வமே.
கண்மூடித் திறக்கும் நேரத்தில்
எங்களைத் தவிக்கவிட்டு நிரந்தரமாக
பிரிந்தீர்களே
உங்களுக்கு நிகர் எங்களுக்கு யார்?
மீண்டும் ஒருமுறை திருமுகம் காண
உள்ளம் கிடந்து பரிதவிக்கின்றது அப்பா

என்றும் நாம் மறக்கமாட்டோம்
உம்மை நினைத்தே நாம் இங்கு வாழ்கின்றோம்
உத்தமரே பெற்றிடுக சாந்தி எம் வாழ்வில்
நீங்கள் இல்லை என்ற எண்ணம் எமக்கில்லை
வாழ்வீர் எம்மனதில் நாம் வாழும்
காலம் வரை.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை
14-07-2016 வியாழக்கிழமை அன்று அவரது-சுருவில்
இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில்
கலந்துகொண்டு அவரது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்குமாறும்,
அதனைத் தொடர்ந்து ஐயனார் கோவிலில்
நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்துகொள்ளுமாறும் அனைவரையும்
அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தத்தை தந்திடும் ஆனி உத்தர தரிசனம்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமானுடைய சிவ விரதங்களில் இன்றைய ஆனிஉத்தர விரதமும் ஒன்று. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தையும் செய்கின்ற சிவபெருமான் சிதம்பரத்திலே நடனமாடுகின்ற நடராஜப் பெருமானாகக் காட்சியளிக்கின்றார்.

இன்றைய ஆனி உத்தர நன்னாளிலே ஆண்டவன் தில்லைத் தாண்டவனாக அருள்பாலிக்கின்றான். 'கோயில்' என்று அழைக்கப்படுகின்ற தில்லைச் சிதம்பரத்திலே பொன்னம்பலத்தாடும் சிறி நடராஜப் பெருமானாக கனக சபையின் கண்ணே தரிசனம் கொடுக்கிறார்.

இன்று அதிகாலையில் சிதம்பர சிறி நடராஜப் பெருமானுக்கு நடை பெறுகின்ற விசேட அபிசேகத்தைக் காண்பதற்கு மெய்யடியார்கள் நிறைந்து காணப்படுவர். எம்பெருமானுக்கு நிகழும் அபிசேகம் மிகவும் விசேடமானது. பால், தேன், தயிர், பஞ்சாமிர்தம் அனைத்துமே குடம் குடமாக வரும். அந்த அதிகாலை வேளையிலேயே அடியார்கள் வந்து கோயிலிலே குழுமி விடுவார்கள். தில்லைத் தாண்டவனாக சிறிநடராஜர் அழகே ஓர் உருவெடுத்தாற் போன்று அலங்கார பூசிதராகக் காட்சி கொடுப்பார். பூமாலைகளும், மணி மாலைகளும் தங்க ஆபரணங்களுமாக நடராஜப் பெருமான் பக்தர்களுக்கு காட்சி தரும் அழகே தனி.

அதிகாலை வேளையிலே ஆனந்த நடனமிடும் தில்லை நடராஜப் பெருமானது தரிசனம் கிடைப்பதற்குப் முற்பிறப்பில் புண்ணியஞ்செய்திருக்க வேண்டும்.

இதனையே,

*"குனித்த புருவமும் கொவ் வைச்*
*செவ்வாயில் குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்*
*இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே"*

என்றும் தேவாரத்தில் அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பிறவி எமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும் என்கிறார் ஆறுமுகநாவலர். எல்லாம்வல்ல பரம்பொருளாக விளங்குகின்ற ஆதி சங்கரன் தில்லைச் சிதம்பரத்திலே சிறி நடராஜப் பெருமானாக எழுந்தருளி வீற்றிருப்பதும் எமக்காகத்தான் என்பதும் அவர் கூற்றே!

ஆனி உத்தர ஆனந்த தரிசனம் எமது ஈழ வளநாட்டிலும் வெகுசிறப்பாக நடைபெறுகின்றது. கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோயில், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்பெறும் பெரிய சிவன்கோயில் யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், நல்லூர் சிவன் கோயில், திருநெல்வேலி காயாரோகணேஸ்வரர் கோயில் முதலிய புனித திருத்தலங்களிலும் அடியார்கள் தரிசனத்துக்காக இந்த நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இந்த ஆனி உத்தர நன்னாளிலே சைவசமயிகள் ஒவ்வொருவரும் விரதம் இருந்து புனித வெண்ணீறணிந்து புலன்களைப் பொறிவழிப் போகாது அடக்கி வைத்துச் சிவபெருமானைத் தரிசிக்கவேண்டும். இந்தத் தரிசனத்துக்காகச் சிவன் அடியார்கள் யாத்திரையாக இந்தியா சென்று வழிபாடியற்றுவது தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்ற ஒரு நடைமுறையாகும்.

கலாபூசணம்
இராசையா ஸ்ரீதரன்.


## வேலைவாய்ப்பு

**இலங்கையின் முன்னணி நிறுவனத்துக்கு**

- வவுனியா
- மன்னார்
- முல்லைத்தீவு
- கிளிநொச்சி
- யாழ்ப்பாணம்

**ஆகிய இடங்களுக்கு**

- வலய இணைப்பாளர்
- மாவட்ட இணைப்பாளர்
- பிரதேச இணைப்பாளர்
- விவசாய போதனாசிரியர் (ஓய்வுபெற்றவர்கள் அல்லது அலுவலக உத்தியோகத்தர்கள் - பகுதிநேரம்)
- வரவேற்பாளர்கள் (பெண் கணினி அறிவுடையவர்)

ஆகியோர் தேவை.

(தகுதியுடையவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும்)

**பணிப்பாளர், மனிதவள பிரிவு**
இல.133, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.
(Ua/2755) (11.17.18)

## உடனடி வேலைவாய்ப்பு

**காரியாலய பொறுப்பதிகாரி (பெண்)**
**Office Incharge Officer ( Female )**

30 வயதுக்கு மேற்பட்ட . சகல நிர்வாக சேவைகளிலும் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது

**விமானப்பயண டிக்கட் உத்தியோகத்தர்**
**Ticketing Officer**

Ticketing Normal System தெரிந்த துறைசார் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட வேலைவாய்ப்புகளுக்கு தமது பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை உடன் எமது முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கவும்.

IATA

**SB TRAVELS & TOURS (PVT) LTD**
NO:216, KASTHURIYAR ROAD, JAFFNA.TEL-021 2229555

## Women Action Network for Transformation (Want)

**Field Coordinator -Kilinochchi**

**Applicants must possess:**

- Minimum GCE A/L Education
- At least 03 years NGO work experience in field.
- Report Writing & Communication skills.
- Computer literacy.
- Fluency in local languages and working knowledge in English
- Valid Motorbike licence

The FC is expected to work in the office as well as in the field. Salary is negotiable. Please forward your CV with 02 references either by post or by e-mail before 18th July 2016 4.00pm to : wantjafffna@gmail.com or to the following address:

Women Action Network for Transformation (WANT), 126A, Kandy Road, Ariyalai, Jaffna.

**Please Note:**
1. Only short listed candidates will be notified.
2. Women with the above qualifications are encour aged to apply.

(C/24163) (11,17,18)

## இனி இல்லை மூட்டுவலி

**மூட்டுகளில் வலி, இறுக்கம், வீக்கம்**

அடிபட்ட காயங்கள், தொற்றுக்கள் என்பவற்றினால் முழங்கால், இடை, முழங்கை,தோள்பட்டை, விரல்கள் ஆகியவற்றில் உட்புறத்தில் ஏற்படும் சிராய்ப்புக்கள், கிழிசல்கள் காரணமாக இவை ஏற்படுகின்றன.

ஒஸ்ரியோ ஆர்த்தரைடீஸ், யூரிக் அமிலப்படிவுகள், எஸ்.எல்.ஈ, வாதமூட்டழற்சி, முள்ளந்தண்டு அழற்சி, மென்சவ்வுகளில் ஏற்படும் அழற்சி மூட்டுகளில் வலிக்கான காரணிகளாகும்.

மூட்டுகளில் ஏற்படும் பிரச்சினைகளை எமது சிக்கலற்ற ஆயுர்வேத சிகிச்சை மூலம் வலி,வீக்கம் என்பனவற்றை நீக்கி விரைவாக குணப்படுத்தும்

**Hotline: 0777555600**
**0777708310**
**0777708330**




**FAIR PHARMA (PVT) LTD**

செலிங்கோ ஹவுஸ்,10வது மாடி கிழக்கு,இல:69,ஜனாதிபதி மாவத்தை,கொழும்பு - 01.
**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

## NORTH AND EAST ENGINEERING

**நீர்க்கசிவைத் தடுப்பதற்கு (Water proofing)**

உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களில் உள்ள சிமெந்திலான கூரைகள், நீர்த்தொட்டிகள் ஆகியவற்றில் ஏற்படும் நீர்க்கசிவை நிரந்தரமாகத் தடுப்பதற்கும் மற்றும் கம்பிகள் துருப்பிடிப்பதால் விழுந்துள்ள சிமெந்துப் படையையும் உத்தரவாதத்துடன் சீர் செய்து தரப்படும்.

FINCO ஸ்தாபனத்தின் ஏக விநியோகஸ்தர்கள் ஆகிய எங்களிடம் ஒப்பந்தகாரர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

North and East Engineering
No.55 Stanly Road, Jaffna.
ரிப்பின் லிசிங்குக்கு முன்பாக
021 2222363, 0775244177,077 232 3000
FINCO

## உடற்பருமன் கொண்டோருக்கு ஓர் அற்புதமான செய்தி (2 வாரங்களில்)

ஆண்,பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் திகழ

**ஆயுர்வேத கொர்வல் ஔடதம்**
(பால்மா, குளிசை, டொனிக், கிறீம்)
விலை 3500/=, 5500/=, 9000/=

உடல் எடை கூட்டுதல், குறைத்தல், ஊளைச்சதை, மார்பு கூட்டுதல், குறைத்தல், வயிற்றுக் கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுர்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எம்மிடம் உண்டு

எங்களிடம்

மேலும், முகப்பரு, கண்கருவளையம், முகச்சுருக்கம், உதடு கறுப்பு, முதுகு, கழுத்து, கை, கால், கறுப்பு நீக்கும் கிறீம், முகம் தாடைகளில் தேவையற்ற ரோமங்கள் மற்றும் காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.

விலை 2500/= 5500/=

தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு.

**077 210 6155,**
221, நாவலர் றோட் (பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

## தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் செட்டியார் தெருவில் இருக்கும் எமது நிறுவனத்துக்கு Machine Operators (உதவியாளர்கள் ) ஆண்கள் தேவை. வயது எல்லை 16-35 வரை. வேலை நேரம் 8.30 am to 5.00pm, சனிக்கிழமை 8.30 am to 1.00pm சம்பளம் ரூ.14,000/= வழங்கப்படும். வரவுக் கொடுப்பனவு ரூ.1500/= மாதாந்தம் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு (OT ) உண்டு. ஒரு மணித்தியாலத்துக்கு OT ரூ.87.00 மற்றும் EPF & ETF வழங்கப்படும். தங்குமிட வசதி உண்டு.நேரில் வரவும்.

**இல.196, செட்டியார் தெரு, கொழும்பு - 11**
**077 738 6392**

## IMMEDIATE VACANCIES

## SALES EXECUTIVES

**(ALL ISLAND)**

- Should possess not less than **3 years** experience in **paints or hardware field.**
- Age below 30 years.
- Fluent in Sinhala, English languages & ability to communicate in Tamil language would be an added advantage
- Should have excellent sales negotiation skills with good proven track record.
- Preference will be given to candidates with Sound computer literacy in hardware and software.
- Should have a valid driving licence.

Apply with complete CV and indicating the post on the top left hand corner of the Envelope to reach us within 7 days to the address below.

General Manager
**Causeway Paints Lanka (Pvt) Ltd.**
15, Noel Mendis Mawatha,
Modera Industrial Estate,
Panadura.

CAUSEWAY PAINTS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடன் விரைவில் சுதந்திர வர்த்தக உடன்பாடு

## சீன வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 10
பெரியளவிலான உட்கட்டமைப்பு மற்றும் தனியார் முதலீடுகளை சீனா தொடர்ந்தும் இலங்கையில் மேற்கொள்ளும். இலங்கையுடன் விரைவில் சுதந்திர வர்த்தக உடன்பாடு கையெழுத்திடப்படும்.

இவ்வாறு சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் பயணமாக கொழும்பு வந்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி நேற்று முன்தினம் மாலை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்தார். அதன் பின்னர் கூட்டு செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு கூறினார்.



அவர் தெரிவித்ததாவது;

"வரலாற்று ரீதியாக எமக்கிடையில் உறவு உள்ளது. எமது ஆழமான தொடர்புகளையும் வலுவான அரசியல் அடித்தளத்தையும் பரஸ்பர நலன்கள் மற்றும் சமூக ஆதரவையும் இது உறுதிப்படுத்துகிறது.

பன்னாட்டு நிலைமைகளிலோ, எமது உள்நாட்டு நிலைமைகளிலோ எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டாலும், பரஸ்பர உதவிகளும் எமது மூலோபாய ஒத்துழைப்பும் எப்போதும் நீடிக்கும். இந்தியப் பெருங்கடலின் கப்பல் போக்குவரத்து கேந்திரமாக இலங்கையை அபிவிருத்தி செய்ய எம்மால் உதவ முடியும். துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், தொடருந்து, விமான நிலையங்களின் அபிவிருத்திக்கு, சீனாவின் ஒத்துழைப்புகள் தொடர்ந்து கிடைக்கும். சீனாவில் இருந்து இலங்கைக்கு அதிகளவு சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு சீனா ஊக்கமளிக்கும். நீலக் கடல் பொருளாதாரம், கடல் பாதுகாப்பு மற்றும் கடல்சார் நிலையம் என்பனவற்றில் தொடர்ந்து இணைந்து செயற்பட இணக்கம் காணப்பட்டுள்ளது.

பன்னாட்டு விவகாரங்கள் தொடர்பாகவும் இருதரப்பிலும் கலந்துரையாடப்பட்டது. உறுதியான நிலையைக் கடைப்பிடிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பு எந்தவொரு மூன்றாவது நாட்டையும் இலக்காகக் கொண்டதல்ல. எமக்கிடையிலான மதிப்புமிக்க உறவுகள், ஏனைய நாடுகளைப் பாதிக்காது. அபிவிருத்தி இலக்கை எட்டுவதற்கு ஏனைய தெற்காசிய நாடுகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்"- என்றார். (ற-5)

### வற் வரி சட்ட வரைபு தொடர்பில் எதிர்வரும் 20ஆம் திகதி விவாதம்

கொழும்பு, ஜூலை 10
வற் வரி தொடர்பான விவாதம் எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றில் நடைபெறும். சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்தார்.

உத்தேச சட்ட வரைபை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

அதன்போது "சட்டம் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வரைபு தொடர்பில் எப்போது விவாதம் நடத்த முடியும்"?- என்று நிதி அமைச்சர் சபை முதல்வரிடம் கேட்டார்.

"உத்தேச வரைபு தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றது என்று அறிய முடிகிறது. வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் எதிர்வரும் 20ஆம் திகதி விவாதம் நடத்தலாம்"- என்று பிரதி சபாநாயகர் திலங்க சுமதி பால கூறினார்.

"20ஆம் திகதி விவாதம் நடத்த கட்சித் தலைவர்கள் இணங்கியுள்ளனர்" என்று சபை முதல்வர் கிரியெல்ல தெரிவித்தார். (ற-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியை சவாலுக்குட்படுத்திய மங்கள மீது நடவடிக்கை வேண்டும்

## வலியுறுத்துகின்றது கூட்டு எதிரணி

கொழும்பு, ஜூலை 10

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மகிந்த ஆதரவு கூட்டு எதிரணி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மனித் உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்கும் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெறமாட்டார்கள் என்று ஜனாதிபதி வெளியிட்ட கருத்தை அவரது தனிப்பட்ட கருத்து என்று கூறி சவாலுக்குட்படுத்தியுள்ளார் மங்கள சமரவீர.

ஜனாதிபதி மைத்திரிபால அரசின் தலைவர். அமைச்சரவையை நியமிக்கும் பொறுப்பு அவருக்கே உள்ளது. வெளிநாட்டு நீதிபதிகள் விவகாரத்தில் அரசின் நிலையையே அவர் வெளியிட்டிருந்தார்.

அமைச்சர் மங்கள சமரவீர வேறுவிதமாகக் கருத்து வெளியிட்டுள்ளார். இது அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறுகின்ற செயல். மங்கள சமரவீரவுக்கு எதிராக ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (ற-5)

# நிதியுதவியை நல்லாட்சி அரசு சரியானவாறு முதலிட்டுள்ளது

## ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவிப்பு மேலும் உதவி வழங்கவும் இணக்கம்

கொழும்பு, ஜூலை 10

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு வழங்கிய நிதியுதவிகளை தற்போதைய அரசு முறையாக முதலிட்டுள்ளது. இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கத் தயார்.

இவ்வாறு ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் வென்சாய் சாங் உள்ளிட்ட பிரதிநிதிகள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் சந்தித்தனர். அதில் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாவது:

"நாட்டைக்கட்டியெழுப்புவதற்காகக் கிடைக்கும் உதவிகளை ஊழல் மோசடிகளின்றி சரியாக முதலிடுவதற்கு எமது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களை உரிய காலத்தில் நியமங்களுக்கு ஏற்ப நிறைவு செய்வதற்கு தொடர்புடைய தரப்புக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீர், உட்கட்டமைப்புவசதிகள் மற்றும் விவசாயத்துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் சகல பிரதேசங்களுக்கும் சமனான முறையில் அபிவிருத்தியைப் பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கம். 26 வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்ற போர் காரணமாக வடக்கு மக்கள் இழந்து போன அபிவிருத்தி உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு அந்தப் பகுதிகளின் அபிவிருத்தியில் அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது.- என்றார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையுடன் 50 வருட காலமாக தொடர்புகளைப் பேணி வருகின்றது. இலங்கையின் அபிவிருத்திக்காக இதுவரையில் 7.9 பில்லியன் டொலரை உதவியாக வழங்கியுள்ளது. (ற-5)



ashok
STEEL
நீடித்த வலிமை
அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்
யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு,
பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும்,
சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த
அசோக் TMT இரும்புக் கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க
15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.
ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.100,000 + VAT
வட கிழக்கு மாகாணம் - 077 3781397/076 6084369, மேல் மாகாணம் - 077 3263518, மத்திய மாகாணம் - 077 3825832,
வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3
375

www.visioncare.lk
வெளியே தெரியும் செவிப்புலக் கருவிகள்
உங்களுக்கொரு பிரச்சனையா?
ரூ 73,550/=

முற்றாக செவியினுள் பொருத்தப்படும்
டிஜிட்டல் செவிப்புல கருவிகள் இப்போது மேலும்
மலிவான விலையில் விஷன் கெயாரிடமிருந்து
ஜூலை 1 முதல் ஆகஸ்ட் 15 வரையான
பதிவுகளின் போது 10% கழிவு
நேரம் ஒன்றை ஒதுக்கிக் கொள்ள இன்றே அழையுங்கள்
விஜேஷாந்த் 0768 554 976
VISION CARE HEARING SOLUTIONS
விஷன் கெயார் ஒப்டிக்கல்ஸ் தனியார் நிறுவனம்
இல. 108, பிறவுன்ஸ் வீதி, யாழ்ப்பாணம்
மேலதிக தகவல்களுக்கு 077 77 69 706


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மதங்கள் மத்தியில் பாகுபாடு; துடைத்து எறியப்பட வேண்டும்

வலிகாமம் வடக்கில், வீமன்காமம் பிரதேசத்தில் நீண்ட நெடுங்காலமாக அமைந்திருந்த பிள்ளையார் கோயில் உடைக்கப்பட்டு, அதே இடத்தில் பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது!

இவ்வாறு, அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. அது தொடர்பில் தான்வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிறைந்த அறிக்கையில், மாமன்றம் பின்வரும் விடயங்களை துலக்கமாக எடுத்துக் காட்டி உள்ளது.

●வடக்கு-கிழக்கு மாகாணங்களில், தமிழர் ஆண்டாண்டு காலமாக செறிந்து வாழும் பிரதேசங்களில், பௌத்தவிகாரைகள் வேகவேகமாக அமைக்கப்பட்டு வருகின்றன.

●அந்தப் பாதக நிலை, தமிழ் மக்கள் மத்தியில் இந்துகள் மத்தியில் பெரும் பதற்றத்தையும், தாங்க இயலாத துன்பத்தையும் தோற்றுவித்திருக்கிறது.

●நீண்ட காலமாக தமிழர் வாழ்விடங்களாக இருந்த பிரதேசங்கள், இப்போது பெரும்பான்மை இனத்தவர்களுக்கு சொந்தம் ஆக்கப்பட்டு விட்டன.

அந்த வகையில் வீமன்காமம் பிரதேசமும் பௌத்த பிரதேசமாக மாற்றப்படுவதற்கான அத்திபாரம் இடப்பட்டுள்ளது! தமிழர்களின் அரசியல் தலைமைத்துவங்கள் இது விவகாரத்தில் பாராமுகமாக இருப்பதாகக் கண்டனத்துடன் சுட்டிக் காட்டப்படுகிறது.

அகில இலங்கை இந்து மாமன்றம் அது குறித்து தனது கவலையை வெளியிட்டிருப்பதை, அரசியல் தலைவர்கள் கரிசனையுடன் கருத்தில் கொள்ள வேண்டும்.

அது அவர்களுக்கு உரிய கடமையும், கட்டாயமும் ஆகும்.

அதே வேளை-

வலி.வடக்கில், அண்மையில் படையினரின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில், எமது மக்களின் வழிபாட்டுக்குரியதாக அமைக்கப்பட்டிருந்த ஆலயங்கள், படையினரின் இராணுவ அட்டூழியங்களின்போது சேதமடைந்தன என்பது சரித்திரம்.

எனினும் விக்கிரகங்கள் அழிந்து போகவில்லை. ஆனால் அவை இப்போது களவாடப்பட்டுள்ளன.

அதனைத் தடுக்கவும்,களவாடியவர்களைத் தண்டிக்கவும் பொலிஸாரை உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு--


யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கோரிக்கை விடப்பட்டமையும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

பல்லின, பல்மத, பல்மொழி சார்ந்த மக்கள் வாழும் பிரதேசங்களில், சகிப்புத்தன்மை மட்டுமன்றி சமயப் பொறையும் தவிர்க்கக் கூடாதவை என்பதை உள்வாங்கிச் செயற்பட வேண்டிய வேளை இது.

அவ்வாறு பாகுபாடற்ற நிலை நின்று கருமம் ஆற்ற இயலாதவர்கள், தாம் சார்ந்த சமயத்துறைகளை மேம்படுத்த பின்னடிப்போர், கண்டிக்கப்படவும் ஒதுக்கி வைக்கப்படவும் வேண்டிய பிரகிருதிகள் ஆவர்.

அந்த வகையிலும், பிற சமயங்களை கீழே வீழ்த்தி விடுவது எந்தக் காலத்திலும் சமயாசாரமாகாது.

மனிதர்களில் பாகுபாடு காட்டுவது போன்று, மதங்கள் இடையில் பாகுபாடு காட்டுவது, உள்ளூர்ந்து கண்டிக்கப்பட வேண்டியது மட்டுமன்றி, துடைத்து எறியப்பட வேண்டியதும், துரத்தப்பட வேண்டியதும் ஆகும்.



தி.அமுதன்

என்னது... மறுபடியும் முதல்ல இருந்தா? என்ற புகழ்பெற்ற நகைச்சுவை வசனம் போல, பொருளாதார மத்திய நிலையம் அமைக்கின்ற விடயம் மீண்டும் ஆரம்பப் புள்ளிக்கே வந்திருக்கின்றது. பொருளாதார மத்திய நிலையத்தை, ஓமந்தையில் அமைப்பதா? தாண்டிக்குளத்தில் அமைப்பதா? என்ற குழப்பம் தீர்ந்தபாடாக இல்லை. வழக்கம்போலவே இந்த விடயத்திலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஒன்றுபடாமல், நல்லது எது கெட்டது எது என்று சீர்தூக்கி ஆராயாமலேயே கன்னைகட்டி இரு தரப்பாகப் பிரிந்து நின்று பிரச்சினையை இடியப்பச் சிக்கலாக்கியுள்ளனர்.

பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்கப்போவது கொழும்பு அரசுதானேதவிர வடக்கு அரசல்ல. கொழும்பு அரசோ வவுனியா நகரிலிருந்து 2 கிலோ மீற்றர்களுக்குள் இடத்தைத் தந்தால் நிலையத்தை அமைப்பேன் அல்லது அதை வேறு மாவட்டத்துக்குக் கொண்டு சென்றுவிடுவேன் என்று சண்டித்தனம் விடுகிறது. இந்தப் பக்கத்தில் தமிழர்களிடம் ஒற்றுமையில்லை என்பது அதற்கு வசதியாக இருப்பதால் பிடிவாதத்திலிருந்து இறங்கிவர அது தயாராக இல்லை.

கொழும்பின் பிடிவாதத்தைத் தளர்த்த முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இரு முயற்சிகளில் ஈடுபட்டார். ஆனால் அவை வெற்றியளிக்கவில்லை. பிரதமருடன் பேசுங்கள் என்று ஜனாதிபதி கை கழுவிக்கொண்டார். பிரதமரோ இதுவரைக்கும் எந்த பச்சை விளக்குச் சமிக்ஞையையும் வெளிப்படுத்தியதாக இல்லை.

இந்த நிலையில் பொருளாதார மத்திய நிலையத்தை தாண்டிக்குளத்திலா, ஓமந்தையிலா, மாங்குளத்திலா அமைப்பது என்கிற வாதப் பிரதிவாதங்களின் பொருள் என்ன என்பது தெளிவாகவில்லை. கடந்த மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்ட முதலமைச்சர்கூட, மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதே பொருத்தமானது அது இல்லையென்றால் தாண்டிக்குளத்திலாவது அமையுங்கள், அதை விடுத்து வேறு மாவட்டத்துக்குக் கொண்டு செல்லாதீர்கள் என்று கூறிவிட்டுத்தான் வந்தார். இதனை அவரே பொது நிகழ்வில் கூறியுமிருக்கிறார்.

> கடந்த ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் பொருளாதார மத்திய நிலையத்துக்கான நிதி ஒதுக்கப்பட்டது. வரவு – செலவுத் திட்டத்தில் 172 ஆவது விடயமாகப் பொருளாதார மத்திய நிலையம் குறிப்பிடப்பட்டிருந்தது. வவுனியாவில் புதிய பொருளாதார வலயம் நிறுவுவதற்கு நான் 200 மில்லியன் ரூபாவை கிராமிய பொருளாதார அமைச்சின் ஊடாக ஒதுக்கீடு செய்து முன்மொழிகின்றேன் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க அதில் குறிப்பிட்டார். அதில் எங்கும் வடக்குக்கான பொருளாதார மத்திய நிலையம் என்று குறிப்பிடப்படவில்லை.

ஆனாலும் பொருளாதார மத்திய நிலையத்தை எங்கு அமைப்பது என்ற சர்ச்சையை முடிவுக் கொண்டுவருவதற்கு தமிழ் அரசியல்வாதிகள்தயாராக இல்லை. யாருடைய அரசியல் பலம் அல்லது செல்வாக்குப் பெரிது என்று தீர்மானிக்கும் கயிறிழுப் பாக இந்த விடயம் மாறிவிட்டது. மக்கள் நலன் சார்ந்து ஆரோக்கியமான விவாதம் நடத்தி முடிவெடுக்கும் நிலையில் அரசியல்வாதிகள் இல்லை. அந்த அக்கறையும் அவர்களுக்கில்லை.

**வடக்கா? வவுனியாவா?**

பொருளாதார மத்திய நிலையம் வடக்குக்குரிய திட்டமா? வவுனியா மாவட்டத்துக்குரிய திட்டமா? என்பதிலும் குழப்பம் நீடிக்கிறது. இது வடக்குக்குரிய நிலையம் என்பதால் மாங்குளத்தில் அது அமைவதே பொருத்தமானது என்று ஒட்டுசுட்டான் கமக்கார அமைப்புக்கள் வலியுறுத்தியிருந்தன. இந்தக் கருத்தையே நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் வலியுறுத்தியிருந்தார். வடக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மறுபடியும்" முதல்ல இருந்தா?

மாகாண சபை விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் வழங்கிய ஊக்கமும் இந்தக் கோரிக்கை எழுவதற்கான காரணம் என்று உள்ளூர் அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் பொருளாதார மத்திய நிலையத்துக்கான நிதி ஒதுக்கப்பட்டது. வரவு – செலவுத் திட்டத்தில் 172ஆவது விடயமாகப் பொருளாதார மத்திய நிலையம் குறிப்பிடப்பட்டிருந்தது. வவுனியாவில் புதிய பொருளாதார வலயம் நிறுவுவதற்கு நான் 200 மில்லியன் ரூபாவை கிராமிய பொருளாதார அமைச்சின் ஊடாக ஒதுக்கீடு செய்து முன்மொழிகின்றேன் என்று நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்க அதில் குறிப்பிட்டார். அதில் எங்கும் வடக்குக்கான பொருளாதார மத்திய நிலையம் என்று குறிப்பிடப்படவில்லை.

கொழும்பு அரசைப் பொறுத்தவரையில் வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதால் அந்த மாவட்டத்துக்கு வெளியே அதனை அமைப்பது பற்றிய பேச்சுக்கே இடமில்லை. எனவே அது வடக்குக்குரிய பொருளாதார மத்திய வலயம் அல்ல. ஆனாலும் வடக்கில் வேறு எந்தப் பொருளாதார வலயமும் இல்லாத நிலையில் வவுனியாவில் அமைவதை வடக்கின் பொருளாதார நிலையம் என்று குறிப்பிடுவதில் தவறில்லை. அதற்காக, அது வவுனியாவுக்கு வெளியே வர வேண்டும்என்றுகேட்பதிலும்நியாயமில்லை.

## வவுனியாவில் எங்கே அமைப்பது ?

வவுனியாவுக்கு வெளியே பொருளாதார வலயத்தை அமைக்க முடியாது என்றான பின், வவுனியாவுக்கு உள்ளே எங்கே நிறுவுவது என்பதுதான் கேள்வி. கிராமிய பொருளாதார அமைச்சு, வவுனியா நகர பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள காணியைப் பரிந்துரைத்தது. இதற்கு வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

2016.01.25 அன்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களுள் ஒருவரான முதலமைச்சர் பங்கேற்கவில்லை. அவர் தனது பிரதிநிதியாக கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவை அனுப்பியிருந்தார். அதில் பொருளாதார வலயத்துக்கான காணியை அடையாளப்படுத்த குழு நியமிக்கப்பட்டது. வவுனியா பிரதேச செயலாளர், மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டச் செயலக விவசாயப் பணிப்பாளர், வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பார்ளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர் அடங்கிய குழு காணியை அடையாளம் காணும் நடவடிக்கைக்காக நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர் தாண்டிக்குளத்தில் தற்போது முன்மொழியப்பட்ட காணி, ஓமந்தையில் மாணிக்கவளவு காணி ஆகியவற்றைப் பார்வையிட்டனர். இந்தப் பணிகளின்போதுகூட இருக்குமாறு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அந்தக் குழு அழைப்பும் விடுத்திருந்தது. ஆனால் மாகாணசபை உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. சுகாதார அமைச்சர் சத்தியலிங்கமும் பங்கெடுக்கவில்லை. அவரது தனிப்பட்ட செயலாளர் மட்டும் இதில் பங்குபற்றியிருந்தார். எல்லாம் நடக்கும்போது பேசாமல் இருந்துவிட்டு, முடிந்த பின்னரே கூச்சல்போடுகிறார்கள்.

> ஓமந்தை மாணிக்கவளவு காணி நகரிலிருந்து 9 கிலோ மீற்றர் தொலைவில் இருந்தமையினால் அது நிராகரிக்கப்பட்டது. தாண்டிக்குளமே பொருத்தமானது என்று கிராமிய பொருளாதார அமைச்சு குறிப்பிட்டது. பொருத்தமான காணியை வழங்காவிட்டால் நிதி வேறு மாவட்டங்களுக்கு மாற்றம் செய்யப்படும் என்றும் கிராமிய பொருளாதார அமைச்சு அச்சுறுத்தியது.

பரிசீலனைகளின் பின்னர் குழுவில் இருந்த ஒவ்வொருவரும் தமது அறிக்கைகளை தனித் தனியாக மாவட்டச் செயலகத்துக்குச் சமர்ப்பித்தனர். அதனைத் தொகுத்த வவுனியா மாவட்டச் செயலகம், அதன் முடிவுரையை வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளரின் ஊடாக எழுதுவித்தது. இந்த அறிக்கையில், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர், வடக்கு மாகாண நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் ஆகியோரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இவர்கள் இருவரும் இறுதி அறிக்கையில் கையெழுத்திடவில்லை. (இவ்வாறானதொரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது என்பதே தனக்குத்தெரியாதுஎன்றுவடக்கு மாகாண நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மறுத்தார்)இந்த இறுதி அறிக்கையில் ஓமந்தையில் அமைக்க வேண்டும் என்றே முன்மொழியப்பட்டது.

## ஓமந்தையை யார் எதிர்த்தது ?

பொருளாதார வலயம் ஓமந்தையில் அமைக்கப்படும் தீர்மானத்தை வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்டப் பிரதிநிதிகள் எவரும் எதிர்க்கவில்லை. வவுனியா மாவட்டத்தின் இணைத்தலைவர்களும் ஓமந்தைக்கே ஆதரவு தெரிவித்திருந்தனர். ஆனால் கிராமிய பொருளாதார அமைச்சு ஓமந்தையை நிராகரித்தது. பொருளாதார வலயம் நகரிலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தினுள் அமையவேண்டும் என்றது. முதன்மை வீதியில் இருக்கவேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் இடத் தெரிவின்போது கவனிக்கப்படவேண்டும் என்று பட்டியல்படுத்தியது. பொருளாதார வலயம் நாட்டின் ஏனைய மாவட்டங்களில் இதே நிபந்தனைகளின் கீழேயே நிறுவப்பட்டிருப்பதாக அமைச்சு வாதாடியது. ஓமந்தை மாணிக்கவளவு காணி நகரிலிருந்து 9 கிலோ மீற்றர் தொலைவில் இருந்தமையினால் அது நிராகரிக்கப்பட்டது. தாண்டிக்குளமே பொருத்தமானது என்று கிராமிய பொருளாதார அமைச்சு குறிப்பிட்டது. பொருத்தமான காணியை வழங்காவிட்டால் நிதி வேறு மாவட்டங்களுக்கு மாற்றம் செய்யப்படும் என்றும் கிராமிய பொருளாதார அமைச்சு அச்சுறுத்தியது.

இந்த இடத்திலேயே இந்த விவகாரம் நன்கு அலசி ஆராயப்பட்டு ஒருமித்த கருத்துடன் கையாளப்பட்டிருந்தால் எல்லாமும் சுமுகமாகச் சென்றிருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை. மாகாண சபை உறுப்பினர்கள் அல்லது இத்தோடு தொடர்புபட்ட ஏனையவர்களுடன் ஆலோசிக்காமலேயே வலயம் ஓமந்தையில்தான் அமையவேண்டும்என்றுமுதலமைச்சர் பிரதமருக்குக் கடிதம் எழுதினார்.

கிராமியப் பொருளாதார அமைச்சு அனுமதித்த தாண்டிக்குளம் விவசாயப் பண்ணைக்குச் சொந்தமான காணியை விடுவிக்க முடியாது என்றும் முதலமைச்சர் உறுதியாகக்கூறிவிட்டார்.

இதன்பின்னரேவிடயம் இழுபறியாகியது. கிராமிய பொருளாதார அமைச்சுடன் பேசி முடிவை எட்டுவதாக முதலமைச்சர் ஆரம்பத்தில் தெரிவித்தார். ஆனால் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை. கிராமிய பொருளாதார அமைச்சு, தனது நிபந்தனைகளைத் தளர்த்த தயாராக இருக்கவில்லை. இதற்கிடையில் தமிழ் அரசியல்வாதிகள் ஓமந்தை தாண்டிக்குளம் என்று இரு கன்னைகளானார்கள். ஒவ்வொருவரும் தத்தம் நல்சார்ந்து இந்த விடயத்தை அணுகத் தொடங்கினார்கள்.

தாண்டிக்குளம் காணியை விடுவிக்க மறுத்தாலும் கிராமிய பொருளாதார அமைச்சின் நிபந்தனைகளுக்கு அமைவாக நகரிலிருந்து 2 கிலோ மீற்றர்கள் சுற்றாடலில் இருக்கும் காணியை அடையாளம் காட்டினார். வவுனியா நகரில் உள்ள மதகுவைச்சகுளக் காணியை இந்தத் திட்டத்துக்கு வழங்குவதாகத் தெரிவித்தார். ஆனால் அந்தக் காணி ஏற்கனவே நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது.

## தீர்மானம்

இதைத் தொடர்ந்து வடக்கு மாகாண சபை இந்த விடயத்தில் தீர்மானம் ஒன்றை நினைவேற்றியது. தாண்டிக்குளத்திலேயே பொருளாதார வலயம் அமைக்கப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. அதனையும் முதலமைச்சர் நிராகரித்தார். தாண்டிக்குளம் காணியை வழங்க முடியாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பினார். அதனால் பதிலேதும் கிடைக்கவில்லை.

## கூட்டமைப்பின் கூட்டம்

இந்தப் பிரச்சினை இப்படியே இழுபறிப்பட்டுக்கொண்டு போனதால் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இது பற்றி ஆராய ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் அதில் பங்கேற்றனர். இந்தக் கூட்டத்திலும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

முதலமைச்சரே இறுதித் தீர்மானம் எடுக்கவேண்டும் என்று தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர் இரா .சம்பந்தன், முதலமைச்சர் தன்னிச்சையாக தீர்மானம் எடுக்க முடியாது எனவும் வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகளின் கருத்து அறிந்து முடிவை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். ஆக, அவர்கள் ஆரம்பித்த இடத்துக்கே வந்துவிட்டார்கள். ஓமந்தை வேப்பங்குளத்தில் வலயத்தை அமைப்பதற்கு கொழும்பு அரசு இணங்குமா என்பதும் சந்தேகமே? நகரிலிருந்து 9 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஓமந்தை மாணிக்கவளவு காணிக்கு இணங்காத கொழும்பு அரசு 13 கிலோ மீற்றர் தூரத்தில் அதுவும், பிரதான வீதியிலிருந்து சில நூறு மீற்றர்கள் உள்ளே உள்ள வேப்பங்குளம் காணிக்கு இணங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணை விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பு–அரசு ஒப்பந்தம்

## வெளிப்படுத்த வேண்டும் என்று குணதாச அமரசேகர நீதிமன்றில் மனு

கொழும்பு, ஜூலை 10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கை அரசும் போர்க் குற்ற விசாரணை விடயத்தில் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளனர். அந்த ஒப்பந்தத்தை வெளிப்படுத்த வேண்டும்.
இவ்வாறு உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மனுத் தாக்கல் ஒன்று செய்யப்பட்டுள்ளது.
தேசபற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.
நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
ஜனாதிபதியின் செயலாளர் பிரதிவாதியாக மனுவில் குறிப்பிட்டார்.
ஜெனிவா தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு அங்கீகரித்ததன் பின்னணி தொடர்பில் தகவல்களை அறிந்து கொள்ள அரசமைப்பின் 14 ஆவது சரத்தின் இரண்டாம் இலக்க சட்டத்தில் தனக்கு உரிமை உள்ளது என்று மனுதாரர் சுட்டிக்காட்டினார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இலங்கை அரசு, அமெரிக்கா, கூட்டமைப்பு இடையே நடத்தப்பட்ட பேச்சில் எட்டப்பட்ட இணக்கத்துக்கு அமையவே ஜெனிவாவில் இலங்கை அரசு கலப்பு நீதிப் பொறிமுறைக்கு இணங்கியது என்று அமெரிக்காவில் தெரிவித்தார் என்பதையும் மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டினார். (ற-5)

## தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு சென்ற மைத்திரி

கொழும்பு, ஜூலை 10
தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவைக் கண்காணிக்கும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால நேற்றுமுன்தினம் அங்கு சென்றார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.
அங்கு 12 வருடங்களாக ஜனாதிபதி எவருமே செல்லாத நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சென்றுள்ளார். ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கே அவர் அங்கு சென்றார்.
தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு 2004 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியின் கீழுள்ள நிறுவனமாக மாற்றப்பட்டது. அதன் செயற்பாடுகளை ஜனாதிபதி ஒருவர் கண்காணித்த முதல் சந்தர்ப்பம் இது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.
ஆணைக்குழுவில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டது.
தகுதியானவர்களை அந்தவெற்றிடங்களுக்கு இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (த-4)

## விபத்தில் ஒருவர் சாவு

மூதூர், ஜூலை 10
வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன்ஒன்றுகொழுவுண்டு மின்கம்பத்துடன் மோதின.
அதில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திருகோணமலை, குச்சவெளி பொலிஸ் பிரிவில் உள்ள சலப்பையாற்றில் இடம்பெற்றது.
திருகோணமலை, நாச்சிக்குடாவைச் சேர்ந்த (வயது-21) என்னும் இளைஞரே உயிரிழந்தவராவார்.
நண்பர்கள் நால்வர் இரண்டு மோட்டார் சைக்கிளில் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றது. (ற-4,40)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ். நகரிலிருந்து 35 கிலோமீற்றரில் ஒரு சிறை

ந.லோகதயாளன்

'கிரிங்.....' 'கிரிங்.......'மணிக்கூட்டு ஒலி காதில் நாரசரமாகக் கிழித்தது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன். "இரவிலயும் லேட்டாப் படுங்கோ, விடிய வெள்ளனவும் எழும்பி என்னத்தைக் கிழிக்கிறீங்களோ..." வழமைபோன்றே புறுபுறுத்துக் கொண்டு மனைவி புரண்டாள். நேரம் 4.30 அதிகாலை என்றது. மனதும் உடலும் பரபரத்தன. இன்னும் அரை மணி நேரத்துக்குள் புறப்பட்டுவிட வேண்டும். அதற்கு முன்னதாகக்கூட இருந்தாலும் நல்லதுதான். என்னிடம் இருப்பது ஒரு பழைய ரிவி எஸ்–50 மோட்டார் சைக்கிள். அதில் என்ன தான் முழுதாய் முறுக்கினாலும் மணிக்கு 35 கிலோமீற்றர்களுக்கு மேல் போகமுடியாது.

ஆனால், வேறு வழியில்லை. அதில்தான் போயாக வேண்டும். அதுவும் காலை 7 மணிக்கு முன்னர் போயாக வேண்டும். இராணுவத்தினர் தங்கள் காவல் கடமைக்கு வருவதற்கு முன்னர் நான் அந்தத் தடையைத் தாண்டி விடவேண்டும். இல்லையேல் எல்லாமும் போச்சு.

→ 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### தீட்டிய திட்டம்

வேகமாகப் போவதற்காக நண்பர்களிடமிருந்து வேறு நல்ல மோட்டார் சைக்கிளை வாங்கிக்கொண்டு போகலாம். ஆனால், அது தேவையற்ற கவனத்தை ஈர்த்துக் காரியத்தையே கெடுத்துவிடுமோ என்று பயம். பூநகரிப் பாலத்தைக் கடந்து, உள்ளே இன்னும் உள்ளே போகவேண்டும். மோட்டார் சைக்கிள் காத்துக்கீத்துப் போய்விடக் கூடாது. போனால், வேறு வழியே இல்லை. அந்தப் பக்கமோ இந்தப் பக்கமோ 20 கீலோ மீற்றர்கள் தள்ளிக்கொண்டு போய்த்தான் கடை கண்ணியைப் பார்க்க வேண்டும். நினைத்தது நடக்காமலேயே போய்விடும். எல்லா முயற்சியும் பாழ். பிறகு அடுத்த ஞாயிற்றுக்கிழமை வரை காத்திருக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமைக்கு ஞாயிற்றுக்கிழமைதான் அங்கே இராணுவத்தினர் கொஞ்சம் தளர்வாக இருப்பார்கள் என்று எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

மண்டையைக் குடைந்த சிந்தனைகளுக்கு மத்தியில் எப்படித் தயாரானேன் என்பது மறந்தே போயிற்று. புறப்பட்டுவிட்டேன். மணி ஐந்தை எட்டிவிட்டது. அவசர அவசரமாகக் கிளம்பினேன்.

இந்தப் பயணத்துக்கான திட்டம் யாழ். நகரத்தில் உள்ள ஒரு உணவகத்தில்தான் கருக்கட்டியது. அங்கே என்னைச் சந்தித்த இரண்டு முதியவர்கள் இரண்டு மணி நேரமாகத் தாங்கள் படும் துன்பங்களைச் சொன்னார்கள். "இருபக்கமும் கடலும் ஒருபக்கம் இராணுவ காவலரணுமாக நல்லாட்சியிலும் சிறைப்பட்டுக்கிடக்கும் 119 குடும்பங்கள் வாழும் தங்கள் கிராமங்களை, தனித் தீவுபோன்று எந்த வித அடிப்படை வசதிகளும் அற்றிருக்கும் தங்கள் இடத்தை வெளி உலகத்துடன் இணையுங்கள்" என அவர்கள் மன்றாடினார்கள்.

ஒரு பத்திரிகையாளனாக இந்த மாதிரி விடயங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வருவது ஒன்றும் பெரிய சிக்கலான விடயம் அல்ல. ஆனால், இங்கே உள்ள இமாலயத் தடையே இராணுவம்தான். அவர்களுக்குத் தெரியாமல் இந்தக் கிராமங்களுக்குள் நுழைய முடியாது. ஒரேயொரு பாதை மட்டுமே உள்ளது. பத்திரிகையாளனாக என்னை அடையாளப்படுத்திக்கொண்டு உள்ளே நுழைவது இப்போதைக்கு எனக்குப் பிரச்சினை இல்லை என்றாலும், நான் திரும்பி வந்த பின்னர் கிராமத்தவர்களுக்கு என்ன சிக்கல் வருமோ என்ற அச்சம் பிடித்துக்கொண்டது. நான் வந்த காரணம் இராணுவத்தினருக்குத் தெரிந்த பின்னர், அந்த மக்கள் என்னுடன் தங்கள் பிரச்சினைகள் பற்றிச் சுதந்திரமாகப் பேசுவார்களோ என்ற கேள்வியும் இருந்தது.

அந்த முதியவர்களே துப்பையும் தந்து திட்டத்தையும் விவரித்தார்கள். நுணுக்கமாக அவர்கள் அனைத்தையும் அவதானித்துக் கொண்டே அங்கு வாழ்கிறார்கள். முதன்மைவீதியில் இருந்து கிராமங்களுக்குள் நுழையும் கிளை வீதியின் முகப்பில் இராணுவத்தினரின் தடை அரண் இருக்கிறது. உள்ளே போகிறவர்களையும் வெளியே வருகிறவர்களையும் அவர்கள் கண்காணிப்பார்கள். கிராமத்தில் இருப்பவர்களை அனேகமாக அவர்களுக்குத் தெரியும். புதிய முகங்கள் தென்பட்டால் விசாரணை தவறாது. இருக்கின்ற ஒரேயொரு வாய்ப்பு, இராணுவத்தினர் இரவில் அந்தத் தடை அரணில் இருக்கமாட்டார்கள். அருகில் இருக்கும் தங்கள் முகாமுக்குத் திரும்பிவிடுவார்கள். அதிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7 மணியளவில் – கொஞ்சம் தாமதமாகத்தான் – அவர்கள் காவல் அரணுக்கு வருவார்கள். எனவே அதுதான் பொருத்தமான தருணமாக இருக்கும் என்று முடிவெடுக்கப்பட்டது.

இராணுவத்தினர் காவல் அரணுக்கு வருவதற்கு முன்பாக கிராமத்திற்குள் நுழைந்து தகவல்களைச் சேகரித்துக்கொண்டு, இராணுவத்தினர் இரவில் முகாம் திரும்பிய பின்னர் வெளியேறிவிடுவது என்பதுதான் திட்டம். ஆனால், நானோ கிராமத்தவர்களோ தேர்ந்த உளவாளிகள் இல்லையே! எனவே இராணுவத்தின் நடமாட்டம் எந்த நேரத்திலும் எப்படியும் மாறலாம். ஆகவே மாற்றுத் திட்டம் (பிளான் பி) தேவைப்பட்டது. ஒருவேளை இராணுவத்தினர் எனக்கு முன்னமே காவலரணுக்குத் திரும்பி விட்டால், என்னை யார் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளாமலேயே கிராமத்துக்குள் நுழைய அந்த இடத்துக்குத் தினமும் போய் வரும் ஒருவரின் உதவியை நாடுவதற்கும் முடிவு செய்யப்பட்டது.

உதவிக்கும் வழிகாட்டியாகவும் செயற்படப்போகும் நபரை சாவகச்சேரியில் சந்தித்தேன். கேரதீவு சங்குப்பிட்டி பாலம் கடந்து பூநகரியை நெருங்கும்வரைக்கும் ஊர்ப் பெரியவர்கள் சொன்னவற்றை எப்படிச் செய்தியாக்குவது என்றே சிந்தனை பறந்துகொண்டிருந்தது. முதன்மை வீதியில் இருந்து கிராமங்களுக்குச் செல்லும் குறுக்கு வீதியில் மோட்டார் சைக்கிள் திரும்புகின்றது. ஐம்புலன்களும் விழிப்புக்கு வந்துவிட்டன. போர்க் காலத்தை நினைவுபடுத்தும் காட்டு வீதிப் பயணம்.

### நாரி முறிந்தது

எப்படியும் இது யாணை வராத இடமாகத்தான் இருக்கும் என்ற மனதைத் தைரியப்படுத்திக் கொண்டேன். சிந்தனையை அதன் மீது தொடரவிடாதபடிக்கு வீதி என்னைத் தூக்கி எறிந்து விளையாடிக் கொண்டிருந்தது. பழக்கப்படாத புதிய வீதி, எங்கே பள்ளம் எங்கே திட்டி என்பதே தெரியவில்லை. பாவம் எனக்கு முன்னாள் போன பழக்கப்பட்டவருக்கும் தெரியவில்லை. என் விதியையும் வீதியையும் சபித்துக் கொண்டேன்.

மோட்டார் சைக்கிள் காற்றுப் போய்விடக்கூடாதே என்று அடிமனம் எகிறிக் கொண்டே இருந்தது. என்னுடைய 35 கிலோ மீற்றர் வேகத்துக்கே வீதி தூக்கி எறிந்த என் மோட்டார் சைக்கிளின் "சொக்கச் சோபர் எப்போது உடைந்துவிடுமோ என்ற பயம் வேறு தொற்றிக்கொண்டது. அரசை, அதிகாரிகளை, அரசியல்வாதிகளை எவ்வளவு திட்டமுடியுமோ அவ்வளவுக்குத் திட்டிக்கொண்டேன். ஒருநாள் துன்பத்துக்கே இப்படியென்றால், இதுதானே அந்த மக்களின் நாளாந்தப் பயணம்என்றுநினைப்புக்கவடதெறித்து விழுந்த சினத்தையடக்கப் போதுமானதாக இருக்கவில்லை. கொஞ்சத் தூரம் பயணிப்பதற்குள்ளேயே நாரி முறிந்துவிட்டதோ என்ற சந்தேகம் வலுத்தது. வலி தாங்க முடியாததாக இருந்தது.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் இராணுவக் காவலரன். "அப்பனே முருகா!" என்று என் வழிகாட்டி, ஆபத்தாந்தவன் சத்தமாகத் தன் ஆபத்தாந்தவனைத் துணைக்கு அழைத்துக் கொண்டார். எனக்கு ஏற்கனவே இதயம் தொண்டைக்குள் இறுக்கி நின்றது. வீதிப் பயணத்தில், இப்போது வெளியே தெறிக்கும்போல் உடலெல்லாம் மின்சாரம் பாய்ந்தது. நல்லவேளை, "முருகர் காத்தார்!" வழிகாட்டியிடமிருந்து மீண்டும் சத்தமாகக் குரல். அப்பாடா! "இன்னும் வரேல்லையே ஓடித்தப்புவம்" என்றபடியே என் மோட்டார் சைக்கிளை உந்தித் தள்ள முயற்சிக்கிறேன்.

இராணுவம் இல்லை என்றதும் வழக்கமான புத்தி தலையெடுத்துக் கொண்டது. "ஒரு நிமிடம் ஒரு நிமிசம் காவலரணை ஒருக்காப் படம் எடுத்திட்டு வாறன்மமஎன்றேன். "ஐயோ வேண்டாம்!" என்றார் வழிகாட்டி கும்பிடாத குறையாக."முதலில கிராமத்திற்குள்ள போவம். பிறகு பாப்பம். நீங்கள் படம் எடுத்து மினக்கெடுற நேரத்தில ஆமி வந்தால் உங்களை விட்டாலும் என்னை விடான். என்னை அவனுகள் ஒவ்வொருநாளும் காணுறவன்கள்." என்னுடைய கேள்வி அவரது இதயத்தை தொண்டைக் குழிக்குள் இறுக்கிவிட்டது புரிந்தது.

அவருடனேயே புறப்பட்டேன். இலங்கை சுதந்திரம் அடைந்தாகச் சொல்லப்பட்ட காலத்தில் இருந்து ஒரேயொரு தடவையேனும் தார் இட்டு செப்பனிடப்படாத அந்த வீதியின் என் முன்னாள் போன மோட்டார் சைக்கிளின் மதிவேகத்திற்கே புழுதியை வாரி இறைத்தது. பறவாயில்லை காலையில் பவுடர் பூச மறந்ததால் காரியமில்லை எனது முகத்துக்கு பிங் பவுடர் அழகாகத்தான் இருக்கும் என்று மனதில்பட்டது.

நீண்ட பயணம் பழைய வன்னி வாழ்க்கையை எனது மனதில் மீண்டும் கொண்டு வந்தது. குறுக்கு வீதியில் மட்டும் 13 கிலோ மீற்றர்கள் பயணித்திருந்தோம். கிராமத்தின் மத்தியை அடைவதற்கு முன்பாக. பிங்க் பவுடர் முகத்தில் மட்டுமல்ல உடல் முழுவதுமே நன்கு அப்பியிருந்தது.

காலையில் புறப்பட்டு கிராமத்தை வந்தடையும் வரையில் இடையில் குறுக்கிட்டது ஒரேயொரு மோட்டார் சைக்கிள் மட்டுமே.

(46 ஆம் பக்கம் பார்க்க)

"இருபக்கமும் கடலும் ஒருபக்கம் இராணுவ காவலரணுமாக நல்லாட்சியிலும் சிறைப்பட்டுக்கிடக்கும் 119 குடும்பங்கள் வாழும் தங்கள் கிராமங்களை. தனித்தீவுபோன்று எந்த வித அடிப்படை வசதிகளும் அற்றிருக்கும் தங்கள் இடத்தை வெளி உலகத்துடன் இணையுங்கள்" என அவர்கள் மன்றாடினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ள புதிய ஆளுநர் நியமனம்!

ஸ்டோ ஸ்வாமி

தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நியமன விவகாரம் ஒருவாறு முடிவுக்கு வந்திருக்கிறது. முன்னைய ஆளுநருக்கு மீள்நியமனம் வழங்குவதற்குக் காட்டப்பட்ட சிவப்பு மற்றும் பச்சைக் கொடிகள் விவகாரத்தை மேலும் சூடாக்கியிருந்தன. எனினும் புதுமுகம் ஒருவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதை அடுத்து, சூடு அடங்கி வருகின்றது. எனினும் இந்த ஒன்றிணைந்த எதிரணித் தரப்பினரிடம் இது தொடர்பான சலசலப்பு இன்னும் அடங்கியதாகத் தெரியவில்லை. அவர்களில் சிலருக்கு இது இஞ்சியைக் கொடுத்து மிளகை வாங்கிய விவகாரமாகவே அமைந்திருக்கிறது.

மத்திய வங்கியின் முன்னைய ஆளுநரும் ஐ.தே.க. விசுவாசியுமான அர்ஜுன் மகேந்திரனை ஓரம்கட்டி ஜனாதிபதி மைத்திரிபால தேர்ந்தெடுத்திருக்கும் இந்திரஜித் குமாரசாமிக்கு பல தரப்புகளிலுமிருந்து ஆதரவு கிடைத்திருக்கிறது. அதேவேளை இந்த நியமனத்துக்கு பின்னால் ஜனாதிபதி–பிரதமர் இடையே முறுகல் நிலை நிலவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த முறுகலுக்கு முடிவு கட்டுவதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் பங்களித்தார் என அறியக் கிடைக்கிறது. முன்னைய ஆளுநருடைய பதவிக் காலம் கடந்த ஜுன் 30ஆம் திகதி முடிவடைவதற்கு முன்பாகவே அவருடைய நியமன நீட்டிப்பைத் தடுக்கும் வகையில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தன.

**பதவிக்கு பிரேரிக்கப்பட்டவர்கள்!**

சர்ச்சைக்குரிய அர்ஜுன் மகேந்திரன் மீதான குற்றச்சாட்டுக்கள் காரணமாக நீதிமன்றத்தினால் அவர் குற்றவாளியாக இனங்காணப்படாத நிலையில், அவர் உட்பட வேறு சிலருடைய பெயர்களும் மத்தியவங்கி ஆளுநர் நியமனத்தில் அடிபட்டன. அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் உறவினரும் பொருளியியலாளருமான தினேஷ் வீரக்கொடி, மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் பிரதமரின் மூத்த ஆலோசகரான சரித்த ரத்வத்த என்போரின் பெயர்களும் ஆளுநர் பதவிக்கு பிரேரிக்கப்பட்டிருந்தன.

**தாமதித்த நியமனம்!**

ஜுன் 30ஆம் திகதி முன்னைய ஆளுநரின் பதவிக்காலம் முடிவடையும் நிலையிலும் புதிய ஆளுநர் தொடர்பில் அறிவித்தல் எதுவும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. மத்திய வங்கிக்கான புதிய ஆளுநரை வரும் மணித்தியாலங்களில் நியமிப்பேன் என்று மைத்திரி பால சிறிசேன தனது ருவிற்றர் தளத்தில் ஜுன் 28ஆம் திகதியே பதிவிட்டிருந்தார். எனினும் 30ஆம் திகதி கடந்தபோதிலும் உத்தியோகபூர்வமாக எந்த நியமன அறிவித்தலும் விடப்படாத நிலையில் ஜுலை 2ஆம் திகதி காலையிலே புதிய ஆளுநராகக் கலாநிதி இந்திரஜித் குமாரசாமி நியமிக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.

**புதிய ஆளுநரின் கன்னியுரையில் காட்டம்!**

கடந்த திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றுக்கொண்ட புதிய ஆளுநர், தமது கன்னியுரையில் மத்திய வங்கியானது சுதந்திரத்துக்குப் பிற்பாடு நாட்டின் பொருளாதாரத்தினுள் அரசியல் கலக்கப்பட்டு புனையப்பட்ட செயற்கைத்தனமான வளர்ச்சிகளைக் காண்பித்ததாகக் கூறியிருக்கிறார். அதனை முடிவுக்கு கொண்டுவரும் அதேவேளையில் மத்தியவங்கி மீதான நம்பகத்தன்மையையும் புகழையும் பாது காப்பதற்குத் தன்னாலான அனைத்தையும் செய்யவுள்ளதாகவும் வாக்குறுதி அளித்திருக்கிறார். நேர்மையாகப் பணியாற்றுமாறும் எவருக்கும் அஞ்சாமல் தமது பணியை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி தம்மிடம் குறிப்பிட்டார் என தெரிவித்துள்ள அவர், பிரதமருடனான சந்திப்பில் நாட்டின் அபிவிருத்திக்கான தமது திட்டங்கள் தொடர்பில் தம்மிடம் வெளிப்படுத்தினார் எனக் குறிப்பிட்டார்.

**ஒன்றிணைந்த எதிரணியின் முரண் எதிர்வினை!**

முன்னைய ஆளுநரை வீட்டுக்கு அனுப்புவதில் ஆர்வம் காட்டிய ஒன்றிணைந்த எதிரணியின் பங்காளிகள், நியமனம் பெற்றுள்ள புதிய ஆளுநர் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களைப் பதிவுசெய்தனர்.

இந்திரஜித் குமாரசாமியின் நியமனத்தை வரவேற்று ருவிற்றர் தளத்தில் கருத்திட்டுள்ள தினேஷ் குணவர்த்தன, அனுபவம் வாய்ந்த ஒருவருடைய நியமனம் என்று பதிவிட்டிருக்கிறார். டியூ குணசேகர, பேராசியர் திஸ்ஸ விதாரண மற்றும் வாசுதேவ நாணயக்கார போன்றோரும் ஆதரவு நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

மறுபுறத்தில் பிணைமுறி மோசடி விவகாரத்தில் அமெரிக்காவில் சிறைத் தண்டனை அனுபவிக்கும் ராஜ் ராஜரட்னத்தின் விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர் என்று விமல் விரவன்ச மற்றும் உதய கம்மன்பில தரப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. எனினும் தமது நியமனத்தை அடுத்து இடம்பெற்ற முதலாவது செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த ஆளுநர், இது தொடர்பில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

கலியன் குழுமத்தின் ராஜ் ராஜரட்னத்தைப் பல்கலைக்கழக நாள்களிலிருந்தே நண்பனாக அறிந்திருந்தார் என அவருக்கு பொருளாதார நிபுணத்துவ சேவையை வழங்கினார் என அவர் விவரித்திருக்கிறார். பின்னர் அவர் மீதான குற்றச்சாட்டை அடுத்து தாம் விலகிக்கொண்டார் என விளக்கமளித்திருக்கிறார்.



**தற்போது பதவியேற்றிருக்கும் புதிய ஆளுநர் எதிர்வரும் 6 ஆண்டுகளுக்கு தமது பதவியை அலங்கரிக்கவிருக்கிறார். தமது பதவிக் காலத்தில் மத்திய வங்கியினால் வெளியிடப்படும் பணநோட்டுக்களில் இவர் தமிழ்மொழியிலான கையெழுத்தைப் பொறிப்பாரேயானால் அது வரலாற்று முக்கியத்துவமுடைய சம்பவமாக அமையும்.**

**தமிழில் கையெழுத்தை பொறிப்பாரா?**

இதுவரை 13 ஆளுநர்களைக் கண்ட இலங்கை மத்திய வங்கி, வரலாற்றில் 14ஆவது ஆளுநராக பதவியேற்றிருக்கும் கலாநிதி இந்திரஜித் குமாரசாமி, அர்ஜுன் மகேந்திரனுக்கு அடுத்த தமிழ் பேசும் இனத்தைச் சார்ந்தவராவார்.

இலங்கையில் புழக்கத்திலிருக்கும் நாணயத்தாள்கள் நிதியமைச்சரின் கையொப்பத்துடன் மத்திய வங்கி ஆளுநரது கையொப்பத்தையும் கொண்டிருப்பது வழக்கம். கடந்த ஆண்டில் அர்ஜுன் மகேந்திரன் ஆளுநராக பதவி வகித்த காலத்தில் வெளியிடப்பட்ட நாணயத்தாள்களில் அவரது ஆங்கில மொழிக் கையெழுத்தே பொறிக்கப்பட்டு நாணயத்தாள்கள் வெளியிடப்பட்டன. இலங்கை நாணயத்தாள்களில் மத்திய வங்கி ஆளுநர்கள் (மற்றும் நிதி அமைச்சர்கள்) தமது தாய்மொழியான சிங்கள மொழியிலே கையெழுத்தை பொறித்து வந்த நிலையில் 1988ஆம் ஆண்டில் கலாநிதி நெவிலி கருணாதிலக்கவை அடுத்து கடந்த ஆண்டிலே மத்திய வங்கி ஆளுநரின் ஆங்கிலமொழிக் கையெழுத்துடன் கூடிய பணநோட்டுக்கள் புழக்கத்துக்கு விடப்பட்டன. தற்போது பதவியேற்றிருக்கும் புதிய ஆளுநர் எதிர்வரும் 6 ஆண்டுகளுக்குத் தமது பதவியை அலங்கரிக்கவிருக்கிறார். தமது பதவிக் காலத்தில் மத்திய வங்கியினால் வெளியிடப்படும் பணநோட்டுக்களில் இவர் தமிழ்மொழியிலான கையெழுத்தைப் பொறிப்பாரேயானால் அது வரலாற்று முக்கியத்துவமுடைய சம்பவமாக அமையும்.

பொருளாதார உறுதியற்ற நாடொன்றின் மிக உயரிய நிதி நிறுவனத்தின் தலைமைக்குத் தகுதிகளின் அடிப்படையில் விரும்பித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பொருளியல் நிபுணர் கலாநிதி இந்திரஜித் குமாரசாமிக்கு வழங்கப்பட்டுள்ள ஆசனம் ஒன்றும், மலர் இதழ்களால் வேயப்பட்ட ஒன்று அல்ல. நாட்டினுடைய பொருளாதாரத்தையும் அதன் வழியாக அரசியல் உறுதிப்பாட்டையும் தக்கவைக்க, நல்லாட்சியில் கைகோர்த்திருக்கும் இவர் மீதான நம்பிக்கை பல தரப்புக்களிலும் எகிறியிருப்பது உண்மையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வேண்டாமே



உன்னை நானறிவேன்
என்னையன்றி யாரறிவார்?
கண்ணில் நீர் வழிந்தால்
என்னையன்றி யார் துடைப்பார்?



# ம(ண)ன முறிவு

பண்டைக்காலத்தில் தம்பதியரிடையே "மன முறிவுகள்" இருந் தாலும், அது "மண முறிவு" வரைசென்றதில்லை. அந்தளவுக்கு அவர்கள் அந்நியோன்னியமாக இருந்தார்கள். ஆனால், இன்று உள்ளங்கையில் உலகம் என்ற இணையப் பாவனையும் விரல் நுனியில் விவரம் என்ற கைப்பேசிப் பாவனையும் அடிநிலைமாந்தர் முதல் படித்தவர் வரை சரளமாகப் புழக்கத்தில் உள்ளன.

■ அராலியூர்
எஸ்.மல்லிகா

மனித வாழ்க்கையானது பூத்துக்குலுங்கும் ஓர் அழகிய நந்தவனம். இந்த வனத்திற்குள் ஆயிரம் உறவுகள் வருவார்கள், போவார்கள். ஆனால், இறக்கும்வரை தொடரும் உறவா கக் கணவன்- மனைவி உறவே உள்ளது. இன்பம்- துன்பம், ஏற்றம்- இறக்கம், உயர்வு- தாழ்வு என்று அத்தனையிலும் சரி நிகர் பங்கெடுத்து, கருத்திலும் அன்பிலும் ஒன்றுபட்டு வாழும் தம்பதியர் பேறுபெற்றவர்கள். ஆனால், இன்றைய இயந்திர உலகில் இப்படிப்பட்டவர்களைக் காண்பது அபூர்வம். அவசர வாழ்க்கை, கருத்தொன்றேல் மணமுறிவு என்றளவுக்குத்தான் சமகாலத் தம்பதிகளின் வாழ்க்கை உள்ளது.

இதற்கான காரணங்கள், அதிர்ச்சி தருகின்றன. பண்டைக்காலத்தில் தம்பதியரிடையே "மன முறிவுகள்" இருந்தாலும், அது "மணமுறிவு" வரை சென்றதில்லை. அந்தளவுக்கு அவர்கள் அந்நியோன்னியமாக இருந்தார்கள். ஆனால், இன்று உள்ளங்கையில் உலகம் என்ற இணையப் பாவனையும் விரல் நுனியில் விவரம் என்ற கைப்பேசிப் பாவனையும் அடிநிலைமாந்தர் முதல் படித்தவர்வரை சரளமாகப் புழக்கத்தில் உள்ளன. இந்த இயந்திரங்களுக்கு அடிமை யாகும் தம்பதியர், தம் இதயங்களை இரும்பாக்கி வைத்திருக்கின்றனர். "இவ்வாறானவர்கள் எந்நேரமும் ஒரு மன இறுக்கத்துடன் காணப்படுவார்கள்." என்று ஆய்வுகளும் கூறுகின்றன. அத்துடன், விவாகரத்துக்கள் ஏற்பட இவை பெரும் பங்கு வகிப்பதாகவும் அவை மேலும் கூறுகின்றன. பண்டைக் காலத்தில் காதல் திருமணங்களே அதிகம் இருந்தன.

இத்தகு திருமணங்கள் அன்றல்ல, இன்றும் வரவேற்கப்படுகின்றன. காரணம் ஒருவரையொருவர் நன்கு அறிந்து, விட்டுக்கொடுத்து வாழ்வதற்கான வழிமுறைகள் இந்தத் திருமணத்தில்தான் அதிகம் உண்டு. இதனால்தான், "காதலர் இருவர் கருத்தொரு மித்து ஆதரவுபட்டதே இல்லற வாழ்க்கை" என்று ஔவைப் பிராட்டி கூறியுள்ளார். ஆனால், தற்காலத்தில் அதிகமாகக் காதல் மணம் புரிவோரே மன முறிவுகளால் மன்றைச் சென்றடைந்து மணமுறிவு கேட்கின்றனர்.

அவசரமாக இயங்கும் இயந்திரங்களைப் போல உறவுகளையும் நினைந்து, அவசர முடிவுகள் எடுக்கின்றனர். மனம் விட்டு இருவரும் பேசியிருந்தால் தவிர்த்திருக்கக்கூடிய விவாகரத்துக்களே இன்றுஅதிகம் இடம்பெறுகின்றன. கணவன்- மனைவி உறவென்பது புனிதமானது. அதனால்தான் திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள்.

இத்தகைய திருமண பந்தத்தில், அனைத்தையும் புரிந்து நடக்கும்ஒரு பெண்ணால் அந்த இல்லத்தையே கோவிலாக்கமுடியும். ஆனால், சில வறட்டுக் கௌரவங்களாலும் தேவையற்ற பிடிவாதங்களாலும் தங்கள் வாழ்க்கையை நொடிகளில் தொலைத்துவிட்டு, அதனை யுகங்களில் தேடிக் கொண்டிருக்கின்றனர். இதில் ஆண்- பெண் இருவருக்கும் சமபங்குண்டு. உள்ளத்தாலும் உடலாலும் ஒன்றி, ஆன்மாக்கள் இரண்டும் இடம்மாறி இனிமையாய் நகரும் இல்லறத்தில், சில சறுக் கல்களும் வரத்தான் செய்யும். அவற்றைச் சரிசெய்யும் பக்குவத்தைக் கடவுள் நமக்குத் தந்துள்ளான். ஆனால், எத்தனை பேர் அவ்வாறு செயற்படுகின்றனர்? "உனக்கும் எனக்கும் ஒத்துவராது; கௌரவமாக நாம் பிரிந்து விடலாம்" என்று கணவனோ அல்லது மனைவியோ சுலபமாகச் சொல்லிவிடுகின்றனர். அந்தக்கணத்தில், நிராகரிப்பின் வலி என்பது அவனையோ அல்லது அவளையோ மன அளவில் முறித்துப் போட்டுவிடும். அடுத்தென்ன செய்வது என்று ஆறியமர்ந்து யோசிக்காது, எடுத்த வேகத்தில் மண முறிவைப் பெற்றுச் செல்கின்றனர். ஆனால், அவர்களின் ஆழ்மனம் அந்தப் பிரிவை உண்மையில் ஏற்றுக்கொள்ளாது.

முன்பெல்லாம் கணவன் - மனைவிக்கிடையில் பிணக்குகள் வரும்போது மனைவி கோபித்துக் கொண்டு தனது தாய் வீட்டுக்குத்தான் செல்வாள். அதன்பின் இதற்கு மேல் தாய்வீட்டில் இருந்தால் கணவர் வேறு ஒரு பெண்ணுடன் குடித்தனம் நடத்த ஆரம்பித்து விடுவார் என்று அச்சப்பட்டு அவளாகவே திரும்பி வந்துவிடுவாள் அல்லது குடும்பப் பெரியோர்களே அவளை அழைத்து வந்து, கணவனுடன் சமரசம் செய்து சேர்த்துவைப்பார்கள் அல்லது பிள்ளைகளின் வேண்டுதலுக்கோ, பெற்றோர்களின் பணிப்புக்கோ இணங்கக் கணவன் அழைத்து வருவான். ஆனால், தற்காலத்தில் கோபத்திற்குள்ளாகும் பெண்கள் நேராக நீதிமன்றுக்குத்தான் போகிறார்கள். இதற்கு இன்றைய பெற்றோர்களும் ஒரு காரணம். இவர்களின் தூண்டுதல்தான் இங்கு அதிகம் இருக்கிறது. இவ்வாறு நீதிமன்றை நாடும் பெண்கள் பக்கமே சட்டமும் இருக்கிறது. இதிலும், இத்தகைய பெண்களுக்காக இலவச சட்ட உதவியும் உள்ளது.

(தொடரும்...)



# காவிரி பிறந்தது

■ நா.ஸ்ரீவித்தியாதரன்

வெகு நாள்களுக்கு முன்னாள் சூரபதுமன் என்றொரு ராட்சஸன் இருந்தான். அவன் மகா பராக்கிரமசாலி. அவனது ஆட்சி ஈரேழு உலகங்களிலும் நிலவி இருந்தது. தேவர்கள் அவனைக் கண்டு நடுங்கினார்கள். தேவேந்திரன்கூட அவனுக்குப் பயந்து ஓடிப்போய் பூலோகத்தில் ஒரு நாட்டில் மூங்கிலாக வளர்ந்து விட்டான்.

கோடையில் எல்லா மரங்களும் வாடி உலர்ந்து விட்டன. ஆனால், இந்த மூங்கில் மட்டும் இலைகள் பச்சைப்பசேலென விளங்கிப் பசுமையுடன் இருந்தது. தேவேந்திரனுக்கு மிகவும் பயம் வந்து விட்டது. சூரன் கோடையில் அந்த மூங்கில் மட்டும் பசுமையாக இருப்பதைக் கண்டால் கண்டிப்பாக வெட்டச் சொல்லி விடுவானே என்று தேவேந்திரன் பயந்தான். அவனுக்கு ஒரு உபாயம் தோன்றியது.தன்னைப் போலவே இதர மரங்களையும் பசுமையாகச் செய்து விட்டால் போயிற்று என்று நினைத்தான். உடனே விநாயகரைத் தொழுதான். பிள்ளையாரும் அவன் முன் தோன்றினார்.

தேவேந்திரன் தான் நினைத்த காரியத்தைச் சொல்லவே, பிள்ளையாரும் "யோசனை என்னவோ நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், இங்கே தண்ணீர் எப்போதும் பாய்ந்து கொண்டிருக்கும்படி எப்படிச் செய்வது? ஆமாம் அகத்தியர் பொய்கை மலையில் இருக்கிறார். அவருடைய கமண்டலத்தில் தண்ணீர் இருக்கிறது. அதை நான் கவிழ்த்து விடுகிறேன். அது ஆறாகப் பெருகி ஓடி வரும். இங்கு உள்ள மரங்களெல்லாம் இலைவிட்டுத்தழைக்கும். அப்போது நீ பிழைத்துக்கொள்ளலாம்" என்று சொன்னார்.

பிள்ளையார் காக்கை உருவத்தில் அகத்தியர் கண்ணை மூடிக்கொண்டு தியானத்திலிருக்கும் சமயம் பார்த்து கமண்டலத்தை உருட்டிவிட்டார். அதிலிருந்த தண்ணீரெல்லாம் வெளியே கொட்ட அங்கிருந்து ஒரு நதி கிளம்பி ஓடலாயிற்று.

கமண்டலம் கவிழ்ந்து விழுந்த சத்தத்தைக் கேட்டதும் அகஸ்தியர் கண்விழித்துக் காக்கையைக் கண்டார். அவர் கோபம் கொண்டு காக்கையைத் துரத்திக் கொண்டே போனார். காக்கையும் அவரை ஈரேழு உலகங்களிலும் இழுத்து அடித்துக் கொண்டே போயிற்று.

வெகு தூரம் ஓடிக்களைத்துப் போன அகத்தியர் அந்தக் காக்கை சாதாரணமானது அல்ல என்று தெரிந்து கொண்டார். ஞான திருஷ்டியால் விநாயகரே அந்த உருவில் வந்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டதும் அந்தக் காக்கையை வணங்கி "யானை முகத்தவனே! முதல்வனே! நீங்கள் இதற்காக இவ்வளவு சிரமப்பட வேண்டுமா? இந்த உபகாரத்தை நான் செய்திருப்பேன். இப்போது நான் பூஜை செய்ய தண்ணீருக்கு என்ன செய்வேன்? என்று கேட்டார். விநாயகர் உடனே தன்னுடைய துதிக்கையால் பெருகி ஓடும் தண்ணீரில் கொஞ்சம் உறிஞ்சி அவரது கமண்டலத்தில் விட்டு "இந்தப் பிரதேசத்தில் இந்த நதி பாயட்டும். காக்கையால் விரிக்கப்பட்டு விட்ட இந்த நதிக்கு இன்று முதல் காவிரி என்ற பெயரும் ஏற்படும்" என்று கூறி மறைந்தார். அன்று முதல் அந்த நதிக்குக் காவிரி என்ற பெயர் வழங்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனின் பிரிவோடு பிளவுபடுமா?

# 'ஐயே(ய)ரா'ப்பிய ஒன்றியம்

ஜெயமோகன்

பிரிட்டனில், ஜூன் 23 இல் நிகழ்ந்த பிரெக்ஸிட் வாக்கெடுப்பு முடிவு பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிந்துசெல்வதை உறுதிசெய்துள்ளது. அதுவரை ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் பிரிவதெல்லாம் நடக்காத காரியம் என்ற கருத்தே நிலவி வந்தது. அப்போது பிரிய வேண்டுமென வாக்களிப்பவர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் மிகச் சிறிய ஒரு வலதுசாரிக் குழு. அவர்களுக்கு அங்கே பெரிய ஆதரவெல்லாம் இல்லை. அவர்களைத் தோற்கடித்து அவர்களின் வாயை மூடவைப்பதற்காகவே இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது என்ற கருத்தும் நிலவி வந்தது.

உண்மையில் நடந்தது என்ன? மார்கிரெட் தட்சர் காலத்திலேயே பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறவேண்டும் என்னும் கோரிக்கை வலதுசாரிகளிடமிருந்து வந்துகொண்டிருந்தது. அதைச் சமீபத்தில் ஓர் இயக்கமாக முன்னெடுத்தவர் 'நைஜல் பராஜ்' என்னும் தீவிர வலதுசாரி அரசியல்வாதி. கன்சர்வேட்டிவ் கட்சியிலிருந்து 1992இல் வெளியேறி, ஐக்கிய இராச்சிய விடுதலைக் கட்சி (யுனைட்டெட் கிங்டம் இன்டிபென்டன்ஸ் பார்ட்டி) என்னும் சிறிய கட்சியை ஆரம்பித்து, அதன் தலைவராக இருக்கும் நைஜல் பராஜ், ஆரம்பத்திலிருந்தே அந்நியர்கள் பிரிட்டனில் வந்து குடியேறுவதை ஒரு பிரச்சினையாக வாதிட்டு வந்தவர்.



> 66 பிரெக்ஸிட் வாக்கெடுப்பில் பிரிட்டன் வெளியேறவேண்டும் என்றே முடிவு எடுக்கப்பட்டது. கமரூன் பதவி விலகப் போகிறார் என அறிவித்தார். உண்மையில், அங்குள்ள பலருக்கு இப்படி நிகழும் என்றே நம்ப முடியாமலிருக்கிறது. சென்ற பல ஆண்டுகளாகக் கடும் பொருளாதார நெருக்கடியில் இருந்த பிரிட்டனின் 'வேல்ஸ்' பகுதி ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியைக் கொண்டே சமாளித்து வந்தது.

### பிரெக்ஸிட் வாக்கெடுப்பு

நைஜல் பராஜ் தொடர்ச்சியாக ஆதரவைப் பெருக்கிக்கொண்டே இருப்பதைக் கண்ட டேவிட் கமரூன், வலதுசாரிகளின் வாக்குப் பிரிந்துவிடும் என அஞ்சினார். ஆகவே, சென்ற தேர்தலில் அவர் வென்றுவந்தால் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதா வேண்டாமா என மக்களின் கருத்துக் கோரப்படும் என அறிவித்தார். மக்களிடம் 5 சதவீத ஆதரவுகூட இல்லாத நைஜல் பராஜை அதன் வழியாகத் தோற்கடித்து, அரசியலைவிட்டே துரத்தலாம் என்று கனவும் கண்டார். அதன் விளைவே 'பிரெக்ஸிட்'எனப்படும் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு.

ஆனால், மெல்ல மெல்ல ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறவேண்டும் என்னும் கோரிக்கை வலுவடையத் தொடங்கியது. நைஜல் பராஜ் தன் பரப்புரைகள் மூலம் அதை வளர்த்தெடுத்தார்.

பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்தாலும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் நுழைவதற்கான 'செங்கன் விசா' என்னும் பொது நுழைவிசைவுடன் பிரிட்டனுக்குள் நுழைய வெளிநாட்டவர்களால் முடியாது. அதற்குத் தனி பிரிட்டிஷ் நுழைவிசைவு வேண்டும். ஆகவே, இங்கே அயல்நாட்டு அகதிகள் நேரடியாக வர முடியாது. ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாட்டவர்கள் பிரிட்டனுக்குள் நேரடியாக வந்து குடியேற முடியும். அதைப் பயன்படுத்திக் கொண்டு போலந்து, ருமேனியா விலிருந்து கூட்டம் கூட்டமாக பிரிட்டனில் குடியேறிக்கொண்டிருக்கிறார் கள்.

கிழக்கு ஐரோப்பியர்களின் மொழி ஆங்கிலத்துக்கு இசைவானது என்பதால் அவர்கள் ஆறு மாதங்களில் ஆங்கிலம் பேசத் தொடங்கிவிடுவார்கள். வாழ்க்கை முறையும் பிரிட்டனுக்கு இசைவானது. ஆகவே, இவர்கள் அங்குள்ள நடுத்தர வேலைகளைக் கவர்ந்துகொள்கிறார்கள். போலந்திலும் ருமேனியாவிலும் பொருளாதார வீழ்ச்சி இருப்பதால், பிரிட்டனில் இவர்கள் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்வதற்கு ஆயத்தமாக உள்ளனர். எனவே பிரிட்டனில் இவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

கீழ்மட்ட வேலைகளை ஆபிரிக்க, ஈழ அகதிகள் செய்வதை பிரிட்டன் குடிமக்கள் வரவேற்கிறார்கள். நடுத்தர வேலைகள் இல்லாமலாவதே அவர்களைக் கசப்படைய வைக்கிறது. மேலும், வருபவர்களில் பெரும்பாலானவர்கள் கத்தோலிக்கர்கள். அதை பிரிட்டன் ஏற்றுக்கொள்ளும் ஏனெனில் பிரிட்டன் சீர்திருத்தவாத கிறிஸ்தவத்தின் பிறப்பிடம்.

இந்த நிலையில் பழைய பிரிட்டிஷ் பேரரசுக் கனவுகளைச் சுமந்து வாழும் வயதான பிரிட்டிஷ்காரர்களின் ஏக்கங்களும் கலந்துகொண்டன. பிரிட்டன் போன்ற ஐரோப்பிய நாடுகளில் முதியவர்கள் மிக அதிகம். இவர்கள் தேர்தல்களில் முக்கியமான ஒரு தரப்பு.

ஆரம்பத்தில் அலட்சியமாக இருந்த கமரூன் தீவிரமடைய வேண்டியிருந்தது. கமரூனின் நண்பர்கள் அனைவரின் வீட்டுக்கும் கமரூனிடமிருந்து தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டன. அதில் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலேயே தொடர்ந்திருக்க வேண்டும் என்று மன்றாடியிருந்தார். வெளியேறினால் ஏற்படும் பொருளாதார அழிவுகளைப் பட்டியலிட்டிருந்தார். பிரிட்டனின் வணிகச் சமநிலையே குலையும் என்றும், அந்தச் சிக்கல்களை ஏற்கனவே தடுமாறும் பிரிட்டனின் பொருளாதாரத்தால் தாங்க முடியாது என்றும் வாதாடியிருந்தார்.

ஆனால், மறுபுறம் அவரது கட்சியைச் சேர்ந்த 'போரிஸ் ஜான்சன்' ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் பிரிந்து செல்லவேண்டும் என வாதிடும் தரப்புக்குத் தலைமை வகித்தார். போரிஸ் ஜான்சன் ஒரு பேச்சாளர், வரலாற்றாசிரியர். லண்டன் முதல்வராக இருந்தவர். கமரூனை விலக்கி விட்டுதான் பிரதமராக ஆகும் கனவும் கொண்டவர்.

தொலைக்காட்சிகளில் அனல் பறந்தன விவாதங்கள். இரு தரப்பும் சமமாக இருந்தால்தான் விவாதம் சூடு பறக்கும். அதுதான் ஊடகங்களுக்கு நல்லது. ஆகவே, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் பிரிந்து செல்லவேண்டும் என்று வாதிடும் தரப்பைத் தொலைக்காட்சிகள் முதன்மைப்படுத்தின. அதேநேரம் கமரூனின் வாதங்களைப் 'பூச்சாண்டி காட்டுதல்' என்று ஒரே வரியில் ஒதுக்கி வைத்தன. தாய்நாட்டின் மதிப்பை மீட்பது, உழைப்பாளிகளின் வாய்ப்புகளைத் தக்கவைப்பது ஆகிய இரண்டு கருத்துக்களுமே அவை முதன்மைப்படுத்திக் கூறியவை.

இத்தகைய சூழலில் பிரிட்டிஷ் எழுத்தாளரான 'ராய் மாக்ஸ்' இது ஒரு விடயமே இல்லை. பிரிந்து செல்லவேண்டும் என்னும் தரப்பு தொலைக்காட்சிகளால் உருவாக்கப்படுவது மட்டுமே என்றார். இன்று வரை நடந்த கருத்துக் கணிப்புகளில் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கவேண்டும் என்று வாதிடும் தரப்புக்கு 70% ஆதரவு உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

### எதிர்பாராத மாற்றங்கள்

ஆனால் லண்டனில் ஒரு வாரத்தில் நிலமை மாற ஆரம்பித்தது. ஜூன் 12 அன்று அமெரிக்காவில் ஓர்லாண்டோவில் ஓர் இஸ்லாமிய இளைஞர் தன்பாலின உறவாளர் கேளிக்கை விடுதியில் துப்பாக்கிச்சூடு நடத்தி, 50 பேரைக் கொன்ற சம்பவம் பிரிட்டனின் பிரெக்ஸிட் வாக்கெடுப்பு முடிவுகளில் தாக்கத்தைச் செலுத்தி வலதுசாரிகளை மேலும் வலுவாக்கியது. மேற்கத்தேயக் கலாசாரமே தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதாகச் சொல்ல ஆரம்பித்தனர் வலதுசாரிகள். அவ்வேளை பிரிட்டிஷ் கால்வாய்க்கு மறுபக்கம் பிரான்ஸில் கலைஸ் என்னும் ஊரில் பல்லாயிரம் சிரிய இஸ்லாமிய அகதிகள் பிரிட்டனுக்குள் நுழைவதற்காக அகதிமுகாம்களில் காத்திருப்பது பற்றிய பேச்சுக்கள் எழுந்தன.

பின்னர் பிரெக்ஸிட் வாக்கெடுப்பில் பிரிட்டன் வெளியேற வேண்டும் என்றே முடிவு எடுக்கப்பட்டது. கமரூன் பதவி விலகப்போகிறார் என அறிவித்தார். உண்மையில், அங்குள்ள பலருக்கு இப்படி நிகழும் என்றே நம்ப முடியாமல் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலெக்ஸ்பரந்தாமன்
புதுக்குடியிருப்பு



# அவள் வாழ வேண்டியவள்

அந்தா ... அந்தத் தூணுக்கு முன்னால சப்பணம் கட்டிக் கொண்டு கண்ரண்டையும் மூடினபடி... ஒருபெட்டையொண்டு கும்பிட்டுக்கொண்டிருக்குது பார்த்தியே...! அந்தப் பெட்டைக்கு இப்ப வயசு நாற்பத்திரண்டுக்கு மேல. பெட்டை ஆர் தெரியுமே...?" குரல் வரும் திக்கை நோக்கி தன் பார்வையைத் திருப்புகிறான் பலராமன். கோவிலின் நடு மண்டபத்தில் இருக்கும் முதிர்வயதுப் பெண்ணொருத்தி தன் வயதையொத்த இன்னொரு பெண்மணிக்குக் கூறிக்கொண்டிருப்பது தெரிந்தது. "உந்தப் பெட்டை பொயிலைக் கடைப் பொன்னற்றை ரண்டாவது மோள். மூத்த பெட்டை கலியாணம் முடிச்சு மனிசனோடை வெளிநாட்டுக்குப் போயிட்டுது. உந்தப் பெட்டை தாயோடை இருக்குது. பெட்டேன்ரை தாய்க்காரி பொன்னரை விரும்பிச் செய்தவ. பொன்னர் வீட்டுக்காரர் கஷ்டப் பட்டதுகள், முட்டுப்பட்டதுகள், சாதி குறைஞ்சதுகள் எண்டு தாய்க் காரின்ர இனம் சனம் ஒருத்தரும் உதுகளை நாடுறதில்லை..."

"பெட்டைக்குத் தேப்பன்காரன் இல்லையே..?"

கதை கேட்டுக்கொண்டிருந்த இரண்டாமவள், கதை கூறும் முதிர் வயதுப்பெண்ணைக் கேட்கிறாள்.

"இல்லையடி பிள்ளை... உவள் பெரிய பிள்ளையாகி மூண்டாம் மாசமே படுக்கையில பாம்பு கடிச்சு தேப்பன்காரன் செத்துப்போனான்..."

"அட! பாவமே...." இரண்டாமவள் மிகவும் பரிதாபப்பட்டாள்.

பலராமன் அந்தப்பெண்களது சம்பாசணைகளைச் செவிமடுத்த வாறு... அந்தப் பெண் மீது தன் பார்வையைச் செலுத்துகிறான். பாக்கியலட்சுமி!

இதுதான் அந்தப் பெண்ணுக்கு அவளது பெற்றோர் இட்டபெயர். பெயருக்கும் அவளது வாழ்க் கைக்கும் எந்தவிதப் பொருத்த மில்லாத ஒரு பெயராகவே அது அமைந்திருந்தது. குலத்தில் தந்தை தரம் குறைந்தவர் என்ற ஒரு காரணத்தால், ஊரிலுள்ள அவர் களது நெருங்கிய உறவினர்களில் வசதிபடைத்தபெரும்பாலானவர்கள் அவர்களை ஒதுக்கியே வைத்தி ருந்தனர். சக வீடுகளில் நடைபெறும் நன்மை தீமையான காரியங்களில் கூட, அவர்கள் இரண்டாம் பட்ச மாகவே நடத்தப்பட்டார்கள். காலநகர்வில் பாக்கியலட்சுமியும் அவளது தாயும் இவ்வகையான 'அரியண்டங்களில்' இருந்து மெல்ல விலகி நின்றதோடு, தனிமைப்பட்டும் போனார்கள். பாக்கிய லட்சுமியின் மூத்த சகோதரியும் காதலித்தே திரும ணம் முடித்தவள். அவளுக்கு வாய்த்த கணவன், இவர்களது குடும்பப் பின்னணியில் இருந்த குறைபாட்டை விளங்கிக் கொண் டான். அவர்கள் வாழும் ஊரில் இருந்து அவர்களோடு சேர்ந்து அவமானப்படவிரும்பாத அவன், வெளிநாட்டுக்குச் சென்று இரண்டொரு வருடங்களின் பின், தன் மனைவியையும் அழைத் துக்கொண்டு விட்டான். தனது மாமி, மைத்துனியின் நிலையைக் கருத்திற் கொண்டு மாதாமாதம் அவர்களின் பொருளாதாரச் செலவுகளுக்காக தன் மனைவி ஊடாகப் பணம் அனுப்பிக்கொண்டிருந்தான்.

பாக்கியலட்சுமி அமைதியானவள். ஆன்மிக மற்றும் ஆசார விடயங் களில் ஈடுபாடுடையவள். அநா வசியமான பிரச்சினைகளில் இருந்து விலகி நடப்பவள். சிறுவயதில் பாட சாலையில் படிக்கும்போது அங்கு நடைபெறும் வருடாந்தத் திருநாள் நிகழ்வுகளில் அவளைப் பலரும் பின் வரிசைப் படுத்துவார்கள். கால நகர்வில் அதற்கான காரணத்தை அவள் அறிந்து கொண்டபோது, மனம் தாழ்வுச்சிக்கலுக்கு உள்ளாகி தனிமையை நாடத் தொடங்கினாள்.

இதன் நிமித்தம் அவள் எவரோடும் வலிந்து சென்று கதைப்பதைத் தவிர்த்தாள். அமைதியும் தனிமையும் அவளிடத்தினுள் குடிபுகுந்தன. எதிலும் பற்றற்ற நிலைபோன்று வாழ்ந்து கொண்டிருந்தாள். தாயும் பக்கத்திலுள்ள அம்மன் கோவிலுமே அவளுக்குத் துணையாக இருந்தன.

குலத்தாழ்ச்சி உடையவனின் பிள்ளை என்ற ஒரு காரணத்தை முன்னிட்டு, அவளது திருமணப் பேச்சுக்கள் தடைப்பட்டுக் கொண்டிருந்தன. போதாக்குறைக்கு ஊர் வாய்கள் வேறு அவளது கதையை மென்று கொண்டிருந்ததில், அவள் ஒரு பருவம் தப்பிய பயிராக நாற்பத்தியிரண்டு அகவையைத் தாண்டி நின்றாள். ஆயினும், வாழ்வின் மீதான நேசிப்பு அவளிடத்தில் இருந்தது. தனக்கான ஒரு காலத்துக்காக, அந்தக் காலம் என்றாவது ஒருநாள் கனியும் என்ற நம்பிக்கையோடு அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

பலராமனுக்கு அவளது கடந்தகால வாழ்க்கை தெரிந்திருந்தது. அவளைவிட, இருபது வருடங்கள் அவன் இளையவனாக இருந்த போதிலும், சமூக மாற்றத்துக்கான சிந்தனைகள் அவனுள்ளே ஊறிக் கிடந்தன. இதன் நிமித்தம் அவன் தங்களது குடிபூரல் நிகழ்வுக்கு பாக்கியலட்சுமியையும் அவளது தாயாரையும் அழைத்திருந்தான். முதலில் அவர்கள் இருவரும் தயங் கினார்கள். அவர்களது தயக்கத் துக்கான காரணத்தை அவனால் விளங்கிக் கொள்ள முடிந்தது.

**"லட்சுமி அக்கா! உங்களைத்தான்... இஞ்சை முன்னுக்கு வாங்கோ... வந்து குருக்கள் ஐயாட்டை இந்தக் கண்ணாடியை வாங்குங்கோ..." பலராமன் அவளை மீண்டும் வற்புறுத்திக் கூப்பிட்டான். பாக்கியலட்சுமி திகைத்துப் போய் நின்றாள்.**

"அக்கா..! இது எங்கட வீட்டுக் குடிபூரல். எல்லாம் தெரிஞ்சுதான் நான் வந்து சொல்லுறன். எங் களுக்கு எல்லாரும் சமம்! நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்கத்தேவை யில்லை. குடிபூரலுக்கு நீங்கள் ரண்டுபேரும் கட்டாயம் வந்துதான் ஆக வேணும்..." பலராமன் குடிபூரல் நிகழ் வுக்கு அழைத்தமைக்கு இன்னொரு காரணமும் இருந்தது. வெளிநாட்டில் இருக்கும் பாக்கியலட்சுமியின் மைத் துனர் அவர்களுக்கு அனுப்பும் பணம் அவர்களது பொருளாதாரத் தேவைகளுக்குப் போதுமானதாக இருப்பதில்லை என்பது அவனுக்குத் தெரிந்த விடயம். அதனால் அவர்கள் இருவரையும் அன்று மதிய போசனத் துக்காக அவன் அழைத்திருந்தான்.

"இண்டைக்கெண்டாலும் அவையள் ரண்டுபேரும் எங்கட வீட்டில எப்பன் வயிறாறச் சாப்பிடட்டும் ..."

வசந்த மண்டபத்துக்கு முன்பாக... ஒரு தூணோடு சாய்ந்தவாறு... சப்பணம் கட்டிய நிலையில் ... கண்களை மூடிய வண்ணம் ... வாய் ஏதோ முணுமுணுத்தபடி... பாக்கிய லட்சுமி அமைந்திருப்பதைப் பார்த்த பலராமனுக்கு கண்கள் கலங்கி விட்டன. அவனுக்கும் அவளோ டொத்த வயதில் ஓர் அக்கா இருக்கி றாள். திருமணவயதில் சீதனப்பிரச்சி னைகளோடு போராடித்தான் அவ னது தந்தை அக்காளைத் திரு மணம் முடித்துக் கொடுத்திருந் தார். அந்த நிகழ்வுகள் அனைத் தும் அவனது மனத்திரையில் ஒரு கணம் படங்களாய் ஒளிர்ந்து கொண்டபோது... அவனுக்குப் பாக்கியலட்சுமி மீது இன்னும் அதி கதிகமாக அனுதாபம் ஏற்பட்டது.

"பாவம் லட்சுமி அக்கா..." கோவில் குருக்கள் மூலஸ்தானத்துக்குள் இருந்து அவசரமாக வெளியே வருவது தெரிந்தது.

"குடிபூரலுக்குப் படங்கள் கொண்டு வந்தவை எல்லாம் இஞ்சை முன்னுக்கு வாங்கோ ..."

கோவிலின் முன்மண்டபத்தில் அமர்ந் திருந்தவர்களைப் பார்த்துக் கூறுகிறார் குருக்கள். குடிபூரலுக் கான உரிமையாளர்கள் ஐந்துபேர் தங்கள் குடும்பத்தோடு குருக்கள் முன்பாகப் போய்நின்றார்கள். குருக்கள் ஒவ்வொருவருடைய பெயர், நட்சத்திரங்களைக் கேட்ட றிந்து அவற்றுக்கான சமஸ்கிருத சுலோகங்களை சற்று உரக்க உச்சரித்துக்கொண்டார்.

(43 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெட்ரோ

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் வழிப்பறிக் கொள்ளைகளை ஒத்த காட்சிகள் அந்தக் கொள்ளைகளில் ஈடுபடும் இளைஞர்களின் பின்னணிகள், வழிப்பறிகள் நடக்கும் இடங்கள், எவ்வாறானவர்களிடம் பறிப்பது, அதற்கேற்ற சூழ்நிலை என்ற பல யதார்த்த நிகழ்களத்துள் கதையாக்கப்பட்டுள்ளது 'மெட்ரோ' திரைப்படம் ஓய்வு பெற்ற அப்பா, இல்லத்தரசி அம்மா, இரண்டு மகன்கள் எனக் கச்சிதமான நடுத்தரக் குடும்பம். பொறுப்புள்ள மூத்த மகனாக நாயகன் யகன் சிரிஷ். இளைய மகன் சத்யா. தனது ஆசைகளை அடைவதற்காக எதற்கும் துணிகிறான் சத்யா. அந்தத் துணிச்சல் அவனை சங்கிலி பறிப்புக் கும்பலிடம் அழைத்துச் செல்கிறது. அதன் பிறகு என்னென்ன நடக்கின்றன என்பதை விறுவிறுப்பான திரைக் கதையின் மூலம் சொல்கிறது இயக்குநர் ஆனந்த கிருஷ்ணாவின் 'மெட்ரோ'.

இது நகரத்தின் அமைதியான சாலைகளில் நடக்கும் பயங்கரமான சங்கிலி பறிப்புச் செயல்களுக்குப் பின்னால் இருக்கும் அதிபயங்கரமான வலைப் பின்னலை ஊடுருவிச் செல்லும் திரைக்கதை. அதன் காட்சிகள் யதார்த்தம் நிறைந்தவை.

எடுத்துக்கொண்ட கதைக் களத்தைத் துல்லியமாகச் சித்திரிக்க இயக்குநர் தன் திறமையைக் காட்டியிருப்பது காட்சிகளில் தெரிகிறது. அவற்றைக் காட்சிப்படுத்திய விதமும் புதிதாக இருக்கிறது. சங்கிலியை அறுப்பதும் அவற்றுக்கான திட்டமிடல்களும் பதைபதைக்க வைக்கின்றன.

சத்யாவின் பேராசையில் தொடங்கும் பிரச்சினைகளைச் சங்கிலித் தொடர் காட்சிகளாக இணைத்து இரகசிய உலகம் ஒன்றை அறிமுகப்படுத்துகிறார் இயக்குநர். சங்கிலியை அறுப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பெண்கள், திருட்டுச் சங்கிலிகளை விற்பதற்கான முகவர்களுக்கான இரகசிய இடங்கள், திருட்டு நகை உலகின் நடுநிசி மனிதர்கள் என சமகாலத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்டிருக்கின்ற உள்வீதிகளில் தனியாக நடமாடும் பெண்களிடம் நகைபறிப்பு, ஆள் நடமாட்டமற்ற இடங்களில் தென்படும் பெண்களிடம் நடக்கும் வழிப்பறிகளை ஞாபகப்படுத்துவதாயும் பறித்தெடுத்த நகைகளை உருக்கித் தங்க பிஸ்கெட்டுகளைத் தயாரிக்கும் ரகசியத் தொழிற்கூடம் என இன்னொரு உலகத்துக்குள்ளும் அழைத்துச் செல்கிறது படம். பெருமளவு நம்பகத்தன்மையுடன் இந்த உலகம் திரையில் விரிகிறது.

நாயகன் சிரிஷ் பாத்திரத்துக்கேற்ற உடல்மொழியையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தியிருக்கிறார். சத்யா அதிக காட்சிகளில் ஆக்கிரமிக்கிறார். ஆசைப்பட்டது கிடைக்காமல் வெறித்தனமாக அல்லாடுவது, கிடைத்த பின்பு பணத்தால் விசிறிக் கொள்வது போன்ற அவரது பாவனைகள் கவனிக்க வைக்கின்றன. பாபி சிம்ஹாவுக்கு ஒப்பீட்டளவில் சிறிய வேடம்தான்.

திருட்டுக்கும் பறிப்புக்கும் இடையிலான வித்தியாசத்தை விளக்கும் காட்சியில் அவரது நடிப்புத் திறன் நன்கு வெளிப்படுகிறது. பாத்திரத்துக்கேற்ற நடிப்பு அவர் உடல் மொழியில் காணப்படுகிறது. ஆயினும் நாயகிக்கான காட்சிகளும் தேவையும் வேலையும் இதில் மிகக் குறைவு. சென்ராயன், நாயகனின் துணைவராக வருகிறார். தமிழ் சினிமாவில் நாயகனின் நண்பர்களின் நிரந்தர வேலையான காமெடியை இதில் முற்றாகத் தவிர்த்து, சீரியஸான பாத்திரத்தைத் தந்திருக்கிறார் இயக்குநர். அதை நன்கு உள்வாங்கி நடித்திருக்கிறார் சென்ராயன்.

இசையமைப்பாளர் ஜோகன் சிவனேஷ் பின்னணி இசையில் மிரட்டுகிறார். கானா பாடலில் கலக்குகிறார். மெல்லிசைப் பாடலில் வருடுகிறார். இன்னொரு பாடலில் ஜாஸ் இசையைத் தெறிக்கவிட்டிருக்கிறார். உதயகுமாரின் ஒளிப்பதிவில் இரவுக் காட்சிகளைப் பதிவுசெய்த விதம் நன்று. காட்சிகளுக்கு ஏற்ப வித்தியாசமாக அமைந்துள்ள சில கோணங்கள் ரசிக்கும்படி இருக்கின்றன.

சங்கிலிப் பறிப்பு வலைப்பின்னலை விரிவாகக் காட்சிப்படுத்துவதில் இயக்குநர் தன் திறமையைக் காட்டியிருக்கிறார். ஆனால், அந்தக் கும்பலை ஒழிக்கும் விடயத்தில் நாயகனை மட்டுமே முன்னிறுத்துவது இதை வழக்கமான தமிழ் சினிமாவாக்கிவிடுகிறது. நாயகனின் தம்பி திருடனாக மாறுவதற்கான காரணங்களில் யதார்த்தமான தன்மை இல்லை. நாயகன் திருட்டு வலைப்பின்னலை ஊடுருவி அழிக்கும் காட்சிகள், திருடர்கள் காவல்துறையினர் கடுமையாகத் தாக்கிய பிண்பும் காவல்துறை எந்த பதில் நடவடிக்கையும் எடுக்காத காட்சிகளிலும் நம்பகத் தன்மைகள் காட்டப்படவில்லை.

சங்கிலி பறிப்பின் நுட்பங்களையும் அதனால் எளிதாகக் கிடைக்கும் பெரும் இலாபங்களையும் இவ்வளவு விரிவாகக் காட்டுவது மோசமான முன்னுதாரணமாக அமைந்து விடுமே என்ற அச்சத்தையும் தோற்றுவிக்கின்றது.

சமகாலத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்டிருக்கின்ற உள்வீதிகளில் தனியாக நடமாடும் பெண்களிடம் நகைபறிப்பு, ஆள் நடமாட்டமற்ற இடங்களில் தென்படும் பெண்களிடம் நடக்கும் வழிப்பறிகளை ஞாபகப்படுத்துவதாயும் பறித்தெடுத்த நகைகளை உருக்கித் தங்க பிஸ்கெட்டுகளைத் தயாரிக்கும் ரகசியத் தொழிற்கூடம் என இன்னொரு உலகத்துக்குள்ளும் அழைத்துச் செல்கிறது படம்.




மது அருந்தும் அப்பாவிடம் சிகரெட்டைக் கேட்டு வாங்கி அவர் முன்னேயே சிகெரட்டைப் புகைக்கிறார் நாயகன். இப்படி அப்பா - மகன் நட்பைக் காட்டும் காட்சிகளிலும் திருப்தியில்லை. போதைப் பழக்கங்களில் மூழ்கிக் கிடக்கும் நிலையில் இதுபோன்ற காட்சிகளைத் தவிர்ப்பது நல்லது எனவும் எண்ணத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட சில குறைகள் இருந்தாலும் புத்தம்புது ரயிலைப் போல அதி வேகத்தில் பயணிக்கிறது மெட்ரோ!

# 'காஷ்மோரா' தீபாவளிக்கு ரிலீஸ்

கார்த்தி, நயன்தாரா, ஶ்ரீதிவ்யா நடிப்பில் உருவாகி வரும் 'காஷ்மோரா' தீபாவளி அன்று திரைக்கு வரும் என்று தயாரிப்புத் தரப்பு அறிவித்திருக்கிறது.

'இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா' படத்தின்இயக்குநர் கோகுல் இயக்கத்தில் கார்த்தி நடிக்கத் தொடங்கிய படம் 'காஷ்மோரா'. நயன்தாரா, ஶ்ரீதிவ்யா, விவேக் உள்ளிட்ட பலர் இதில் நடித்துள்ளனர். இது கார்த்தியின் நடிப்பில் அதிக பொருட்செலவில் உருவாகும் படம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. சந்தோஷ் நாராயணன் இசையமைத்து, ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வரும். இப்படம் நீண்ட நாள்களாக தயாரிப்பில் இருந்து வருகிறது. அதிக அரங்குகள் அமைத்து, கார்த்தி வெவ்வேறு வேடங்களில் நடிப்பதைக் காட்சிப்படுத்தி இருக்கிறார்கள். இந்தப் படத்தின் இறுதிக் காட்சி ஒரு பிரம்மாண்டமான போர்க் காட்சி. இதன் படப்பிடிப்பு முடிவடைந்ததைத் தொடர்ந்து, கிராபிக்ஸ் உள்ளிட்ட இதர பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 80 நிமிடத்திற்கு மேலான காட்சிகளுக்கான கிராபிக்ஸ் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. தமிழ் மற்றும் தெலுங்கில் 'காஷ்மோரா' திரைப்படம் தீபாவளியன்று வெளியாகும் என்று பட வெளியீடு குறித்துத் தயாரிப்பு நிறுவனம் தெரிவித்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியங்களில் 'ரஸம்' 1

ந. ஜெயதாஸ்

'கலைப்படைப்பு" என்பது மனதிற்குப் புலப்படக்கூடிய உணர்வுகளினால் கட்டமைக்கப்படுவதாகும். படைப்போன் அதனை ரசித்தனுபவித்து உருவாக்குகின்றான். இதனால் அந்தப் படைப்புக்களில் "ரஸ வெளிப்பாடு" என்பது முதன்மை பெறுகின்றது. அத்தகைய ரஸ வெளிப்பாட்டை முழுமையாக அறியும் நிலையை அடைந்தவனே "ரசிகன்" எனப்படுகிறான். இத்தகைய கலைப்படைப்புக்களில் ஒன்றியுள்ள ரஸமானது கலை வடிவங்களில் ஒன்றான ஓவியங்களிலும் உள்ளது.

18ஆம், 19ஆம் நூற்றாண்டுகள் வட இந்தியாவில் வைஷ்ணவ சமய எழுச்சி மேலோங்கிய காலம். இந்தக் காலம் வைஷ்ணவ பக்திக் காலம் என இனங்காணப்படுகிறது. இதனால் வைஷ்ணவரின் முதன்மைக் கடவுளாக கிருஷ்ணரும் அவர் தம் காதல் லீலைகளும் இலக்கியங்களாகின. அப்போது "கீதகோவிந்தம்" எனும் கவிதை இலக்கியம் ஜெயதேவரால் வடமொழியிலும் ஒரிய மொழியிலும் படைக்கப்பட்டது. இது ராதை, கிருஷ்ணர் இருவரின் காதலையும் ஊடலையும் கவிதையாகத் தந்த இலக்கியமாகும். இவ்வாறு கீதகோவிந்தம் மூலம் எடுத்துச் செல்லப்பட்ட வைஷ்ணவத்தின் பக்தி நெறி கி.பி1787 களில் காங்ரா பிரதேசத்தில் வாழ்ந்த ஓவியனான ''மனாக்'' என்பவனால் ஓவியமாக்கப்பட்டது. அந்த ஓவியங்கள் வைஷ்ணவ பக்தி நெறியைப் பரப்பும் ஊடகமாக இருந்தன. இந்த ஓவியங்கள் இயற்கையையும் கிருஷ்ணனையும் மையப்படுத்தியவையாக வரையப்பட்டன. இவை ஓவியமாக்கப்பட்ட காலத்தில் மதச் செல்வாக்குக்கு உட்பட்டவையாக வைஷ்ணவ பக்திநெறியைப் பரப்பும் ஊடகமாகச் செயற்பட்டாலும் பின்னர் அவை கலைப் படைப்புக்கள் என்று நோக்கப்பட்டன.

இந்த ஓவியங்களில் ரஸம் எவ்வாறு வெளிப்படுகின்றது? ரஸம் என்றால் என்ன? ரஸம் என்பது இருக்கு வேதத்தில் சோமக் கொடியிலிருந்து பெறப்பட்ட சாறு சோம ரஸம் என்றும் அதர்வ வேதத்தில் அமுதம், ஔஷதம் என்றும், தைத்திரிய உபநிடதம் "பிரமானுபவமே ரஸம்" என் றும் கூறுகின்றன.

ஆனால் அவை கலை ரசனை (ரஸம்) பற்றியவை அல்ல. கலை என்ற நோக்கில் ரஸம் என்பது நாட்டிய சாஸ்திர ஆசிரியர் பரதராலேயே முன்வைக்கப்படுகிறது. "ரஸ்" என்ற சமஸ்கிருதச் சொல்லின் அடியே "ரஸம்" இது "சுவை" என்று பொருள்படும். சுவைத்தல், அனுபவித்தல் என்பது அதன்பொருள். பரதரின் நாட்டியக் கலையில் மட்டுமல்ல ஓவியக் கலையிலும் அனைத்துக் கலைகளிலும் இந்த ரஸ வெளிப்பாடு உள்ளது. இதனால்தான் கலைப்படைப்பை "ரஸவத்" எனவும் அதனை அனுபவிப்போர் ரசிகன் எனவும் கூறப்படுகிறது. அத்தகைய ரஸத்தை வெளிப்படுத்தும் ஊடகமான ஓவியம் தன் காண்பியல் கூறுகளின் மூலமே (கோடு, வர்ணம், பாணி, உருவம், வடிவம் )அதனை ரசிகனுக்கு அளிக்கிறது.

நாட்டிய சாஸ்த்திரத்தின் ஆறாம் அத்தியாயமான ரஸ அத்தியாயத்தில் பரதரால் குறிப்பிடப்படும், சிருங்காரம் என்ற பாவத்தையுடைய ரதி உலகியற் காதலை வெளிப்படுத்தும் ரஸமாகும். இது தெய்வீக நிலையில் காதலை வெளிப்படுத்துமிடத்து அதன் உயர்வு காரணமாக "பகவத் ரதி" என்று அர்த்தப்படுகின்றது. ஆயினும் பரதரது நாட்டிய சாஸ்திரத்தில் அவர் உலகியல் நிலையில் எட்டு ரஸங்களையே குறிப்பிட்டார். சாந்தம், பக்தி என்பன உடலியல் சாராத அலௌகீக ரஸங்கள் என்று அவருக்குப் பின் வந்த கவிதாசிரியர்கள் முன்வைத்தனர். பக்தி என்பது இறைவனை வழிபடுவோருக்கு அவன் மீது ஏற்படும் அன்பு என்பதாகவே அர்த்தப்படுகின்றது. இது தெய்வீக உறவு எனவும் படுகிறது. பரதர் பக்தியை நேரடியாக ரஸமாகவோ பாவமாகவோ குறிப்பிடவில்லை. எனினும் அவர் ஸ்தாயிபாவங்களுள் முதலில் கூறும் ரதி (அன்பு, காதல்) இறையன்பாக நோக்கும்போது பக்தி என்று குறிப்பிடுகின்றார். இது "பகவத் ரதி" எனும் ஸ்தாயி பாவத்தையுடையது. இதனாலேயே பக்தி ஒரு ரஸமாகவும் கொள்ளப்படுகின்றது. "பஜ்" என்ற அடிச்சொல்லில் இருந்து தோன்றிய பக்தி எனும் சொல் "பகிர்ந்து கொள்ளல்" என்று பொருள் தரும். இதுவே வைஷ்ணவ பக்தி நெறியிலும் செல்வாக்குப் பெறுகின்றது. இந்த பக்தி ஆறு வகைப்படும். அதில் உயர்ந்ததாகக் கருதப்படும் மாதுரிய பக்தியின் பாவமாக மதுரபாவம் விளங்குகின்றது. இது காதலன்-காதலி உறவு மூலம் வெளிப்படுவதாகும் இத்தகைய பக்தியையே அனுபவிக்கத்தக்க சுவையுடன் கீதகோவிந்த ஓவியன் மனாக் ஓவியமாக்கியுள்ளான். இதில் காதல் கதாபாத்திரங்களாகக் கிருஷ்ணர், ராதை சித்திரிக்கப்படுகின்றனர். ராதை எனும் மானுட ஜீவன் (ஜீவாத்மா) கிருஷ்ணர் எனும் தெய்வ அவதாரத்தின் (பரமாத்மா) மீது செலுத்தும் அளவு கடந்த அன்பு காதலாக வெளிப்பட்டு தெய்வீகக் காதல் என்ற பக்தியை உணர்த்துகின்றது. இது மாதுரிய பக்தியாகும்.



கீதகோவிந்தத்தின் 18 ஆம் நூற்றாண்டின் கடைசிப்பகுதிக்குரிய இந்த ஓவியம் ராதை தன் காதலனுக்கு தூதனுப்பும் காட்சியை வெளிப்படுத்துகின்றது. ஓவியத்தின் இடப்பக்கத்தில் மரமொன்றின் கீழே ராதை அவளுடைய கடவுளுக்கு மாலை ஒன்றுடன் காத்திருக்கின்றாள். அவளுக்கு எதிரே வலப்பக்கத்தில் நின்ற நிலையில் தோழி ஒருத்தி கிருஷ்ணரை அழைக்கும் விதத்தில் கைகளால் சைகை மூலம் அவரை அழைப்பதாயும் அவளின் எதிரே கருநீல மேனியான கிருஷ்ணன் காலின் மேலே கைகளை ஊன்றிய வண்ணம் உட்கார்ந்து இருப்பதையும் இந்த ஓவியம் காட்சியாக்குகின்றது. இது ராதையால் கிருஷ்ணருக்கு அனுப்பப்பட்ட தூது என்பதற்கு, அவள் நாணத்துடன் முகத்தைத் திருப்பிய வண்ணம் இருப்பதும் தோழி கிருஷ்ணரருகே சென்று அவரை அழைப்பது போன்ற சைகைகளும் ஆதரமாகின்றன.

ராதை மலர் மாலையுடன் காத்திருக்கின்றாள். அது தெளிந்த சாம்பல் நிறமேகங்களும் நட்சத்திரங்களுடனும் கூடிய இரவுப் பொழுது. இந்தக் காதல் சித்திரிப்பானது பரதர் கூறும் சிருங்கார ரஸத்துள் "சம்போக" (கலவி) சிருங்காரத்தின் முதற்கட்ட நிலையாகும். "சம்போக" சிருங்காரத்துக்கு பரதர் இளவேனில் முதலான பருவங்கள், மலர்மாலைகள், காமத்தைத் தூண்டும் மிகவும் வாசனைமிக்க பொருள்கள், ஆடை அணிகலன்கள், விதூஷகன் முதலான அன்பர்களின் சேர்க்கை, இசை, நடனம் முதலிய கலைகள், சிறந்த உப்பரிகைகளில் வாசம் செய்தல், பூங்காவில் உலாவுதல், மனத்தில் கிளர்ச்சியைத் தூண்டும் சித்திரங்கள், நீரில் மூழ்கி விளையாடுதல் போன்றவற்றை விபாவங்களாக (காரணம்) குறிப்பிடுகின்றார். இது பக்தியின் மூலம் இந்த ஓவியத்தில் சுவை பெறுமிடத்து அவள் (ராதை) தன் இறைவனுக்காக பூமாலையுடன் காத்திருக்கிறாள். அது இயற்கையால் சூழப்பட்ட காட்டுப்பகுதி, இரவின் ஒரு பொழுதாகக் குறிப்பிட முடியும். இத்தகைய சம்போக சிருங்காரத்துள் பரதர் குறிப்பிடும் கண்பார்வையை அழகுறச் செலுத்துதல், கவினுறப் புருவங்களை மேல் அசைத்தல், கடைக் கண் நோக்கைச் செலுத்துதல், மென்மையும் நளினமுமான அங்கஹாரங்களைப் பிரயோகம் செய்தல், இனிய சொற்களுடன் கூடிய உரையாடல் முதலியவை வெளிப்படுமாறு இங்கு ராதை தோற்றமளிக்கின்றாள். இதன் மூலம் உலகியற் காதலுக்கான சிருங்காரம் தெய்வீகத் தன்மையுடன் வெளிப்படுகின்றது. இறைவன் மீது செலுத்தப்படும் உயர்ந்த தன்மையான தெய்வீகக் காதலை வெளிப்படுத்த ராதை அனுப்பும் கிருஷ்ணருக்கான தூதாக இந்த ஓவியத்தைக் கொள்ளமுடியும்.

(தொடரும்....)



## படு குழிக்குள் தள்ளிவிடாதீர்

வைத்தியர் என்றாலும்
வக்கீல் என்றாலும்
எஞ்சினியர் என்றாலும்
வல்லுநர் என்றாலும்
எல்லோரும் உருவாகியது
ஆசிரியரால் தான்
ஆசிரியர் இல்லாமல்
அறிவு பெருகிடாது
குற்றம் செய்தவர்
தண்டனை பெறுவார்.
ஓரிருவர் குற்றமிழைத்தால்
ஒட்டுமெத்த ஆசான்களும்
பித்தர்களா என்ன?
வார்த்தைகள் வாள் போன்றது
ஆசான்களை எல்லோரும்
குருடர்கள் மடையர்கள்
என்கிறார்கள்? ஆம்,
நீங்கள் சிறப்பெய்த
அவர்கள் தங்களைப் பாராமல்
உங்கள் உயர்வுக்காய்
தங்களை இழந்து
இன்று உங்களால்
அவர்கள் குருடர்கள்
மடையர்கள் ஆனார்கள்.
நானும் நீயும் இன்று
உயர்ந்துள்ளோம் என்றால்
அதுதான் ஆசானின்
வழிப்படுத்தல்
மதிக்கத் தெரியாதவரும்
மடையர்கள் என்பவரும்
வாழத்தகுதி அற்றவர்கள்
உரிமைகள் பற்றிப் பேசலாம்
உரிய முறையில்
அநியாயப் பழிகளைச் சுமத்தி
ஆர்ப்பாட்டங்கள் செய்து.
நாம் நேர்மையாளராய்
நடிக்கலாம், ஆனால்
ஆசானைக் குறிவைத்து
நம் சமுதாயத்தை
(மாணவர்களை)
அறிவற்ற படுகுழிக்குள்
தள்ளிவிட யாரும்
நினைக்காதீர்கள்
"குரு நிந்தை கெடும் சிந்தை"

*கவிதைப் பித்தன்*
*அன்ரனி பீற்றர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனைக்குட்பட மறுக்கும் பாலியல் குற்றங்கள்!



■ த.நீதிராஜன்

"பயங்கரவாதிகளைத் தேடுவதாகச் சொல்லிக்கொண்டு எனது வீட்டுக்குள் இராணுவத்தினர் வந்தார்கள். என்னையும் என் எட்டு வயது மகளையும் பாலியல் வல்லுறவு செய்தார்கள்" என்றவாறு தொடர்கின்றன பல அவலக் குரல்கள். இவ்வாறு பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளும் அவை தண்டனைக்குட்படுத் தப்படாத நிலையும் பங்காளாதேஷ், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஐந்து நாடுகளிலும் அதி கரித்துக் காணப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை இவ்வாறான பாலியல் துன்புறுத்தல்கள் இருவேறு பாதைகளில் நகர்கின்றன. உள்நாட்டுப்போரில் இராணுவத்தினர் புரிந்த பெண்கள் மீதான கொடூரங்களில் ஒன்று பாடசாலை மாணவிகள், பெண்கள் மீதான காட்டுமிராண்டி மனிதர்களின் அத்துமீறல்கள் மற்றது இலங்கையில், 26 ஆண்டுகளாக நடந்த உள்நாட்டுப்போர்க் காலத்திலும், இறுதிப்போரின் போதும் ஆயிரக்கணக்கான பெண்கள் துன்புறுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். இந்தக் குற்றங்கள் தீர்வு இல்லாமல் இன்றும் நிலுவையில் உள்ளன. போரின் முடிவில் 90,000 பெண்கள் விதவைகளாகியுள்ளனர் என்றும், பெண் தலைமையிலான 80,000 குடும்பங்கள் ஆதரவற்று வறுமையில் உள்ளன என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

இங்கே பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண் உடல்கள் தேசியவாதப் பரப்புரையின் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், அந்தப் பெண்களுக்கு நீதி இன்றுவரை கிடைக்கவில்லை.

ஆண்களும், பெண்களும் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஆனால், அந்த ஆண் உடல்கள் தமிழ்த் தேசியத்தின் பரப்புரைக்குப் பயன்படுத்தப்படவில்லை. இது பெண்கள் மீது திணிக்கப்படும் மற்றொரு வன்முறை. பார்வை மாற வேண்டும் என்பதைக் காட்டுகின்றது.

பெரும்பாலும் நீதித்துறை, சாட்சியங்களின் அடிப்படையில்தான் தீர்ப்பு வழங்குகிறது. பாலியல் வல்லுறவுக்குட்படுத்திவிட்டு பிறப்புறுப்பில் வெடிகுண்டு வைத்தும் துப்பாக்கியால் சுட்டும் கொலைகள் நடந்துள்ளன. அந்த உடல்கள் மீது நடத்தப்பட்ட பாலியல் குற்றங்களுக்கு என்ன வகையான சாட்சியங்களை வைக்க முடியும்? இதுதான் பாலியல் குற்றம் என்று சட்டம் செய்து வைத்துள்ள வரையறைகளுக்கு அப்பால் எத்தனையோ பரிமா ணங்களில் இறுதிப் போரின்போது பாலியல் துன்புறுத்தலின் பின்னரான கொலைகள் இடம்பெற்றுள்ளன.

இராணுவத்தினரின் பெண்கள் மீதான பாலியல் கொடுமைகள் திட்டமிட்ட செயல்களாக இருக்கின்றன. இத்தகைய பெருமளவிலான குற்றங்கள் தண்டிக்கப்படாமலேயே போகின்றன. அவற்றைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கவேண்டும் என்பதோ அவற்றுக்கான உடனடித் தீர்வுகள் என்பதோ நீதித் துறையால் இதுவரை முடிவு காணப்படாமல் கிடப்பில் போடப்பட்டு உள்ளது. குடும்பத்துக்குள்ளே நடக்கின்ற பாலியல் வன்கொடுமைகள் பொதுச் சமூகத்தில் உருவாகும் திட்டமிட்ட, திட்டமிடாத இனங்காணப்பட்ட பாலியல் துன்புறுத்தல்களும் நீடித்துச் செல்வதோடு அவற்றுக்கான தீர்வுகள் இழுத்தடிக்கப்படுகின்றன. புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலைவழக்கு இதற்கு நல்ல உதாரணம். வவுனியா மாணவி பிரணவியின் வழக்கும் அத்தகையதே.



இலங்கையில் மட்டுமல்ல தெற்காசிய நாடுகளிலும் இன்றுவரை பாலியல் வன்முறைகளுக்குக் காரணமான குற்றவாளிகள் தண்டிக்கப்பட மறுக்கும் நிலையே தொடர்ந்து வருகின்றது. 1971இல் வங்கதேச சுதந்திரப் போரின்போதும் 1947இல் இந்தியப் பிரிவினையின் போது 2 லட்சத்திலிருந்து 4 லட்ச பேர்வரை பாலியல் வன் முறைக் ஆளானதாக மதிப் பிடப்பட்டது பெரும்பாலான குற்றங்களி எவரும் தண்டிக்கப்படவில்லை அதில் தண்டிக்கப்பட வேண்டி வர்கள் தற்போது உயிருட இருக்கிறார்களா என்பதே ச தேகமாகவுள்ளது.

குற்றஞ் செய்பவர்கள் கண் பிடிக்கப்பட்டு உடனடியாக அ களுக்குரிய தண்டனைகள் வழ கப்படும்போதுதான் குற்ற செய்பவர்களும், இவ்வாறான கொடூரங்களும் நாடுகளிலிருந்து நீங்கும். அவ் றில்லாமல் நீளும் வழக்குகளாலும், ஒத்தி வைக்கப்படும் தீர்ப்புகளாலும் குற்றவா களும் குற்றச்செயல்களும் பெருகிக்கொண்டே செல்லுமென்பதில் ஐயமில்லை

## சமூகம் ஒதுக்கிய திறமைப் பெண்



கடந்த ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த ஹலீ சோரென்சன் தன்னுடைய 18ஆவது பிறந்ததின விழாவுக்கு, வகுப்புத் தோழர்கள் பலரை அழைத்திருந்தாள். அவளது பெற்றோர்கள் வீட்டை பலூன்களாலும் வண்ணக் கடதாசிகளாலும் அலங்கரித்திருந்தனர். வரவிருக்கும் விருந்தினர்களுக்கு உணவும் தயாரானது. கேக் வெட்டுவதற்குத் தயாராகிய ஹலீ தன் நண்பர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். ஆனால் ஒருவர்கூட வரவில்லை. தனியாக கேக் முன்னால் அமர்ந்து, கண்ணீர் விட்டாள். இந்தக் காட்சி ஹலீயின் பெற்றோரைக் கவலைக்குள்ளாக்கியது. "எங்கள் மகள் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவள். அவளுக்கு 18 வயது ஆனாலும் 6 வயதுக் குழந்தையின் மன நிலையில்தான் இருக்கிறாள். பிறந்தநாள் விழாவுக்குத் தன் நண்பர்களில் ஒருவர்கூட வராதது அவளை மிகவும் புண்படுத்திவிட்டது. இன்னொரு முறை ஹலீக்கு இந்தத் துன்பம் வரக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம். இனிவரும் பிறந்த தினக் கொண்டாட்டங்களுக்கு எவரையும் அழைக்கப் போவதில்லை" என்றனர்.

இந்த விடயத்தைக் கேள்விப்பட்ட ஹலீயின் உறவினரில் ஒருவர், ஹலீ தனியாக கேக் முன்னால் அமர்ந்திருந்த ஒளிப்படத்தை சமூக வலைத்தளம் ஒன்றில் பகிர்ந்தார். "ஹலீ அழகான, புத்திசாலியான பெண். ஓட்டப் பந்தய வீராங்கனையும்கூட. விசேட தேவையுடையோருக்கான ஒலிம்பிக் போட்டிகளில் சம்பியன் பெற்றவள். நன்றாகப் படிப்பவள். நான் இப்படி ஒரு பெண்ணின் உறவினராயுள்ளேன் எனச் சொல்லிக் கொள்வதில் பெருமைப் படுகிறேன்" என்றும் அவளது பிறந்ததினக் கொண்டாட்டத்துக்கு அழைத்திருந்தவர்கள் எவரும் வராதமையை "குறைபாடு அவளிடம் இல்லை. இந்தச் சமூகத்திடம்தான் இருக்கிறது" என்றும் அந்தப் பதிவில் குறிப்பிட்டிருந்தார். அவரது இந்தப் பதிவு 48 மணி நேரங்களில் ஒருலட்சத்து 20 ஆயிரம் தடவைகள் பகிரப் பட்டிருக்கிறது. அப்பொழுது உலகின் பல பகுதிகளிலுமிருந்து ஆயிரக்கணக்கான வாழ்த்து அட்டைகள், பரிசுப் பொருள்கள் ஹலீயின் வீட்டுக்கு வந்து குவிந்தன. இந்த ஆண்டு ஹலீயின் பிறந்ததினத்தன்று அவளது மின்னஞ்சல் வாழ்த்துக்களால் நிரம்பி வழிகிறது. ஹலீ வாழ்த்து அட்டைகளைப் பிரித்தபடியே இருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்குத் தன்னம்பிக்கை வேண்டும்

பெரும்பாலும் தன்னம்பிக்கை இழக்கும் பெண்கள் உறவிலும், வேலையிலும், வளர்ச்சியிலும் சரிவையே சந்திக்கின்றனர். எனவே உங்களுக்குள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவேண்டியது அவசி யம்.

கறுப்பாக இருப்பினும் சரி, வெள்ளையாக இருப்பி னும் சரி, முகம் வடிவாக இருப்பினும் சரி, இல்லாவிடிலும் சரி நீங்கள் அழகுதான் என்பதை மனதால் நம்புங்கள். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள உதவும் முதல் கருவி உங்களை நீங்களே உயர்வாக எண்ணுவதுதான்.

எந்தக் காரணம் கொண்டும், எந்த செயலில் ஈடுபடும்போதும், தொடங்கும் போதும் எதிர்மறையாக எண்ண வேண்டாம். இது உங்கள் தன்னம்பிக்கையைக் கெடுக்கும் செயலாகும். எனவே, எப்போதும் நேர்மறையாக எண்ணத் தொடங்குங்கள். தோற்றாலும்கூட அடுத்த முயற்சியில் கண்டிப்பாக வெற்றியடைய முடியும் என நம்புங்கள். மற்றவரிடம் பண்பாக, அன்பாக நடந்துக் கொள்ளுங்கள். கனிவாகப் பேசுங்கள். மற்றவர்களுக்கு உதவுங்கள். முடிந்த வரை வார்த்தை அளவிலாவது மனதுக்கு ஆறுதலாக பேசுங்கள். சமூகத்தில் உங்கள் பெயர் வளர, வளர உங்கள் தன்னம்பிக்கையும் வளரும்.

உங்களைப் பற்றி நீங்களாக தற்பெருமையாக பேசவேண்டாம். மேலும், மற்றவர்கள் புகழ்ந்தாலும் வானுயரத்துக்குச் சென்றுவிட வேண்டாம். தன்னடக்கம் உங்கள் தன்னம்பிக்கையை வளர்க்கும்.

உங்களது திட்டங்கள், முயற்சி, செயற்பாடுகள் என அனைத்தையும் தொலைநோக்குப் பார்வையில் காணத் துவங்குங்கள். இது நீங்கள் தோல்வியடையாமல் இருக்க உதவும்.

உங்கள் மீதும், உங்களைச் சுற்றி இருக்கும் உறவினர், நட்பு வட்டாரத்தின் மீதும் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்காமல், உங்கள் அருகில் இருப்பவருக்கு ஏதேனும் உதவி வேண்டும் எனில் தயங்காமல் நீங்களாக சென்று உதவுங்கள்.

எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதை எடுத்தோம், கவிழ்த்தோம் என்றில்லாமல், எதையும் திட்டமிட்டு செய்ய தொடங்குங்கள். ஒரு தடவைக்குப் பல தடவை யோசித்து களத்தில் இறங்குங்கள். மேலும், பலரிடம் ஆலோசனை பெற்று நீங்களாக ஓர் தீர்க்கமான முடிவை எடுக்க கற்றுக் கொள்ளுங்கள்.

தோல்வியும் சரி, வெற்றியும் சரி இரண்டுமே நிலையற்றவை தான். மேகத்தை போல அவை உங்கள் வாழ்க்கையில் கடந்து கொண்டே இருக்கும். எனவே, எதை கண்டும் அச்சம் கொள்ள வேண்டாம் பெண்களே.



# குடும்பம் பெண்ணின் கையில்....!



பொதுவாகவே திருமணம் என்னும் பந்தத்தின் மூலம் இருவர் மட்டும் இணைவதில்லை. இரண்டு குடும்பங்களுமே இணைகின்றன. ஒவ்வொரு குடும்பமும் ஒரு உலகம். இரண்டு குடும்பங்கள் ஒன்று போல இருக்க முடியாது. எனவே, ஒரு குடும்பத்தை மற்றொரு குடும்பத்தோடு ஒப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக பெண்கள் தான் இந்த விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும்.

அதிகமாக ஆண்கள் இன்னொரு வீட்டுக்கு போவதில்லை. பெண்கள் இதனைத் தவிர்க்க முடியாது. திருமணத்தின் பின்னர் அவளுக்கு இன்னொரு புது வீடு கிடைத்து விடும். அங்குள்ள குடும்பத்தை தனது குடும்பம் போல் பார்க்க வேண்டிய கட்டாயம் உள்ளது. ஒரு திருமணம் தோற்கும் போது இரண்டு குடும்பங்களே வருத்தப்படுகின்றன. ஆனால் அது வெல்லும் போது பல தலைமுறைகள் வாழையடி வாழையாக உருவாகின்றன.

வாழ்க்கையில் நாம் மகிழ்ச்சியாக வாழ்வது நமக்குக் கிடைக்கும் பொருள்களை அடிப்படையாக வைத்து இல்லை. புரிதலால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. இல்லறம் நல்லறமாக அமைந்துவிட்டால் நாம் ஜெகத்தையே ஜெயித்துவிடலாம்.

ஒரு திருமணம் தோற்கும் போது, அதனால், இரண்டு பேர் வாழ்க்கையை இழக்கின்றனர். அல்லது தாற்காலிகமாக வாழ்க்கை கேள்விக்குறியாகிறது. மண வாழ்வு முறியும் தம்பதிகளுக்குக் குழந்தை இருப்பின், அது தாய் அல்லது தந்தையின் அன்பை இழக்கும் மிகப்பெரிய கொடுமை நேரிடுகிறது. எனவே, புரிதல் எனும் மிகப்பெரிய விடயத்தை தம்பதிகள் கடைபிடித்தால் வாழ்க்கை எனும் வாகனத்தை மகிழ்ச்சியோடு ஓட்டலாம்.

சில இடங்களில் பணத்தையும் சொத்தையும் பார்த்து நடக்கும் சில திருமணங்களும் உண்டு. அங்கு பணம் இருக்கும் வரை உறவும் இருக்கும். ஆனால் அவர்களது இல்லறத்தில் ஒரு போதும் நல்லறம் காணமுடியாது.

# பெண்ணே சோர்வடையாதே...



பொதுவாக தோல்வி என்பது எல்லா வயதினரும் சந்திக்கும் ஒரு துக்கமான விடயமாகும்.

ஆனால், இதில் இளம் வயதில், பெண்கள் சந்திக்கும் காதல் தோல்வி அல்லது திருமண முறிவு என்பது சிலரது வாழ்க்கையையே புரட்டிப் போட்டு விடுகிறது.

காதல் தோல்வி அல்லது திருமண முறிவு என்ற இரண்டையும் இங்கே ஒரு சேர பார்க்கலாம். அதாவது, காதலிக்கும் நபர் நம்மை விட்டு விலகிச் செல்லும் போது ஏற்படும் துக்கம் தாங்கிக் கொள்ள இயலாததுதான். ஆனால், அதில் இருந்து வெளியே வந்து, அதனைத் தாண்டியும் உலகம் உள்ளது என்று வாழ்ந்து காட்டி பலரும் நிரூபித்திருக்கிறார்கள். வாழ்க்கையில் நமது துணை என்று மிகவும் நம்பிய ஒருவர் நம்மை கைவிடும் போது, வாழ்க்கையே இருண்டு போனதாக எண்ணி, அதற்குள்ளே சுற்றிச் சுற்றி வராமல், அதில் இருந்து வெளியே வரும் வழியைத்தான் ஒருவர் தேட வேண்டும்.

அதற்காக அழாமல், ஆறுதல் தேடாமல், அதனை உள்ளத்தில் வைத்து மறைத்து, பார்ப்பவர்களுக்கு தன்னம்பிக்கையோடு இருப்பதாகத் தோன்றி நடிக்க வேண்டாம். உங்களுக்கு எந்த வகையில் உங்களது துக்கத்தை வெளிப் படுத்த வேண்டும் என்று தோன்றுகிறதோ அந்த வகையில் அதனை வெளிப் படுத்துங்கள். அழுங்கள், தோழி அல்லது தோழனிடம் கூறி ஆறுதல் தேடுங்கள்.

உரிய நபரை திட்டுங்கள். ஏதேனும் ஒரு வகையில் உங்களது துக்கத்தை வெளியே கொட்டிவிடுங்கள். பிறகு நம்மைப் பிரிந்து சென்றவரை மறக்க வேண்டும் என்றால், அவரது நினைவை ஏற்படுத்தும் பொருள்களைத் தூக்கி எறியுங்கள்.வாழ்க்கையே அவர் தான் என்று எண்ணியிருந்த நாள்களை நினைப்பதை விட்டுவிட்டு, வாழ்க்கையில் புதிதாக என்ன வெல்லாம் செய்யலாம் என்று நினைத்துப் பாருங்கள். காதலால் அல்லது திருமணத்தால் நீங்கள் விட்டப் பணியை அல்லது படிப்பை மீண்டும் தொடர முடியுமா என்பதை பற்றி யோசியுங்கள். பார்ப்பவர்களிடம் எல்லாம் பழைய சம்பவத்தைப் பற்றி பேசி மீண்டும் மீண்டும் அந்தச் சோகத் துக்குள் மூழ்க வேண்டாம். இது தாற்காலிகமாக உங்களுக்கு நிம்மதியை அளித்தாலும், இதுவே தொடர்ந்தால் நீங்கள் பலவீனமாகி விடுவீர்கள்.எப்போதும் யாருடனாவது இருக்குமாறு பார்த்துக் கொள் ளுங்கள். தனியாக இருப்பதை பெரும்பாலும் தவிர்த்து விடுங்கள். உங்களை விட்டுச் சென்றவர் பொறாமைப்படும் அளவுக்கு வாழ்ந்து காண்பிக்க வேண்டும் என்று வைராக்கியம் கொள்ளுங்கள். நீங்கள் மகிழ்ச்சியாகவும், சாதனை மனிதராகவும் வாழ்வது தான் அவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் சரியான பதிலாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுத்தறிவு இல்லாத சிஷ்யனும் அவனால் பாதிக்கப்பட்ட சாமியாரும்



ஒரு சாமியார் அன்று தமது குடியிருப்பை வெளியூருக்கு மாற்றினார்.
தனக்குச் சொந்தமான பண்டங்கள், பாத்திரங்களையெல்லாம் ஒரு மாட்டு வண்டியில் ஏற்றிய பின் தன் சீஷ்யனை நோக்கி, "சிஷ்யா! நான் முன்னால் வண்டியில் அமர்ந்து வண்டியை ஓட்டிச் செல்கிறேன். நீ பின்னால் நமது பண்டங்கள் ஏதாவது விழுகிறதா என்று பார்த்தவாறு நடந்துவா"- என்றார்.
அவ்வாறே செய்வதாகக் கூறிவிட்டு சிஷ்யன் வண்டியின் பின்னால் நடந்து வந்தான்.
வண்டியில் ஏற்றப்பட்ட பண்டங்களில் சில வழி நெடுக விழுந்து கொண்டே வந்தன.
சிஷ்யன் அவற்றை எடுத்து வண்டியில் போடவில்லை.
கொஞ்ச தூரம் சென்றதும் சாமியார் வண்டியை நிறுத்தி, "சிஷ்யா" என அழைத்தார்.
சிஷ்யன் ஓடி வந்து கும்பிட்டு நின்றான்.
"பின்னால் ஏதாவது பண்டங்கள் வண்டியிலிருந்து விழுந்தனவா?" என்று சாமியார் கேட்டார்.
"ஆமாம் குருவே" என்றான் சிஷ்யன்.
"விழுந்த சாமான்களை எடுத்து வண்டியில் போட்டாய் அல்லவா?" என்று சாமியார் கேட்டார்.
"இல்லை குருவே" என்றான் சிஷ்யன்.
"ஏன் எடுத்துப் போடவில்லை?" என்று சாமியார் கோபத்துடன் கேட்டார்.
"சாமான்கள் விழுகின்றனவா என்று பார்த்துக் கொண்டு வருமாறுதான் தாங்கள் ஆணையிட்டீர்கள். விழுந்த சாமான்களை எடுத்து வண்டியில் போடுமாறு கூறிவில்லையே!" என்று சிஷ்யன் பதிலளித்தான்.
"முட்டாளே! இனிமேல் எது கீழே விழுந்தாலும் பத்திரமாக எடுத்துக் கொண்டு வா என்றார் - சாமியார்.
" சரி குருதேவா! தாங்கள் சொன்ன மாதிரியே செய்கிறேன்" என்றான் சிஷ்யன்.
கொஞ்ச தூரம் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்ற சாமியார் வண்டியை நிறுத்தி விட்டு சிஷ்யனை அழைத்தார்.
சிஷ்யன் வந்து வணங்கி நின்றான்.
"ஏதாவது கீழே விருந்ததா?" என்று சாமியார் கேட்டார்.
"விழுந்தது குருதேவா" என்று கூறினான் சிஷ்யன்.
" என்ன செய்தாய்?" என்று சாமியார் கேட்டார்.
"பத்திரமாக எடுத்து பாதுகாப்பாக வைத்திருக்கிறேன்" என்றான் சிஷ்யன்.
"என்ன பொருள் அது" என்று சாமியார் கேட்டார்.
"தாங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு சிஷ்யன் வண்டிக்குப் பின்புறம் சென்று ஒரு துணி மூட்டையை எடுத்து வந்து சாமியாரிடம் கொடுத்தான். சாமியார் மூட்டையைப் பிரித்துப் பார்த்தார்.
அதில் மாடு போட்ட சாணம் இருந்தது.
"என்ன இது? இதை ஏன் இப்படிப் பத்திரப் படுத்தி வைத்திருக்கிறாய் என்று சாமியார் சினம் பொங்கக் கேட்டார்.
"நான் மிகவும் கவனத்தோடு பார்த்துக் கொண்டு வந்தேன். வேறு எந்தப் பண்டமும் கீழே வீழவில்லை. வண்டி மாடு போட்ட சாணம் தான் கீழே விழுந்தது. ஆகவே நீங்கள் சொன்ன மாதிரி கீழே விழுந்ததைப் பத்திரமாக எடுத்து வைத்தேன்" என்று சிஷ்யன் பணிவோடு கூறினான்.
"மடையனே! உன் மூளையை இந்த ஜென்மத்தில் சரிப்படுத்த முடியாது போலிருக்கிறதே" என்று சாமியார் தமது தலையில் அடித்துக் கொண்டார்.



## கடல் ராணி

முடிவே இல்லாக் கடல்ராணி
முத்தம் சிந்திட வருவாய் நீ!
கரையில் நின்று அழைக்கின்றேன்!
காலை நீரில் நனைக்கின்றேன்

நேரிய செல்வம் கொண்டவளே!
நிலத்துக்கும் காற்றைத் தருபவளே!
சூரியன் உன்னிடம் உதிக்கின்றான்!
சுற்றியே உன்னில் குதிக்கின்றான்!

கப்பலைத் தாங்கிக் கொள்கின்றாய்!
அப்பால் எங்கோ செல்கின்றாய்!
அலையாய்ப் புரண்டு வருகின்றாய்!
ஆத்திரம் வந்தால் குதிக்கின்றாய்!

அமைதி கொண்டு இருந்திடுவாய்!
அழிக்கும் எண்ணம் மறந்திடுவாய்!
சமையல் உப்பைத் தந்திடுவாய்!
சரியாய்க் கடலே நடந்திடுவாய்!

உன்னிடம் இருக்கும் பொருள் எல்லாம்
உலகம் உயர்ந்திடத் தருவாயே!
கொண்டல் குவித்திடு மழையாக
கொட்டிட இங்கு வருவாயே!





கி.வாகினி,
தரம் – 3 சி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



[illegible],
மு/அனிஞ்சயன்குளம் அ.த.க.பாடசாலை.

## வரலாற்றில் இன்றைய தினம்



1947 – முஹமட் அலி ஜின்னா பாகிஸ்தானின் முதலாவது ஆளுநர் நாயகமாக பிரித்தானிய பிரதமர் கிளமன்ற் அட்லீயால் விதந்துரைக்கப்பட்டார்.
1962 – உலகின் முதலாவது தொடர்பாடல் செயற்கைக் கோள் 'ரெல்ஸ்ரார்' புவியின் சுற்றுப்பாதையில் விடப்பட்டது.
1973 – பொதுநலவாய அமைப்பினுள் பூரண சுதந்திரத்தை பகாமாஸ் பெற்றுக்கொண்டது.
1973 – பங்காளதேஷை அங்கீகரிக்கும் தீர்மானத்தை பாகிஸ்தான் தேசிய அசெம்பிளி நிறைவேற்றியது.
1976 – லுவாண்டா விசாரணையை அடுத்து, அங்கோலாவில் ஓர் அமெரிக்க மற்றும் மூன்று பிரித்தானிய ஆயுததாரிகளுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.
1978 – இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் மொறித்தானிய ஜனாதிபதி மொஹ்டார் ஒவுல்ட் டாட்டா பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.
1980 – அலெக்ஸாண்ரியா மாளிகை இரண்டாவது தடவையாகவும் எரிந்தழிந்தது.
1986 – 11 தமிழர்களை ஊர்காவற் படை சுட்டுக் கொன்றது. முள்ளிப் பொத்தானையிலுள்ள குடியேற்றத் திட்டத்தில் சம்பவம்.
1991 – நிறபாகுபாடு முடிவுக்கு வந்ததையடுத்து தென் ஆபிரிக்கா கிரிக்கெட் அணி மீண்டும் சர்வதேச கிரிக்கெட் சபையில் அனுமதிக்கப்பட்டது.
1991 – ரஷ்யாவின் முதலாவது தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியானார் போரிஸ் ஜெல்ற்சின்.
1992 – பனாமா முன்னாள் அதிபர் மனுவல் நொறிகாவுக்கு மியாமியில் போதை மற்றும் ஊழல் குற்றச்சாட்டில் 40 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.
1998 – முன்னாள் மதகுரு றுடோல்ப் கோஸ் ஒன்பது சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியமைக்காக டல்லாஸ் பங்குச் சபை 23.4 மில்லியன் டொலர்களை இழப்பீடாக வழங்கச் சம்மதித்தது.
2002 – பல்லாயிரக் கணக்கான மக்கள் தென்மராட்சிக்கு இடம் பெயர்வு.
2002 – நவாலிக் குண்டுத் தாக்குதல்: படையினர் சார்பில் மறுப்புத் தெரிவித்தார். பிரிகேடியர் சரத் முனசிங்க.
2002 – கிழக்குக் கல்வரம் குறித்து நாடாளுமன்றில் அமளி துமளி.
2005 – கூட்டமைப்பை எதிர்த்து ஜே.வி.பி. பாத யாத்திரை.
2011 – ரஷ்யப் பயணிகள் கப்பல் 'பல்கேரியா' வோல்கா ஆற்றில் மூழ்கி 122 பேர் உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறால் குடமிளகாய் வறுவல்



### தேவையான பொருள்கள்

இறால் 1 கிலோ
பச்சை குடமிளகாய் 2
சிவப்பு குடமிளகாய் 1
வெங்காயம் 4
உள்ளி 6 துண்டுகள்
மஞ்சள்தூள் அரைத்தேக்கரண்டி
மிளகுத்தூள் கால் தேக்கரண்டி
சீரகம் அரைத்தேக்கரண்டி
கறிவேப்பிலை ஒரு கொத்து
மிளகாய்த்தூள் 2 தேக்கரண்டி
உப்புத்தூள் 2 தேக்கரண்டி
எண்ணெய் அரைக்கப்

### செய்முறை



இறாலைச் சுத்தம் செய்து நன்கு கழுவிக் கொண்டு தண்ணீரைப் பிழிந்து கொள்ளவேண்டும். வெங்காயம், குடமிளகாயை நறுக்கி வைக்கவேண்டும். உள்ளியை நசுக்கி வைக்கவேண்டும். அடி கனமான சட்டியில் ஒரு தேக்கரண்டி எண்ணெயை ஊற்றி இறாலைப் போட்டு நன்கு வதக்கி ஒரு தட்டில் கொட்டி வைக்கவேண்டும். பிறகு மீதியுள்ள எண்ணெயை ஊற்றி உள்ளியை முதலில் போட்டு தொடர்ந்து வெங்காயத்தை போட்டு நன்கு வதக்கவேண்டும். பிறகு குடமிளகாயை கொட்டி கறிவேப்பிலையை போட்டு வதக்கவேண்டும். பிறகு எல்லாத்தூளையும் போட்டு நன்கு கிளறி விடவேண்டும். குடமிளகாய் பாதி வேக்காடாக இருக்கும் பொழுது, இறாலைக் கொட்டி எல்லாவற்றையும் சேர்த்து கலக்கி விடவேண்டும். பிறகு ஐந்து நிமிடம் அடுப்பில் வைத்திருந்து நன்கு கிளறி விட்டு இறக்கி சூடாக பரிமாறவேண்டும்.

# பாதாம் பருப்பு பேஷியல்

### தேவையானவை

பாதாம் பருப்பு 10
பால் 1 கரண்டி
எலுமிச்சைச்சாறு 2 கரண்டி
கடலை மா 2 கரண்டி

பாதாம் பருப்பைப் பொடி செய்து அதனுடன், எலுமிச்சைச் சாறு, கடலை மா, சிறிது பால் சேர்த்து பேஸ்ட் மாதிரி கலக்கவும். அதனை முகத்தில் தடவி 10 நிமிடம் மென்மையாக ஸ்கரப் செய்து கழுவினால் முகத்தில் உள்ள அழுக்குகள் நீங்குவதோடு சருமத்துக்கு வேண்டிய நீர்ச்சத்து கிடைத்து, சருமம் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.



# இயற்கை தரும் அழகு



### மஞ்சள்

குருதியைச் சுத்திகரிப்பதுடன், சருமத்துக்குப் புத்துணர்ச்சி ஊட்டி, ஆரோக்கியத்துடன் இயற்கையாக ஒளிரவைக்கும். வீக்கம், பக்றீரியா மற்றும் முதுமை எதிர்ப்பிகள் இருப்பதால் முகப்பரு, தடிப்பு, கருந்திட்டுகள் மற்றும் சரும நோய்களுக்கான சிறந்த மருந்தாகும். உலர் சருமத்தை மென்மையாக்கிச் சருமம் விரைவில் முதுமை அடைவதைத் தடுக்கிறது.

### சந்தனம்

ஆயுர்வேத மருத்துவத்தில் சந்தனத்தின் பயன்பாடு மிக அதிகம். அரிப்பு, சிராய்ப்பு, வறட்சி, சொறி, முகப்பரு உள்ளிட்ட பெரும்பாலான சருமப் பிரசினைகளுக்குத் தீர்வாகும். வெளிப்புறப் பயன்பாட்டில் எண்ணெயாகவும், பேஸ்டாகவும், லோஷனாகவும், சோப்பாகவும் பயன்படுத்தலாம். கடுமையான வெயிலில் கூட உடலைச் சில்லெனக் குளிர்விக்கும்.

### வல்லாரை

வல்லாரையிலும் முதுமை எதிர்ப்பிகள் அதிகம் இருப்பதால் சீழ்ப்புரை, குழந்தை பிறந்ததன் பின்னர் வயிறு சுருங்குவதால் ஏற்படும் கோடுகளையும் தீர்க்க வல்லது. எரிச்சல், அரிப்பு ஆகியவற்றை நீக்கிச் சருமத்தைச் சுத்தப்படுத்தி மிருதுவாக வைத்திருக்கும்.

### வெள்ளரிக்காய்

வெள்ளரி விதை, வெள்ளரிப் பிஞ்சு ஆகியவற்றைச் சருமத்தின் மீது பூசிக்கொள்ளச் சிவப்பழகு பெறுவதுடன் பட்டுப் போன்ற மென்மையும் தரும். இதன் மருத்துவக் குணம் தீப்புண், வெயில் ஆகியவற்றால் ஏற்படும் சரும எரிச்சலைக் குளிரவைக்கும். இதன் சாறு உடலைக் குளிரவைப்பதுடன் சருமத்தை அழகுபடுத்தும். சருமத்துக்கு இதமானது என்பதுடன் ஈரப்பதத்தையும் தக்கவைக்கும்.

# கூந்தல் வளர்ச்சிக்கு... டிப்ஸ்...



மென்மையான பளபளப்பான கூந்தல் பெறவேண்டும் என்பதற்காக சிறந்த ஷாம்புகள், மற்றும் கூந்தல் அழகு சாதனப் பொருள்களைப் பயன்படுத்துவதால் நீளமான கூந்தலைப் பெறமுடியாது. கூந்தல் என்பது வேகமாக வளரும் திசு. எனவே, கூந்தல் வளர்ச்சியை ஊக்கப்படுத்த, புரதச்சத்து, விற்றமின்களே அவசியம்.

**புரதச்சத்து** கூந்தல் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் அமினோ அமிலங்கள் புரதச்சத்தில் காணப்படுகின்றன. நமது உடலில் காணப்படும் புரதச்சத்து பற்றாக் குறையால் கூந்தல் உதிர்தல் மற்றும் வளர்ச்சி குறைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். எனவே, கூந்தல் வளர்ச்சி நன்றாக இருக்கவேண்டும் என விரும்புபவர்கள், புரதச்சத்து நிறைந்த உணவு வகைகளான மீன், முட்டை, பால் பொருள்கள், சோயா, பருப்பு வகைகள் ஆகியவற்றைச் சாப்பிடலாம்.

### காபோவைகரேட்

கூந்தல் உட்பட உடலின் அனைத்து திசுக்களின் வளர்ச்சிக்கும் காபோவைகரேட் முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே, காபோவைகரேட் சத்து அதிகம் நிறைந்த, ஓட்ஸ், சிவப்பு அரிசி, கோதுமை ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்வதால் ஆரோக்கியமான கூந்தலைப் பெறலாம்.

### கொழுப்புச்சத்து

உடலுக்கு நல்ல கொழுப்புச் சத்துத் தேவை. இவை, கூந்தல் வறண்டு போதல், கடினமாதல் மற்றும் பொடுகு ஏற்படுதல் ஆகியவற்றைத் தடுக்கிறது . எண்ணெய்த் தன்மை உள்ள மீன்கள், பருப்பு வகைகள், சூரிய காந்தி எண்ணெய் ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். உணவின் மூலம் உடலுக்குத் தேவையான நல்ல கொழுப்புச்சத்து கிடைக்கவில்லை என்றால் மருத்துவரின் ஆலோசனையைப் பெறலாம்.

### விற்றமின்கள்

மீன், இறைச்சி, வெண்ணெய், முட்டை, கோவா, கரட் ஆகியவற்றில் காணப்படும், 'விற்றமின் ஏ' மற்றும் பீட்டா கரோட்டின் ஆகியவை தலையில் தேவையான எண்ணெய் சுரப்பதை உறுதி செய்து, தலை போதிய ஈரத்தன்மையுடன் இருக்க உதவுகிறது. நெல்லிக்காய், கொய்யா, அன்னாசி, தக்காளி, குடைமிளகாய் மற்றும் கீரை வகைகள் ஆகியவற்றில் நிறைந்துள்ள 'விற்றமின் சி' சத்து, கூந்தலின் ஆரோக்கியத்தை பராமரித்து, கூந்தலின் நுனியில் பிளவு ஏற்படுவதைத் தடுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவ இறைச்சி

சான்பிரான்சிஸ்கோவில் தாவரங்களில் இருந்து இறைச்சி போன்ற சுவையுடைய பதார்த்தத்தைத் தயாரித்திருக்கிறார்கள்! உலகம் முழுவதும் இறைச்சி அதிக அளவில் மக்களால் விரும்பிச் சாப்பிடப்படுகிறது. நீண்ட காலமாகவே இறைச்சிக்கு மாற்றாக அதே சுவையுடைய உணவுப் பொருளை உருவாக்கவேண்டும் என்று நிபுணர்கள் முயற்சி செய்து வந்தனர். சான்பிரான்ஸ்சிஸ்கோவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று அந்த முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டது.

கடந்த 5 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து, மாட்டு இறைச்சியைப் போன்ற நிறமும் சுவையும் உடைய பொருளை உருவாக்கிவிட்டது. ஓர் உணவுப் பொருளை புதிதாகக் கண்டுபிடிக்கும்போது, அது மக்களிடையே அதிக வரவேற்புப் பெறும். அப்படி ஒரு பொருளைத்தான் நாங்கள் தற்போது உருவாக்கியிருக்கிறோம். இந்தத் தாவர இறைச்சியைச் சமைக்கும்போது மாட்டு இறைச்சி சமைப்பது போலவே மணம் வரும். பார்க்கவும் அதுபோன்ற தோற்றத்தையே தரும். சுவையும் அசல் மாட்டு இறைச்சியை ஒத்திருக்கும். இதைச் சமைத்துச் சுவைத்தவர்கள் தாவர இறைச்சி என்பதை நம்பவில்லை.

அத்தனை துல்லியமாக மாட்டிறைச்சியை ஒத்தது. "நாங்கள் சைவ உணவை மட்டும் மேற்கொள்பவர்களுக்காக இந்தத் தாவர இறைச்சியை உருவாக்கவில்லை. சைவ இறைச்சியை விரும்பும் பல கோடி அசைவப் பிரியர்களுக்காகவும் இதை உருவாக்கியிருக்கிறோம்" தேங்காய் எண்ணெயில் உள்ள கொழுப்பு, கோதுமை, உருளைக்கிழங்கில் உள்ள புரோட்டீன்கள் போன்றவை சேர்ந்ததாக இந்தத் தாவர இறைச்சி தயாரிக்கப்பட்டுள்ளது. இறைச்சி வகைகளை விட இதில் அதிக அளவில் புரோட்டீனும் குறைந்த அளவு கொழுப்பும் இருக்கின்றன.

அதனால் பயமின்றி இந்தத் தாவர இறைச்சியைச் சாப்பிடலாம். தற்போதுதான் இது கண்டுபிடிக்கப்பட்டது என்பதால் உற்பத்தியும் விற்பனையும் குறைவாகவுள்ளன. அதனால் இதன் விலை அதிகமாக இருக்கிறது. ஆனால் அதிக அளவில் உற்பத்தி செய்யும்போது விலை குறைந்துவிடும். இதனால் அடுத்த 50 ஆண்டுகளில் சைவ இறைச்சி முக்கிய இடத்தைப் பிடித்துவிடும்" என்கிறார்கள் உற்பத்தியாளர்கள்.



பாடசாலையில் நோயுற்ற சிறுவனைப் பார்த்து

**ஆசிரியர்:** உனது பெயர் என்ன? உன் பெற்றோருக்கு அறிவிக்க வேண்டும்

**சிறுவன்:** கவலைப்படாதீர்கள் என் பெயர் எனது பெற்றோருக்குத் தெரியும்!



**பல்மருத்துவர் :** உங்கள் கொதிக்கும் பல்லை ஐந்து நிமிடத்தில் பிடுங்கி விடுவேன்

**நோயாளி :** எவ்வளவு செலவாகும் டொக்டர்?

**பல்மருத்துவர்:** 300 ரூபா

**நோயாளி :** ஐந்து நிமிடத்துக்கு 300ரூபாவா?

**மருத்துவர்:** நீங்கள் விரும்பினால் மிக ஆறுதலாகவும் பிடுங்கலாம்!

**நோயாளி :** !!!





# செல்லப்பாவும் மாரிமுத்துவும்

■ கலாபூசணம் மு.மாசிலாமணி

வெள்ளைக்காரனிடம் சமையல் வேலைக்குப்போன மாரிமுத்துவுக்கு மொழி இடைஞ்சலாய், சங்கடமாய் இருந்ததால் அவ்வேலையை விடத் தீர்மானம் எடுத்து, சிறு இடைவெளிக்குப் பின் செல்லப்பாவின் வீட்டுக்குப்போனார். அவர் சும்மா போகவில்லை. தனது குரல் வளத்தை செல்லப்பாவுக்கும் அவரது மனைவி பூமணிக்கும் காட்ட "சங்கடமான சமையலை விட்டு சங்கீதம் பாடப் போறன்" என பழைய சினிமா நகைச்சுவைப் பாடலைப் பாடியபடியே படலையைத் திறந்தார். அடிக்கடி செல்லப்பா வீட்டுக்கு விசிற் செய்யும் மாரிமுத்து, சில நாள்கள் இடைவேளை விட்டுப் போனதினால் வரவேற்புப் பலமாக இருந்தது. "வாவா மாரிமுத்து உனக்குப் பாடவும் தெரியுமோ?" என பப்பா மரத்தில் ஏற்றிவிட்டாள் பூமணி. பதிலுக்கு "நான் பாடாத பாட்டோ? நடிக்காத நாடகமோ?" என புளுகினார் மாரிமுத்து.

குறுக்கிட்ட செல்லப்பா "என்ன நாடகமோ" என ஆச்சரியப்பட, "என்ன செல்லப்பாண்ணை நேற்றிரவு எங்கட நாடகம் நடந்தது தெரியாதோ" எனக் கேட்க "ஓ.. ஓ கேள்விப்பட்டனான்... நாடகத்திலை நடிச்ச மார்க்கண்டர் ஆஸ்பத்திரியிலை எண்டும் கேள்விப்பட்டன்" எனச் சொல்ல, பூமணி கேட்டாள் என்ன நடந்தது என்று. "உங்களுக்குச் சொன்னால் என்ன, மார்க்கண்டர், தான் பிரபுதேவா எண்டு காட்ட நெளிஞ்சு வளைஞ்சு டான்ஸ் ஆடினதாலை நெஞ்சுவருத்தம் வந்து ஆஸ்பத்திரியிலை வாட்டில மறிச்சு இருக்கினம்" எண்டார். குறுக்கிட்ட செல்லப்பா... "அது சரி உனக்கு என்ன பாத்திரம் தந்தவை" எனக் கேட்க, "எனக்கேன் பாத்திரம், நேற்றும் இரண்டு சருவச்சட்டி வாங்கினனான்" எண்டார்.

"அட பேயா! நாடகத்திலை என்ன கதாபாத்திரம்" எனத் திரும்பவும் கேட்க "நாடகத்திலை ஒரு வெள்ளைக்காறன் வாறான்..." எனச் சொல்ல மீண்டும் "வெள்ளைக்காறனா" என செல்லப்பா ஏங்க மாரிமுத்து "நாடகத்திலை அவர்தான் வில்லன்: அவரை காட் பண்ண அவருக்குப் பக்கத்தில துவக்கோடை நிற்பன் எண்டார். பூமணி, "மாரிமுத்துவுக்குப் பொருத்தமான வேடம்" என்று ஏற்றிவிட்டாள். "உனக்குத் துவக்குச் சூட்டிங் தெரியுமோ" எனச் செல்லப்பா கேட்க, "பீதாம்பரம் பிறக்கிறாசியார் வீட்டு வன்னித் தென்னந்தோட்டவாச்சர் வேலைக்கு துவக்கு சூட்டிங் பழகினனான்" என்றார். குறுக்கிட செல்லப்பா "நாடக மேடைக்கு கல்லெறி விழுந்ததாம்" எனக்கேட்க, மாரிமுத் "அது சின்ன சல்லிக்கல்லுகள்தான் அண்ணை" எனச் சொல்ல, பூமணி கேட்டா "ஏன் கல் எறிஞ்சவங்கள்?" என்று. அதற்கு "ரைமிங் பிழைச்சுப் போச்சு" எண்டா மாரிமுத்து. விவரமாய்ச் சொல்லு என்றார் செல்லப்பா.

ஒரு கட்டத்திலை வில்லன் கதாநாயகனை சுடுவதாகவும் அதற்கு சரியான நேர திலை கந்தையா அண்ணை பட்டாசு கொளுத்துவதாகவும் இருக்க, வில்லன் இதே உன்னை சுட்டுத் தள்ளுகிறேன் எனச் சொல்ல முதல் கதாநாயகன் விழுந் சாவதாக நடிக்க முதல் கந்தையாண்ணை பட்டாசை வெடிக்க வைத்து வி சமயோசிதமாக வில்லன் வசனத்தை மாத்தி என்ன நடிக்கிறாயா என கேட் மீண்டும் கந்தையாண்ணை ரைம் பண்ணி வெடி சுட இரண்டாம் முறைய கதாநாயகன் இறக்க சனமெல்லாம் கைதட்டி சிரிச்ச கையோடை கல்லெறிய விழுந்து மேடையிலை தொங்க விட்ட மைக்கும் உடைஞ்சு போச்சு" என்றார் மா முத்து. "நாடகம் நடிச்சதுக்கு என்ன காசு கீசு ஏதாவது தந்தவையோ" என பூமண கேட்க, "நான் கௌரவ நடிகனாய் வேடம் போட்டதாலை காசு வேண்டேல்லை ஆனால் வயிறுமுட்ட பாயாசம் குடிச்சன்" எண்டார்.

ஏது பாயாசம் எனக்கேட்க "நடிகர்களுக்கு பெரிய அண்டாவிலை நிறைய பாயாச காய்ச்சி வைச்சவை, நாடகத்திலை அரசனாக நடித்தவற்றை தலையிலை வை "விக்" குனியேக்கை பாயாச அண்டாவுக்குள்ளை விழுந்ததாலை ஒருத்தரு குடிக்கேல்லை. நான் நிறையகுடிக்க வாச்சுப்போச்சு" எண்டார் மாரிமுத்து. இதை கேட்ட செல்லப்பா "இனிமேல் நாடக மேடையை கல்லுக்கும்பியில்லா இடத்திலை தான் போட வேணும்" என்று நக்கலடித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனியே நான் என் செய்வேன்...?



நாகரிக வாழ்க்கைப் பாதையோரம்
நாய்போலத் தேடி அலைகிறேன்
முன்னோர்கள் விட்டுச் சென்ற அடையாளங்களை,

கறையான்கள் அரித்து அரித்து
அழிந்து போன காகிதங்களாய்
முன்னோர்கள் தந்த இன்பங்களும்
முறையழிந்து போவதையே
எங்கும் காண்கிறேன்

அசுத்தக் காற்றினைச் சுவாசித்து
சுத்தம் என்பதையே மறந்து போனேன்
நாகரிகச் சந்தையிலே
தேடுகின்றேன் எம் பண்பாடுகளை

உடைந்து போன என்
மனக் கோடியெங்கும்
"ஐயோ! எங்களை வெட்டாதீர்கள்"
என்ற மரங்களின் அழுகுரல்கள்
இடைவேளை இன்றி
அவலமாய் ஒலிக்கின்றன.

கால் பதிக்கின்ற இடங்களெல்லாம்
கட்டடங்கள் தோன்றுவதால்
பச்சை மண்ணில் நடப்பதற்காய்
ஏங்குகின்றன பாதங்கள்

அள்ளிப்பருகுகின்ற நீர் கூட
நாளுக்கொரு நிறத்துடன்
தன்னலம் இழக்கிறதே.
சேவலின் கூவலிலே
செவ்வனே கண்விழிக்கும்
நாட்களெலாம் மறைந்து
இயந்திர அலாரங்களினால்
இம்சைப்பட்டு கண்விழிக்கின்றேன்

வாழ்வே இயந்திரங்களினுள்
வலியப் புதைக்கப்படுகின்றதே
இயற்கையும் நிறமழிந்து
அடையாளங்களும் மறைகின்றனவே
தனியே நான் என் செய்வேன்?

*பா.பாலாஜினி, பளை.*

# பிலவ்டு ஸ்கை

## ஆழ்மன கிராமத்தின் கொள்ளை அழகு



இது "தாருஹ் மெஹ்ருஜி" இயக்கிய ஈரானியத் திரைப்படம். எம்.ஆர்.ஐஸ்கான் செய்து கொள்ளும் தெஹ்ரான் பல்கலைக்கழக இளம் மருத்துவப் பேராசிரியரின் கைக்குக் கிடைக்கும் பரிசோதனை முடிவிலிருந்து படம் தொடங்குகிறது. அந்த அறிக்கையிலிருந்து தனக்கு 'பிரெய்ன் டியூமர்' நோயிருப்பதைத் தெரிந்து கொள்கிறார். இதனால் மன நெருக்கடிக்குள்ளாகி காரை எடுத்துக்கொண்டு மருத்துவப் பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியே செல்கிறார். நகரத்தை விட்டு அவரது கார் மலையை நோக்கிச் செல்கிறது. மலைப் பாதைகளில் காரில் பயணிக்கும்போது, பக்கவாட்டில் வெகுதூரத்தில் மலையின் அடியில் தெரியும் கிராமத்தின் அழகை ரசிக்கிறார்.

அங்கிருந்து தொலைவில் தெரியும் அக்காட்சியில், செம் மண் வண்ண ஓடுகள் வரிசைவரிசையாக, சாய்வு வாக்கில் அடுக்கப்பட்ட வீடுகளின் மேற்கூரைகள் போன்ற தோற்றம். நடுவில் ஒரு மஞ்சள் அஞ்சல் அட்டையை கோபுரம்போல் மடித்து கவிழ்த்தது போன்ற சிறுமண்டபத்தையும் காண்கிறார்.

சிறுகணத்தில் மலை அடியின் கிராமத் தூரக் காட்சியிலிருந்து மீண்டு அவரது பார்வை மீண்டும் மலைப்பாதையில் காரின் வேகத்தைக் கூட்டுகிறது. அதன் பிறகு வண்டி செல்லும் வேகம் வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் தன்மை, உண்மையில் அவர் மலைக்கு அப்பால்போய் விழுந்திருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறில்லை. கார் அப்பால் போய் விழும் வேகத்தில் பாய்ந்து செல்கிறது. ஒரு பெண்மணி வந்து குறுக்கே நின்று காரை மறிக்கிறாள். மருத்துவர் வேறுவழியின்றிக் காரை நிறுத்துகிறார். சாலையோரம் அப்பெண்ணின் கணவர் உடல்நலம் குன்றியிருப்பதைக் காட்டிக்கெஞ்சுகிறாள். காரை நிறுத்திவிட்டு இறங்கிச் சென்று உடல்நலம் குன்றியிருக்கும் மனிதரைப் பார்க்கிறார். அவர் மருத்துவர் என்பது அங்கே தெரியவருகின்றது. தயவு செய்து எங்கள் ஊருக்கு வாருங்கள் என அப்பெண்மணி மருத்துவரை இறைஞ்சுகிறாள். அப்பெண்மணியையும்கணவரையும்ஏற்றிக்கொண்டு அவர்கள் ஊரைநோக்கிக் கார் திரும்புகிறது. அவர் சற்றுமுன் காரில் வந்தபோது பக்கவாட்டில் பார்த்த அதே கிராமத்தை நோக்கி. அந்தக் கிராமம் மண்வீடுகளையும் கல்வீடுகளையும் கொண்டு பழங்காலத்தன்மையுடன் அமைந்துள்ளது. அந்தக் கிராமத்தின் தலைவர் நோயால் பாதிக்கப்பட்டிருக்க அவருக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்கிறார். அவர் குணமாகிவிட மக்கள் மருத்துவரைக் கொண்டாடுகிறார்கள். மருத்துவருக்கு சற்றே தலை வலித்திட ஓய்வெடுக்க ஓர் இடம் வேண்டுகிறார். மக்கள் அவரை ஒரு கட்டடத்துக்கு அழைத்து வந்து அங்கேயே தங்கவைக்க ஏற்பாடு செய்கின்றனர். அது ஒரு மருத்துவமனை. ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள அத்தனை உபகரணங்களும் உள்ள மருத்துவமனை. அந்த இடத்தைத் தூய்மை செய்து அங்கே ஓய்வெடுக்கிறார். ஏற்கெனவே இங்கு தங்கி மக்களுக்கு மருத்துவம் பார்த்தவர் இறந்துவிட அதன் பிறகு அந்த மருத்துவமனை மூடப்பட்டு விட்டது என்பதையும் அறிகிறார். மறுநாள் அவரை மக்கள் பழத்தட்டுகளோடு வந்து பார்க்கின்றனர். அவர்கள் அனைவரின் வேண்டுகோளையும் ஏற்று அங்கேயே தங்கி அந்த ஊர் மக்களுக்கு மருத்துவம் செய்கிறார்.

ஒருநாள், தன் தாய்க்கு உடல்நலக்குறைவு என ஒரு குழந்தை வந்து மருத்துவரை அழைக்கிறது. அந்தக் குழந்தை அவரது மகளைப்போலவே உள்ளது. அவரும் அக்குழந்தையின் வீட்டுக்குப் போகிறார். குழந்தையின் தாய் கணவனை இழந்தவள்.



அவளை எங்கேயோ பார்த்தது போலிருக்கிறது. அது வேறு யாரும் இல்லை. அச்சு அசலாக மருத்துவரின் மனைவிபோலவே இருக்கிறார். ஆனால் அவர் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் அவளுக்குச் சிகிச்சை செய்கிறார்.

இப்படியாகப் போகும் படத்தில் இன்னும் நாம் எதிர்பார்க்கமுடியாத எவ்வளவோ வித்தியாசமான காட்சிகள். அந்தக் குழந்தையோடு இவர் காட்டுவெளியில் நடந்துசென்றவாக்கில் பேசிச்செல்லும் உலக அறிவு சார்ந்த செய்திகள், மக்கள் ஒன்றுகூடி ஏற்கனவே இறந்தபோன பழைய மருத்துவருக்காக மணிமண்டபம் கட்டுவது என்பது அருமை.

இறந்த அந்த மருத்துவர் முகம் இவருடைய முகமாகவே இருக்கும். மண்டபத்தைச் சுற்றி மக்கள் கூடிப் [illegible] ஒரு [illegible] போல இவருக்குத் தோன்றுகிறது. அவ்வேளை மருத்துவரின் மனைவி அவருக்குத் தொலைபேசி மூலம் எங்கிருக்கிறீர்கள் என வினவ என்ன சொல்வதென்று தெரியாமல், விரைவில் வருகிறேன் என்கிறார்.

உண்மையில் நடந்தது, மலைப்பாதையிலிருந்து கார் பாய்ந்துசென்று பாதைக்குவெளியே உருண்டு சென்று பள்ளத்தில் விழுந்துவிட்டது. இவர் விபத்தில் காயமுற்றதால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தொடர்ந்து கோமா நிலையிலேயே இருக்கும் அவரது ஆழ்மனவெளியில் தோன்றுபவை தான் இவ்வளவு காட்சிகளும் வழியில் கண்ட கிராமத்தின் எழில் அவரது மனதில் உயிர்பெற்றன.

உடல்நலம் முற்றிலும் குணமாகி காரை எடுத்துக்கொண்டு மலைப்பாதையின் அதே இடத்துக்கு வரும்போது அவருக்கு கிடைக்கும் அனுபவம் மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டது. காரை குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தி தொலைதூர கிராமத்தைப் பார்க்கிறார்.

செம்மண் வண்ண சாய்வு சாய்வான ஓட்டு வீடுகளும் ஒரு மஞ்சள் மண்டபமும் தெரிகின்றது. அவ்வேளை அங்கே ஆடு மேய்த்துக்கொண்டிருக்கும்பெண்ணைஅழைத்து "அது என்ன கிராமமா?" என்று கேட்கிறார்.

"ஒரு காலத்துல அது கிராமமா இருந்ததுன்னு சொன்னாங்க. நாளடைவில அது மாறிப்போச்சி. ஒரு ஆளும் அங்கே இப்ப இல்ல."

"அந்த மண்டபம் என்னது அது?"

"அந்த ஊர்ல எல்லாருக்கும் நல்லா வைத்தியம் பார்த்த ஒரு தங்கமான டாக்டருக்காக மக்களாகச் சேர்ந்து கட்டின மண்டபம் அது.."

"அந்த டாக்டரோட பெயர்?" - இவரது பெயரையே அவள் சொல்கிறாள்.

இவர் அதிர்ச்சியில் உறைந்திருக்க அந்தப் பெண் ஆடுகளை விரட்டியபடி போய்க்கொண்டே இருக்கிறாள்...

"யாருமற்ற அந்த வனாந்தரத்தில் என்ன நடக்கிறது... எல்லாமும்" என்ற தமிழ் நவீனக் கவிஞர் நகுலனின் வரிகளுக்கு மிகச்சிறந்த விளக்கவுரையாகத் திகழ்கிறது இப்படம். கனவைப்போன்ற சம்பவங்கள், கண்ணுக்கினிய அழகியல், மனதுக்கினிய காட்சிகள் என ஓர் உயரிய படைப்பை இயக்குநர் திரையில் வரைந்துள்ளார். வாழ்வில் சில தருணங்களில் நம் அறிவுக்கு அப்பாலும் சில சாத்தியங்கள் உண்டு என நிறுவியிருக்கும் தாருஷ் மெஹ்ருஜ்ஜியின் 'பிலவ்டு ஸ்கை' அனுபவமிக்க படைப்பாற்றலுக்கு தக்க சான்றாக மிளிர்ந்து நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திரமயமாதலின் எதிரொலி

# நிர்க்கதி நிலையில் அறுவடை தொழிலாளர்கள்

சலீம்

பார்ப்பதற்கு ஒல்லியாக நெடித்து வளர்ந்துள்ளார் ஆதம்பாவா. பச்சைப் பசேல் என்று பரந்திருக்கும் வயல்களை ஏக்கத்துடன் பார்க்கிறார். பூரிப்புடன் வளர்ந்து வரும் நெற்பயிரை வாஞ்சையுடன் தொட்டுத் தடவிய பின்னர் கையைத் தன் மூக்கின் நுனியில் வைத்து நுகர்கிறார். மூச்சை நன்கு உள்ளே இழுத்து அந்த வாசனையை அனுபவிக்கின்றார். நாசியினுள் ஏறும் அந்தப் பச்சைய மணம் ஆதம்பாவாவின் அழகான கடந்த காலத்தை அவருக்குள் மீட்டெடுக்கிறது. அந்த மணத்தை ஆழ்ந்து அனுபவிக்கிறார்.

ஒரு காலத்தில் இந்தப் பயிர்கள் எல்லாம் அவரது வருகைக்காகக் காத்திருந்ததுண்டு. இப்போது அப்படியில்லை. அவரும் அவரது நண்பர்களும் ஓய்வொழிச்சல் இன்றி வேலை பார்த்த வயல்களை இயந்திரங்கள் ஆக்கிரமித்துக்கொண்டு அவர்களைத் துரத்தியடித்துவிட்டன. போர் ஓய்ந்தது பலருக்கு நன்மையெனில் ஆதம்பாவா போன்றவர்களுக்கு அதுவே எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிவிட்டது. போரின் முடிவு இயந்திரங்களின் ஆக்கிரமிப்புக்களை வயல்களில் வேகப்படுத்திவிட்டது. அதிக லாபம் ஈட்டுவதற்காக அதிகாரிகளும்கூட இயந்திரங்களைத்தான் இப்போது பரிந்துரைக்கிறார்கள்.

"ஒரு நேரப் பசியைப் போக்கவே படாதபாடு படவேண்டியுள்ளது. கடல் மீன்பிடித் தொழில் கூட தூர்ந்த நிலைதான். சில்லறைக் கடையொன்றில் பொருள்கள் தூக்கி இறக்கும் கூலிக்குப் போகிறேன். என்ன செய்வது வயிற்றை நிரப்ப ஏதாவது ஒரு சிறு வருமானமாவது வேண்டும்தானே!" ஆதம்பாவா ஆதங்கப்படுகிறார். அவருக்கு இப்போது 65 வயது. நிந்தவூரைச் சேர்ந்தவர்.

கிழக்கிலங்கையில் முக்கியமான மாவட்டம் அம்பாறை. தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் என மூவின மக்களும் ஒன்றிணைந்து வாழ்கின்றனர். இங்குள்ள மக்களின் முக்கிய வாழ்வாதாரத் தொழில்கள் விவசாயமும், மீன் பிடியும்தான். கல்லோயாத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்ப்பாசன வசதி காரணமாக இந்த மாவட்டத்தில் நெற்செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்படுகிறது. இலங்கையின் நெல் உற்பத்தியில் இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் அளவுக்கு நிறைந்த உற்பத்தி.

சிறுபோகச் செய்கை 54 ஆயிரம் ஹெக்ரேயர் (ஒரு ஹெக்ரேயர் – இரண்டரை ஏக்கர் அளவு) பரப்பளவிலும் பெரும்போக நெற்செய்கை சுமார் 67 ஆயிரம் ஹெக்ரேயர் பரப்பளவிலும் மேற்கொள்ளப்படுகிறது.

ஆரம்ப காலகட்டங்களில் இந்த நெற்செய்கைகளுக்கு மனித சக்தியே கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டதெனினும், காலப்போக்கில் இயந்திரங்களின் பாவனை அதிகரித்துவிட்டது. இதனால் விவசாயக்கூலித்தொழிலாளர்கள்தான் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அறுவடைத் தொழிலாளர்களின் (அரிவு வெட்டுவோர்) வாழ்க்கை கிட்டத்தட்ட அப்படியே முடிவுக்கு வந்துவிட்டது. இயந்திரங்கள் அவர்களின் தொழிலைப் பறித்துக்கொண்டன. இப்போது அவர்கள் நாளாந்த உணவுத் தேவைக்கு வேறு தொழில்தேடி இடம்பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம் அறுவடைத் தொழிலாளர்கள் இந்தக் கூலியை நம்பியே வாழ்ந்தவர்கள். ஆனால் இப்போது அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறிக்குள்ளாகிவிட்டது. இவர்களது குடும்பங்கள் கிட்டதட்ட நடுத்தெருவுக்கு வந்துவிட்டன. இப்போது இந்த மனிதர்களைத் தேடுவார் எவரும் இல்லை. அவர்கள் நடைபயின்ற வயல்களின் சேற்று நிலங்களில், அறுவடைசெய்த அடுத்த கணமே நெல்மணிகளை வெளியேற்றும் இயந்திரங்கள்தான் உறுமியபடி திரிகின்றன.

"நெல்விவசாய அறுவடைத் தொழிலை நம்பியே வாழ்ந்து பழகிவிட்டோம். என்னைப்போல ஆயிரக்கணக்கானவர்களுக்கு எதிர்காலமே இல்லாமல் போய்விட்டது. முன்னர் என்றால், தொழிலாளர்கள் 15, 20 பேர் சேர்ந்து ஒரு குழுவாக அறுவடைக் காணிகளைப் போடிமாரிடம் பேசி பெற்று அறுவடை செய்வோம். ஒரு ஏக்கரை அறுவடை செய்வதற்கு 4,500 ரூபா முதல் 5,000 ரூபா வரையில் கூலி தருவார்கள். அறுவடைக் காலம் ஆரம்பித்து சுமார் இருமாதங்கள் வரை தினமும் தொழிலும் வருமானமும் கிடைக்கும்" ஆதம்பாவாவின் அற்புதமான நாள்கள் அவை. அதைப் பற்றிப் பேசும்போதே அவரது முகத்தில் மலர்ச்சி மீண்டும் அப்பிக்கொள்கிறது. தன்னுடைய துன்பங்களை மறந்து பழைய நினைவுகளில் லயிக்கிறார்.

(38 ஆம் பக்கம் பார்க்க.....)



“ அறுவடைத் தொழிலாளர் களின் (அரிவு வெட்டுவோர்) வாழ்க்கை கிட்டத்தட்ட அப்படியே முடிவுக்கு வந்து விட்டது. இயந்திரங்கள் அவர்களின் தொழிலைப் பறித்துக்கொண்டன. இப்போது அவர்கள் நாளாந்த உணவுத் தேவைக்கு வேறு தொழில்தேடி இடம்பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இந்த வாரம்

**10.07.2016 முதல் 16.07.2016 வரை**

**உங்களுக்கு எப்படி?**

## மேடம்

பெரும்பான்மை கிரகங்கள் நற்பலன் தரும். நிகழ்வுகள் இனிதாக அமையும். மனதில் நம்பிக்கை உருவாகும். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள், புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் கொள்வர். குடும்பத்தில், சுப நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவியின் நற்செயல் குடும்பத்துக்குப் பெருமை சேர்க்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, புதியவர்களின் ஆதரவு கிடைக்கும். பணியாளர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலையை ஆர்வமுடன் நிறைவேற்றி சலுகை பெறுவர். பெண்களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் நன்றாகப் படித்து பெற்றோரிடம் பரிசு பெறுவர்.

## இடபம்

சுக்கிரன், சந்திரன் மட்டுமே நன்மை தருவர். மதிநுட்பமாக பேசுவதால், எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் ஓரளவு உதவுவர். பயணத்தில் ஆர்வம் வளரும். புத்திரர்கள், உங்கள் வழிகாட்டுதலை ஏற்றுக்கொள்ளத் தயங்கலாம். பொறுமையாக எடுத்துச் சொல்லவும். குடும்பத்தில் ஒற்றுமையை கவனமுடன் பேண வேண்டும். உணவில் கவனமும், சீரான ஓய்வும் ஆரோக்கியம் தரும். கடன் வாங்குவதில் நிதானம் அவசியம். மனைவி பாசத்துடன் உதவுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, சில மாற்றங்களைச் செய்வீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தை அனுசரித்துச் சென்றால் தான், சலுகைகளைப் பெற முடியும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

## மிதுனம்

ராகு, சனீஸ்வரர், செவ்வாய், சுக்கிரனால் பெரும் நன்மை கிடைக்கும். மனதில் இருந்த குழப்பம் விலகும். செயல்களில் நிதானம் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களுக்கு, சுப நிகழ்ச்சி நடந்தேறும். வாகன வகையில், பராமரிப்புத் தேவைப்படும். புத்திரர்களின் செயல்திறன் வளர, ஆலோசனை சொல்வீர்கள். பூர்வசொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். உடல்நிலை பலம்பெறும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி குடும்ப பணிகள் நிறைவேற ஒத்துழைப்பார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புத் தேடி வரும். பயன்படுத்திக் கொண்டால் பலனடையலாம். பணியாளர்கள் பொறுப்புடன் பணிபுரிந்து, அதிகாரிகளிடம் நற் பெயர் பெறுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர்களின் உதவி கிடைக்கும்.

## கடகம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். செயல்களில் நிதானம் இருக்கும். தம்பி, தங்கைகளுக்கு உதவுவீர்கள். பயணங்களால் அதிக பலன் இருக்காது. புத்திரர்களின் எண்ணங்களில் பரிமளிப்பு ஏற்படும். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்குவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும். பணியாளர்கள் திறமையாக உழைத்து பணியிடத்தில் நற்பெயர் பெறுர். பெண்கள், உறவினர் குடும்ப மங்கல நிகழ்வு நடத்த உதவுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் அடைவர்.

## சிங்கம்

சூரியன் சுக்கிரன், புதன் நற்பலன் வழங்குவர். வாழ்வில் வளர்ச்சி பெற, புதிய வாய்ப்பு உருவாகும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவர்களுக்கு இடம் தர வேண்டாம். புத்திரர்கள் தகுதி திறமையை வளர்த்துக் கொள்வர். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியத்துக்குச் சிகிச்சை தேவைப்படலாம். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து பணவரவு கூடும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் குடும்பத்தின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் நன்றாகப் படித்து பாராட்டு பெறுவர்.

## கன்னி

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூலமாக உள்ளன. மனதில் மகிழ்ச்சியும், உற்சாகமும் கூடும். இயன்ற அளவு தர்மம் செய்வீர்கள். விலகிய உறவினர்கள் திரும்பி வந்து உறவு கொள்வர். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். வீடு அல்லது வாகனத்தை மாற்றும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். முந்தைய வாரத்தின் சிரமமான சூழ்நிலை மறையும். முக்கியஸ்தரின் உதவி வாழ்வுக்கு நம்பிக்கை தரும். தொழில், வியாபாரம் செழித்து சமூக அந்தஸ்து உயரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் குடும்பப் பெருமையை உயர்த்த பாடுபடுவர். மாணவர் கள் படிப்பில் சாதனை நிகழ்த்துவர்.

## துலாம்

குரு, ராகு, சுக்கிரனால் நற்பலன் கிடைக்கும். அக்கம் பக்கத்தவரின் அன்பு, ஆதரவு உண்டு. பணிகளை விரைந்து நிறைவேற்றுவீர்கள். வாகனத்தில் மிதவேகமாக செல்வது பிரச்சினைகளைத் தவிர்க்கும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் பெற ஆலோசனை சொல்வீர்கள். எதிர்ப்பாக இருந்த செயல் அனுகூலம் தரும். பூர்வ சொத்தில் ஓரளவு வளர்ச்சி உண்டு. தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடன் கிடைத்தல், சம்பள உயர்வு ஆகிய சலுகைகள் கிடைக்கும். பெண் களுக்கு வீட்டுச் செலவுக்கு போதுமான பணம் இருக்கும். மாணவர்களுக்கு ஞாபகத்திறன் வளரும்.

## தனுசு

சந்திரன், குரு, கேது நற்பலன் தருவர். மனம் அமைதியாக இருக்கும். எதிர்ப்புக்களை தகுந்த முயற்சியால் சரி செய்வீர்கள். வாகன பராமரிப்புச் செலவு உயரும். புத்திரர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். செலவில் சிக்கனமாக இருப்பது கடன் பெறுவதை தவிர்க்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக்கொடுத்து செல்லவும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கிடைக்கிற வாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்துங்கள். பணியாளர்களுக்குப் பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். பெண்கள் பிறர் விடயத்தில் கருத்து சொல்லக்கூடாது. மாணவர்கள் அதிக பயிற்சியால் தேர்ச்சி பெறுவர்.

## விருச்சிகம்

சந்திரன், புதன், சுக்கிரனால் அதிக நன்மை கிடைக்கும். பேச்சும், செயலும் வசீகரமாக இருக்கும். புதியவர்களின் அன்பு நெகிழ்ச்சி தரும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் கூடும். பயணங்களால் அதிக நன்மை கிடைக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பார்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, புதிய திட்டங்களை வகுப்பீர்கள். பணியாளர்கள் தொழில்நுட்ப அறிவை வளர்த்து சலுகை பெறுவர். பெண்கள் நகை, புத்தாடை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் அதிக கவனமாய் இருப்பது நல்லது.

## மகரம்

சூரியன், செவ்வாய், புதன், சனீஸ் வரர் அளப்பரிய நன்மை வழங்குவர். பணிகள் அனைத்தும் நிறைவேறும். செலவில் தாராளம் பின்பற்றுவீர்கள். தம்பி, தங்கைகளுக்கு உதவுவீர்கள். புத்திரர்களின் நல்ல செயல் உங்களுக்கு பெருமை சேர்க்கும். உடல்நிலையில் கவனம் வேண்டும். மனைவி வழி சார்ந்த உறவினர்களின் அன்பு மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணியில் கவனமாக செயற்படுவது நல்லது. பெண்கள் பண வசதிக்கேற்ப நகை, புத்தாடை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

## மீனம்

புதன், சுக்கிரன், ராகு வியத்தகு பலன் தருவர். குடும்ப நலனில் அக்கறை ஏற்படும். புதிய வாய்ப்புக்களை பயன்படுத்தி முன்னேறுவீர்கள். வாகனங்களில் மெதுவாகச் செல்வது பிரச்சினைகளைத் தவிர்க்கும். புத்திரர்களின் செயல்கள் மனதுக்கு மகிழ்வைத் தரும். நோய் தொந்தரவு விலகி உடல் ஆரோக்கியம் பெறும். மனைவியின் ஆலோசனை மனதுக்கு நம்பிக்கை தரும். அரசியல்வாதிகள் புதிய பதவி பெற அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரத்தில் சிரமங்கள் இருந்தாலும் பணவரவு சீராகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்களுக்கு கணவருடன் இணக்கமான போக்கு இருக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னிலை பெறுவர்.

## கும்பம்

சுக்கிரன், குரு, சந்திரனால் நன்மை கிடைக்கும். மன உறுதியுடன் பணிபுரிவீர்கள். தம்பி, தங்கைகளுக்கு மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் வளரும். பயணங்கள் எளிதாகும். புத்திரர்கள் வகையில் செலவு வரலாம். புதியவர்களின் அன்பு நெகிழ்ச்சி தரும். பகைவர்களிடம் இருந்து சமயோசிதமாக விலகுவீர்கள். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பணியாளர்கள் பொறுப்புடன் பணிபுரிந்து சலுகைகள் பெறுவர். பெண்கள் மீது கணவர் அதிக அன்பு காட்டுவார். மாணவர்களின் படிப்பில் முன்னேற்றம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனின் பிரிவோடு பிளவுபடுமா?

(25 ஆம் பக்கத் தொடர்ச்சி)




சென்ற பல ஆண்டுகளாகக் கடும் பொருளாதார நெருக்கடியில் இருந்த பிரிட்டனின் 'வேல்ஸ்' பகுதி ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியைக் கொண்டே சமாளித்து வந்தது. ஆனால், தேர்தலில் வேல்ஸ் பகுதியே பெரும்பான்மையாக ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறவேண்டும் என வாக்களித்திருக்கிறது. அப்படி வாக்களித்ததை அறிந்து வேல்ஸ் மக்களே குழம்பிப்போயிருக்கிறார்கள். இது வெளிப்படையாகத் தெரியாத சந்தேகங்களின் வெற்றி.

**கேள்விக்குறிக்குள் ஐரோப்பிய ஒன்றியம்**

பொதுவாக, இளைஞர்களும் குடியேற்றப் பின்னணி கொண்டவர்களும் பிரிட்டன் தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்க வேண்டும் என வாக்களித்துள்ளனர். பெரும்பாலும் முதியவர்கள், பெண்கள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டும் என்றே வாக்களித்துள்ளனர். அங்குள்ள இந்தியர்களும் பிரிட்டன் வெளியேறவேண்டும் என்றே வாக்களித்துள்ளனர். தொழில்நுட்பம், மனிதவளம் இரண்டையும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தே பிரிட்டன் பெற்றுக் கொள்ளவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் கட்டாயப் படுத்துகிறது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்றால், இந்தியாவிலிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்வார்கள். நீண்ட கால அடிப்படையில் இந்தியாவுக்கு அது நல்லது என்ற உள்நோக்கமே அதற்குக் காரணம்.

பிரெக்ஸிட் வாக்கெடுப்பின் முடிவு உலகம் முழுக்க வலதுசாரி அரசியல் மேலெழுந்து வருவதன் அடையாளம். உலகம் ஒன்றாக ஆவதைப் பற்றிய கனவுகள் இல்லாமலாகிவிட்டன. இன்று ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நலன்களைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள். ஸ்பெயின், துருக்கி போன்றவற்றின் பொருளியல் நெருக்கடியும் வளர்ந்த ஐரோப்பிய நாடுகளின் பழைய குடிமக்களை அச்சுறுத்துகின்றன. நாம் அவர்களுக்கு உதவப்போனால் நாமும் நெருக்கடிக்குள்ளாகிவிடுவோம் என இங்குள்ள வலதுசாரிகள் பரப்புரைகள் செய்துகொண்டே இருக்கிறார்கள். அத்துடன், ஐரோப்பாவை இஸ்லாமிய அடிப்படைவாதம் அச்சுறுத்துகிறது. அதற்கு எதிராக ஒன்று திரள வேண்டும், தேசிய அடையாளங்களை வலுவாக்கிக்கொள்ள வேண்டும் என்னும் கோரிக்கைகளும் ஆதரவு பெறுகின்றன. இதுபற்றி தொலைக்காட்சிகளில், முச்சந்திகளில், இணையத்தில் வாதங்கள் முடிவிலாது சென்றுகொண்டிருக்கின்றன. எல்லோரும் பதற்றமாக இருக்கிறார்கள். தவறுசெய்து விட்டோமோ என்னும் குறுகுறுப்பு பொதுவாகக் காணப்படுகிறது. சரியாகிவிடும், அமெரிக்கா உதவும் என்னும் ஆறுதலும் தெரிகிறது. ஆனால், உடனே இன்னொரு வாக்கெடுப்பு வைத்தால், பிரிட்டன் தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்க வேண்டும் என்னும் தரப்புக்கே பெருவாரியான வாக்குகள் கிடைக்கும் என்று தோன்றுகிறது. ஆனால், இனி ஒன்றும் செய்ய முடியாது. இது ஒரு தொடக்கம். அடுத்து, ஹங்கேரி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறலாம். ஐரோப்பிய ஒன்றியமே சில ஆண்டுகளில் கலைந்துபோகலாம். ஒட்டுமொத்தத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு பெரும் மலை சரிந்துவிட்டது !



## இவை என்றும் வசந்த காலங்கள்

பிறந்த மண்ணில்
மாமரத்தின் கீழே
முற்றத்து மணலை
கையால் பரப்பி
"அம்மா"
எழுதிப் பழகிய
இனிமையான காலங்கள்.

பச்சைக் கம்பளம்
போர்த்திருந்த வயல்வெளியின்
வரம்புகளில்
வெள்ளைச் சட்டையுடன்
தங்கையின் கரம் கோர்த்து
நடை பயின்ற
பள்ளிக் காலங்கள்.

வற்றாப்பளை அம்மன்
கோயில்
வீதியிலே அம்மம்மா
ஊது குழல் வாங்கித்தர
சுதந்திரம் வேண்டும் என
ஊதித் திரிந்த
சிறு பராயக் காலங்கள்.

அம்புலிமாமாவின்
வெளிச்சத்திலே
கடற்கரை மணலிலே
பாய்விரித்து
கால் நீட்டி அமர்ந்திருந்து
உணவருந்திக்
கதையளந்த காலங்கள்.

முல்லை வீதியிலே
மாலை நேர வகுப்புக்காய்
மல்லிகைப் பூவை
தலையிலே சூடி நடந்து வரும்
தமிழரசியைப் பார்க்க
பேருந்து நிலையத்தில்
காத்திருந்த
இனிமையான காலங்கள்.

காற்றோடு கதைபேசி
கடலோடு உறவாடி
முருகைக்கற் பூக்களோடு
கலந்து மகிழ்ந்து உறவாடி
சுதந்திரமாய்
அப்பாவோடு
கடல் படு திரவியம்
தேடிய காலங்கள்.

ஆ.முல்லைதிவ்யன்



## தவறை உணர்ந்தவரே மனிதர்



அன்பு மனம் கொண்டோர் வாழ்வில் தேவராகிறார்
ஆணவம் கொண்டலைவோர் அசுரராகிறார்
இருந்தும் இல்லையென்போர் பாவியாகிறார்
ஈகைக் குணம் உள்ளோர் பாரியாகிறார்.

உண்மை பேசி வாழ்வோர்
உத்தமர்களாகிறார்.
ஊருக்காக உழைப்பவர்கள் உபகாரியாகிறார்
எண்ணும் எழுத்தும் கல்லாதவர் மூடராகிறார்
ஏமாற்றி வாழ்பவர்கள் எத்தராகிறார்.

ஒரு தொழிலும் செய்யாதார் சோம்பராகிறார்
ஓடி ஓடி உழைப்பவர்கள் செல்வராகிறார்
ஐயம் திரிபறக் கற்றோர் அறிஞராகிறார்
ஔவையாரைப் படித்தவர்கள் புலவராகிறார்

அள்ளிக்கொடுத்து வாழ்வோர் வள்ளலாகிறார்
ஆண்டவனை வணங்குபவர் புனிதராகிறார்
அளவோடு உண்பவர் போகியாகிறார்–அது
அளவுக்கு மிஞ்சினால் ரோகியாகிறார்

கற்றபடி ஒழுகாதார் கசடராகிறார்
கண்டபடி உளறுபவர் பேயராகிறார்
பேராசை கொண்டலைவோர் பேய்களாகிறார்
பிறருக்காக வாழ்பவர்கள் தெய்வமாகிறார்

ஆபத்தில் உதவி செய்வோர் நேசராகிறார்
அடித்துக் கெடுத்து வாழ்வோர் துரோகியாகிறார்
தன்னை உணரத் தவறியவர் மிருகமாகிறார்
தவறுகளை உணர்ந்தவரே மனிதராகிறார்.

– சுஜீ ஜெபரின்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மக்கள் சேவையே மகேசன்...!

செ.மகேஷ்



13

## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி

இந்தக் கல்வித் துறைசார்ந்த ஆசிரியர் வேலையையும் மக்களை வருத்துகின்ற நோய்களைத் தீர்த்துக் குணமாக்கும் வைத்தியர்களின் வேலையையும் மாத்திரமே ஏன் சேவை சேவை என்று சொல்லிப் புலம்புகிறார்களோ தெரியவில்லையே! என்றார் சிவபாதத்தார். செல்லத்தம்பியருக்கு வேலையும் சேவையும் ஒன்றோடொன்று முட்டி மோதுவதாகத் தெரிந்தது. வேலைகள் யாவுமே மக்களுக்கான சேவைகள்தாம் என்பதாய் மலர்ந்த சிந்தனைக்குள் நாட்டிலே நடக்கும் நடப்புக்கள் எல்லாமே அவரைக் குழப்பத்துக்கு உள்ளாக்கின.

ஆசிரியர்களின் சேவையும் வைத்தியர்களின் சேவையும் என்றுமே மதிப்புயர் சேவைகளாகப் பாராட்டப்பட்டே வருகின்றன. மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற முதுமொழி ஒன்று நமக்கு மத்தியிலே சொல்லப்பட்டு வருகின்றது. அந்த வகையிலே மக்களின் தேவைகளை நிறைவாக்கச் செய்யப்படுபவையும் மக்களுக்கு உதவுவனவுமான வேலைகள் யாவுமே சேவைகள்தாம் என்பதாய் விரிந்த அவரது சிந்தனையில் தெளிவு இருப்பதாகச் செல்லத்தம்பியர் நினைத்தார்.

ஒரு தேநீர்க்கடை தொடக்கம் தேயிலைத் தொழிற்சாலை வரையான வேலைகள் யாவுமே ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையே. அதே போல் ஒரு பயணத்தை மேற்கொள்ள எதிர்ப்படுகின்ற பாதைகள் தொடக்கம் அதில் விரைகின்ற மாட்டு வண்டி, துவிச்சக்கரவண்டி மோட்டார்வண்டிகள் எனப் பயணிக்கும் பலவுமே மக்களின் பயணத் தேவைகளை நிறைவு செய்ய உதவும் வகை தேர்ந்த சேவைகளை வழங்குகின்ற வேலைக்களைத் தம்மகத்தே கொண்டவைதாம். ஒரு வீடு கட்டும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள், ஓரிடத்தில் சிறிய வேலியை அமைக்கும் வேலையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டோர் எனப் பலருமே மக்களுக்கான சேவைகளை வழங்குபவர்களே.

ஆனால் இன்றைய சூழலில் இயங்கும் பல செய்கைகளும் சேவைகளும் வேலை என்ற பொறியோடு சேவையுணர்வை மறந்து செயற்படுவதாகவே செல்லத்தம்பியருக்குத் தெரிந்தது.

அரசாங்க உத்தியோகங்கள் ஆனாலென்ன? தனியார் துறை சார்ந்த தொழில்களாக இருந்தாலென்ன? எல்லாமே மக்களுக்காக மக்களால் வழங்கப்படும் மக்களுக்கான சேவைகளைக் கொண்டவையே.

எனக்கு வழங்கப்பட்டுள்ள இந்தப் படகை ஓட்டும் மாலுமி வேலை பல்வேறு தேவைகளை நோக்கிப் பயணிக்கும் ஒவ்வொருவரையும் குறித்த நேரத்தில் குறித்த துறைமுகத்திலிருந்து அடுத்த துறைமுகத்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பதாகும்.

இது வேலையல்ல சேவை! என முடிவாக்கினார் செல்லத்தம்பி. வேலையற்றிருந்த எனக்குச் சம்பளம் பெறும் வேலையொன்றைத் தருவதற்காக இந்தப் பணிநிலை உருவாக்கப்படவில்லை எனவும் உணர்ந்தார். மக்களின் தேவைக்கு உதவும் இந்தப் பணியைச் செவ்வனே செய்யும் சேவையின் மூலம் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளுதலே இத்தொழிலின் மகத்துவமாகும்.

ஒவ்வொரு தொழிலும் மக்களுக்கானவையே சம்பளமாகப் பணம்பெறும் அல்லது பணத்தைக் கொள்ளையிடும் நோக்குடனே அந்தப் பணியில் இருப்பது பணியின் மகத்துவத்தையும் பணியாளரின் மதிப்பையும் கீழ்நிலைக்குத் தள்ளும் செயற்பாடாகும்.

முகாமையாளராக இருந்தாலென்ன! கூலியாளாக இருந்தாலென்ன! ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனியான தொழில் மகத்துவம் உள்ளது. அந்த மகத்துவம் மக்களின் வாழ்க்கைத் தேவையைத் தனக்கென மாத்திரமல்ல அயலவருக்கும் பயன்தரும் வகையில் நிறைவாக்க வகை செய்தல் வேண்டும்.

சிந்தித்தார், செல்லத்தம்பியரின் அனுபவத்தில் கண்ட நிகழ்வொன்று வேலைக்கும் சேவைக்கும் இடையேயான வேறுபாட்டை விளக்குவதாக உணர்ந்தார். அவரது கிராமத்தில் கூட்டுறவுச் சங்க வாகனமொன்று பயணிகளை ஏற்றி இறக்கும் பணியில் குறிப்பிட்ட நேரங்களில் தினமும் ஈடுபட்டு வருகிறது. அவ்வூரிலிருந்து நகரத்திற்குப் பயணம் செய்வோரின் வசதிக்காகவே அவ்வாகனத்தைக் கூட்டுறவுச் சங்கத்தினர் சேவையில் ஈடுபடுத்தி உள்ளனர். இதனை மக்கள் வரவேற்றனர். ஒருநாள் அந்த வாகனம் பயணிக்க வேண்டிய குறித்த நேரத்தில் பயணிகளுக்காகப் பயணிக்காமல் அதிக வருமானம் தரும் வேறொரு தேவைக்கான சேவையில் ஈடுபடுத்தப்பட்டதால் வேற்று ஒழுங்குகள் எதுவுமின்மையால் பயணம் செய்ய ஏற்ற பொருத்தமான வாகனமின்றி கிராம மக்கள் பலரும் சிரமங்களுக்கு உள்ளாகினர். இது மக்கள் சேவையா? அல்லது மக்கள் தேவையை நிறைவு செய்யும் சிந்தனையற்ற பொருள் தேடும் ஒரு தனியாளின் வேலையா? என்பதை அறியாமல் தவித்தார்.

இங்கே மக்களுக்கான அதாவது ஊரவர்களுக்கான சேவை மறுக்கப்பட்டதாகப் பலரும் பேசிக்கொண்டனர். இங்கே மக்களுக்கான சேவை வருமானத்தைப் பெருக்கும் சங்கத்தின் தனித்த வேலையாகிப் போனமை வருத்தத்திற்குரியதே!

வேலையும் சேவையும் இணைந்திருக்கும் தொழிலே எங்கும் பிரகாசிக்கும். அந்த வகையிலேயே தொழில்கள் ஒவ்வொருவரையும் அழகுபடுத்த வேண்டும் என்பதாய்ச் செல்லத்தம்பியர் நினைத்தார். சிவபாதத்தாரிடம் எதனையும் சொல்லவில்லை.

எங்கும் எவரும் எவ்விடத்திலே வேலை செய்தாலும் அங்கே அவர்கள் செய்யும் வேலைகள் ஒவ்வொன்றும் மக்கள் சேவையாகச் செயற்படவும் பேணப்படவும் வேண்டும். இவ்வாறு நினைத்தவருக்கு இந்தப் பிரதேச செயலாளர்களும் கிராம சேவையாளர்களும் தம்மை அலங்கரிப்பதற்காகவே தமக்குத் தொழில்கள் தந்திருப்பதாக எண்ணுகிறார்களோ என்ற ஐயமும் செல்லத்தம்பியருக்கு ஏற்பட்டது. வேலையை இலகுபடுத்துவதற்காகவே ஒரு தொழிலுக்குப் பலநிலைகளில் அலுவலர்கள் உள்ளனர். எனவே அந்தத் தொழில் பற்றிய முழுமை ஒவ்வொரு உறுப்பினருக்கும் தெரிந்தே இருக்க வேண்டும். மக்களின் தேவையை நிறைவு செய்யும் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் பலர் தாமுண்டு தமது வேலையுண்டு என இருந்தாலும் தமது இருக்கையால் மக்களுக்கு என்ன பயனுண்டு என்றாவது சிந்திக்கத் தவறினால் அந்தப் பதவிக் கதிரையின் சிறப்புக் குன்றத்தானே செய்யும்.

வேலைகள் அனைத்தும் சேவைகளே! செய்யும் தொழிலே தெய்வம்! என்பதெல்லாம் நேர்மை, உண்மை, செயற்றிறன் என்பவற்றோடு கூடிய ஆளுமைப் பண்புகள் கொண்டவையே. எனவே நாம் செய்யும் வேலைகளைச் சேவை மனப்பாங்குடன் செய்வோம்.

# இயந்திரமயமாதலின் எதிரொலி...



(35 ஆம் பக்கத் தொடர்ச்சி)

“அறுவடையின் பின் சூடு மிதிப்பு வேலையுமுண்டு. அதற்கு கூலி (பணம்) வாங்காமல் நெல்லைக் கூலியாகப் பெற்று அதனைச் சேமித்து வைத்து வருடம் முழுவதும் குடும்பத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வோம்.

ஆதம்பாவாவின் முகம் இருள்கிறது. உடலைக் குறுக்கிக்கொள்கிறார். வயல் வரம்பில் தன்னுடைய இரு கால்களையும் உள்ளிழுத்துக்கொண்டு கைகளால் அவற்றை இறுக்கிக் கொள்கிறார்.

“இன்று நிலமை மாறிவிட்டது. எல்லாவற்றுக்கும் இயந்திரங்கள்தான். எங்களைத் தேடுவார் கிடையாது. எங்கள் வயிற்றில் அடித்துவிட்டார்கள். வருமானமும் இல்லை. ஒரு நேரப் பசியைப் போக்கவே படாதபாடு படவேண்டியுள்ளது. நான் மட்டுமல்ல என்னைப்போல அறுவடைத் தொழிலை நம்பிய ஆயிரக்கணக்கானவர்களுக்கும் இதுதான் கதி.” என்கிறார். இலங்கையில் உள்நாட்டுப் போர் ஆரம்பிப்பதற்கு முன்னரான காலப் பகுதி தான் ஆதம்பாவா போன்றவர்களுக்குப் பொன்னான காலம். அப்போது அவர்களுக்கு பரந்துவிரிந்த வேலைவாய்ப்பு இருந்தது. அம்பாறையில் மட்டுமல்ல, பிறமாவட்டங்களான வடக்கே கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்றவற்றுக்கும் வேலைக்காக அவர்கள் பயணித்தார்கள். “போருக்கு முன்னம் அரிவு வெட்டுக்கு பரந்தன், கிளிநொச்சி, 3 ஆம் வாய்க்கால், 7ஆம் வாய்க்கால், கண்டாவளை, முரசுமோட்டை எல்லாம் போயிருக்கிறம். தங்கியிருந்து தொழில் செய்வம். மட்டக்களப்பிலிருந்து ரயில் எடுத்துப் போவம். குதூகலமான பயணமாய் இருக்கும். அதுகள் மறக்கேலாத நாள்கள்” என்று ஆதங்கப்படுகிறார் ஆதம்பாவா.

ஆனால், ஆதம்பாவா போன்றோரை வயல் சொந்தக்காரர்களும் விவசாயத்துறை அதிகாரிகளும் இப்போது மறந்துவிட்டார்கள். இந்த அவசர யுகத்தில் அவர்கள் இயந்திரங்களின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். வயல்கரையில் இருந்து ஆதம்பாவா எழுந்திருக்கையில் அவரது கண்களில் இருந்து கண்ணீர் பெருகி வயலில் விழுகிறது. தேங்கி நிற்கும் தண்ணீருடன் அது சேர்ந்துவிடுகிறது. ஆதம்பாவா ஏக்கத்துடன் வீடு நோக்கி நடக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இலக்கு வைக்கப்படும் கறுப்பின மக்கள்




அதிரன்

அமெரிக்காவில் கறுப்பின மக்களைப் பொலிஸாரும், பொலிஸாரை கறுப்பின மக்களும் சுட்டுக் கொன்றுவரும் நிலையில் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவரும் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, தனது பயணத் திட்டத்தைக் குறைத்துக் கொண்டு உடனடியாக நாடு திரும்புவதாக அதிபரின் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் லூசியானா மற்றும் மின்னெசோட்டா மாநிலங்களில் அடுத்தடுத்து பொலிஸாரின் தேவையற்ற துப்பாக்கிச் சூட்டில் இரு கறுப்பி னத்தவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதற்குக் கண்டனம் தெரிவித்து நாட்டின் பல பகுதிகளில் கறுப்பின மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

டெக்சாஸ் மாநிலத்தின் டல்லாஸ் நகரில் நூற்றுக்கணக்கான கறுப்பினத்தவர்கள் பொலிசாரின் மனித உரிமை மீறல் மற்றும் அராஜகத்தைக் கண்டித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையொட்டி ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

அப்போது, சினைப்பர்களால் சிலர் பொலிஸாரை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர். இதில், 5 பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். ஆறு பொலிஸ் அதிகாரிகள் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து படுகாயமடைந்தனர்.

இந்த திடீர்த் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், ஒருவர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு உயிரிழந்துவிட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே, போலந்து நாட்டின் வார்சா நகரில் நேட்டோ மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றுள்ள அமெரிக்க அதிபர் ஒபாமாவிடம், இந்தத் தாக்குதல் குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அப்போது நடந்த சம்பவத்திற்கு அவர் கடும் கண்டனமும் கவலையும் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் பொலிஸ் அதிகாரிகள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் போன்று தெரிகின்றது. இதனால் அமெரிக்கா கடும் அதிர்ச்சி அடைந்துள்ளது. இதுபோன்ற தாக்குதல்களையோ சட்ட செயற்பாட்டு அதிகாரிகள் மீதான வன்முறையையோ நியாயப்படுத்த முடியாது என்றும் ஒபாமா கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபராக முதன்முறையாக ஸ்பெயின் நாட்டுக்கு இரண்டு நாள் சுற்றுப்பயணம் செய்யத் திட்டமிட்டிருந்த அதிபர் பராக் ஒபாமா, தனது பயணத்தை ஒரு நாளாகக் குறைத்துக் கொண்டு இன்று ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவுக்குத் திரும்புவார் என வொஷிங்டன் நகரில் உள்ள அதிபரின் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஏற்கனவே, ஸ்பெயினில் உள்ள செவில்லே நகருக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை செல்வதாக இருந்த அதிபரின் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இன்று வொஷிங்டன் நகருக்கு திரும்பும் ஒபாமா, இனம் மற்றும் நிறத்தின் அடையாளத்தால் சில சமூகத்தவருக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் சில கொள்கை முடிவுகளை வகுப்பது தொடர்பாகவும், தற்போதைய குற்றவியல் சட்ட நடைமுறைகளில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தும் வெள்ளை மாளிகையில் அதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனையில் ஈடுபடுவார் எனக் கூறப்படுகின்றது.



இந்தச் சூட்டுச் சம்பவங்கள் கறுப்பினத்தவர் மாத்திரம் தொடர்புபட்ட பிரச்சினையல்ல என்று ஒபாமா குறிப்பிட்டுள்ளார். இவை ஒட்டுமொத்த அமெரிக்கர்களுக்குமான பிரச்சினை என்றுகுறிப்பிட்ட அவர், இதனால் இவ்வாறான சம்பவங்கள் தொடராது தடுக்க ஒட்டுமொத்த அமெரிக்கர்களும் அக்கறையுடன் செயற்பட முன்வர வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் ஏனைய சமூகங்களை விடக் கறுப்பினத்தவர்களை இலக்கு வைத்து வெள்ளையினப் பொலிஸார் மேற்கொள்ளும் தாக்குதல்கள் அதிகம் இடம்பெறுவதாகப் புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துகின்றன. இதனால் பொலிஸ் திணைக்களத்தில் உள்ளக இனப்பாகுபாடுகளுக்கு இடமளிக்கக் கூடாது என்று வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இதனிடையே கறுப்பினத்தவர் மீதான துப்பாக்கிச் சூடு அமெரிக்கப் பொலிஸார் மீது பெரும் விமர்சனங்களை உண்டுபண்ணியுள்ளது.

அமெரிக்கப் பொலிஸாரால் சுடப்பட்ட கறுப்பினத்தவரின் உயிர் பிரியும் நேரத்தில் வீடியோ எடுத்த அவரின் தோழி அதனை பேஸ்புக்கில் பதிவேற்றியுள்ளார். குறித்த வீடியோ தற்போது சமூகவலைத்தளமெங்கும் பரவி வருகின்றது. அது ஒபாமாவின் நிர்வாகத்துக்குப் பெரும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

அமெரிக்காவின் மின்னபொலைஸ் நகரில், துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான 32 வயதான கறுப்பினத்தவரான பிலாண்டோ கேசிலின் தனது தோழி லேவிஸ் ரெனோல்ட்ஸ் என்பவருடன் காரில் வேகமாக சென்றுள்ளார். இந்த நிலையில், காரை வழிமறித்த பொலிஸார் சாரதி அனுமதிப் பத்திரத்தைக் காண்பிக்குமாறு கூறியுள்ளனர். ஆனால், அவரோ சாரதி அனுமதிப்பத்திரத்துக்குப் பதிலாகத் துப்பாக்கியை நீட்டியதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்துப் பொலிஸார், பிலாண்டோ கேசிலை தம்மிடமிருந்த துப்பாக்கியால் சுட்டனர்.


உயிருக்காகப் போராடிய கேசிலை, மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் தோழி. போகும்வழியில் பிலாண்டோ கேசிலின் உயிர் பிரிந்தது.

உயிர்பிரியும் இறுதிக் காட்சிகளையும் பொலிஸாருடன் இடம்பெற்ற வாக்குவாதத்தையும் தோழி வீடியோவாக தனது கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்து பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்துள்ளார். அமெரிக்காவில் தொடர்ந்து கறுப்பின மக்களைப் பொலிஸார் துன்புறுத்தி வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் இந்த வீடியோ அங்கு பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் அண்மைக்காலமாகத் தொடர்ச்சியாகப் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் மலிந்துபோயுள்ளன. நிலமை இவ்வாறு இருக்க இப்போது பொலிஸாரும் கறுப்பின மக்களும் பயங்கரமாக மோதிக் கொள்ளும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. அமெரிக்கப் பொலிஸாரின் நிறவெறிக் கொள்கையினாலேயே இந்த நிலமை தோன்றியுள்ளதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. ஒபாமா நிர்வாகம் இந்த நிலமையை எவ்வாறு சமாளிக்கப்போகின்றது என்பதே அடுத்துள்ள கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




# மீனவர்களின் வாழ்வை சொல்லும் உள்குத்து

கெனன்யா ஃபிலிம்ஸ் ஜெ.செல்வகுமார் தயாரிப்பில் உருவாகியுள்ள உள்குத்து திரைப்படம் விரைவில் வெளியாகவிருக்கிறது. அட்டகத்தி தினேஷ், நந்திதா கதாநாயகன், கதாநாயகியாக நடித்துள்ள இந்தப் படத்தில் பாலசரவணன், ஜான் விஜய், சாயா சிங், ஸ்ரீமன், திலீப் சுப்பராயன் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இயக்குநர் கார்த்திக் ராஜு இந்தப் படம் பற்றி கூறுகையில், குமரி மாவட்டத்தின் பிரபலமான முட்டம் குப்பத்திலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் உள்குத்தை படமாக்கியுள்ளோம். இறால், மீனையும் பேரம்பேசி வாங்கத் தெரிந்த நமக்கு, மீனவர்களின் கடினமான வாழ்க்கை நிலையைப் பற்றித்தெரியாது. மீனவ சமூகத்தினரின் வாழ்க்கையையும் அவர்களின் துன்பங்களையும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் மையமாக வைத்து, இந்தப் படத்தின் கதை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் உணர்வுபூர்வம், காதல், அதிரடி அக்ஷன் என அனைத்து விடயங்களும் உண்டு. சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்தப் படத்தின் டீசருக்கு ரசிகர்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்து வருவதைக் கண்டு நாங்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். ரசிகர்களுக்கு இந்தப் படம் கண்டிப்பாக பிடிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்றார். இந்தப் படத்துக்கு ஜஸ்டின் பிரபாகர் இசை அமைத்துள்ளார். குக்கூ படப்புகழ் பி.கேவ்மா ஒளிப்பதிவு செய்துள்ளார். அபி & அபி நிறுவன அதிபர் அபினேஷ் இளங்கோவன் விநியோகம் செய்யும் உள்குத்து ஓகஸ்ட் மாதம் திரைக்கு வரவுள்ளது.



உதவி என்று கேட்டவுடனே 'என்னென்று சொல்லடா' என்று கேட்பவன் நண்பன்.



'காசைத் தவிர என்ன வேணுமானாலும் கேளுடா' என்பவன் உயிர் நண்பன்.

**நண்பன் 1:**
சத்துக் குறைந்து விட்டது என்று டாக்டரிடம் போனேண்டா
**நண்பன் 2:**
என்னாச்சுடா
**நண்பன் 1:**
என்னுடைய சொத்து குறைஞ்சுட்டுதடா

## இப்போ தெரியுதா



பாரதி 7 வயதில கல்யாணம் செய்தாரு
காந்தி 13 வயதில கல்யாணம் செய்தாரு
நேரு 14 வயதில கல்யாணம் செய்தாரு

இப்போ தெரியுது நாம ஏன் வரலாறில இடம் பிடிக்கேல்ல எண்டு...

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | 4 | 3 | | |
| 4 | | 5 | | 6 | | 8 | | 7 |
| | | | | | | | | |
| 7 | | | | 8 | | | 1 | 2 |
| | 3 | | | | 9 | | | |
| | | | | | 7 | 5 | 3 | 9 |
| 1 | | 7 | | | | 2 | | |
| | | 9 | | | | 1 | 6 | 8 |
| 3 | | | | | 2 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**ஓநாய**

மனிதர்களின் வினைகளுக்கெல்லாம் வாங்கி கட்டிக் கொள்வது இந்தக் காதலும் கடவுளும் தான்.....



**மேடம்:** சுய லாபத்துக்காக, சிலர் உங்களை புகழ்வர். முன் யோசனையுடன் நடப்பது நல்லது. தொழிலில் சுமாரான லாபம் கிடைக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.



**இடபம்:** முக்கிய செயலை பிறரை நம்பி ஒப்படைக்கக்கூடாது. தொழில், வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது அவசியம்.



**மிதுனம்:** வளர்ச்சிக்கான சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.



**கடகம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கத் தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிப்பதால், லாபம் குறையும். மற்றவர் முன்னிலையில், அதிக பணம் செலவு செய்வதை தவிர்க்கவும். உடல்நலனில் அக்கறை தேவை.



**சிங்கம்:** கடந்த கால உழைப்புக்குரிய பலன் தேடி வரும். எதிரியும் நட்பு பாராட்ட ஓடி வருவர். தொழில் வியாபாரத்தில், புதிய சாதனை படைப்பீர்கள். வருமானம் உயரும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.





**கன்னி:** பணியில் பொறுப்பும், சுமையும் அதிகரிக்கும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பது நல்லது. வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.



**துலாம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். விலகிச் சென்றவரும் அன்பு பாராட்டுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு சமரச பேச்சு வார்த்தையில் [illegible]



**விருச்சிகம்:** தாமதித்த செயலில், புதிய திருப்பம் ஏற்படும். தொழில் வியாபாரத்தில், சராசரி பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.



**தனுசு:** செயலில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில், குறுக்கிடும் இடையூறுகளைச் சரிசெய்வது அவசியம். மிதமான பணவரவு கிடைக்கும். ஆடம்பரத்துக்காக தகுதிக்கு மீறி செலவழிக்க வேண்டாம்.



**மகரம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். நண்பரின் ஆலோசனை நம்பிக்கையளிக்கும். தொழில் இலக்கு தாமதமாகப் பூர்த்தியாகும். மிதமான லாபம் கிடைக்கும். குடும்பத் தேவைக்கான பணச்செலவு அதிகரிக்கும்.



**கும்பம்:** சிறு செயலையும் நேர்த்தியாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில், தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.




**மீனம்:** திட்டமிட்ட பணிகளை விரைவாக நிறைவேற்றுவீர்கள். தொழில் வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு நடந்தேறும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக் குறிப்புக்கள்

கண்ணாடி குடுவைகள், பிரேம் செய்த போட்டோக்கள், முகம் பார்க்கும் கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகள் என்று பெரிய பட்டியலே உண்டு. உடைவது ஒரு பக்கம் இருந்தாலும் உடைந்த கண்ணாடி சிதறல்கள் அவர்களது காலில் அல்லது மற்றவர்களது காலை பதம் பார்க்கும் ஆபத்தும் உள்ளது. உடைந்த கண்ணாடி பொருள்களின் சிறிய துகள் கூட இல்லாமல் அகற்ற ஒரு வழி இருக்கிறது. கோதுமை மாவை சிறிதளவு நீரில் கலந்து உருண்டையாக செய்து கொண்டு கண்ணாடி உடைந்த இடங்களில் ஒற்றி எடுக்க வேண்டும். அதன் மூலம் உடைந்த துகள்கள் சுலபமாக அகற்றப்படும். கிராமப்புறங்களில் மாட்டுச் சாணத்தை பயன்படுத்தி கண்ணாடி துகள்களை அகற்றுவது வழக்கத்தில் இருந்து வருகிறது.





## இது புதுசு

யாழில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருள்களில், சிரட்டை கைவினைப் பொருள்கள் அறிமுகமாகியுள்ளன. இவற்றை அன்பளிப்புப் பொருளாகவும், வீட்டு, அலுவலக அலங்காரப் பொருள்களாகவும் உபயோகிக்கலாம். இவை 200 ரூபாவில் இருந்து 800 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

## இறால் வறை

### தேவையான பொருள்கள்

- இறால் - ஒரு கப்.
- தேங்காய்ப் பூ - ஒரு கப்.
- உப்பு - தேவையான அளவு
- பச்சை மிளகாய் - 3
- சின்ன வெங்காயம் - 8
- பெருஞ் சீரகம் - அரைக் கரண்டி
- மஞ்சள் - கால் கரண்டி

### செய்முறை

முதலில் இறாலைச் சுத்தம் செய்து, உப்பிட்டு நீர் வற்றும் வரை நன்கு அவித்துக் கொள்ளவும். இறாலுக்கு அளவாகத் தேங்காய்ப்பூவைத் துருவிக் கொள்ளவும். பின்னர், அம்மி அல்லது மிக்சி மூலம் அவித்த இறாலை பசுந்தாக அரைத்து விழுதாக்கவும். அதே அம்மியில் அல்லது மிக்சியில் தேங்காய்ப் பூவை நீர் ஏதும் சேர்க்காமல் அரைத்துக் கொள்ளவும். பின்னர் தாச்சியில் எண்ணெய் ஊற்றி பச்சை மிளகாய், வெங்காயத்தை இலேசாக வதக்கவும். அதன் பின்னர் கடுகு, பெருஞ்சீரகமிட்டுத் தாளிக்கவும். இதனுடன், அரைத்து வைத்துள்ள இறால் விழுது, தேங்காய்ப் பூ, உப்பு தண்ணீர் சேர்த்துக் கிளறவும். பின்னர் மூடியால் மூடி வேகவைக்கவும். பின்னர் வறைக்கான உதிரித்தன்மை வந்ததும் இறக்கினால் இறால் வறை தயார்.




## நாளை

ஆனி-27
திங்கட்கிழமை - 11.07.2016
திதி:ஸப்தமி
மு.இ.06.49 வரை
நட்சத்திரம்: அத்தம்
பி.இ.02.48 வரை
ராகுகாலம்:
07.29-08.59 வரை
சுபநேரம்:
11.59-01.29 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 800 | 700 | 600 | 700 | 800 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 600 | 600 | 420 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | – | 600 |
| சீலா | 300 | 400 | 400 | 800 | 500 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 400 | – | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 500 | 450 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 400 | – | 370 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 100 | 350 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 200 | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 300 | 200 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 400 | 150 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 350 | – | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | 300 | – |
| வாளை | 100 | 200 | 200 | – | 300 | 200 | 200 |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 40 | 80 | 160 | 80 | 40 | – | 70 |
| கத்தரி | 150 | 100 | 160 | 100 | 140 | 100 | – | 60 |
| கரட் | 250 | 200 | 160–250 | 240 | 220 | 200 | – | 200 |
| மரவள்ளி | 120 | 80 | 100 | 80 | 100 | 100 | – | 50 |
| பயித்தை | 200 | 200 | 200 | 100 | 200 | 80 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 280 | 240 | 220 | 220 | – | 160 |
| கருணைக்கிழங்கு | 150 | – | 160 | – | 120 | 160 | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 70 |
| சி.வெங்காயம் | 120 | 100 | 120 | 160 | 140 | 120 | – | 100 |
| பூசணி | 100 | 120 | 180 | 160 | 140 | 140 | – | 130 |
| தக்காளி | 200 | 200 | 240 | 260 | 240 | 250 | – | 170 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 100 | 120 | 80 | – | 50 |
| கீரை | 25 | 20 | 30 | 20 | 20 | 20 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 20 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 600 | 600 | 600 | 600 | 600 | – | 600 |
| புடோல் | 50 | 80 | 150 | 100 | 80 | 60 | – | 60 |
| கோவா | 180 | 120 | 180 | 140 | 160 | 180 | – | 130 |
| வெண்டி | 120 | 80 | 220 | 120 | 100 | 80 | – | 50 |
| போஞ்சி | 200 | – | 280 | 140 | 200 | 180 | – | 140 |
| லீக்ஸ் | 200 | 120 | 120 | 200 | 180 | 200 | – | 140 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 30 | 30 | – | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 160 | 160 | 140 | 80 | – | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | – | 400 | 240 | 340 | 200 | – | 300 |
| இராசவள்ளி | 160 | – | – | 300 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 350 | 300 | 200 | 600 | – | 300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கின்னஸ் சாதனையான நாசரின் பிடியெடுப்பு

கிரிக்கெட் பந்தைப் பிடியெடுப்புச் செய்வதில் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நாசர் உசைன் கின்னஸ் சாதனை படைத்தார். இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் கின்னஸ் சாதனைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆளில்லா சிறிய ரக விமானத்தின் மூலம் பந்தை வீசுவது என்று முடிவு செய்யப்பட்டது. கிட்டத்தட்ட 45 மீற்றர் உயரத்தில் இருந்து வீசப்பட்ட பந்தை பிடியெடுத்ததன் மூலமே உசைன் இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.



# யூரோ கிண்ண இறுதியாட்டம் இன்று பிரான்ஸை வீழ்த்துமா போர்த்துக்கல்

கால்பந்தாட்ட உலகின் நடப்பு வருட அட்டவணைகளில் பிரதானமான யூரோ கிண்ணத் தொடர் அதன் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. உலகச் சம்பியனான ஜேர்மனி, போராட்ட குணம் வாய்ந்த இத்தாலி, ஆக்ரோசம் நிறைந்த ரஷ்யா, எதையும் செய்யவல்ல இங்கிலாந்து இவையெல்லாம் வெளியேற்றப்பட்டு போர்த்துக்கல், பிரான்ஸ் என்னும் இரு தெரிவுகளே எம்முன் எஞ்சிநிற்கின்றன. இரு அணிகளதும் பலத்தை ஒப்பிட்டால் பலம்வாய்ந்த கோலியாத்தை சுட்டிப் பையனான தாவீது எதிர்கொண்டதைப் போல் உள்ளது போர்த்துக்கலின் நிலை.

### பிரான்ஸின் நிலை


பிரான்ஸின் ஒட்டுமொத்த பலத்தையும் பற்றி இரு விடயங்களில் சொல்லி விடலாம். முதலாவது விடயம், பிரான்ஸ் தனது சொந்த மண்ணில் களமிறங்குகிறது. இரண்டாவது விடயம், அரையிறுதி ஆட்டத்தில் உலகச் சம்பியனான ஜேர்மனியை வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. இந்த இரு விடயங்களும் போர்த்துக்கலின் வயிற்றில் நிச்சம் புளியைக் கரைக்கும். கிரவத், அண்டர்சன், பகாரே மூவரும் போர்த்துக்கலுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைவார்கள்.

### போர்த்துக்கலின் பலம்

போர்த்துக்கல் அபாரமான அணி, பலம் வாய்ந்த அணி என்றெல்லாம் அளவு கடந்து வர்ணிப்பதுக்கில்லை. ஆனால், அந்த அணியில் உலகின் முதல் தரக் கால்பந்தாட்ட வீரர்களில் ஒருவரான றொனால்டோ உள்ளார். அவரே அந்த அணியின் பலம். அவரை கட்டிப்போட்டுவிட்டால் போர்த்துக்கலின் கதை அவ்வளவுதான். ஆனால் றொனால்டோவின் வியூகங்களைத் தகர்க்க குறைந்தது அவருடன் நான்கு வீரர்களாவது போரிட வேண்டும். அவ்வாறு றொனால்டோவின் அசைவுகளை பிரான்ஸ் கவனிக்க ஆரம்பித்தால் பிரான்ஸ், தாக்குதல் தன்மையுடைய ஆட்டத்தைக் கைவிட்டு தற்காப்பு முயற்சியில் ஈடுட வேண்டியிருக்கும். இது அந்த அணிக்கு பெரும் பின்னடைவாக போய் முடியக் கூடும். றொனால்டோவைத் தவிர போர்த்துக்கல் அணியின் வளரும் நட்சத்திரமான சான்சேஸ், நானி இருவரும் பிரான்ஸுக்கு சோதனையாக அமையவல்லவர்கள் என்றால் மிகையல்ல. சர்வதேச அளவில் போர்த்துக்கலின் ஆகச் சிறந்த பெறுபேறாக யூரோ கிண்ணத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றமையே உள்ளது. ஒரு தடவையேனும் அந்த அணி சம்பியனாக வில்லை. தனது தேசத்தை சம்பியனாக்கிப்பார்ப்பேன் என்று சபதம்மெற்கொண்டுள்ளார் றொனால்டோ. ஆட்டம் இலங்கை நேரப்படி இன்று நள்ளிரவு 12.30 மணிக்கு ஆரம்பமாகும். விடிந்தால் தெரிந்து விடும் சம்பியன் யார் என்று.



# அறிக்கை என்னாச்சு!



றென்னிஸ் தொடரில் நிகழ்கால ஜாம்பவான் என்றால் அது ஜோகோவிக்தான். களமிறங்கும் ஆட்டங்களிலெல்லாம் வெற்றிபெற்று கிண்ணங்கள்மேல் கிண்ணங்களை அடுக்கிவந்த அவரின் பயணத்துக்கு நடப்பு வருட விம்பிள்டன் தொடர் முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு வெற்றியின் பின்னரும் ஜோகோவிக் சில அறிக்கைகளை அள்ளி விளாசுவது வழக்கம். அந்த வகையில் முன்னதாக முடிவடைந்த பிரான்ஸ் தொடரில் கிண்ணம் வென்றதன் பின்னர் ஜோகோவிக் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டிருந்தார். கலண்டர் கிராண்ட்ஸ்லாம் வெல்வேன் என அழுத்தமாகத் தெரிவித்தார். ஒரு வருடத்தில் நடைபெறும் அத்தனை கிராண்ட்ஸ்லாம் கிண்ணங்களையும் (ஆஸ்திரேலியக் கிண்ணம், பிரான்ஸ் கிண்ணம், விம்பிள்டன், அமெரிக்கக் கிண்ணம்) கைப்பற்றுதல் கலண்டர் கிராண்ட்ஸ்லாம் எனப்படும். ஜனவரியில் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரை ஜோகோவிக் வென்றிருந்தார். எனவே பிரான்ஸ் கிண்ணத்தையும் வென்றதன் பின்னர் அவர் விட்ட அறிக்கை பலராலும் ஊதிப் பெருப்பிக்கப்பட்டது. விம்பிள்டன் தொடரில் என்றுமே இல்லாத அளவு ஜோகோவிக் எதிர்பார்க்கப்பட்டார். இதற்கு மூன்று காரணங்களைக் குறிப்பிடலாம். ஒன்று விம்பிள்டனின் நடப்புச் சம்பியன் ஜோகோவிக். இரண்டாவது தரப்படுத்தில் முதலிடத்தில் உள்ள வீரர் அவரே. மூன்றாவது அவரது அறிக்கை. ஆனால், ஜோகோவிக் காலிறுதிக்கு கூடத் தகுதி பெறாமல் வெளியேற்றப்பட்டார். சிரிப்புக்குரிய விடயம் என்னவென்றால் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள ஜோகோவிக்கை வீழ்த்தியவர் 28 ஆம் இடத்திலுள்ள வீரரான சாம் குயரி. மட்டுமல்லாமல் தொடர்ந்து 30 ஆட்டங்களில் வெற்றிபெற்று வந்த ஜோகோவிக்கின் வெற்றிப்பயணமும் இந்த ஆட்டத்திலேயே முடிவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் வாழ வேண்டியவள்...

*(26 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

மூலஸ்தானத்துக்குள் அம்மன் திருவுருவச்சிலையின் கீழ் வைக்கப்பட்டிருந்த சுவாமிப் படங்களுக்கு பூசைகள் செய்து... யாவற்றையும் நிறைவாக்கிய பின்னர், ஒவ்வொரு குடும்பமாக அழைத்தார்.

"சுவாமிப்படங்கள், மங்கலப்பொருள்கள் கொண்டு போறதுக்கு முதல்ல சுமங்கலிப்பெண்கள் முன்னுக்கு வாங்கோ..." குருக்கள் கூறுகிறார்.

சுமங்கலித் தோற்றம் கொண்ட சில பெண்கள் குருக்கள் முன்பாகப் போய் நின்றார்கள். குருக்களும் சுவாமிப்படம் உட்பட மங்கலப் பொருள்கள் அடங்கிய தாம்பாளத்தட்டை சமஸ்கிருத சுலோகம் ஓதி ... ஒவ்வொன்றாக ஒவ்வொரு பெண்களின் கரங்களிலும் வழங்கிக்கொண்டிருந்தார்.

"சரி... அடுத்த குடும்பம் வாங்கோ..."

குருக்கள் கூறிமுடிக்கவும்... பலராமன் தனது தாய், தந்தை, சகோதரி, உறவினர்களுடன் குருக்களின் அருகே சென்றான்.

"சுமங்கலிப் பெண்கள் முன்னுக்கு வாங்கோ..."

குருக்கள் மீண்டும் கூறுகிறார்.

விநாயகர், அம்மன் மற்றும் முருகன் வள்ளி, தெய்வயானையுடன் காட்சியளிக்கும் தனித்தனிப் பிரேம் போட்ட படங்களை குருக்கள் ஒவ்வொரு சுமங் கலிப் பெண்களிடத்திலும் சுலோகம் ஓதிக்கொடுத்துக் கொண்டிருந்தார். அடுத்ததாக மங்கலப் பொருள்கள் சிலவற்றை பலராமனோடு வந்த வேறு மூன்று பெண்கள் வாங்கிக்கொண்டார்கள். இன்னமும் ஒரேஒரு பொருள் இருந்தது. அது முகம்பார்க்கும் கண்ணாடி!

குருக்கள் மீண்டும் சுமங்கலிப் பெண்களை வரும்படி கூறுகிறார்.

படங்கள் மற்றும் மங்கலப் பொருள்களை வாங்கி வைத் திருந்த பெண்கள் தங்களுடன் வேறு யாராவது வந்தி ருக்கின்றார்களா? என்பதை அறியும் பொருட்டு, தங்கள் பார்வையை கூட்டத்துக்குள் செலுத்தினார்கள்.

பலராமன் நிலமையைப் புரிந்து கொண்டான்.

கோவில் மண்டபச் சுவரில் உள்ள மணிக்கூடு நேரம் 12.15 எனக் காட்டிக்கொண்டிருந்தது. 12.36க்கு இராகுகாலம் கூடுவதால், மங்கலப் பொருள்களுடன் நேரத்துக்கு வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்று நினைத்தவன், கூட்டத்தில் தங்களோடு வந்த ஒரு பெண்ணைக் குருக்களுக்குக் கிட்ட வரும்படி அழைத்தான்.

அவன் அப்படி அழைத்ததும்... குருக்கள் உட்படக் கூடி நின்ற அனைவரும் ஒருகணம் மனதளவில் நிலை குலைந்ததை அவர்களது முகபாவம் வெளிப்படுத்தி நின்றன.

குருக்கள் எதுவும் கூறாது மௌனித்து நின்றார். மங் கலப் பொருள்களைக் கைகளில் தாங்கிய வண்ணம் நின்ற சுமங்கலிப் பெண்களில் பலர், ஒருவரை ஒருவர் ஒருவித அர்த்தத்தோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"லட்சுமி அக்கா! உங்களைத்தான்... இஞ்சை முன்னுக்கு வாங்கோ... வந்து குருக்கள் ஐயாட்டை இந்தக் கண்ணாடியை வாங்குங்கோ..."

பலராமன் அவளை மீண்டும் வற்புறுத்திக் கூப்பிட்டான்.

பாக்கியலட்சுமி திகைத்துப்போய் நின்றாள். தன்னைச் சுற்றிலும் நிற்பவர்களைப் பார்த்தாள். அவர்கள் யாவரும் மௌனத்தைக் கடைப்பிடித்தபடி... நின்றார்கள்.

பலராமன் திடீரென அவளருகில் சென்றான். அவளது கையைப் பிடித்து இழுத்து வந்து, குருக்கள் முன்பாக அந்த முகம் பார்க்கும் கண்ணாடியை வாங்கும்படி செய்தான். அவன் இப்படிச் செய்வானென பலராமனின் உறவினர்கள் பலரும் எதிர்பார்க்க வில்லை. ஒரு நல்ல காரியம் நடைபெறும் இடத்தில் ஏதாவது கதைக்கப் போய்... வார்த்தைகள் தடிப்பாகி... அது அபசகுனமான நிகழ்வாய் அமைந்து விடுமோ...? என்ற பயத்தில் யாவரும் அமைதி காத்து நின்றார்கள்.

இப்பொழுது அனைவரும் படங்கள், மங்கலப் பொருள்கள் சகிதம் கோவிலை விட்டுப் புறப்பட்டு வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

கூட்டத்தின் நடுவில்... சுமங்கலிப் பெண்களோடு அவர்களில் ஒருத்தியாக பாக்கியலட்சுமியும் சென்று கொண்டிருந்தாள். முகம் பார்க்கும் கண்ணாடியை அவள் தன் இருகரங்களாலும் தாங்கிப் பிடித்தபடி... நெஞ்சோடு அணைத்தபடி... செல்ல, அவளுக்கு முன்பாக பலராமனின் உறவினர்கள் சிலர் சென்று கொண்டிருந்தார்கள்.

பழமைவாதக் கருத்துக்களில் ஊறித் திளைத்து மன ஊனங்களாய் மாறி... மலிந்து, மகிழ்ந்து நிற்கும் மனி தர்களின் 'அக அம்மணங்கள்' பலவும் அப்பட்டமாகத் தெரிகின்றன இப்போது பாக்கியலட்சுமியின் கரங்களில் உள்ள முகம் பார்க்கும் கண்ணாடிக்குள்!

## சொற்சிலம்பம் - போட்டி இல: 428

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | ■ | 11 | | | |
| | ■ | 12 | 13 | | ■ | | ■ |
| ■ | 14 | | | ■ | 15 | | 16 |
| 17 | | | ■ | 18 | | ■ | |
| 19 | | ■ | 20 | | | 21 | |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

பூரணமான தபால் விலாசம்: ..................................

..........................................................

கையொப்பம்:..............................................

**இடமிருந்து வலம்**

1. இலங்கையின் புனித தலமொன்று
6. மரம்
7. இரும்பில் பிடிக்கும்
8. பிழை அல்ல
9. ஒரு வாசனைத் திரவியம்
11. அபிப்பிராயம்
12. புதல்வன்
14. ஒரு காட்டு மிருகம்
15. ... நட; நம்பி நடவாதே
17. கடவுள்
18. இறக்க
19. வலிமையானது
20. வருமானம்
22. மணிக்கூடு
23. தலைமயிர்

**மேலிருந்து கீழ்**

1. ஒரு நடன வகை
2. களவெடு
3. செவி
4. மருமகன்
5. பெற்றுக் கொள்ள கஷ்டமான ஒன்று
8. ஒலி
10. இளைஞன்
13. வாயால் கவ்வு
14. அகப்பை வகையைச் சேர்ந்தது
15. விரவில் வளருவது
16. கொண்டாட்ட நாள்
17. கூட
18. சேரும்
20. போக அல்ல
21. இது வந்திடப் பத்தும் பறந்திடும்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 426இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) சம்மதி (4) மதகு (6) தரிசனம் (8) பாகம் (10)கன (12) திண் (13) அலம்பல் (15) காமுகன் (17) கல (18) விட்டில் (19) சர்வ (20)மாசி (21)தவிர (23)பல்லாண்டு

### மேலிருந்து கீழ்

(1) சம்பாதி (2) மதம் (3)திரி (4)மனனம் (5) தம் (7) சகலன் (9) கண்காட்சி (11) வல்லவன் (13) அகல்தல் (14) பகர் (16)முடி (18) விமானி (19) சரண் (22) விலா

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.428 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (20.07.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 426 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
கெ.சுவர்ணலதா,
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்,
அல்லாய்

**2 ஆம் பரிசு**
க.ரட்ணேஸ்வரன்,
யா/தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

**3 ஆம் பரிசு**
நா.இராசலிங்கம்,
இல. 190/1 முதலாம் ஒழுங்கை,
உக்கிளாங்குளம், வவுனியா.

**4 ஆம் பரிசு**
க.சந்திரசிறி,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

**5 ஆம் பரிசு**
அ.அரன்மகன்,
சிவன் கோவிலடி,
இல.12/1, விஜயா வீதி, சாவகச்சேரி.

**பாராட்டுப் பெறுவோர்**

காமதேனு குமாரகுலசிங்கம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தி.விமலாதேவி ,
கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

ஜெசிந்தா ஜெயரட்ணசிங்கம்,
இல.26/3, வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.

சொற்சிலம்பம் போட்டி இல.428இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 24.07.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 426இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# ஆரோக்கிய உணவகமும்

## பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்

மருத்துவர் பொ.ஜெசிதரன்

ஒரு பாடசாலையானது அறிவானதும் ஆரோக்கியமானதுமான மாணவ இலக்கை அடைய வேண்டுமானால் ஆரோக்கியமான பாடசாலை உணவகத்தை ஆரம்பித்தல் வேண்டும். இதன் மூலமே மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தையும் பாடசாலை இலக்கையும் அடைய முடியும். இவ்வாறான ஆரோக்கியமான பாடசாலை உணவகத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகள் பல. போஷாக்கான சுத்தமான உணவு கிடைக்க வழியேற்பட ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்கள் மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துதல், ஆரோக்கியமான போஷாக்கு நிலையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், தொற்றா நோய்களின் தாக்கத்தைக் குறைத்தல், ஆரோக்கியமான உணவுப்பழக்கங்கள் தொடர்பான தகவல்களை வீட்டுக்கும் சமூகத்துக்கும் பரம்பலுறச் செய்தல். கல்வி இலக்கு அடைவு மட்டத்தை உயர்த்துதல் போன்றவை ஆரோக்கியமான உணவகத்தால் கிடைக்கும் நன்மைகளில் சிலவாகும். ஆரோக்கியமான உணவு வழங்கல் மூலம் சரியான உணவுப் பழக்கத்தை மாணவர் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலம் அறிவுள்ள சிறந்த ஆரோக்கியமான எதிர் காலச் சந்ததியை ஏற்படுத்தி பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் காத்திரமான பங்களிப்பை ஒவ்வொரு பாடசாலைகளும் பெற்றுக்கொடுக்க முடியும். தவறான உணவுப் பழக்கங்கள் எதிர்கால சந்ததியின் உடல் உள விருத்தியில் பல பாதக விளைவுகளையே ஏற்படுத்தும்.

ஓர் ஆரோக்கியமான பாடசாலை உணவகத்தால் வழங்கப்பட வேண்டிய சேவைகளாக எதிர்பார்க்கப்படுபவை யாதெனில்,

1. சரியான போசணைப் பழக்கத்தை ஏற்படுத்துதல்
2. அறிவூட்டுதல்–ஆரோக்கியமற்ற உணவுகளை உள்ளெடுப்பதால் ஏற்படும் பாதிப்புக்களை காட்சிப்படுத்தல்
3. ஆரோக்கியமான உணவுகளை தாராளமாகப் பெற்றுத் தருதல்
4. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
5. உணவு வழங்கலை ஏற்படுத்துதல்

மாணவர்கள் எதிர்காலச் செல்வங்கள். அவர்களின் நோயற்ற நிலையை பாதுகாப்பதோடு எப்போதும் அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சி பற்றி கருத்திலெடுத்து, உணவகத்தை நடத்திச் செல்லும் வழிகாட்டல் அவசியம். சரியான முகாமைத்துவம் மூலம் ஆரோக்கிய உணவுச் சூழலை ஏற்படுத்தி, ஆரோக்கியமான உணவைத் தெரிவு செய்யும் வாய்ப்பை எற்படுத்துதல் அவசியம். வாழ்க்கைக்கான ஆரோக்கிய உணவுத் தகவல்களை வழங்கும் நிலையமாக பாடசாலை உணவகத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இவற்றை நிறைவேற்றிக்கொள்ள பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (SDS) சிறந்த பங்களிப்பை வழங்க முடியும். இதற்கென பாடசாலை உணவுக்குழு எனும் உப குழுவை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். உணவகம் தொடர்பான மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ளுதலே இதன் பிரதான பணியாகும். இதில் அதிபர், சுகாதார மேம்பாட்டுப் பொறுப்பதிகாரி, ஆசிரியர் ஒருவர், பொதுச் சுகாதார பரிசோதகர், சிறுவர் சுகாதார கழக அங்கத்தவர்கள், சுற்றாடல் கழக உறுப்பினர் ஒருவர், பழைய மாணவ சங்க உறுப்பினர் ஒருவர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர், மாணவ தலைவன், தலைவி, பாடசாலை நுகர்வோர் வட்டத்தின் உறுப்பினர் என ஆறுபேர் அல்லது பன்னிரண்டு பேர் கொண்ட குழுவாக இது அமையலாம்.


பாடசாலை உணவுக்குழு மாதாந்தம் ஒன்றுகூடி தவணைக்கொரு முறை பாடசாலை உணவகம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து கோட்டக்கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளருக்கும் வலயக் கல்வி அலுவலக சுகாதார மேம்பாட்டுக் குழுவுக்கும் அனுப்பி வைத்தல் நன்று. இதனைக் கண்காணிக்க வேண்டியது வலயக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாகும். அது தொடர்பான பின்தொடராய்வு அறிக்கையை பாடசாலை உணவுக்குழுவுக்கு வழங்குதல் வேண்டும். அவசியமான நடவடிக்கைகளை பாடசாலை உணவுக் குழுவே எடுக்கும்.

உணவுப் பொருள்களின் விலை தீர்மானித்தலும் விலை மாற்றங்களும் பாடசாலை உணவுக் குழுவின் அனுமதியுடன் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் விலைப்பட்டியலும் உணவகத்தில் காட்சிப்படுத்தல் நன்று.

மாணவர்களின் ஆரோக்கியம், போசாக்கு என்பவற்றை மேம்படுத்தும் வகையில் பாடசாலை உணவுக்குழுவால் திட்டமிடப்படல் வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு கிடைக்கும் வருமானத்தைக் காட்டிலும் மாணவர்களின் நலனே முன்னுரிமைப்படுத்தப்படல் வேண்டும். இதனை ஒரு நலன்புரி சேவையாகக் கருதி, மேற்பார்வை செய்து, உணவு வழங்கலை உறுதி செய்தல் வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளருடன் இது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து அதன் பிரதியை உணவகத்தில் காட்சிப்படுத்தலாம்.

இந்த உணவகத்தில் அதிக சீனி, அதிக உப்பு, அதிக எண்ணெய் சேர்ந்த உணவு வகைகளை விற்பனை செய்யாதிருத்தல், உடன் உணவு (Fast Food), காபனேற்றப்பட்ட பானங்கள், சோடாக்கள் என்பவற்றை விற்பனை செய்யாது விலக்குதல் வேண்டும். இதன்மூலம் ஒரு நாளில் ஆறு மணித்தியாலங்கள் வரை பாடசாலைகளிலேயே செலவிடும் மாணவர்களின் உடல் ஆரோக்கியம் பேணப்படும். உணவகத்தை நடத்துவோரைத் தெரிவு செய்யும்போது சில நிபந்தனைகளுக்கு அமைவாக தெரிவு செய்திடலாம். அதாவது எதிர்காலச் சமுதாய நலனை பிரதானப்படுத்தி எமது பாரம்பரிய, இயற்கையாகக் கிடைக்கின்ற உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக் கொண்டு உணவு தயாரித்தல், மாணவர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ற வகையில் பலவிதமான, பலவகையான உணவைத் தயாரித்தல். இதற்கு அவர்களுக்கு ஆரோக்கிய உணவு சம்பந்தமான தேடல் இருத்தல் வேண்டும். அல்லாது விடின் ஆரோக்கிய உணவு சம்பந்தமான விழிப்பூட்டல் மற்றும் தெளிவுபடுத்தப்படல் வழங்கப்படல் வேண்டும். இதற்காக கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவத்துறையின் உணவு சம்பந்தமான அலகின் உதவியை பெற்றுக்கொள்ளலாம். எனவே ஆரோக்கிய உணவகத்தின் தேவை உணர்ந்து ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் இந்த முயற்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு ஆலோசனைகள் வழங்கி நேர் வழிநோக்கி பயணிக்க உதவிடலாம்.

சுகாதார வைத்திய அதிகாரி
மாநகரசபை, யாழ்ப்பாணம்.




மருத்துவர் எம். அரவிந்தன்

**கேள்வி: எனது மகளின் வயது 17 ஆகும். இவர் மிகவும் குண்டாக உடற் பருமனாகவும் உள்ளார். இது சம்பந்தமாக ஆலோசனை வழங்கவும்?**

**பதில்:** ஒருவரின் உடல் நிறையானது அவரது உயரத்துக்கேற்ற வகையில் இருத்தல் அவசியமாகும். இதை உடற் திணிவுச் சுட்டெண்ணைக் (Body mass index - B.M.I) கணிப்பிடுவதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

$$B.M.I = \frac{\text{உடல் நிறை}(Kg)}{\text{உயரம்}^2(m^2)}$$

எமது மகளைப் பொறுத்தவரையில் (BMI) ஆனது 23 க்கு மேலாக இருக்கும் போது அதிகரித்த உடற்பருமன் (Over weight) என்றும் 27க்கு மேலாக இருக்கும்போது மிக அதிகரித்த உடற்பருமன் (Obesity) என்றும் அழைக்கப்படுகின்றது.

உடற் பருமன் அதிகரிப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. தவறான உணவு பழக்கவழக்கங்களும் தேக அப்பியாசமற்ற வாழ்க்கை முறையும் (Sedentary lifestyle) இதற்குப் பிரதானமான காரணங்களாகும். மேலைத்தேய, துரித (Fast Food) உணவுகளை உண்ணும் பழக்கம் அதிகரித்துச் செல்வதும் இதற்கு முக்கிய காரணமாகும்.

இதனைவிட சில அகஞ்சுரக்கும் தொகுதி சம்பந்தமாக (ஹோர்மோன்) பிரச்சினைகளும் உடற்பருமனாவதற்குக் காரணமாக அமையலாம். தைரொயிட் சுரப்பு குறைவாக இருக்கும் நிலை (Hypothyroidism) இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். இந்த நோயாளிகள் சோம்பல் அதிக நித்திரைத் தூக்கம், மலச்சிக்கல் மற்றும், பெண்களெனில் அதிகளவு மாதவிடாய் வெளியேற்றம் போன்றவற்றைக் கொண்டிருப்பார்கள். உடற்பருமனை இளம் பெண்களில் ஏற்படும் பிரதானமான ஹோர்மோன் பிரச்சினை முட்டை வெளியேறும் சூலகத்தில் ஏற்படுகின்ற சிறுகட்டிகள் தொடர்பான நோயாகும். இதை Pcos (Polycystic ovarian syndrome) என அழைப்பார்கள். இவர்களுக்கு மாதவிடாய் ஒழுங்கற்று இருத்தல், முகம் மற்றும் வேறு பகுதிகளில் உரோம வளர்ச்சி அதிகரித்தல் போன்றவை இருக்கலாம்.

இவை போன்று வேறு ஹோர்மோன் பிரச்சினைகளும் உ+ம்கோட்டிஸோல் ஹோர்மோன் அதிகளவு சுரத்தல் (Ushing syndrome) உடற்பருமனாவதற்கு அரிதான காரணமாக அமையலாம்.

எனவே உங்கள் மகளைப் போன்ற உடற்பருமனானவர்கள் வைத்திய ஆலோசனையைப் பெறுவது மிக அவசியமாகும். உடற்பருமனானவர்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் (B.P) மற்றும் கொலஸ்ரோல் அளவு அதிகரித்தல் போன்றன ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகமாகும்.

தேவையான வினாக்களை வினவுவதன் மூலம் உடற் பரிசோதனை மூலம் (History & Examination) மருத்துவர் ஒருவரினால் உடற்பருமனாவதற்கான காரணத்தை ஊகித்துக் கொள்ள முடியும். அதன் பின்னர் தேவையான குருதி மற்றும் பரிசோதனைகளை மேற்கொண்டு காரணத்தைக் கண்டறிந்து கொள்ள முடியும்.

உடற்பருமனாவதற்கான காரணத்தை கண்டறிந்து அதற்கேற்ற வகையில் சிகிச்சையை வழங்குவதன்மூலம் அதனை சிறிது சிறிதாகக் குறைத்துக் கொள்ளமுடியும். உடற் பருமனைக் குறைத்துக் கொள்வதற்கான மிகவும் முக்கியமான சிகிச்சையானது ஆரோக்கியமான உணவுப் பழக்க வழங்கங்களைக் கடைப்பிடித்து முடிந்த வரையில் உடற்பயிற்சி செய்வதேயாகும். சில நோயாளர்களுக்கு தேவையேற்படின் வைத்தியரின் பரிந்துரையின் பேரில் உடல் நிறையைக் குறைப்பதற்கான குளிசைகள் வழங்கப்படுகின்றன. இதேபோல, மிகவும் உடற்பருமனானவர்களுக்கு இறுதித் தீர்வாக பல வகையான அறுவைச் சிகிச்சைகளும் (Bariatric Surgery) மேற் கொள்ளப்படுகின்றன.

எனவே, உங்கள் மகளுக்கு அவருடைய உடற்பருமன் அதிகரிப்புக்கான காரணத்தைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சை முறைகளை ஆரம்பிப்பது மிகவும் அவசியமாகும். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை (Healthy Life style) கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும்.

நீரிழிவு, அகஞ்சுரக்கும் தொகுதியியல்
சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க திருச்சபையில் இரு திருத்தந்தையர்களின் இருப்பு ஆறு நூற்றாண்டுகளில் நடைபெறாத ஓர் அபூர்வ நிகழ்வு

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்

திருத்தந்தை 16ஆவது பெனடிக்ற் – திருத்தந்தை பிரான்சிஸ் ஆகிய இரு திருத்தந்தையர்களும் கத்தோலிக்கத் திருச்சபையில் சம காலத்தில் இருப்பது ஆறு நூற்றாண்டுகளில் நடைபெறாத ஓர் அபூர்வ நிகழ்வு. இந்த இரு திருத்தந்தையர்களும் 2013ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி முதற் தடவையாக அதிகார பூர்வமாகச் சந்தித்தனர். அதன் பின்னர் அதிகாரபூர்வமாகச் சந்திக்கும் நிகழ்வு திருத்தந்தை 16ஆவது பெனடிக்ற் 65ஆவது குருத்துவ ஆண்டுதினம் 2016 ஆம் ஆண்டு ஜூன்மாதம் 28ஆம்திகதிகொண்டாடப்பட்டபோது இடம் பெற்றது. அதில் திருத்தந்தை 16ஆவது பெனடிக்ற் பணி ஓய்வுபெற்ற பின் இரண்டாவது தடவையாக பகிரங்கமான உரை ஒன்றை ஆற்ற அழைக்கப்பட்டார். இது பற்றி இந்தக் கட்டுரை விளக்குகிறது. இரு திருத்தந்தையர்களின் சந்திப்புப்பற்றிய முத்திரை ஒன்றை வத்திக்கான் வெளியிட்டுள்ளது. அதனை இங்கு நோக்கலாம்.



### கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் இரண்டு திருத்தந்தையர்கள்

கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் இரண்டு திருத்தந்தையர்கள் ஒரே நேரத்தில் இருந்தார்கள் என்பது 600 ஆண்டுகளாக நடைபெறாத சம்பவம். எனவேதான் தமது முதிர்ந்த வயது காரணமாகவும் உடல்நலக் குறைவு காரணமாகவும் தாம் திருத்தந்தைப் பணியை 2013 பெப்ரவரி 28ஆம் நாள் துறக்கப் போகிறார் என திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் வெளியிட்ட செய்தி உலகக் கத்தோலிக்க திருச்சபையைப் பொறுத்தவரை மிக அதிர்ச்சியான செய்தியாக அமைந்தது. 600 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாறு ஒரு திருத்தந்தை பணியிலிருந்து விலகியதில்லை என்பதோடு திருத்தந்தைப் பதவி வாழ்நாள் முழுவதற்கும் நீடிக்கும் ஒரு பதவி என பதே வழக்கம். திருத்தந்தையின் இறப்புக்குப் பின்னர்தான் புதிய திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்படுவார்.

### திருத்தந்தை பிரான்சிஸ் பல விருதுகளுக்கும் பட்டங்களுக்கும் சொந்தக்காரர்

திருத்தந்தை பணிஏற்று குறுகிய காலத்திலேயே தம் வாழ்வாலும் பணியாலும் உலகின் கவனத்தை தம்பால் திருப்பியுள்ளார் பிரான்சிஸ். உலகின் கண்களும் ஊடகத்தின் பார்வையும் அவரை நோக்கியே எப்போதும் திரும்பியுள்ளன. 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் இன மத நிற பேதமின்றி அனைவராலும் விரும்பப்படும் ஒருவரானார். பணியேற்ற அதே ஆண்டிலேயே திருத்தந்தை பிரான்சிஸ் 2013ஆம் ஆண்டின் சிறந்த மனிதராக ரைம் சஞ்சிகையால் அறிவிக்கப்பட்டார். திருத்தந்தை 23ஆம் அருளப்பர் 1963ஆம் ஆண்டிலும் திருத்தந்தை இரண்டாம் ஜோண் போல் 1994ஆம் ஆண்டிலும் இவ்விருதைப் பெற்றுக் கொண்டவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பல மதிப்பு வாய்ந்த மனிதர்கள் மத்தியில் மதிப்பிடப்பட்டு முதன்மையானவராகத் திருத்தந்தை பிரான்சிஸ் இவ்விருதைப் பெறுவதற்கு கத்தோலிக்க திருச் சபையில் நம்பிக்கை இழந்து விலகியவர்களின் மனதுகளைத் தொட்டு தமது ஆட்சியின் மிகக்குறுகிய காலத்திலேயே அவர்களது மனங்களை மாற்றக்கூடிய வல்லமை மிக்கவராக விளங்கியமையே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. 2014 ஆம் ஆண்டு உலக சர்வதேச நோபல் பரிசுக்காக திருத்தந்தை பிரான்சிஸின் பெயரும் பரிந்துரை செய்யப்பட்டமை பலரும் அறியாத ஒரு தகவலாகும். அவர் அந்த விருதைப் பெறாவிடினும் தகுதி பெற்ற ஒருவராகக் கருதப்பட்டது ஒரு மதிப்பார்ந்த விடயமாகும். மிகக்குறுகிய காலத்தில் அனைவர் கவனத்தையும் ஈர்த்த இவர் இன்னும் நிறையவே சாதிப்பார் என எதிர்பார்க்கலாம். 2016ஆம்ஆண்டுக்கான ஐரோப்பாவின் ஒருமைப்பாட்டுக்காக உழைக்கும் சர்வதேச சார்ளிமாஞ்ன விருதைத் திருத்தந்தை பிரான்சிஸ் பெற்றுக்கொண்டார். 2004 ஆம் ஆண்டு திருத்தந்தை புனித 2ஆம் யோண்போல் இதே விருதைப் பெற்றவர் ஆவார்.




திருத்தந்தையாக பணியேற்றது முதல் திருத்தந்தை பிரான்சிஸ் தமது வித்தியாசமான பாணியினால் அனைவரது கவனத்தையும் கவர்ந்தார். திருத்தந்தை அறிவிப்பின் பின்னர் அவருக்கான குருசும் தோள்சுற்றாடையும் வழங்கப்பட்ட போது அந்த ஆடம்பரம் எனக்கு வேண்டாம் என மறுத்துவிட்டார். முதல் முறையாக வத்திக்கான் யன்னலுக்கு வந்து கரகோசம் செய்து ஆரவாரமிட்டுக்கொண்டிருந்த மக்களைப் பார்த்து கை அசைத்த பின்னர் கரங்களைக் கூப்பி தலை குனிந்து எமக்காகவும் செபியுங்கள் என்று சற்று நேரம் மக்களின் ஆசீரைப் பெற்றுக்கொண்டார். வழமை போன்று திருத்தந்தை அறிவிப்பின் பின்னர் சிம்மாசனத்தில் அமர்ந்து கர்தினால்மார்களின் வாழ்த்தையும் பணிவையும் பெற்றுக்கொள்ளும் நிகழ்வை சிம்மாசனத்தில் அமராமல் மற்றக் கர்தினால்மார் போல் நின்றுகொண்டே பெற்றுக்கொண்டார். நிகழ்வுகள் அனைத்துமே முடிந்தவுடன் தாமாகவே சென்று தாம் தங்கியிருந்த ஹோட்டலின் பணத்தைச் செலுத்தி அனைவரையும் வியப்புக்குள்ளாக்கினார். நூற்றாண்டு காலமாக திருத்தந்தையர்கள் தங்கிவந்த மாளிகையை விடுத்து சாதாரணமான மாயா இல்லம் என அழைக்கப்படும் விடுதியை தமது தங்குமிடம் ஆக்கிக்கொண்டார். ஆஜன்ரீனாவுக்கு தொலைபேசி மூலம் தாமே தொடர்பு கொண்டு தமது பழைய சப்பாத்தை அனுப்புவதாகவும் திருத்தம் செய்து அனுப்பும்படியும் வேண்டிக் கொண்டார். திருத்தம் செய்யும் அவரோ அதனை அனுப்ப வேண்டாம். புத்தம் புதிய சப்பாத்து ஒன்றை அன்பளிப்பாகவே அனுப்பி வைக்கிறேன் எனக்கூறியபோது எனக்கு புதிய சப்பாத்து வேண்டாம் பழையதையே திருத்தித் தாருங்கள் என அன்பாக வேண்டிக்கொண்டார். வத்திக்கான் இல்ல வாயிலில் நின்றுகொண்டிருந்த காவலாளிக்கு கதிரை ஒன்றினைக்கொடுத்து உட்காரும்படி பணித்தார். பின்னர் அவருக்குப் பாணும் ஜாமும் கொண்டுவந்து கொடுத்து உண்ணும்படி சொன்னார். பரிசுத்த வாரத்தில் வரும் பெரிய வியாழன் தினத்தன்று திருச்சபை முழுவதும் நடைபெறுகின்ற கால் கழுவும் சடங்கை நான்கு பெண்கள் உட்பட முஸ்லிம்கள் மற்றும் இன மக்களின் கால்களைக் கழுவிப் பணிந்தார். சிரிய நாட்டுக்குச் சென்றிருந்தபோது அங்கிருந்த அகதிகளோடு அன்பாக பேசி நீங்கள் மட்டுமல்ல நாங்கள் எல்லோருமே இடம் பெயர்ந்தவர்கள் தான் என்றுகூறி ஆறுதல்படுத்தினார். அந்தவேளையில் எவரும் எதிர்பாராத தருணம் பார்த்து பெண் ஒருவர் பாதுகாப்பு எல்லையைத் தாண்டி திருத்தந்தைக்கு மிக நெருக்கமாகச் சென்று தனது கண்ணீர்க்கதையைச் சொல்லி அழுதபோது கண் கலங்கி வேதனையுற்றார். அந்த அகதிகளில் 12 பேருக்கு தஞ்சம் அளிப்பதற்காகத் தமது விமானத்திலேயே ஏற்றி வத்திக்கான் கொண்டு வந்தார். இவ்வாறு அன்புச் செயல்களாலும் மனிதாபிமானப் பணிகளாலும் மக்கள் மனதைத் தொட்டு தமது எளிமையையும் மென்மையையும் அனைவருக்கும் காட்டினார். திருச்சபையின் சட்டதிட்டங் களில் இளக்கமும் அதேவேளை இறுக்கமான சட்டங்களும் தேவை, பல மாற்றங்களை இங்கு கொண்டுவர வேண்டும் எனத் தெரிவித்தார். சுகமான கூடுகளை விட்டு வெளியே வாருங்கள் என்று குருக்களுக்கு அறிவுறுத்தினார். ஆயர்கள் எப்போதும் மேய்ப்புப்பணி சார்ந்தே பணியாற்றிக்கொண்டிருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். இவர்கள் தவறுகள் விடுகின்ற போதும் குற்றம் இழைக்கின்றபோதும் தண்டனைகள் வழங்கக்கூடிய முறையை உருவாக்கினார். அடிப்படையான சட்டங்களில் இறுக்கத்தையும் மற்றைய சட்டங்களில் நெகிழ்வுப் போக்கையும் அறிவித்தார். ஓரினச் சேர்க்கையாளர்களைப் பற்றிய கேள்வி எழுப்பப்பட்ட போது இவர்களைத் தீர்ப்பிடுவதற்கு நான் யார் என்று கேட்டார். எல்லா மனிதர்களையும் மனிதாபிமானத்தோடும் அன்போடும் ஏற்றுக் கொண்டு பயணம் புரிகின்ற ஒரு வாழ்வை எல்லோரும் மேற்கொள்ள வேண்டும் எனத்தெரிவித்தார்.

> "உலகின் உயர் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்படும் திருத்தந்தை பிரான்சிஸ் தமது ஆன்மிகப் பணிகளோடு மட்டும் நின்றுவிடாமல் மனிதாபிமானப் பணிகள் பலவற்றையும் தம் பணியோடு இணைத்துள்ளார்."

### திருத்தந்தை பிரான்சிஸின் பண்புகள் திருத்தந்தையான இரவோடிரவாக உருவானவையல்ல

திருத்தந்தை பிரான்சிஸின் பண்புகளான அன்பும் பணிவும், பரிவும், பாசமும், மனித நேயமும் மனதாபிமான மும் இரவோடிரவாக உருவான பண்புகள் அல்ல. கர்தினால் பணிக் காலத்திலும் அதற்கு முன்னரும் அவரிடம் துலங்கிய நற்பண்புகளே தொடர்ந்தும் வளர்ந்து வந்துள்ளன – மேலும் மெரு கூட்டப்பட்டுள்ளன. இவரின் இந்த நல்ல பண்புகள் பற்றி அவரோடு இருந்த பலரும் சான்று பகர்கின்றனர். திருத்தந்தை பிரான்சிஸ் என்றும் மிகவும் பணிவான எளிமையான வாழ்க்கையையே நடத்தி வந்துள்ளார். ஏழைகள் மீது பரிவு காட்டுவது – சமுதாயத்தால் ஒடுக்கப்பட்டோரின் நல்வாழ்வுக்காக உழைப்பது, தேவையுடையோரைத் தேடிச்செல்வது என்பன எல்லாம் அவரின் சிறப்புப் பண்புகளாக ஆரம்ப காலத்தில் இருந்தே மிளிர்ந்துள்ளன. கர்தினாலாகப்பணியாற்றிய போதும் மிக எளிமையான வாழ்க்கையையே நடத்தினார். பேராயர் என்கின்ற முறையில் அவருக்குப் பெரியதொரு மாளிகை இல்லமாக வழங்கப்பட்டபோதிலும் அவர் மிகவும் எளிமையான ஒரு சிறிய கட்டடத்திலேயே வாழ்ந்து வந்துள்ளார். தனி ஓட்டு நரைக் கொண்ட சொகுசு வாகனம் வழங்கப்பட்டபோதிலும் தமக்கு அது வேண்டாம் என்று கூறிப் பொதுமக்களின் போக்குவரத்துக்கான பொது வாகனங்களிலேயே பயணம் செய்தார். தமக்குச் சமையல் செய்யத் சமயலுக்கென்று தனி ஆள் வைக்காமல் தமக்கு வேண்டிய உணவைத் தாமே சமைத்து உண்டார் எனக் கூறப்படுகிறது. உலகில் பொருளாதாரத் துறை, அரசியல் துறை, சமூகத் துறை ஆகியவற்றில் பொறுப்பான பதவியில் இருப்போர் அனைவரும் கடவுளின் படைப்புலகு குறித்து அக்கறை கொண்டிருக்க வேண்டும், உலகத் தலைவர்கள் சுற்றுச் சுழலையும் குழந்தைகளையும் முதியோர்களையும் துன்பத்தில் உழல்வோரையும் பாதுகாக்கக் கடமை கொண்டுள்ளார்கள் என்பதையும் தமது பணிப்பதவி ஏற்பின்போது தெளிவாக உலகுக்கு விளக்கினார். இவர் எச்.ஐ.வி. நோய்க்குறி மற்றும் எயிட்ஸ் நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் மட்டில் பரிவு காட்டிச் செயற்பட்டு வந்துள்ளார். இத்தகைய நோயாளர் வாழ்ந்த ஓர் இல்லம் சென்று அங்கு அவர்களது காலடிகளைக் கழுவி முத்தமிட்டு, அவர்கள் மட்டில் தமக்குள்ள பரிவைக் காட்டிய செயலானது உலக கவனத்தை ஈர்த்தது. உலகின் உயர் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்படும் திருத்தந்தை பிரான்சிஸ் தமது ஆன்மிகப் பணிகளோடு மட்டும் நின்றுவிடாமல் மனிதாபிமானப் பணிகள் பலவற்றையும் தம் பணியோடு இணைத்தார். தமது பதவியையும், பணியையும் பணயம் வைத்து உலக அநீதிக்கு எதிராகவும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் மனித உரிமைகளுக்காகவும் ஏழைகள், கைவிடப்பட்டோர், அரசியல் தஞ்சம் கோரியோர் ஆகியோர் மட்டிலும் கரிசனை உடையவராய் இருக்கிறார். அமெரிக்க, கியூபா உறவுகள், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதம், உலக பயங்கரவாத அமைப்புக்கள், உள்நாட்டு வெளிநாட்டுப் போர் என்பவற்றில் எல்லாம் அன்போடும் அதிகாரத்தோடும் சிறந்த அணுகுமுறை கொண்டு அணுகிவருகிறார். இவை பற்றி பின்னர் நோக்குவோம்.

எங்கள் ஞானத்தந்தையர்க்கே இறைவனே ஆசீ அருள்குவீரே என்று 79 வயது நிரம்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கத்தோலிக்க அரங்கிலும் உலக அரங்கிலும் நிறையவே சாதித்து உலக மக்கள் அனைவரின் அன்பும் அமைதியும் நிறைந்த வாழ்வுக்கு அடித்தளம் இட இறையாசீர் வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரிலிருந்து....

(21 - 22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதைத் தவிர ஒரு காக்கை குருவிகூட இல்லை. என்ன பயங்கரம் என்று மனம் ஓலமிட்டது. போகும்போதோ வரும்போதோ கடத்தி வெட்டித் தாட்டாலும் ஒருத்தருக்கும் தெரியாது என்ற நினைப்பே உள்ளூர குலப்பனை உருவாக்கியது.

**வசதிகள் எதுவும் இல்லை**

பாதை முழுவதும் காணப்பட்ட மின் கம்பங்கள் ஒரு ஆறுதலைத் தந்தன. வீதிதான் ஒன்றுமேயில்லாமல் இருக்கிறது, குறைந்தது மின்சாரமாவது கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறார்களே என்று பட்டது. ஆனால், என் நினைப்புப் பொய் என்றார்கள் கிராமத்தவர்கள். கடைசிக் கிராமத்தின் அந்தம் வரைக்கும் மின்கம்பங்களும் மின்சார வயர்களும் சென்றபோதும், எந்தவொரு வீட்டுக்கும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்பது ஆச்சரியப்படுத்தியது. பிறகேன் மின் கம்பங்கள் நட்டு வயர் இழுத்தார்கள் என்ற கேள்வி தவிர்க்கவே முடியாமல் எழுந்தது. கிராமத்தில் ஆங்காங்கே சில கல் வீடுகளும் தென்பட்டன.

என் வழிகாட்டி, என்னைப் பொறுப்பாக மற்றொருவரிடம் அறிமுகப்படுத்திப் பொறுப்பளித்துவிட்டுத் தன் வேலையைப் பார்க்கப் போய்விட்டார். புதியவர் முதியவர் எனக்கு வழிகாட்டியானார்.

"இந்தக் கிராம்ம் பூநகரியில் இருந்து 19 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. போருக்கு முன்னம் 200ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்தன. இன்று 119 குடும்பங்களே இருக்கின்றன. கிராமத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுங்கள் என்று எல்லா அதிகாரி களிட்டையும் கேட்டுப் பார்த்தாயிற்று. ஆனால் யாருக்கும் எங்கள் துன்பங்கள் தெரியவேயில்லை. அவர்களில் பலருக்கு எங்கள் கிராமத்தையே தெரியாது. இங்கே எட்டிக்கூடப் பார்க்க மாட்டார்கள். வீதியைச் செப்பனிட்டுத் தாருங்கள் என்று கேட்டால், வெறும் 119 குடும்பத்துக்கு 16 கிலோ மீற்றர் வீதியை புனரமைப்பதா என்று வாயைப்பிளந்துவிட்டு வளாவிருந்துவிடுகிறார்கள். நீங்கள்தான் இதையெல்லாம் பார்த்து எழுதி எங்கள் அவலம் நாலு பேருக்குத் தெரிய வர வைக்க வேணும்."

முதியவர் மிகத் தெளிவோடு பேசினார். "வெளியிடங்களில இருந்து ஒரு சிலர் வந்து இங்கு தொழில் செய்யினம். அவையைத் தவிர்த்து எங்கட கிராமத்திற்கு வந்த ஒரேயொரு பெரியாள் நீங்கள்தான். ஏனென்றால் வேறயாரும் இந்தப் பக்கம் எட்டியும் பார்க்கமாட்டினம்" என்றார் முதியவர். எனக்கு அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை.

கே.68 கிராம சேவகர் பிரிவின் கீழே வருகின்றன இந்த மூன்று கிராமங்களும். கௌதாரிமுனை, வினாசியோடை, மண்ணித்தலை என்பது அவற்றின் பெயர்கள். போர்க் காலத்தில் மொத்தம் 274 குடும்பங்கள் வாழ்ந்திருக்கின்றன. மீளக்குடியமர்ந்தபோது அவர்களின் குழந்தை குட்டிகள் என இன்னும் அதிகமாகியிருக்க வேண்டிய குடிகள் காணாமற்போயின. இன்று வரை 119 குடும்பங்களே மீளக்குடியமர்ந்திருக்கின்றன. அவற்றிலும் 70 குடும்பங்களுக்கு மட்டுமே வீட்டு வசதி உள்ளது. ஏனையவர்களுக்கு இன்றுவரை மாட்டுத் தொழுவத்தினை ஒத்த குடிசைகளே வாழிடம். கிராமங்களின் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை இன்று 451 பேர். அவர்களில் 196 பேர் மட்டுமே வாக்காளர்கள். அரசியல்வாதிகளும் கூட இந்தக் கிராமங்களுக்கு நுழைய மறுப்பதன் மர்மம் எனக்குப் புரிந்தது.

கிராமங்களில் வாழும் 70 குடும்பங்கள் கடற்றொழிலையும், 16 குடும்பங்கள் கைத்தொழிலையும் நம்பியுள்ளன. எஞ்சிய 30 குடும்பங்களும் விவசாயம் கால்நடை வளர்ப்பை நம்பியே வாழ்கின்றன. கிராமங்களில் வசிக்கும் அரச பணியாளர்கள் என்போர், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் சிவில் பாதுகாப்பு குழுவில் பணியாற்றும் மூவர் மட்டுமே.

யாழ்ப்பாணம் - பூநகரி முதன்மை வீதியில் இருந்து 16 கிலோ மீற்றர் தூரம் வரைக்கும் மின் கம்பங்கள் நாட்டப்பட்டு கடந்த மார்ச் மாதம் பாடசாலைக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால் வீடுகளில் ஒன்றுக்குக்கூட இணைப்பு வழங்கப்படவில்லை. அது ஏன் என்பது கிராமத்தில் உள்ள மக்களில் எவருக்கும் தெரியாது. பாடசாலைக்கான மின்சாரம்கூட இப்போது இல்லை. மே மாதம் வீசிய காற்றில் பனை மரம் முறிந்து வீழ்ந்து மின் கம்பம் ஒன்று சேதமடைந்ததால் மின் விநியோகம் தடைப்பட்டது. இரண்டு மாதங்கள் கடந்துவிட்டபோதும் அது சரிசெய்யப்படவேயில்லை. மொத்தக் கிராமங்களும் இன்னும் மெழுகு வர்த்திகளையும் மண்ணெண்ணெய் விளக்குகளையுமே நம்பி இருக்கின்றன. நல்லாட்சி அல்ல அரிக்கன் விளக்குகளே அவர்களுக்கு இன்னும் ஒளிகொடுக்கின்றன. பள்ளி மாணவர்கள் முடிந்தவரை குப்பி விளக்கிலேயே தமது கல்வியைக் கற்கிறார்கள். தரம் 10 வரை கிராமத்துப் பாடசாலையில் கற்க முடியும். பெரும்பாலான மாணவர்கள் கற்கும் அதிகூடிய கல்வி அதுதான்.

அதற்கும்மேல் கற்பதானால் தினமும் 40 கிலோ மீற்றர் பயணம் செய்ய வேண்டும். அதற்காக காலை 7 மணிக்கு மட்டுமே ஒரு பேருந்து கிராமத்தில் இருந்து புறப்படும். எல்லோருக்கும் 8 மணி நேரம் பாடசாலை என்றால் இவர்களுக்கு மட்டும் கிட்டத் தட்ட 12 மணி நேரமாகும். அவர்களால் மாலை 6.30 மணிக்குத்தான் கிராமத்திற்குத் திரும்ப முடியும். அந்த நேரத்துக்குத்தான் கிராமத்திற்கு பேருந்து திரும்பி வரும். அதுவரை பெற்றோர் நெஞ்சில் நெருப்பைச் சுமந்துகொண்டு பிள்ளைகளின் வருகைக்காகக் காத்திருக்க வேண்டும்.

கிராமத்தில் இருக்கும் ஒரேயொரு அரச அலுவலகம் ஒரு உபதபாலகம். அது அழகான கட்டத்தில் பொலிவோடு இருந்தது. அது ஒன்றும் அரச கட்டமல்ல தனியார் ஒருவரின் வீடு என்றார்கள் கிராமத்தவர்கள். கிராம அலுவலர் ஒருவர், சமுர்த்தி அலுவலர் ஒருவர் ஆகியோரே கிராமத்தை அவ்வப்போது எட்டிப்பார்க்கும் அரச அலுவலர்கள். அவர்களும் பூநகரியில் இருந்தே வரவேண்டும். கிராமத்திற்கு வந்போது அவர்கள் 40 கிலோ மீற்றர்கள் பயணிக்க வேண்டும். அதனால் அவர்கள் அடிக்கடி வருவதில்லை என்பது குறித்து கிராமத்தவர்கள் அலட்டிக்கொள்வதில்லை.



மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய ஒரேயொரு கூட்டுறவுச் சங்கக் கடை இருக்கிறது.

வேறு கடையோ, தேனீர்ச் சாலையோ, எந்தவிதமான வர்த்தக நிலையங்களோ கிடையாது. வழியில் வாகனங்களின் சக்கரம் காற்றுப் போனால்கூட மீண்டும் 20 கிலோ மீற்றர் சென்றே மாற்று ஏற்பாடு மேற்கொள்ள முடியும்.

**இழந்துபோன பொலிவு**

கிராமம் இப்போது பொலிவிழந்து பொறுமையையும் இழந்து துடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் முன்பு அப்படியில்லை. "1990ஆம் ஆண்டு வரைக்கும் கிராமங்களில் 840 ஏக்கர் தென்னந் தோப்பு இருந்தன. கிராமத்தவர்களுக்கு மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அவை சொந்தமாக இருந்தன. அதன் மூலம் கிடைத்த வருமானமே உச்சமாக இருந்தது. தினமும் 4 அல்லது 5 பார ஊர்தி தேங்காய் வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டது. போரில் எல்லாத் தென்னைகளும் அழிக்கப்பட்டுவிட்டன. இன்று, ஒவ்வோரு குடும்பமும் தமது சமையலுக்கே அடுத்தவனிடம் தேங்காய்க்குக் கைநீட்டி நிற்கின்றது. எனக்கு மட்டும் 10 ஏக்கரில் தென்னை நின்றது. இன்று ஒன்றேயொன்று கண்ணேகண்ணென்று மிஞ்சியிருக்கிறது" என்றார் ஊரிலுள்ள மற்றொரு பெரியவர்.

அழிந்தது தென்னந்தோப்புகள் மட்டுமல்ல அவற்றுடன் சேர்ந்திருந்த அவர்களின் வாழ்க்கையும்தான் என்பதை 5 பிள்ளைகளின் தாயார் ஒருவரைப் பார்த்தபோது புரிந்துகொள்ள முடிந்தது. பெருந் தென்னந்தோட்டத்தின் முன்னாள் சொந்தக்காரி அவர். மிகப் பெரும் கல் வீட்டின் உரிமையாளராக இருந்தவர். இன்று, ஓர் ஓலைக் குடிசை மட்டுமே அவருக்கு எஞ்சியிருக்கிறது. "1989ஆம் ஆண்டு புதிதாகக் கட்டப்பட்ட கல்வீட்டில் வசித்துக்கொண்டு மாதத்திற்கு 7 லொறி தேங்காய் விற்றோம். இன்று ஒருவேளை உணவிற்கு யார் உதவுவார்கள் என்று அடுத்தவர் கையைப் பார்த்தபடி இருக்கிறோம்" என்ற அவரின் கண்கள் குளமாகின. "கடல் அலையையே வெறித்துப் பார்த்த வண்ணம் அமைதியாகின்றார். போர் ஓய்ந்து 7 ஆண்டுகள் கடந்து விட்டாலும் இந்தக் கிராமங்கள் போரின் அழிவுகளில் இருந்து மீண்டதற்கான தடயமே இல்லை. அழிவடைந்து சிதைந்துபோன வீடுகள் அப்படியே கிடக்கின்றன. அந்தச் சிதைவுகளைக் கூட அகற்ற மனமற்று அவர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்.

"இந்த வீட்டை கட்டி ஒரு வருடம்கூட இல்லை. குடியிருக்கவிடாம தலையில குண்டைப்போட்டுகலைச்சுஅழிச்சுப்போட்டாங்கள். இப்ப குடிசையிலதானே இருக்கிறம். நாங்களும் நல்லா இருந்தனாங்கள் எண்டு என்ர சந்ததி தெரியிறத்துக்கு இதுகளாவது மிஞ்சிக் கிடக்கட்டுமன்" என்றார் கிராமவாசி ஒருவர். அதைச் சொல்லும்போதே அவரின் வேதனை முகத்தில் ரேகைகளாகப் படர்கின்றன.

இப்படி அங்கிருக்கும் ஒவ்வொரு வீடுகளுக்கும் ஒவ்வொரு கதையிருக்கிறது. ஆனால், நான் புறப்படவேண்டும். இராணுவம் காவலரணைவிட்டுப் புறப்பட்டதும் நான் ஓடிவிடவேண்டும். இந்த இருட்டுக்குள் தனியே எங்காவது மாட்டுப்பட்டுக் காணாமற்போனால், என்னுடன் இவர்களின் கதைகளும் சேர்ந்தே காணாமற்போய்விடும். அதனால் நான் புறப்பட்டே ஆகவேண்டும் என்று மனம் உந்தித்தள்ளியது.

என் பரபரப்பைப் பார்த்த சுமார் 30 வயதுப் பெண்மணி சொன்னார், "நீங்கள் ஓடித் தப்புங்கோ. எங்களுக்குத்தான் வாழ்க்கையே இல்லை என்றாகிப் போய் விட்டுது. நீங்கள் ஏன் மாட்டிக்கொள்ளுறீங்கள்....?" மனது குற்ற உணர்வால் குறுகுறுக்கிறது. ஆனாலும் இவர்களின் கதைகளை வெளியே சொல்ல வேண்டிய பொறுப்பிருக்கிறது. அதற்காகவாவது நான் வெளியே போயாகவேண்டும். எங்கும், எதிலும் மாட்டிக்கொள்ளாமல் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும்.

திரும்பி வரும்போது, பாதைகள் எங்கும் மணல் திட்டுக்களாகக் குவிந்து கிடந்தமை ஆர்வத்தைத் தூண்டியது. திரும்புகைக்கான வழிகாட்டியாகி இருந்த புதியவரிடம் கேட்டேன். "தற்போது எமது பிரதேசத்தில் உள்ள ஒரே வளம் இந்த மண்தான். இதை வைத்து எமது கிராமத்தை அபிவிருத்தி செய்ய முயற் சிக்காமல் நூற்றுக்கணக்கில் டிப்பர் மூலம் மண் கடத்தினார்கள். தனியாரை மறித்து விட்டோம். இடைக்கிடை இராணுவத்தினர் கொண்டுசெல்கிறார்கள். அதுக்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?" என்றார். அவருக்கு நான் யார் என்பது தெரியாது. கிராமத்துக்கு வந்த புதிய ஆள், ஆமிப் பிரச்சினை இல்லாமல் வெளியில் கொண்டு சென்று விடும்படிதான் அவருக்குப் பணி ஒப்படைக்கப்பட் டிருந்தது.

**தப்பிவிட்டோம்**

"இந்தப் பாதையால் காலையில் வந்ததால் நாரி முறிவோ? இப்ப பிரச்சினையில்லாம போவீங்களோ?" புதிய வழிகாட்டியிடமிருந்து நக்கலாகப் பிறக்கிறது கேள்வி. "நாரி முறிஞ்சுதான் போச்சுது. விட்டால் இங்கயே மூன்று நாளைக்குப் படுத்துகிடக்க வேணும்" என்று சொல்லத்தான் மனது ஆசைப் பட்டது. ஆனால், "இப்பிடித்தானே நாங்கள் ஒவ்வொருநாளும் போய்வாறம்" என்று அவர் சொல்லிவிட்டால் என்ன செய்வது? "இல்லை! நான் சமாளிப்பன்" என்னிடமிருந்து அன்னியப்பட்ட வார்த்தைகள் வெளியே விழுகின்றன. பயணம் நீள்கிறது. குதித்துக் குதித்து ஓடி வந்த மோட்டார் சைக்கிள் காவலரணை நெருங்குகின்றது. "தலைக் கவசத்தின் கண்ணாடியை அகற்ற வேண்டாம்" என்று எனக்கு முதலிலேயே அறிவுறுத்தல் தெளிவாகத் தரப்பட்டிருந்தது. காவலரண் நிலமை எங்கள் திட்டத்தின் பகுதிபோல் இல்லை. இராணுவத்தினர் இன்னமும் முகாம் திரும்பவில்லை. அங்கேதான் நின்று கொண்டிருக்கிறார்கள். இப்போது எனக்கு இதயம் உச்சந்தலையில் துடிப்பதாக உணர முடிந்தது. நிலமை சிக்கலாகும் என நினைத்தேன். காவலரண் முன்னால் வந்து விட்டோம். நெஞ்சு எகிறி எகிறிக் குதித்தது. தலையைத் திருப்பி இராணுவத்தினரைப் பார்த்து ஒருபோதும் மாட்டிவிடக்கூடாது என்று அளவுக்கதிகமாகக் கவனமெடுத்து இறுகிப்போயிருந்தேன். பெரிதாக ஒரு குரல் அழைப்பு. சரி! மாட்டிக்கொண்டேன்! என்று நினைக்கையிலேயே, "அண்ணை அவன் தள்ளி நிக்கிற ஆமியை கூப்பிடுறான். நீங்கள் பேசாமல் வாங்கோ" குசுகுசுத்தார் அருகிலேயே வந்த வழிகாட்டி.

"தப்பிவிட்டோம்" முதன்மை வீதியில் என்னை விட்டுவிட்டு பெரும் சிரிப்புடன் அவர் சொன்ன வார்த்தை அது. எனக்கும் தான் எதோ சிறை மீண்ட நிம்மதி. திரும்பி வருகையில் என்னைக் குடைந்துகொண்டே இருந்த ஒரேயொரு கேள்வி, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து சுமார் 35 கிலோ மீற்றர் தூரத்தில் எப்படி இப்படி ஓர் தனித் தீவுச் சிறை? உள்ளே போய் வருவதே பெரும் சாதனை என்னும் உணர்வைத் தரும் வகையில் இது என்ன வித நல்லாட்சி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்தன்கேணி ஞானரத்தினம் அமைப்பினரால் வீணாகான குருபீட அனுசரணையுடன் நடத்தப்பட்ட ஆன்மிக வார்த்தைப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழாவில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட குழுவினருக்கு ஞானரத்தினம் அமைப்பாளர் பிரம்மஸ்ரீ.சபாரத்தினசர்மா மற்றும் முன்பள்ளி பொன்விழா ஆசிரியை செல்வி லீலாவதி மாரிமுத்து பதக்கம் அணிவித்து கேடயம் வழங்கிக் கௌரவித்தனர்.



கட்டைபறிச்சான் அம்மச்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த விழா அண்மையில் இடம் பெற்றது. (ஐ-40)











மன்னார் முருங்கனில் நடைபெற்ற கலை விழா ஒன்றில் மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் அதிமேதகு. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, வடமாகாண அமைச்சர்களான பா. டெனிஸ்வரன், த.குருகுலராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ஐ-56)





ஜப்பான் தொண்டு நிறுவனத்தின் பரிந்துரையில் சந்தைப் படுத்தல் ஆலோசகராக 2 வருடகாலம் பனை அபிவிருத்தி சபைக்கு வருகை தந்த யோகோ காவே சேயின் பிரியாவிடை நிகழ்வின் போது. (ரி)







பண்டத்தரிப்பு அறிவகம் கணினி கல்வி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் வடக்கு முதல்வர் க.வி.விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) சு.முரளிதரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில் வழங்கினர். (ஐ)



சங்கானை யூபீட்டர் முன்பள்ளி சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வு அண்மையில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (ஐ-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வண்ணை அங்குசபாச விநாயகராலய தீர்த்தோற்சவத்தன்று இரவு சுவாமி அழகிய முத்துச் சப்பரத்தில் தெருவீதியுலா வந்து அருள்புரிந்தார். (ஐ)



சங்குவேலி பூவரசம்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் ஆலய தர்மகர்த்தா சிவாச்சாரியர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ஐ-50)



உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் பாலர் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக மருத்துவர் திருமதி ரதினி காந்தநேசன், அதிபர் இரா.ஜெயக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வு இடம் பெற்றது. (ஐ)



கைதடி நவீல்ட் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கலை நிகழ்வுகளையும் காணலாம். (ரி)



பிரிட்டன் சைவத்திருக்கோயில் ஒன்றியம் நடத்திய 17 ஆவது சைவ மாநாட்டில் நடராஜ தத்துவமும் திருமந்திரமும் எனும் பொருளில் உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக ஆங்கில மொழித்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ஐ)



குருநகர் பேகன் ஒஸ்லோ அமைப்பு மாணவர்களுக்கு நடத்தும் மாலை நேர வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான செயலமர்வு அண்மையில் யாழ்.சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் நடைபெற்றது. இதில் பங்குபற்றிய பெற்றோரையும் கல்விச் சமூகத்தினரையும் காணலாம். (ஐ-51)



மது மற்றும் புகைத்தலுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு குருநகர் இளைஞர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் யாழ்.மாநகர சுகாதாரப் பகுதி பிரிவினரால் குருநகர் கலாசார மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடர்களின் கூடாரமாக பரீட்சைத் திணைக்களம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 10
அதிக திருடர்கள் உள்ள இடமாகப் பரீட்சைகள் திணைக்களம் காணப்படுகிறது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.
நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்தின் மூன்று மாடி கட்டடத்துக்கான அடிக்கல்லை அவர் நேற்று நட்டார். "கல்வி அமைச்சர் இது தொடர்பில் அறிந்துள்ளாரா என்பது எனக் குத் தெரியவில்லை. ஆனாலும் இங்கிருந்து அவர் அதனை அறிந்து கொள்வார்.பரீட்சைத் திணைக்களம் அதிக திருடர்கள் உள்ள இடமாகும். இங்கு எனது வார்த்தைகளை என்னால் குறைக்க முடியாது அல்லவா? இலங்கை வரலாற்றில்முதல்முறையாகதற்போதைய அரசு கல்விக்கான நிதியை 5 மடங்கில் அதிகரித்துள்ளது.
கடந்த வரவு-செலவுத் திட்டத்தில், ராஜபக்ச அரசு 1.3 வீதத்தையே கல்விக்காக ஒதுக்கியிருந்தது" என்று அவர் அங்கு கூறினார். (த-4)

## இந்தியா, சீனாவுடன் வணிகம்: பேச்சு அடுத்த ஆண்டு நிறைவு

கொழும்பு, ஜூலை 10
இந்தியா மற்றும் சீனாவுடனான வணிக உறவுகள் தொடர்பான பேச்சு அடுத்த வருட நடுப் பகுதியில் நிறைவடையும். இவ்வாறு சர்வதேச வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கரம தெரிவித்தார்.
இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமைச்சர் மலிக் சமரவிக்ரமவும் இந்திய வர்த்தக மற்றும் தொழில் அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும் இடையே கடந்த வியாழக்கிழமை பேச்சு நடத்தப்பட்டது. அதில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவுள்ள எட்கா ஒப்பந்தம் குறித்த பேச்சு துரிதப்படுத்துவதற்கும் இதன்போது இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்தியப் பிரதிநிதிகள் குழு ஒன்று இந்த மாத இறுதியில் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவின் வாகன விபத்துக்களில் 6 பேர் சாவு

கொழும்பு, ஜூலை 10
ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினரின் வாகனங்களால் ஏற்பட்ட 10 விபத்துக்களில் 6 பேர் கொல்லப்பட்டனர். 11 பேர் காயமடைந்தனர்.
இவ்வாறு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு தெரிவித்தது.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல கேள்விக்கான நேரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒன்றிணைந்த எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எழுப்பிய கேள்விக்கு இவ்வாறு பதிலளிக்கப்பட்டது.
2015 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதியில் இருந்து 2016 மார்ச் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுக்குரிய வாகனங்கள் விபத்துக்குள்ளான தடவைகள் எத்தனை?. அவற்றில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தோரின் எண்ணிக்கை? விபத்தை கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?- என்று உதய கம்மன்பில கேள்வி எழுப்பியிருந்தார்.
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார பிரதியமைச்சர் நிரோன் பெரேராவால் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேட்டில், 10 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. விபத்துக்களை குறைப்பதற்கு வினைத் திறன் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன-என்று. பதிலளிக்கப்பட்டுள்ளது. (ற-4)

## தலாய்லாமா கண்காட்சியால் உருவாகியது புதிய சர்ச்சை

கொழும்பு, ஜூலை 10
சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கைக் பயணத்துக்கு முன்னதாக கடந்த புதன்கிழமை தலாய்லாமா தொடர்பான ஒளிப்படக் கண்காட்சி கண்டியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யின் பயணத்துக்கு இரண்டு நாள்கள் முன்னதாக கண்டியில் தலாய்லாமா தொடர்பான ஒளிப்பட கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது.
இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கொழும்பு ஆங்கில ஊடகத் திடம் தெரிவித்தார். இது தொடர்பாக தாம் எதையும் அறியவில்லை என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்னே தெரிவித்தார். (ற-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
16 . 05 . 1962

மறைவு
10 . 06 . 2016

### திருமதி புவனேஸ்வரி லோகநாதன்

(சிரேஷ்ட விரிவுரையாளர், உயிரியல் விஞ்ஞானத்துறை, பிரயோக விஞ்ஞானபீடம், வவுனியா வளாகம், யாழ்.பல்கலைக்கழகம்)

சுதுமலை, மானிப்பாய், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.25, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி கடந்த 10.06.2016 சிவபதமடைந்த செய்தி அறிந்து மலர்கள், மலர்வளையங்கள், பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி, மின்னஞ்சல் ஊடாக துயர் பகிர்ந்தவர்களுக்கும் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் இரங்கல் உரைகளை ஒழுங்கமைத்து செயற்படுத்திய யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக சமூகத்திற்கும் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 11.07.2016 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.25,
வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி,
வவுனியா.

கணவர் மற்றும் பிள்ளைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையருக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று சுவிற்ஸர்லாந்தின் குடிவரவு செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளது.

"ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளுக்கான அகதி உரிமைக்கான நடைமுறைகளில் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படவுள்ளன. கடந்த மே மாத இறுதி வரையான காலப்பகுதியில் அகதி உரிமை கோரி ஆயிரத்து 316 விண்ணப்பங்கள் இலங்கைக் குடிமக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றன. அண்மைக் காலங்களில் 5 ஆயிரத்துக்கு அதிகமான இலங்கையர்கள் சுவிற்ஸர்லாந்தினால் உள்வாங்கப்பட்டதுடன், அவர்களில் 3 ஆயிரத்து 674 பேருக்கு அகதிக் குடியுரிமை வழங்கப்பட்டது. ஆயிரத்து 613 பேர் நாடு கடத்தப்படும் நிலையில் இருக்கின்றனர்" என சுவிஸ் குடிவரவு செயலகத்தை மேற்கோள்காட்டி சுவிற்ஸர்லாந்து ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டன.

'(வ-5)


## உடனடி வேலை வாய்ப்பு

எமது ஸ்தாபனத்திற்கு பொதி சுமப்பவராகவும், பொருள் காட்சிப்படுத்துனராகவும் பணியாற்றக் கூடியவர்கள் தேவை.

வயதெல்லை - 18-28 வரை

நேரில் சமுகம் தரவும் - திங்கள் - 8.30 am

தேனு களஞ்சியம் (நெஸ்லே விநியோகத்தர்)
மில்லேன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
தொ.பே: 021 492 1258, 075 6420131

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



லயன், சாமஸ்ரீ, தேசகீர்த்தி
**ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன்**
அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் மேலும் பல பட்டங்களும் பதவி உயர்வுகளும் பெறவேண்டுமென மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்
திரு.திருமதி திருசாந்த் குடும்பத்தினர்.

## Chemistry English/ Tamil Medium Personal Class

Physical & Organic Theory & கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் [B.Sc (cey),M.Sc(cey) (Chemistry)] கற்பிக்கப்படும்.

தொடர்பு: 075 0460 555

## வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு:- 077 1595826

## வேலையாள்கள் தேவை

01. Experience Technical Officer
02. மேசன் உதவியாளர்.
03. வெல்டிங், வயரிங்

தொடர்பு:- 077 9583944

## VACANCY

RECEPTIONIST (Female)

ஆங்கிலம் நன்றாகப் பேசக் கூடிய கணினி அறிவுள்ள வரவேற்பாளர் உடன் தேவை.

வயதெல்லை 18-28

அடிப்படைச் சம்பளம்- 15,000/-

WINSTAR VISA CONSULTANTS
106, தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி
0702 36 36 76

## மணமகன் தேவை

1985 ஆம் ஆண்டு, பூச நட்சத்திரம் 1 இல் சூரியனும் செவ்வாயும் உள்ள 81 கிரகபாவமுடைய அபிவிருத்தி உத்தியோகத்தரான சைவபோசன மணமகளுக்கு மணமகன் தேவை. (சைவ போசன மற்றவர்ளும் தொடர்புகொள்ளலாம்)

தொலைபேசி இல: 021 227 0633

## காணி விற்பனைக்குண்டு

உரும்பிராய் கிழக்கு கற்புலம் வீதியில் (Kopai Road) இல் 6 1/2 பரப்புக் காணி(தோட்டக்காணி) விற்பனைக்குண்டு.

0769626292

## வீடு வாடகைக்கு உண்டு

நாவலர் வீதி(ஆனைப்பந்திச் சந்தி மிக அருகில்)
சகல வசதிகளுடன் கூடிய இரு அறைகள் கொண்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு
(அரசாங்க உத்தியோகதர்கள் விரும்பத்தக்கது).
தொடர்பு :-0715449034

## வேலையாள் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் அச்சகத்துக்கு கோட் மெசின் இயக்கக் கூடியவர் உடன் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
077 652 0315

## காணி விற்பனைக்கு

A9 வீதியில் நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதி, ஆரம்பத்தில் காணி விற்பனைக்குண்டு. பிரித்து கொடுக்கப்படும்.

தொடர்பு:- 077 8730129

## மணமகன் தேவை

1975 ஆம் ஆண்டு, உத்தரட்டாதி நட்சத்திரமுடைய செவ்வாய் தோசமற்ற அரச திணைக்களத்தில் உயர் பதவியிலுள்ள சைவபோசன மணமகளுக்கு மணமகன் தேவை. (சைவ போசனமற்றவர்களும் தொடர்பு கொள் ளலாம்)

தொலைபேசி இல: 077 214 6513

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலியில் இராஜ வீதியிலிருந்து கலாசாலை வீதிக்குப் போகும் வீதியில் $1\frac{1}{2}$ பரப்புடனான வீடு விற்பனைக்குண்டு.

077 352 8435

## தையல் வேலை தெரிந்தவர்கள் தேவை

வீட்டுடன் சேர்ந்த தையல் நிலைத் துக்கு தையல் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 0777 244 723

## நேரடி விநியோகஸ்தர்கள் தேவை (Direct Dealer)

வடக்கில் நேரடி விநியோகத்தின் மூலம் வியாபாரத்தில் ஈடுபட்ட நாம் மேலும் எமது வியாபாரத்தை விஸ்தரிக்க பின்வரும் பகுதிகளுக்கு நேரடி விநியோகத்தர்கள் தேவை

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு**

மாதாந்தம் சுயமாக ரூ. 60,000 க்கு மேல் லாபம் பெறலாம்

சூர்யா Brand கச்சான் அல்வா, எள்ளுருண்டை, பால்டொபி, ரவைடொபி, ரவை கேக், நெய் பிஸ்கெட், கிஸ்சஸ், மாஸ்மலோ, யூயூப்ஸ், கிங்ஸ் Brand, மாசி சம்பல், தேசிக்காய் ஊறுகாய், உள்ளி ஊறுகாய் போன்றவற்றுடன் இந்தியன் சுவீட்ஸ், சோன் பப்பி போன்ற உங்களுக்கு பரிச்சயமான பொருட்கள்.



KINGS FOOD AND SPICES
57/1, Sri Saranankara Road,
Kallubowilla, Dehiwala.

Tel: 0113171594 / 076 8524004
0754 105 230
Email:bmcsram@gmail.com

## BLOOMING BUDS International E CAMPUS

BLOOMING BUDS
The Wisdom of Children

PV 94034

**பயிற்சியின் மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்**
**நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ திருவிழாவுக்கு முன்னர் (08.08.2016) பதிவுகளை மேற்கொள்வோருக்கு 30 வீதம் கட்டணக் கழிவு வழங்கப்படும்.**

### 12 Months

#### தகைமைகள்

- க.பொ.த. (சா/த) 6 பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த. (உ/த) கற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாள்களுக்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.
- பயிற்சி கிழமையில் 5 நாள்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களுக்குக் கொடுக்கப்படும்.
- பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவீர்கள்.
- போயா தினம் உட்பட அரசாங்க விடுமுறை தவிர ஏனைய நாள்கள் காலை 8.30-5.00 வரை வேலைநாள்களாகும்.

#### மேலதிகமாக

சிங்களக் கல்வி மற்றும் கணினி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா, சிங்கள டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில-இலக்கிய டிப்ளோமா, சுயதிறன் விருத்தி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்.

ஐந்து வருடங்களாய் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுனர் ஆசிரியர்களை பயிற்றுவித்து எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகளை நிவர்த்திசெய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளோம்

பயிற்சியின் பின்னர் மாதாந்தக் கட்டணம் 34,000 ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.

கற்கை நெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிக்கடன் ஏற்பாடு செய்து தரப்படும்
(நிபந்தனைக்கு உட்பட்டது )

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சி பத்திரம், தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் (9X4) அளவுள்ள தபாலுறையில் 45.00 மேல் மூலையில் 01-11 ஆம் வகுப்புவரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும்

378/3, Nelson Building
Kandy Road, Dalugama,
Kalaniya. 011 305 4641

No.390/2/1,Baseline Road,
Dematagoda.
Colombo-9.T.P.011 267 7641
071- 566 9641, 077 152 9731

பதிவுத்தபாலில் அனுப்பவேண்டிய முகவரி: officer.
Blooming Buds International E Campus
Teacher Training School - 178,
Thavadi Rd,Suthumalai South, Manipay.
Hotline - 071 566 9641
021 225 6641

www. blooming budse-campus.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TOSHIBA மெசின்கள் விற்பனைக்கு**



கறுப்பு/வெள்ளை 80,000/=
கலர் மெசின் 90,000/=
இலங்கையில் பாவிக்காத இயந்திரங்கள்
ரோனர் - 1000/=
நீர்கொழும்பு ரோனர் 900/=
உதிரிப்பாக விற்பனையும், பழுதுபார்த்தலும்
நவீன்முறை அச்சுப்பதிப்பகம் கே.கே.எஸ் வீதி, யாழ். 0770537404

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 521
சீட்டிழுப்பு திகதி 2016.07.09
வெற்றி இலக்கங்கள்
01 19 29 58 P
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 40,000,000/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2781 திகதி: 2016-07-09
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
10 31 40 56 S
போனஸ் இல.
41
புதன்கிழமை ஜக்பொட்
ரூ. 14,324,625/-
தொ.இல: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழையுங்கள்
அல்லது துரித அழைப்பு: 011 4 824 824
ஜாதா நிற டிக்கட்டுக்கள் 2016.07.13 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

எமது தொகைசாலை சக ஊழியர்
க. குமாரசாமி அவர்களின்
அன்பு மகன்
**அமரர் குமாரசாமி கண்ணன்**
அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.



அதிகாரியும், ஊழியர்களும்
பெற்றோலியம் ஸ்ரோரேஜ் ரேமனல் லிமிட்டெட்
காங்கேசன்துறை.

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

அன்னை மடியில்
15 . 10 . 1945



ஆண்டவன் அடியில்
10 . 06 . 2016

**அமரர் செல்வரத்தினம் சரோஜினிதேவி**

கடந்த 10.06.2016 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

31, கொண்டலடி வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.
021 2221551

## வாக்குச் சீட்டு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. முதலமைச்சர் இந்த விடயத்தை செயற்படுத்துவார் என்று இரா.சம்பந்தன் அறிவித்தார்.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் அலுவலகத்தினால் வாக்குச் சீட்டு அனுப்பி வைக்கப்பட்டது. தாண்டிக்குளமா ? ஓமந்தையா என்பதைத் தெரிவு செய்து அனுப்புமாறு வாக்குச் சீட்டு ஒவ்வொருவருக்கும் தனித் தனியே அனுப்பப்பட்டது.

வாக்குச் சீட்டுக் கிடைக்கப் பெற்றவர்களில் 11 பேர் நேற்று மாலை வரையில் தமது கருத்தைப் பதிவு செய்தனர். மக்கள் பிரதிநிதிகளில் சிலர், தமக்கு இன்னமும் முதலமைச்சரின் கடிதம் கிடைக்கவில்லை என்று தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள், பொருளாதார வலயத்துக்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணிகளை நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர். வடக்கு முதலமைச்சருடன் இன்று பேச்சு நடத்தி, பொருளாதார வலயத்தை எங்கே அமைப்பது என்று இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, பொருளாதார வலயம் தாண்டிக்குளத்தில் அமைய வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வடக்கு முதலமைச்சருக்கு அனுப்பப்படவுள்ள கடிதத்தில், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பெரும்பான்மையானோர் கையெழுத்திட்டுள்ளனர். மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் இந்த முயற்சியை முன்னெடுத்துள்ளார். (வ-5-101)

## போர்க்குற்ற

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவை. சேனாதிராசா தெரிவித்ததாவது:

போர்க் குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வருகின்றது. 2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், பன்னாட்டு நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. தீர்மானம் இலங்கை அரசின் இணை அனுசரணையுடனேயே நிறைவேற்றப்பட்டது. இதற்கு மாறாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ அல்லது பிரதமர் ரணில் விக்கிரசிங்கவோ அல்லது அமைச்சர்களோ கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கக்கூடாது. நாட்டில் உண்மையான நல்லிணக்கம் உருவாக, ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு இலங்கையில் நடைபெறும் கலப்பு நீதிமன்ற விசாரணையில் இருக்கவேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கடந்த கூட்டத் தொடரில் வெளிப்படுத்திய வாய்மொழி மூல அறிக்கையில் கூட போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதித்துறையின் பங்களிப்பை வலியுறுத்தினார். தமிழ் மக்களின் பிரதிநிதிகளான - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாமும் இந்த நிலைப்பாட்டில் உறுதியாகவே இருக்கின்றோம். இதிலிருந்து பின்வாங்க - மாற்றத்தை ஏற்படுத்தமாட்டோம். பன்னாட்டு நீதித்துறையின் பங்களிப்பில்லாத உள்நாட்டு விசாரணையில் எமக்கு நம்பிக்கையில்லை. இந்த நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு விரைவில் மீண்டும் தெரிவிப்போம். அதற்கு முன்னர் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் ஒன்றுகூடி இதுபற்றி ஆராயும். இந்தப் பேச்சு ஓரிரு தினங்களில் நடைபெறும். இதன் பின்னர் ஐ.நாவுக்கு கூட்டமைப்பின் நிலைப்பாட்டைக் கடிதம் மூலம் தெரிவிக்கவுள்ளோம் - என்றார். (உ-வ-5)

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1978 ஆம் ஆண்டு பிறந்த 22 பாவக்கிரகமுடைய லக்கினத்தில் செவ்வாயும் அனுச நட்சத்திரமுடைய மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

077 8222446

**பணியாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பிரபல நகை வியாபார நிலையத்துக்கு வேலை ஆள்கள் உடன் தேவை.

தொடர்பு: 075 44 40 172

## பன்னாட்டு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவம் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது, மக்களின் காணிகளை ஆக்கிரமித்து வைத்திருப்பது என்பன முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும். 2018ஆம் ஆண்டுக்குள் இராணுவ நீக்கம் இடம்பெறும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்ததையும் பிரிட்டன் கவனத்தில் கொள்கின்றது.

உறுதியளிக்கப்பட்டவாறு பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும். இதைப் பிரிட்டன் மீண்டும் வலியுறுத்துகின்றது - என்றார்.

இதேவேளை, இலங்கையின் போர்க்குற்ற விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்படமாட்டார்கள். நான் பதவியிலிருக்கும் வரையில் அதற்கு இடம்கொடுக்கமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த சூழலிலேயே பிரிட்டன் இவ்வாறு குறிப்பிட்டது. (வ-5)

## வடமாகாண

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட உள்ளது.

இவ்வாறு அறிவித்தார் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.வி. சுப்பிரமணியம்.

"இந்தப் போராட்டத்தில் வடக்கிலுள்ள சகல மீனவர்களையும், அன்றைய தினம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அன்றைய தினம் வடக்கின் எந்தப் பகுதியிலும் கடலுணவுகள் விற்பனையாகக்கூடாது. அந்தளவு தூரத்துக்கு எங்களது போராட்டம் அமைய வேண்டும்" எனவும் அவர் கேட்டுள்ளார்.

வவுனியாவில் நேற்று மாலை இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்தப் போராட்டத்துக்கான முடிவு எடுக்கப்பட்டது. இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க இந்திய அரசு அனுமதி கோரியுள்ளது. இந்தத் திட்டத்தை இலங்கை அரசு பரிசீலனைக்கு எடுக்கவே கூடாது. உடனடியாகக் கைவிடவேண்டும். வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும். இதனை வலியுறுத்தி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாணசபையை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தவுள்ளோம் - என்றார் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர். (வ-5-106)

**திருமண வைபவம் ஒத்தி வைப்பு**

**செல்வன் பா. யசிந்தன் செல்வி த. தர்சினி ஆகிய இருவருக்கும் இன்று (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை தச்சந்தோப்பு சிந்தா மணி விநாயகர் ஆலயத்தில் நடைபெற விருந்த திருமணம் தவிர்க்கமுடியாத காரணத்தால் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.**

தகவல்:

பாலசுப்பிரமணியம் நீலாம்பிகை குடும்பம்,
சாமியன் அரசடி, நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.
021 226 1437, 077 4658061

தங்கத்துரை பாலேஸ்வரி குடும்பத்தினர்.
அத்தாய், அல்வாய் கிழக்கு, அல்வாய்.
076 921 2220, 076 825 3547

softlogic
கன்னாதிட்டி SOFTLOGIC இன்
விசேட சலுகைகள்.




RS.49,999.00
காசு கொள்வனவிற்கு 10,000.00 விலை கழிவு.
பிளேயர் இல்லாவிடின் 15,000.00 விலை கழிவு.
கையிருப்பு உள்ளவரை மட்டும்.....
தொடர்புகளுக்கு நாடுங்கள் : இல 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
அழையுங்கள் : 07772444366, 0770388278, 0770482041, 0215671108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

## மாகாண முதலமைச்சர்கள் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 10
புதிய அரசமைப்பில் நடுவண் அரசுக்குரிய அதிகாரங்களும், மாகாணத்துக்குரிய அதிகாரங்களும் தெளிவாக வரை யறை செய்யப்படவேண்டும். அதேவேளை இப்போதுள்ள 13ஆவது திருத்தச் சட்டமும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.
இவ்வாறு கூட்டாக வலியுறுத்தினர் மாகாணங்களின் முதலமைச்சர்கள். பிரதமர் ரணில்
விக்கிரமசிங்க தலைமையிலான அரசமைப்பு உருவாக்க வழி நடத்தல் குழுவுக்கும், மாகாண முதல்வர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றது. அதில், மாகாணங்களுக்கான அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் அக்கறை காட்டப்பட்டது. அங்கு முதலமைச்சர்கள் மேலும் தெரிவித்ததாவது:
காணி அதிகார சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தேசிய காணி ஆணைக்குழு அமைக்கப்படவேண்டும். காணி அதிகாரங்களை வழங்குவதால் நாடு பிளவடையும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.
பொலிஸ் அதிகாரம் சந்தேகத்துக்குரியதாகவும், சர்ச்சைக்குரியதாகவுமே இருக்கின்றது. மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது தொடர்பில் தவறான பார்வைகள் உள்ளன. மாகாணத்தில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கான அதிகாரத்தையே கோருகின்றோம். 2000 ஆம் ஆண்டு பொலிஸ் ஆணைக்குழு நியதிச் சட்டத்தில் மாகாண பொலிஸ் ஆணைக்குழு தொடர்பில் கூறப்பட்டுள்ளது. மாகாண பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்படவேண்டும்.
1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினால் 13ஆவது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டது. இதனூடாக மாகாண சபைகள் நிறுவப்பட்டன. தற்போது வரையில் 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. புதிய அரசமைப்புக்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேளையில் 13ஆவது திருத்தச் சட்டத்தையும் முழுமையாக உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும்.
தற்போதைய அரசமைப்பில் நடுவண் அரசிடம் காணப்படும் அதிகாரங்கள், மாகாண சபைக்கு காணப்படும் அதிகாரங்கள் என்று வெவ்வேறாகவும், இரண்டுக்கும் பொதுவான அதிகாரங்கள் என்றும் காணப்படுகின்றது. இதனால் நடுவண் அரசுக்கும், மாகாணத்திற்கும் இடையிலான அதிகார பரவாலாக்கத்தில் தெளிவற்ற தன்மைகள் காணப்படுகின்றன. புதிய அரசமைப்பில் அதிகாரப் பரவலாக்கம் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.
ஐக்கிய இலங்கைக்குள்ளே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தமான தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதில் அனைவரும் உறுதியாக இருக்கின்றோம் - எனக் கூட்டாக முதலமைச்சர்கள் கூறியுள்ளனர்.
இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவில்லை. அவர் சார்பில் வடக்கு கல்வி அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.
(வ-5)

### இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 10
கோண்டாவில் காரைக்கால் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் இடம்பெறுகிறது.
இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத் திருவிழாவும், எதிர்வரும் 16ஆம் திகதி கைலாச வாகனத் திருவிழாவும் 19ஆம் திகதி சப்பைரதத் திருவிழாவும் 20ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 21ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ)

### விபத்தில் சிறுவன் சாவு

படி வாகனம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 13 வயதுச் சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பூண்டுலோயாவிலிருந்து நுவரெலியாவை நோக்கிப் பயணித்தபோது நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது. அதில் பயணித்த 2 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அதே இடத்தைச் சேர்ந்த பி.பிரகலாதன் என்ற சிறுவனே உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(வ-4)

# முன்னாள் போராளிகளை நிம்மதியாக வாழவிடுங்கள்

## நாடாளுமன்றில் தெரிவித்தார் சிவமோகன் எம்.பி

முல்லைத்தீவு, ஜூலை 10
முன்னாள் போராளிகள் மீண்டும் அமைதி வாழ்வை நோக்கி வந்தவர்கள். அவர்களை நிம்மதியாக வாழவிடுங்கள் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.
நாடாளுமன்றில்நேற்றுமுன்தினம்இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:
வன்னியில் புனர்வாழ்வு பெற்ற போராளிகள் மீதான அரசின் அடக்குமுறைகள் இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. புலனாய்வாளர்கள் என்ற போர்வையில் கொடுக்கப்படும் அழுத்தங்கள் அவர்களை மனஉளைச்சலில் தள்ளியுள்ளது. புனர்வாழ்வு பெற்ற ஒவ்வொரு போராளிகளுக்கும் வீடுகள் வழங்க புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்களுக்கான வாழ்வாதாரம் வழங்கப்படவேண்டும்.
அரச நிவாரண உதவி வழங்கும் படிவங்களில் முன்னாள் போராளிகளுக்கு எதுவும் வழங்கமுடியாத வகையில் படிவங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. ஒரு உதவியைப் பெற்றுக்கொள்ள கிராம அலுவலரின் சான்றிதழ் பெறவேண்டும். அதுவும் அவர்கள் அரசிற்கு எதிராகப் போராடவில்லை என்று சான்றிதழ் பெற்றுக்கொள்ளவேண்டும். இந்த் விடயத்தில் பல கிராம அலுவலர்கள் ஒப்பமிட மறுக்கிறார்கள்.
தமிழர்களைப் போராடத் தூண்டியவர்கள் யார்? பெரும்பான்மை இனத்தவராகிய நீங்கள்தானே. அதற்காகச் சட்டத்தை கொண்டுவந்தீர்கள். அதன் மூலம் இன நல்லிணக்கத்தைச் சீர்குலைத்தீர்கள். தந்தை செல்வாவும் அவரது ஆதரவாளர்களும் செய்த அகிம்சைப்போராட்டத்தை சிங்களக் காடையாகள் கொண்டு அடக்கி ஒடுக்கினீர்கள்.
1974ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டில் யாழ்ப்பாணத்தில் காட்டுத்தர்பார் நடத்தி தமிழர்களை உருக்குலைக்க அரச படையினரை வைத்துக்கொண்டு முயன்றீர்கள். நாடு சுதந்திரம் பெற்றபின் 242 தடவைகள் தமிழர்கள் கூட்டுக்கூட்டாக காடையர்களாலும் படையினராலும் இனப்படுகொலை செய்யப்பட்டனர்.
இனநல்லிணக்கம் பற்றிப் பேசும் நாங்கள் நீதியை நிலைநிறுத்தி மக்கள் சுமுகமாக வாழ வழி ஏற்படுத்தப்பட வேண்டும். இன்று சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்காமல் வைத்திருக்கின்றீர்கள். புனர்வாழ்வு பெற விரும்புபவர்கள் விடுவிக்கப்பட முடியும் என அரசு கூறிய போது, 90 பேர் புனர்வாழ்வு பெற சம்மதத்தைத் தெரிவித்தனர். ஆனால் இன்று வரை அவர்களை பிணையில் செல்லவும் அனுமதிக்கவில்லை. புனர்வாழ்வு பெறவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
அனேகமானவர்கள் குற்றம் நிரூபிக்கப்படாதவர்கள். சித்திரவதைமூலம் வாக்குமூலம் பெறப்பட்டவர்கள். இன்று உங்களது பயங்கரவாத சட்டம் ஊடாக அவர்களை சீரழித்துவருகின்றீர்கள். எனவே நீதி நிலைநாட்டப்படவேண்டும். - என்றார். (வ-21)

# பஸ் கட்டணத்தை அதிகரிக்க முடிவு

கொழும்பு, ஜூலை 10
தனியார் பஸ் கட்டணங்களை 6 தொடக்கம் 7 சதவிகிதம் வரை அதிகரிப்பதற்கான அனுமதியை வழங்க அரசு தீர்மானித்துள்ளது என போக்குவரத்து அமைச்சின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
தற்போது 8 ரூபாவாகவுள்ள ஆகக் குறைந்த கட்டணம் 9 ரூபாவாகவும், 12 ரூபா கட்டணம் 13 ரூபாவாகவும் உயரலாம் எனவும், பஸ் உரிமையாளர்களையும் பயணிகளையும் பாதுகாக்கும் நோக்கத்திலேயே இந்த உயர்வு நடைமுறைக்கு வரவுள்ளது எனவும் அமைச்சுக் குறிப்பிடுகிறது.
தனியார் பஸ் கட்டண மாற்றத்தைப் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகள் மற்றும் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் முன்வைத்த யோசனைகள் என்பவற்றின் அடிப்படையில் எடுக்கப்படும் தீர்மானம் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்படும். அதன் அனுமதி கிடைத்த பின் புதிய கட்டண அறவீடு நடைமுறைக்கு வரும் எனவும் அமைச்சு தெரிவித்தது.
தேசிய போக்குவரத்துக் கொள்கையின்படி ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் தனியார் பஸ் கட்டணங்கள் மீளாய்வு செய்யப்படுவது வழக்கம். 2013 இல் 20 சதவிகிதத்தால் கட்டணம் உயர்த்தப்பட்டது. டீசலின் விலை குறைந்ததால் 2015இல் 8 சதவிகிதம் மாத்திரம் அதிகரிக்கப்பட்டது. இந்த முறை 15 சதவிகித உயர்வு வேண்டுமென சில பஸ் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தபோதிலும் 6 முதல் 7 சதவிகித அதிகரிப்புக்கே அனுமதி வழங்கப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்தது. (வ-4)

# வற் வரி எதிர்ப்புக்கு பின்னால் சதி

கொழும்பு, ஜூலை 10
வற் வரிக்கு எதிராக, பிரதான நகரங்களில் வர்த்தகர்கள் மேற்கொண்டுவரும் ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் அரசுக்கு எதிரான சதி முயற்சிகள் இருக்கின்றன என்று அரச புலனாய்வுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.
ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அரச புலனாய்வுத்துறை முன்வைத்துள்ள அறிக்கையில், நாடுமுழுவதிலும் நடந்துவரும் இந்த எதிர்ப்புப் போராட்டத்தின் பின்னணியில் குறிப்பிட்ட ஒரு குழுவினரே இயங்கிவருகின்றனர். இதன்போது அரசுக்கு எதிரான பரப்புரைகள் மறைமுகமாக மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நடக்கும் இத்தகைய போராட்டங்களுக்கான துண்டுப் பிரசுரங்கள், பெனர்கள், போஸ்டர்கள் போன்ற அனைத்தும் கொழும்பில் ஒரு குறிப்பிட்ட அச்சகத்தில் தயாரிக்கப்பட்டு அந்தப் பிரதேசங்களுக்கு முன்கூட்டியே அனுப்பிவைக்கப்படுகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
(வ-4)

### போர்க்குற்ற நீதிமன்றம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எமது அரசமைப்பின் பிரகாரம் பன்னாட்டுநீதிபதிகளை அழைத்து விசாரணை செய்ய முடியாது என்று மீண்டும் குறிப்பிட்டார்.
பேராதனை சிறி சுபோதிராம விகாரையில் நேற்று இடம்பெற்ற புண்ணிய நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.
இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாவது:
'இன்னும் இரு வாரங்களுள் போர்க்குற்ற நீதிமன்றம்; வெளிநாட்டு நீதிபதிகளும் வருகை தரவுள்ளனர்' என்பதாக உள்நாட்டு ஞாயிறு வார இறுதிப் பத்திரிகையில் தலைப்பு வெளியாகியது. நாட்டைத் திசை திருப்பும் இவ்வாறான பொய்ப் பரப்புரைகளை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். ஊடகங்களின் பொறுப்பு, நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை செய்வதே தவிர, அவர்களைக் கெடுப்பது அல்ல. இந்த நாட்டில் தொழிற்படும் ஊடகங்களின் செயற்பாடுகள் எனக்கு மிகுந்த கவலையளிக்கின்றன.
எமது நாட்டு அரசமைப்பில் வெளிநாட்டிலிருந்து நீதிபதிகளை வரவழைத்து வழக்குகளை விசாரிப்பதற்கான எந்தவித ஏற்பாடுகளும் இல்லை. அதற்கு வசதியளிப்பதற்கு நான் ஒரு போதும் தயாரில்லை.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை சார்பாக வெளியிடப்பட்ட பரிந்துரைகளில் போர்க்குற்ற நீதிமன்றம் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. நாட்டின் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனிதாபிமான உரிமைகள் பற்றிக் கவனம் செலுத்துமாறு மாத்திரம் அதன் மூலம் கோரப்பட்டுள்ளது.
26 ஆண்டு காலமாக அநீதிக்கு உள்ளாக்கப்பட்ட வடக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக சுதந்திரத்தின் பின்னர் எந்தவொரு அரசும் மேற்கொள்ளாத ஒரு பணியைத் தற்போதைய அரசு மேற்கொண்டு வருகின்றது. நாட்டில் சமத்துவம் மற்றும் சகவாழ்வை ஏற்படுத்தி நீதியான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசு முன்னெடுக்கும் வேலைத் திட்டத்தை ஒருசிலர் விமர்சிக்கின்றனர்' - என்றார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெடரர் 'அவுட்'

விம்பிள்டன் தொடரிலிருந்து அரையிறுதியுடன் வெளியேற்றப்பட்டார் உலகின் முன்னணி வீரர்களில் ஒருவரான சுவிற்சர்லாந்தின் பெடரர்.

நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பெடரர் கனடாவின் மிலோஸ் ரயோனிக்கை எதிர்கொண்டார். நீண்ட நாள்களுக்குப்பின் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வெல்ல பெடருக்கு அதிக வாய்ப்பு இருப்பதாகக் கருதப்பட்ட நிலையில், அவருக்கு ரயோனிக் கடும் சவாலாக விளங்கினார். முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் ரயோனிக். சரிவிலிருந்து மீண்ட பெடரர் அடுத்த இரு செற்களையும் முறையே 7:5, 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார். நான்காவது செற்றையும் வென்றால் இறுதியாட்டத்துக்கு தகுதிபெறலாம் என்ற நிலமை பெடரருக்கு. ஆனால் நான்காவது செற்றை 7:5 என்று கைப்பற்றிய ரயோனிக் இறுதி செற்றையும் 6:4 என்ற புள்ளிகள் அடிப் படையில் கைப்பற்றி 3:2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

# காயங்களே காரணம்; ஜெயசூரிய விளக்கம்



இங்கிலாந்துக்கு எதிரான தொடரில், இலங்கைக்கு ஒரு வெற்றி கூட கிடைக்கமால் போனமைக்கு முன்னணி வீரர்களுக்கு ஏற்பட்ட காயமே காரணம் எனத் தெரிவித்த ஜெயசூரிய, காயங்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதல் வீரர்களின் கடமை என்றும் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பணம் மேற்கொண்ட இலங்கை அணி, டெஸ்ட் தொடரை 2:0 என்ற அடிப்படையிலும், ஒருநாள் தொடரை 3:0 என்ற அடிப்படையிலும், ரி-20 தொடரை 1:0 என்ற அடிப்படையிலும் இழந்தது. ஒரு டெஸ்ட், ஒரு ஒருநாள் ஆட்டங்களை சமன் செய்தமையே இலங்கையின் ஆகச் சிறந்த பெறுபேறாகக் காணப்படுகிறது. இந்த நிலையிலேயே சனத் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் ஓர் வெற்றிகூட கிடைக்காமல் போனமைமிகுந்த ஏமாற்றம் தருகின்றது. விளையாடும் பதினொருவரில் தெரிவான சில வீரர்கள் காயம் காரணமாக வெளியேறினர். உதாரணமாக பிரசாத், சமீர இருவர் மீதும் அதிக எதிர்பார்ப்பு கொண்டிருந்தோம். பந்துவீச்சு பலமே அவர்கள்தான் என்று கருத்துத் தெரிவித்திருந்தோம். ஆனால், காயம் காரணமாக இருவரும் பாதியிலேயே நாடு திரும்பினர். இதனாலேயே ஓர் ஆட்டத்திலும் எம்மால் வெற்றிபெற முடியவில்லை. வீரர்களிடத்தில் அர்ப்பணிப்பு வேண்டும். பாதுகாப்புடன் பயிற்சி மேற்கொள்ள அவர்கள் முன்வர வேண்டும் என சனத் மேலும் தெரிவித்தார். (ம)

# சாய்னா பெருமிதம்



மூன்று ஒலிம்பிக் தொடரில் பங்கேற்பேன் என ஒருபோதும் நினைக்கவில்லை என தெரிவித்தார் சாய்னா நேவால்.

ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடருக்கு தகுதி பெற்றதையடுத்தே சாய்னா நேவால் இவ்வாறு தெரிவித்தார். ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் நான் பங்கேற்கும் 3ஆவது ஒலிம்பிக்கில் தொடராகும். மூன்று ஒலிம்பிக் தொடரில் கலந்து கொள்வேன் என்று ஒரு போதும் நினைத்தது இல்லை. விளையாட ஆரம்பித்தபோது, ஒலிம்பிக்கில் கலந்துகொள்வேன் என்று சிந்தித்ததுகூட கிடையாது. லண்டன் ஒலிம்பிக்கில் (2012ஆம் ஆண்டு) வெண்கலம் வென்றேன். இந்த ஒலிம்பிக்கில் அதைவிட சிறப்பாகச் செயற்படுவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)


# அண்டர்சன் விலகினார்

காயம் காரணமாக பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்திலிருந்து விலகினார் அண்டர்சன்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்து, 4 டெஸ்ட் ஆட்டங்கள், 5 ஒருநாள் ஆட்டங்கள், ஒரு ரி-20 ஆட்டம் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி லோர்ட்ஸில் தொடங்குகிறது. இந்த நிலையில் இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளரான அண்டர்சன் காயம் காரணமாக விலகியுள்ளமை அந்த அணிக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது. (ம)



# இலங்கையை மிரட்டுவார் வோர்ணர் டெரன் லீமன் நம்பிக்கை தெரிவிப்பு



இலங்கைக்கு எதிரான தொடருக்கு முன்பாக ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் வோர்ணர் உடற்தகுதி பெறுவார் என நம்பிக்கை தெரிவித்தார் லீமன்.

மேற்கிந்திய தீவுகளில் இடம்பெற்ற ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முக்கோணத் தொடரில் விளையாடியபோது வோர்ணருக்கு கையில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து அவர் தொடரை பாதியிலேயே கைவிட்டு நாடு திரும்பினார். இதனால் இந்த மாதம் இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஆஸ்திரேலிய அணியில் வோர்ணர் இடம்பிடிப்பது கடினம் எனக் கருதப்பட்டது. ஆனால் அவரது காயம் குணமடைந்து விட்டதாகவும், இலங்கைக்கு எதிராக அவர் களமிறங்குவது உறுதி என்றும் ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளரான டெரன் லீமன் தெரிவித்தார். ஆஸ்திரேலியா, இலங்கை அணிகளுக்கு இடையில் மூன்று டெஸ்ட் ஆட்டங்கள், ஐந்து ஒருநாள் ஆட்டங்கள், இரண்டு ரி-20 ஆட்டங்கள் கொண்ட நீண்ட தொடர் இந்த மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகிறது. (ம)

# வரி ஏய்ப்பு வழக்கிலிருந்து நெய்மர் விடுவிப்பு



பார்சிலோனா கழகம் அபராதம் செலுத்த முன்வந்ததையடுத்து நெய்மர் மீதான வரிஏய்ப்பு வழக்கை கைவிட்டது ஸ்பெய்ன் நீதிமன்றம்.

24 வயதே ஆகும் பிரேஸில் நாட்டின் கால்பந்து வீரரான நெய்மர் உலகளவில் உள்ள தலைசிறந்த வீரர்களில் ஒருவராக திகழ்ந்து வருகிறார். தற்போது ரொனால்டோ, மெஸ்ஸி ஆகியோருக்கு அடுத்த படியாக பார்க்கப்படுகிறார். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் நெய்மர் பிரேஸிலில் உள்ள சான்டோஸ் கழகத்துக்காக விளையாடினார். நெய்மரின் திறமையை அறிந்த ஸ்பெய்னின் பார்சிலோனா கழகம் நெய்மரை சான்டோசிடம் இருந்து வாங்கியது. இந்த ஒப்பந்தத்தில் நெய்மரின் உண்மை விலை குறிப்பிடப்படவில்லை. இது தெரியவந்ததும் வரி ஏய்ப்பு விவகாரத்தில் நெய்மர் மீதும் பார் சிலோனா, சான்டோஸ் கழகங்கள் மீதும் வழக்குத்தொடரப்பட்டது. வழக்கு ஸ்பெய்னின் நீதிமன்றில் நடைபெற்று வந்தது. பார்சிலோனா கழகம் குற்றத்தை ஏற்றுக்கொண்டு, முழு அபராதத்தையும் செலுத்த முன்வந்ததையடுத்து இந்த வழக்கை கைவிட்டது நீதி மன்றம். (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணமட்ட எல்லே

யாழ்ப்பாணம், ஜூலை 10
பாடசாலைகளின் 19 வயது ஆண்கள் அணிகளுக்கான மாகாணமட்ட எல்லே தொடர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது. (ம-422)

## யாழ். சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 10
மாகாண மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணி கிண்ணம் வென்றது.
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. அதில் யாழ். மாவட்ட அணி 34:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. முன்னதாக நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அணியை 9:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியது முல்லைத்தீவு மாவட்ட அணி. (ம-23)





# முல்லையை வீழ்த்தி சம்பியனானது யாழ்.

யாழ்ப்பாணம், ஜூலை 10
மாகாணமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் சம்பியனானது யாழ். மாவட்ட அணி.
யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் பலப்பரீட்சை நடத்தின. ஆரம்பம் முதலே ஏக ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அணி 85:40 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. முன்னதாக இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை 57:47 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியது வவுனியா மாவட்ட அணி. (ம-23)

## வழித்துத் துடைத்தது யாழ்.

யாழ்ப்பாணம், ஜூலை 10
மாகாணமட்ட ஹொக்கித் தொடரில் இருபால் பிரிவிலும் யாழ். மாவட்ட அணிகள் கிண்ணம் வென்றன.
யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டங்களில் ஆண்கள் பிரிவில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோதியது. இதில் யாழ். மாவட்ட அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோதியது. இதில் யாழ். மாவட்ட அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## கனகபுரம் மகா வித்தி. காலிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 10
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கரப்பந்தாட்டத்தில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய அணி காலிறுதிக்குத் தகுதிபெற்றது.
நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து மட்டுவில் மகா வித்தியாலய அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:17, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய அணி காலிறுதிக்குத் தகுதிபெற்றது. (ம-422)



## கோலூன்றிப் பாய்தலில் அனித்தாவுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 10
இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடத்தப்பட்ட மூத்த பிரிவினருக்கான தேசிய மெய்வன்மைப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி ஜெகநாதன், அனித்தா கோலூன்றிப் பாய்தலில் தங்கப் பதக்கம் வென்றார்.



கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கோலூன்றிப் பாய்தல் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு 3.30 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்தே அனித்தா தங்கம் வென்றார். குறித்த பிரிவில் 3.35 மீற்றரே சாதனையாக இருந்தபோதிலும் சாதனையை அனித்தாவால் தகர்க்க முடியவில்லை. (ம)

## இறுதியில் அன்டி முர்ரே

விம்பிள்டன் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் இங்கிலாந்தின் அன்டி முர்ரே.
லண்டனில் நேற்று நடைபெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் முர்ரேயை எதிர்த்து மோதினார் பெர்டிச். ஐந்து செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 6:3, 6:3, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய முர்ரே 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

## துள்ளுக்குடியிருப்பு றோ.க. காலிறுதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 10
பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோ.க.த.பாடசாலை அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.
நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலய அணியை 25:17, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியே துள்ளுக்குடியிருப்பு றோ.க.த.பாடசாலை அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## கால்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஜூலை 10
பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையில் விலகல் முறையில் கால்பந்தாட்டத் தொடரை நடத்தத் திட்டமிட்டுள்ளது. தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-422)

## விவேகானந்தா வித்தி. காலிறுதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 10
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கரப்பந்தாட்டத்தில் 17வயது ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலய அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.
நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலய அணியை எதிர்த்து முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி அணி மோதியது. இதில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியால்ய அணி 25:10, 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். ஐக்கியம் - பாடும்மீன் ஆட்டம் சமநிலையில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். ஐக்கியம் - குருநகர் பாடும்மீன் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற சினேகபூர்வ கால்பந்தாட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு யாழ். பொலிஸ் நிலையமும் யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து இந்த ஆட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன. ஆட்டம் ஐக்கியத்தின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இறுதிவரை இரு அணிகளும் கோல்களைப் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலை கண்டது. (ம)

# காலிறுதிகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 10

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு காலிறுதிகள் நெல்லியடி மத்திய கல்லூரியில் இன்று நடைபெறவுள்ளன.

இதன்படி முதலாவது காலிறுதியில் சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் - எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலய அணியும், இரண்டாவது காலிறுதியில் வவுனியா இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார்- பெரியகுஞ்சுக் குளம் அ.த.க. பாடசாலை அணியும், மூன்றாவது காலிறுதியில் கிளிநொச்சி பாரதி வித்தியாலய அணியை எதிர்த்து முல்லைத்தீவு - வன்னிவேளாங்குளம் அ.த.க. பாடசாலை அணியும், நான்காவது காலிறுதியில் வவுனியா சிறி சுமண மகா வித்தியாலய அணியை எதிர்த்து தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வித்தியும் மோதவுள்ளன. (ம

# தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அஸ்வினே இந்தியாவின் துருப்புச் சீட்டு

## இது கங்குலியின் கணிப்பு

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணியின் துருப்புச் சீட்டாக அஸ்வின் இருப்பார் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி தெரிவித்தார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகளுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டம் ஆரம்பமாகிறது.

"மே. தீவுகள் ரி-20 உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றி நல்ல நிலையில் - வலுவான அணியாகக் காட்சியளிக்கிறது. இந்திய அணியால் அவர்களை வீழ்த்த முடியும். தொடரில் அஸ்வின் முக்கிய துருப்புச் சீட்டாக இருப்பார் என்று நினைக்கிறேன். விராட் கோக்லியின் ஆக்ரோசமான ஆட்டம் தொடரும் என்றே கருதுகிறேன்" என கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)

முற்றிலும் இலவச ஆங்கில வகுப்பு 3 நாள்கள்
Spoken English and English Grammar
11.07.2016/12.07.2016/13.07.2016
Time - 09am to 1.00pm
முன்பதிவினை மேற்கொண்டு வகுப்பில் பங்குபற்ற முடியும்
ELAS -Sir Pon Ramanathan Rd, Thirunelveli. Jaffna. (பல்கலை எதிரில்)
T.P: 021 221 2410, 076 697 3040

உடனடி வேலைவாய்ப்பு உயர்தர உணவகத்தில(Chinese Restaurant)
Job Opportunities
1) Restaurant Manager
2) Supervisors (02)
3) Chief Cook (Chinese)
4) Pizza Maker
5) Indian Cook
6) Kitchen Assistants
7)Waiter(உணவு பரிமாறுபவர்)
8)Technical Officer (Electrical&Plumbing)
நேர்முகத்தேர்வு(11-13/July-11 am-1.00 pm
Jaffna's YELLOW PAGES
0767302881
www.jaffnaonline.info
சுயவிபரக்கோவையுடன் அண்மையில் எடுத்த பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் நேரில் வரவும். நல்லூர் முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் நேர்முகத்தேர்வுகள் மேற்குறித்த திகதிகளில் நடைபெறும்
Jobs.jaffnaonline.info
Jaffnaonline- North's First and Biggest Job Bank
வடக்கின் வேலைவாய்ப்பு வங்கி

Sanjeya உணவகத்தால்
யாழ் மக்களுக்கு ஓர் அரிய செய்தி
நாளை முதல் (11 july 2016)
முற்பகல் 11 மணிமுதல் இரவு 10 மணி வரை....
முக்கியமாக யாழ் முறைப்படி தயாரிக்கப்பட்ட சைவ, அசைவ உணவுகளான
* சுறா பிட்டு
* இறால் பிட்டு
அத்துடன் ஏனைய இந்திய, சைனிஸ் உணவுகளுடன் ஒடியல் கூழ் (Coole)
(புதன் மற்றும் சனி, ஞாயிறு) தினங்களில் வழங்கப்படும்.
யாழ் மாநகர சபைக்குள் 1000/- ற்கும் மேற்பட்ட ஓடர்கள் குறுகிய நேரத்துக்குள் door delivery செய்யப்படும்.
Sanjeya Foodland,
No- 713, Hospital road, Jaffna
Contact No- 021 2217070
077 2221379

கே.யுவின் பிரித்தானிய ஆங்கிலக்கல்லூரி தற்போது புனித நகர் நல்லூரில்.
IELTS
16 Years
SDP
STUDY UK
Student Visas
இடமாற்றப்பட்டுள்ளது
IELTS AC/G /Life Skills(Personal Coaching )
IELTS Group Class
Diploma in English
I-Spoken
Hotel Management
MBA(UK) Qualified Lecturers
Library Facilities
E-Books and more
Visit our we site for more http://edu.kugroup.info
இல 788/4,செம்மணி வீதி(கிட்டுப்பூங்கா எதிரில்)
நல்லூர்.(முத்திரைச்சந்தியடி) Call :0777-302882
தனிப்பட்ட முறையில் கற்கக்கூடிய, உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாக்கும் ஒரே சர்வதேசக்கல்லூரி
021-3208342 /0777302882 | www.kugroup.info

வெதுப்பகம் விற்பனைக்கு
தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் பிள்ளையார் வெதுப்பகம் இல. 196, கே.கே. எஸ் வீதி, ஜெட் மோட்டஸ் அருகாமையில் சுன்னாகத்தில் அமைந்துள்ள வெதுப்பகமும் கடையும் ( சகல இயந்திர வசதிகளுடன் கூடிய வியாபாரமும், இரு வாகனங்களும்) உடன் விற்பனைக்கு
தொடர்புகளுக்கு: 077 133 1703




இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரி
British College Of Beauty Studies Olialankan Studio
இணைந்து நடத்தும் பெண்களுக்கு பொருத்தமான துறைசார்ந்த பாடநெறிகளும் பயிற்சி வகுப்புக்களும்
* இலங்கையில் பெறுமதி வாய்ந்த சான்றிதழை வழங்கி வருவதில் பெருமை அடைகின்றோம்.
* அழகுக்கலையில் அறிமுகம் ஆகும் புதிய தொழிநுட்பங்கள் புதிய பாடத்திட்டங்கள் போன்றவற்றை யாழ் மண்ணில் அறிமுகப்படுத்தி வருகின்றோம்.
* வெளிநாடு செல்பவர்க்கென Special ஆக வடிவமைக்கப்பட்ட குறுகியகால பாடநெறி பயிற்சி வகுப்புக்கள்
* கேக் ஐசிங் & பூ செய்தல்
* தையற்பயிற்சி
* கணினிவகுப்புக்கள்
வயதெல்லை கிடையாது
அழகுக்கலையில் பல பிரிவுகளை, புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளோம்.
* குறுகியகால பயிற்சி வகுப்பையும் பெறமுடியும்
* 3, 6 மாதகால முழுநேர பயிற்சி வகுப்புக்கள்
* 15000/- தொடக்கம் 120000/- ரூபா வரையான Basic a Advance பாடநெறி வகுப்புகளும் நடைபெறுகின்றன
* பாடநெறி முடித்து அல்லது படிக்கும் போதே பகுதி நேர வேலை வாய்ப்பையும் எங்களிடம் பெற்றுக் கொள்ள முடியும்.
உள்நாட்டில், வெளிநாட்டில் சொந்த தொழில் செய்ய விருப்பமா பெண்களே!
எங்களிடம் இணைந்து படியுங்கள்
வேலை நிச்சயம்.
பலாலி றோட் திருநெல்வேலி சந்தி யாழ்ப்பாணம்
கஸ்தூரியார் றோட் (உதயன் பணிமனைக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
076 7011645
British College Of Beauty Studies BCBS

Personal Class-கணினி
உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
Ms office 2016, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker
TP:0779672038 ஆசிரியர்:KRC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.